

கல்கி
20
ஆண்டு மலர்
4-8-'63
KALKI
30 காசு

சேவிங்ஸ் பாங்க் கணக்கை ஆரம்பியுங்கள்



நேஷனல் அண்டு கிரிண்டலேஸ்

நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்கில் சேவிங்ஸ் கணக்கு ஆரம்பிப்பது எளிது. ஐந்தே ருபாய் இருந்தால் போதும். அதோடு வருஷத்திற்கு 3 சதவீதம் வட்டியும் சம்பாதிக்கலாம்.

முழு விவரங்களுக்கும் இன்றே அருகிலுள்ள கிளையில் சென்று விசாரிக்கவும். உங்களுடைய பாங்க் பிரச்சினை எப்படிப்பட்டதாக இருந்தாலும், திறமையும், கண்ணியமும் அங்கு உங்களுக்குக் காத்திருக்கிறது.

1863 1963

இந்திய பாங்கித் தொழிலில் 100 ஆண்டுகள்


NGB/598 TAM

நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்க் லிமிடெட்

இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது : அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது

கிளைகள்: சென்னை: 3, நார்த் பீச் ரோடு, 378, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு. (லாயிட்ஸ் கிளை) 6, அரமனைக்காரத் தெரு 158, மவுண்ட் ரோடு. தூத்துக்குடி: 44, பீச் ரோடு ஹைதராபாத்: அபித் ரோட்.

கல்கி



படவிளக்கம் 89 - ம் பக்கம் பார்க்க

ஆண்டு மலர் பொருளடக்கம்

பிறந்த நாள்	...	3
ராஜாஜிக்கு நன்றி	...	4
என்ன சேதி ?	...	7
முதல் மூவர்	...	9
ஸர்ஜன் வாகக் குட்டி	...	14
குண்டு மல்லிகை	...	19
அந்த ஒரு நாள் (நெடுங்கதை)	...	34
கைவண்ணம்இங்குகண்டேன்	...	52
கலை வளர்க்கும் கோயில்கள்	...	55
அறிவுக்கனலே அருட்புனலே!	...	58
அவன் பெற்ற செல்வன்	...	67
' கஸ்தூரி வருகிறேன் '	...	75
பொன் விலங்கு	...	82
நீதிமன்ற நகைச்சுவை	...	90
ஆட்சி மொழி — கருத்தரங்கு	...	95
தனிமை	...	109
பத்தினிக் கோட்டம்	...	116
பல்ஸாம் பெண்களும்	...	125
விதை வித்து (நெடுங்கதை)	...	130

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே



தன் உயிர் தான் அறப்பெற்றானை ஏனைய
மன் உயிர் எல்லாம் தொழும் — திருக்குறள்



மலர் 23

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

இதழ் 1

பிறந்த நாள்

இவ்விதழில் தனது இருபத்து மூன்றாவது வயதைத் தொடங்கும் உங்கள் அன்புக்குரிய 'கல்கி'ப் பத்திரிகை வாழ்த்துக் கோரி உங்களை வணங்குகிறது. இந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக சத்திய மார்க்கத்திலிருந்து சிறிதும் பிறழாமல் கொள்கைகளுக்கென்று போராடிய பெருமிதத்துடன், அந்த சத்திய சம்பத்தை அருளிய கணநாதனை அஞ்சலி செய்கிறது 'கல்கி'; உண்மையின் உணர்வை உரையில் வெளியிட மொழி தந்த கலைவாணியைக் கும்பிடுகிறது; ஆன்மிகத்தில் மானுட சேவையைக் கலந்து அளிக்கும் சத்தியமூர்த்தியாகிய ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகளை நமஸ்கரிக்கிறது; அரசியலில் ஆன்மிகத்தைக் குழைத்துத் தரும் உண்மையின் உருவமாகிய ராஜாஜியைப் பணிகிறது.

உலகுக்கெல்லாம் இன்பம் தரும் ஒரு நல்ல தருணத்தில் 'கல்கி' பிறந்த நாள் கொண்டாடுகிறது. மாஸ்கோவில் கையெழுத்தான அணு ஆயுத சோதனை நிறுத்தத்தைத்தான் குறிப்பிடுகிறோம். அவ்வளவாகத் தீமை பயக்காத பாதாளச் சோதனை தவிர மீதி சோதனைகள் நின்றதால் மனித குலம் விச்ராந்தி பெற்றுள்ளது. பதினெட்டு ஆண்டுகளாகப் பிரபஞ்சச் சூழலில் கவிந்து கொண்டிருந்த விஷ மேகம் கலைந்து, ஆரோக்கிய ஒளி வீசத் தொடங்கியிருக்கிறது. பரஸ்பர சந்தேகங்களையும், உள்நாட்டு அரசியல்களையும் விலக்கி உலக நலனை முன்னிட்டு இந்த சுபமான முடிவை எடுத்த அமெரிக்க ஜனாதிபதி கென்னடி, ருஷ்யப் பிரதமர் குருஷேவ் இருவருக்கும் நமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். தொடக்க காலத்திலிருந்தே அணு ஆயுதக் கொடுமையை விலக்குவதற்கு அயராமல் பாடுபட்டு, தமது தள்ளாத தசையில் இதற்கென்றே சென்ற ஆண்டு அமெரிக்கா போய் வந்த நமது அருமைத் தலைவர் ராஜாஜி, இவ்வருஷத்துக்குரிய சமாதான நோபல் பரிசை கென்னடி—குருஷேவ் இருவருக்குமே வழங்க வேண்டும் என்ற சீரிய யோசனையை வெளியிட்டிருக்கிறார்.

உடலைப் பிடிக்கும் விஷத்தோடு, உள்ளத்தைப் பிடிக்கும் விஷத்தையும் விலக்கப் பாடுபடுகிறார் ராஜாஜி. விஷத்திலிருந்து விடுதலை பெற்றதுபோல் அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை பெறவேண்டியது வெகு அவசியமாகும். அதற்கென்றே ராஜாஜி தொடங்கியுள்ள சுதந்திரக் கட்சியின் ஆண்டுவிழாவும் கல்கியின் ஆண்டு விழாவின் போதே நிகழ்கிறது. இச்சமயத்தில் மக்களுக்கு பாரதந்திரம் ஒழிந்த சுதந்திரத்தின் மாண்பினை நினைவூட்ட விரும்புகிறோம்.

அந்நியர்களிடமிருந்து நாடு விடுதலை பெற்றுவிட்டது. ஆனால் இந்த நாட்டின் பண்புக்கு அந்நியமான அரசியல் கருத்துக்களிலிருந்து இன்னும் மக்கள் விடுதலை பெறவில்லை. வாழ்க்கை என்ற நாணயத்தின் ஒருபுறம் சுதந்திரம்; மறுபுறம் தர்மம். சுதந்திரமற்ற வாழ்க்கையில் சந்தோஷம் கிடையாது. தனி மனிதர்களின் சுதந்திரம் பிறருடைய சுதந்திரத்தைக் குலைக்கலாகாது. இதற்காக ஏற்பட்ட காப்பே தர்மம். சுதந்திரத்தோடு சேவையை இணைத்துத் தருகிற வாழ்முறையே தர்மம் எனப்படும். இதைச் சட்டத்தினால் பலவந்தமாகச் செயல்படுத்த முடியாது. மக்களை நன்னெறிப்படுத்துவதன் மூலமே தர்மத்தை நிலைநாட்ட முடியும். ஒவ்வொருவரும்

ராஜாஜிக்கு நன்றி

பி. சிவராவ்

மாஸ்கோவில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக முடிந்ததில் உலகம் நிம்மதியாக ஆசுவாசம் செய்து கொள்ளுகிறது. (சர்ச்சைக்குரிய) பாதாளச் சோதனை அம்சத்தை நீக்கி மற்ற விஷயங்களில் உடன்பாடு காணலாம் என்ற தீர்வை அளித்தவர் ராஜாஜியே. அவர் காந்தி சமாதான தூதுக் கோஷ்டி அங்கத்தினர் என்ற முறையில் சென்ற ஆண்டு ஜனாதிபதி கென்னடி, ஸ்ரீ குரோமிகோ, ஐ.நா. பிரதிநிதிகள், ஸ்ரீ மாக்மில்லன் ஆகியோரிடம் இந்தத் தீர்வை ஏற்குமாறு வலியுறுத்தினார். மாஸ்கோ முடிவுக்காக நாம் ராஜாஜிக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்.

அணு ஆயுதப் பிரச்னையை ராஜாஜி அதியற்புதமாக ஜனாதிபதி கென்னடிக்கு விளக்கினார். "நான் ஜனாதிபதியாக ஆனதிலிருந்து என்னைப் பண்படுத்திய தலைசிறந்த சக்திகளில் ஒன்று அவரது (ராஜாஜியின்) சந்திப்பு" என்று ஸ்ரீ கென்னடி தமது நெருக்கமான ஆலோசகர் ஒருவரிடம் சந்திப்பு நிகழ்ந்ததற்குப் பல தினங்கள் பின்னால் கூறினாராம். இதிலிருந்தே ராஜாஜியின் வாதம் கென்னடியின் உள்ளத்தில் எவ்வளவு ஆழப் பதிந்துவிட்டது என்பதை அறியலாம். ராஜாஜி தமது அந்தரங்க சுத்தமான விளக்கத்தாலும், எதிர்க்கவொண்ணா வாதத் திறனாலும், இந்தத் தூதுப் பணியில் தாம் கண்ட ஒவ்வொருவரின் நன்மதிப்பையும் பெற்றார்.

மூன்று வல்லரசுகளும் தற்போதைய சோதனைத் தடை ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டாலும், அணு ஆயுதம் படைத்த மற்ற நாடுகள் அதற்கு இணங்கவும், பூரண ஆயுதபரிகரணம் ஏற்படவும் ஐ. நா. பொதுச் சபை, ஜினிவா ஆயுத பரிகரண மகாநாடு இவற்றில் செய்ய வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. இந்த அதி முக்கியமான சமயத்தில், நிரந்தரமான உலக சமாதானத்துக்கு ஓர் அடிப்படையை உருவாக்குவதற்காக ராஜாஜியை இம் மகாநாடுகளுக்கு அழைத்தால் அது பாராட்டுக்குரியதாகும்.


(நன்றி: 'ஹிந்து')


தான் பெற்றுள்ள ஐசுவரியமும், ஆற்றலும் சமூகத்துக்கெல்லாம் தன்னால் விநியோகிக்கப்பட வேண்டியவை என்று உணர வேண்டும். 'தர்மகர்த்தா முறை' என்று காந்தியடிகள் கூறியது இதுவே. வள்ளுவர் பெருமான் கூறும் ஒப்புரவும் இதுவே.

சமூகத்தில் ஆற்றலும், ஐசுவரியமும் உள்ளவர்கள் தமது சுதந்திரத்தைத் நியாயமில் செலுத்தக் கூடும் என்பதனால் பொதுமக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் நிர்வாகத்தைத் தருகின்றனர். இப்படித் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மக்களுடைய சுதந்திரத்தில் நம்பிக்கை அற்றவர்களாகவும் பலவீனர்களாகவும் இருந்துவிட்டால் பழைய அடிமைத்தனத்தையே வேறு உருவத்தில் நாடு முழுவதிலும் அவர்களே பரப்புகிறார்கள். தனி மனிதர்களுக்குக் கண்காணிப்பாக அரசாங்கம் உள்ளது போல், அரசாங்கத்தைக் கண்காணிக்க யாரும் இல்லாததால் நிலைமை எல்லைமீறிப் போகிறது. நிர்வாகத்தோடு நில்லாமல் சர்க்காரே தொழிலையும் எடுத்துக் கொள்கிறது. தனிமனிதர்கள் சொந்தச் சொத்துக்களை விருத்தி செய்து கொள்வதில் சுய ஈடுபாடும், ஆர்வமும் காட்டுவது போல் ஆட்சியாளர் அக்கறை காட்டாததால் தேசத்தின் பொருளாதாரம் அடியோடு பாழாகிறது.

இந்த நிலை மாறவேண்டுமானால், தனி மனிதர்களின் சுதந்திரத்தை மதித்து அது வரம்பு மீறிப் போகாமல் கண்காணிக்க வேண்டியது மட்டுமே தனது பொறுப்பு என்பதை உணரும் அரசியல் கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பை மக்கள் ஒப்படைக்க வேண்டும். எல்லோருடைய சுதந்திரத்தையும் பறித்துத் தானே சர்வாதிகாரம் புரியவேண்டும் எனப் பேராசைகொண்ட ஒரு கட்சியிடம் ஆட்சியை விட்டு வைக்கும் வரை நாட்டுக்குக் கிடைத்த சுயராஜ்யம் மக்களுக்குக் கிடைக்காது. சமீப காலத்தில் இவ் விஷயமாக மக்கள் விழிப்புப் பெற்று வருகிறார்கள் என்பதை உபதேர்தல்கள் கூறும் உண்மை. இந்த உண்மையைப் பொதுத் தேர்தலில் நிலைநாட்டவேண்டியது மக்கள் கடமை; முக்கியமாக இளைஞர் கடமை எனக் கருதுகிறார் ராஜாஜி. தேச சுதந்திரத்துக்காக அன்று இளைஞர்கள் போராடியது போல், மக்கள் சுதந்திரத்துக்காக இன்று அவர்கள் தீவிர உணர்ச்சியுடன் செயல் புரிய வேண்டும் என்று அறை கூவுகிறார் தலைவர் ராஜாஜி. இந்நாட்டு மக்கட் செல்வம் விழிப்புப் பெற்று விட்டால் அவர்களின் வெற்றியை யாரும் தடுக்க முடியாது.

பூதத்தைப் புட்டிக்குள் அடக்கியாயிற்று !





"ஆங்கிலம் படித்த ஜாதி"

காதுக்குத் தேனாகவும், கருத்துக்கு விஷமாகவும் ஹைதராபாத்தில் பேசியிருக்கிறார் நேருஜி. ஆங்கிலத்தின் உபயோகத்தைப் பற்றியெல்லாம் சொல்வது போல் சொல்லிவிட்டு, 'என்றாலும் அது எப்படி ஆட்சி மொழியாக இருக்க முடியும்?' என்கிறார். 'ராஜ்ய ரீதியில் பிரதேச மொழி; தேசிய ரீதியில் ஹிந்தி; சர்வதேச ரீதியில் ஆங்கிலம்' என்று எளிதாகச் சொல்கிறார். 'தேசிய ரீதியில் ஹிந்தி' என்று சொல்லும்போது, ராஜாஜி கூறுவது போல் அதற்குப் 'பாரத மக்களின் பொதுமொழி' (பாரத பிரஜா பாஷா) என்ற ஸ்தானம் அளிக்க மட்டும் அவர் எண்ணவில்லை. அதுவே ஆட்சிமொழியாகவும் இருக்க வேண்டும் என்கிறார். கையிலிருக்கும் லாகவ ஆயுதமான ஆங்கிலத்தை நீத்து, பொறுப்பை ஆற்ற முடியாத ஹிந்தியை ஆட்சி மொழியாக்கி, இந்தியாவில் புது பாரபட்சங்களை உண்டாக்குவது பிரதமரின் நியாய சிந்தனைக்கு எப்படித்தான் ஏற்றதாகத் தோன்றுகிறதோ ?

நேருஜி இப்போது சிலரைத் திருப்தி செய்வதற்காக ஆங்கில மொழியையும் அம் மொழியின் பயனைக் கருதி அதனை ஆதரிப்பவர்களையும் தாக்கத் தொடங்கியிருக்கிறார். ஆங்கிலத்தை ஆதரிப்பவர்கள் மற்றவர்களைவிடத் தங்களை உயர்வாகக் கருதும் ஒரு தனி ஜாதியாகி விட்டார்கள் என்று கூறியிருக்கிறார் அவர். இது இந்நாட்டுப் படிப்பாளிகளின் மீது பிரதமர் சூட்டியுள்ள அநியாயமான குற்றச்சாட்டாகும். ஆங்கிலம் படித்தவர்கள் தம்மை உயர்வாக நினைத்த காலம் மலையேறி விட்டது.

பெரும் பதவியிலிருப்பவர்கள் பிறர் குற்றத்தைக் காணு முன் தம் குற்

'வரப்புயர நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும்; நெல் உயரக் குடி உயரும்; குடி உயரக் கோன் உயர்வான்' என்பது அவ்வை பாடல். இன்று, அதே மெட்டில்....



திட்டம் உயர வரி உயரும்-------வரி உயர விலை உயரும்



சோஷலிஸம் உயர அதிகார வர்க்கம் உயரும். அதிகாரவர்க்கம் உயர லஞ்சம் உயரும்

றத்தைக் கண்டு சரிசெய்து கொள்ள வேண்டும்.

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற் பின்
என் குற்றம் ஆகும் இறைக்கு

என்றார் திருவள்ளுவர்.

இன்றைக்கு நேரு அவர்களின் ஆட்சியில் இரண்டு ஜாதிகள் சிருஷ்டியாகியுள்ளன. ஒன்று ஆங்கிலத்தை நீக்க வேண்டும் என்று வெறியாட்ட மிடும் ஹிந்தி ஜாதி. பிரதமர் குறிப்பிடும் 'ஆங்கில ஜாதி'யினர் நாடு முழுவதும் பரவியுள்ளனர் என்றால், இந்தியாவின் ஒரு பகுதியில் மட்டுமுள்ள 'ஹிந்தி ஜாதி'யினரோ நாடு முழுவதிலும் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்த எண்ணியுள்ளனர். ஆங்கில ஜாதிக்கு இல்லாத அரசாங்க அதிகாரம் வேறு இவர்களுக்கு இருக்கிறது. நேருஜியின் ஆட்சியில் தழைத்துள்ள இன்னொரு ஜாதி காங்கிரஸ் ஜாதி. இது முன் காலத்து ஜாதி முறையில் எந்தப் பிரிவினரும் அடைந்திராத அளவுக்கு எல்லாச் சலுகைகளும் சக்திகளும் பெற்று, 'தங்கள் ஜாதி'யில் இல்லாதவரை யெல்லாம் நசுக்கப் பார்க்கிறது. இவற்றை விட்டு ஆங்கிலம் படித்தஜாதியைத் தாக்குகிறார் பிரதமர்.

என்ன சேதி?

முதலாளி யார்?

விலைவாசி உயர்வைக் காரணம் காட்டி ரேஷன் பேயையும், கண்ட்ரோல் பிசாசையும் அவிழ்த்துவிட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. யாரோ சமூக விரோதமாகச் செயல்படும் வியாபாரிகள் தான் விலைவாசி ஏற்றத்துக்குக் காரணம் என்று எண்ணி அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க யோசனை செய்கிறது காங்கிரஸ் சர்க்கார்.

ஆனால் விலை உயர்வுக்கு முதலாளிகளும் வியாபாரிகளுமா அடிப்படைக் காரணம்? அவர்கள் ஒன்று சேர்ந்து சதி செய்தா விலைகளை உயர்த்தியுள்ளனர்? அல்ல. சர்க்காரின் வரிகளும், பற்றாக் குறைக்கு நோட்டு அச்சடிப்பதும், இவை உண்டாக்கிய பணவீக்கமும்தான் விலைகளை ஏகத்தாறாக ஏற்றியுள்ளன. பெர்மிட் — லைசென்ஸ் — கோட்டா ஆட்சியில் சர்க்கார்தான் பெரிய முதலாளியும் வியாபாரியும். எனவே தண்டனைக்கு ஆளாக வேண்டிய முதல் பாத்திரம் சர்க்கார்தான். தேர்தல்களின்போது மக்களே இந்தத் தண்டனையை அளிப்பார்கள்.


“அமெரிக்கக் குரல்”


நம்மைப் போலவே அமெரிக்காவும் சீனாவின் எதிரி. இந்தப் பொது எதிரியைக் கண்டிக்கவே ராஜநீதியறிந்த அமெரிக்கா தனது வானொலியாகிய அமெரிக்கக் குரலை (Voice of America) பயனாக்கும். ஹிமாலய எல்லையிலுள்ளவர்களை உற்சாகப்படுத்தி ஊக்குவதற்கு ஒரு பிரசாரயந்திரம் இப்போது அத்தியாவசியமாகும். இச்சமயத்தில் அமெரிக்கா வானொலி நிலையம் அமைக்க முன் வந்திருப்பது நமது நல்லதிருஷ்டம் ஆகும். ராணுவ ரீதியில் பூரண பயன் தரத்தக்க பலம் கொண்ட நிலையத்தை நாமே அமைத்துக் கொள்வது இப்போது சாத்தியமல்ல. இதில் அந்நியச் செலாவணிச் சிக்கல்கள் வேறு உண்டு. ஆனபடியால் வீண் சந்தேகங்களைக் கிளப்பாமல், அமெரிக்க வானொலி ஒப்பந்தத்தைக் கலைக்காமல் பயன்படுத்திக் கொள்வதே புத்திசாலித்தனமாகும். ஸ்ரீ அசோக மேத்தா அவர்கள் சரியான முறையில் அறிக்கை வெளியிட்டதைப் பாராட்டுகிறோம்.

ஸெர்வால்
வெறும் அலமாரி மட்டும் அல்ல...

ஆம், கன கச்சிதமாய், வெகு அழகாய் உள்ள ஸெர்வால் மிக்க பயனுடையது. எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் வைத்திருக்க வேண்டிய காட்சிப் பொருளுமாகும். விலை மதிப்புள்ள ஆடையணிகள், தஸ்தாவேஜுகள், புத்தகங்கள் மற்றும் தூசி, பூச்சி, ஈரம் போன்றவற்றிலிருந்து நீங்கள் பாதுகாப்புத் தர விரும்பும் எதையுமே பத்திரப்படுத்த விஞ்ஞான முறையில் உருவமைக்கப்பட்டது ஸெர்வால்.
ஸெர்வால் ஓர் அரும்தனம் — வீடுகள், ஆபீஸ்கள், ஆலைகள், கடைகள், பாங்குகள், ஆஸ்பத்திரிகள் முதலிய எங்குமே பொருத்தமுடைய பொருள்.

ஸெர்வால் தருவது மாபெரும் சேவை.





ஸ்டீலேஜ்

போன்: 253429
'SYMBOLIC'

"STEELAGE"

தென்னிந்தியாவின் ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஸ்பென்ஸர் & கம்பெனி லிமிடெட். 153, மவுண்ட் ரோட், சென்னை — 2.

உப விநியோகஸ்தர்கள்:

மைசூர் ராஜ்யம்: மெஸர்ஸ் ஸ்பென்ஸர் & கம்பெனி லிட். 7, மகாத்மா காந்தி ரோடு, பெங்களூர்
தஞ்சாவூர் ஜில்லா: மெஸர்ஸ் ஓ. எஸ். எம். சலியா & ஸன்ஸ், பட்டமங்கலத் தெரு, மாயூரம்
கோவை ஜில்லா (வால்பாறை நீங்கலாக):
மெஸர்ஸ் வி. எஸ். காந்தி & கம். பழைய தபால் ஆபீஸ் ரோட், கோவை
எர்ணாகுளம் திருச்சூர் மற்றும் கோட்டயம்:
மெஸர்ஸ் ஏ. எம். மஹமத் உஸ்மான் & பிரதர், பிராட்வே, எர்ணாகுளம்



17

என்நெஞ்சம் மேயான்;என்
சென்னியான்

[என் நெஞ்சம் மேயான் — என் நெஞ்சிலே வந்து அமர்ந்தவன். என் சென்னியான்—என் தலையின்மேல் திருவடி சூட்டிய இறைவன்.]

தமது நெஞ்சத்தில் வசிப்பவனும், தமது தலைமீது திருவடியைத் தரித்தருளியவனுமான இறைவன் யார் என்பதைப் பாடுகிறார் ஆழ்வார்.

தானவனை
வன்நெஞ்சம் கீண்ட
மணிவண்ணன்

[தானவனை — அசுரனாகிய ஹிரண்யனை. வன்நெஞ்சம் — ஆணவம் நிரம்பியதும் கடினமானதுமான மார்பை. கீண்ட — பிளந்த. மணிவண்ணன் — நீல ரத்தினம் போன்ற மேனியை யுடைய திருமால்.]

—முன்னம்சேய்
ஊழியான் ஊழி
பெயர்த்தான்

[முன்னம் — முற்காலத்தில். சேயூழியான்— மிகத் தொன்மையில் நிற்கும் ஊழியில் அவதரித்தவன். ஊழி பெயர்த்தான் — பல யுகங்களைத் தோற்றுவித்தவன்.]

உலகேத்தும்
ஆழியான் அத்திஊ
ரான்

[உலகேத்தும் - உலகம் எல்லாம் துதிக்கிற. ஆழியான் - சக்கரம் ஏந்தியவன். அத்திஊரான் - திருவத்தியூரிலே கோயில் கொண்ட மூர்த்தி.]

ஹிரண்யனை நிக்கிரகம் செய்தவனும், யுகங்களுக்கெல்லாம் மூத்தியவனும், யுகங்களை யெல்லாம் தோற்றுவித்தவனும், சக்கரம் தாங்கியவனும், அத்தியூரிலே கோயில் கொண்டவனுமான திருமால் என் நெஞ்சம் மேவியவன், என் சென்னியிலே பாதம் சூட்டியருளியவன் என்று பக்தி பரவசத்தோடு பாடுகிறார் ஆழ்வார்:

என்நெஞ்சம் மேயான்என்
சென்னியான் தானவனை
வன்நெஞ்சம் கீண்ட
மணிவண்ணன்—முன்னம்சே
யூழியான் ஊழி
பெயர்த்தான் உலகேத்தும்
ஆழியான் அத்திஊ
ரான்

மூன் அவதாரங்களில் பெருஞ் செயல்கள் செய்த பெருமான் என் நெஞ்சத்தையும் சிரத்தையும் இருப்பிடமாகக் கொண்டான் என்று களிப்படைகிறார் ஆழ்வார்.

கல்கி வெள்ளி விழா பரிசுத் திட்டம்

இலக்கிய உலகில் இணையற்ற பணி புரிந்து உங்கள் பேர் அபிமானத்தைப் பெற்ற 'கல்கி'ப் பத்திரிகைக்கு இன்னும் இரண்டே ஆண்டுகளில் இருபத்தைந்தாவது வயது பிறக்கப் போகிறது. ஆம், எங்கள் மகிழ்ச்சியையும் உங்கள் மகிழ்ச்சியையும் ஒரு மகிழ்ச்சியாக்கிக் குதூகலம் அளிக்கப் போகும் நன்னாள் நெருங்கி வரவிருக்கிறது.

இந்த வெள்ளி விழா நிகழ்ச்சியை நாம் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டாமா? அதற்கு இதோ ஒரு திட்டம் வகுத்திருக்கிறோம்.

தொடர்கதை, சிறுகதை ஆகிய இலக்கியப் பகுதிகளில் புது சகாப்தத்தை உண்டுபண்ணிய 'கல்கி'யின் இருபத்தைந்தாவது ஆண்டு விழாவையொட்டி இப் பகுதிகளின் வளர்ச்சிக்காக இருபத்தையாயிரம் ரூபாய் பரிசு அளித்துக் கொண்டாடத் திட்டமிட்டிருக்கிறோம்.

சிறந்த நாவல்களுக்கு மூன்று பரிசுகளும், சிறுகதைகளுக்கு மூன்று பரிசுகளும் தருவதாக இருக்கிறோம். சிறந்த நாவலுக்கு:

முதற் பரிசு	...	ரூ.	10,000
இரண்டாவது பரிசு	...	ரூ.	7,500
மூன்றாவது பரிசு	...	ரூ.	5.000

சமூக நாவல்களாயிருக்க வேண்டும் அல்லது சரித்திர நாவல்களாயிருக்க வேண்டும் என்ற கட்டுத் திட்டங்கள் ஏதும் கிடையாது. தமிழ் இலக்கிய முன்னேற்றத்துக்கு மேலும் புகழ் தேடித் தருவதாக அமைய வேண்டும் என்ற ஒரே நிபந்தனைதான்.

அதே போலத்தான் சிறு கதைகளுக்கும்.

முதற் பரிசு	...	ரூ.	1.000
இரண்டாவது பரிசு	...	ரூ.	500
மூன்றாவது பரிசு (பத்துக் கதைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 விதம்)	...	ரூ.	1 000

ஆகமொத்தம் இருபத்தையாயிரம் ரூபாய் (ரூ. 25,000) பரிசுகளாக வழங்கப்பெறும்.

நந்தமிழ் நாட்டு எழுத்தாளர்களுக்கு ஒரு வேண்டுகோள். ஆற அமர சிந்தித்துத் தமிழ் மண்ணுக்கும், 'கல்கி' பத்திரிகைக்கும் அழியாப் புகழ் தேடித் தரும் சிறுகதை, நவீனங்களை எழுதுங்கள்.

1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முப்பதாம் தேதிக்குள் எங்கள் காரியாலயத்துக்கு வந்து சேரும்படி அனுப்பி வைத்தால் போதுமானது.

இந்தப் போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

இலக்கியத் துறையிலே சிறந்து விளங்கும் அறிஞர்கள் பஞ்சாயத்தார்களாகப் பொறுப்பேற்றுப் போட்டிக்கு நீதி வழங்குவார்கள்.

எழுத்தாள அன்பர்களின் ஒத்துழைப்பு 'கல்கி'யின் பணியை மேலும் சிறந்தோங்கச் செய்யும் என்று நம்புகிறோம்.



வீரத்தின் விளையாட்டு





பாரத நாட்டின் எல்லைப்புறத்தில் சீனர்கள் படைகளைக் குவித்துப் பயமுறுத்த முயலும் வேளையில் நம் மண்ணைக் காக்கும் புனிதப் பணியிலே பாரத வீரர்கள் அயராது பாடுபட்டு வருகிறார்கள். ஊக்கமும் உற்சாகமும் அளிக்கக் கூடிய விளையாட்டுக்களிலே ஈடுபட்டாலும் தங்கள் கடமையை அவர்கள் மறக்கவில்லை.

1. வீரம் விளையும் பூமியான லடாக்கிலுள்ள ஸ்தூபிகள். 2. மலைத்தொடர்களில் எதிரிகளின் தலை தென்படுகிறதா என்று கண்காணிக்கிறார்கள். 3. கடும் குளிரையும், கொடிய பனியையும் சகித்துக்கொண்டு டெலிபோன் கம்பிகளைப் பொருத்தும் சிப்பாய்கள். 4. சோர்வைப் போக்கக் கைப்பந்தாட்டத்தில் மூழ்கிய காவலர்கள். 5. மாவீரர்களின் சாக்குப் போட்டிப் பந்தயம். 6. பதுங்கிப் போராடக் குழி வெட்டும் நம் வீரச் சகோதரர்கள். 7. நம் படைவீரர்கள் ஹோலி பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். 8 பனிமலைச் சிகரங்களிலும் ராணுவப் பள்ளி நடக்கிறது.













ஸர்ஜன் வாசுக்குட்டி

பக்த சிரோமணியாக ஊரில் பெயரெடுத்த கோபாலய்யருடைய துக்கம் தாங்க முடியாத நிலையடைந்தது. அதன் காரணம் அவருடைய தெய்வ பக்தியெல்லாம் அடங்காத கோபமாக மாறி விட்டது. வீட்டிலிருந்த சாமி படங்கள் அத்தனையையும் கண்ணாடிக் கட்டிடங்களுடன் சுக்கு நூறாக்கி வீதியில் குப்பைத்தொட்டியில் போட்டார். ''வேண்டாம், வேண்டாம் மகா பாவம்!'' என்று மனைவி கதறினாள். ''தெய்வமும் இல்லை, ஒன்றும் இல்லை'' என்று மனைவியை அதட்டி பூஜைக்கு வைத்திருந்த ஸாளக்கிராமத்தைக் கிணற்றில் போட்டார். துக்கம் உன்மத்தமாயிற்று. வெகு நாட்கள் வரையில் பைத்தியமாக நடந்து கொண்டார்.


ஃ ஃ ஃ

இந்தக் கதையை முதலிலிருந்து சொல்கிறேன். ஆஸ்திக நாஸ்திக வாதங்கள் மிகப் பழைய சமாச்சாரம். அந்தச் சர்ச்சைக்கு முடிவே இல்லை. இரு தரப்பிலும் உண்மையைக் கண்டவர்கள் இல்லை. உண்மையைக் காணாதவர் இடும் வாதத்துக்கு முடிவு ஏது? அவரவர்கள் அநுபவத்தின் பயனாக உணர்ச்சிகள் உண்டாகின்றன. அந்த உணர்ச்சிகளே வாதங்களாகின்றன. வாதத்துக்கும் முடிவு இல்லை. ஊருக்கும் வழியில்லை.

ஃ ஃ ஃ

கோபாலய்யருக்கு ஆண்குழந்தை பிறக்கவில்லை. ஒரே ஒரு பெண் குழந்தை. மங்களம் என்று அதற்குப் பெயரிட்டு மிகவும் பிரியமாகத் தகப்பனாரும் தாயாரும் வளர்த்தார்கள். பதினாறு வயதாயிற்று.

''மங்களம்! எனக்கு அந்தச் சாமிநாதன் கொஞ்சமும் பிடிக்கவில்லை; ஏதோ இன்ஜினீர் படித்து பாஸ் செய்திருக்கிறான் என்று உன் அப்பா அவனை விரும்புகிறார். கன்னங் கரேலென்று ஒரு மாப்பிள்ளையைப் பிடித்தார் உன்னப்பா. எனக்கு நம்ம கிருஷ்ணமூர்த்தி தான் பிடித்திருக்கிறது. என்ன



சொல்கிறாய்? அவனும் கொஞ்சம் படித்துத்தான் இருக்கிறான்; மேலும் படித்து இன்ஜினியரோ, டாக்டரோ அவனும்தான் படிப்பான்; லக்ஷணமாய் இருக்கிறான். அவனை விட்டு இந்தக் கருப்பனையா நீ கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்?'' என்றாள் கமலம்மாள்.

துணி கிழிந்திருந்ததை மங்களம் உட்கார்ந்து தைத்துக் கொண்டிருந்தாள். ''இவனும் வேண்டாம், அவனும் வேண்டாம் அம்மா! என்னைத் தொந்தரவு படுத்தாதே'' என்றாள் மங்களம்.

இவ்வாறு தினமும் மாறி மாறிப் பேச்சும் விவாதமும் நடந்தன. முடிவில் மங்களத்தைச் சாமிநாதனுக்கும் கொடுக்கவில்லை, கிருஷ்ணமூர்த்திக்கும் கொடுக்கவில்லை. கமலம்மாளுக்கு ஒரு அண்ணன்; சொந்த அண்ணன் அல்ல, தகப்பனாரின் முதல் தாரத்தின் வயிற்றில் பிறந்த மகன். அவனுடைய மகன் வாசு, மங்களத்துடன் குழந்தைப் பருவம் முதல் கூட விளையாடி வந்த பையன். வாசுவைத்தான் நான் கலியாணம் பண்ணிக் கொள்வேன் என்று மங்களம் பிடிவாதம் பிடித்தாள். தகப்பனாரும் ஒப்புக் கொண்டார். ஜோதிஷர்களும் இது ரொம்ப நல்ல ஜோடி என்றார்கள்.

மங்களத்தை வாசுதேவனுக்குக் கொடுத்துத் திருப்பதியில் விவாஹ முகூர்த்தம் சுருக்கமாக நடந்தது.

ஃ ஃ ஃ

வாசுவும் மங்களமும் ஒரு வருஷம் கோபாலய்யர் வீட்டிலேயே சந்தோஷமாக வாழ்ந்தார்கள். அடுத்த வருஷம் சித்திரை மாதத்தில் மணலூரில் நடந்த பெரிய ரயில் விபத்தில் வாசு உயிர் நீத்தான். அதன் காரணம்தான் கோபாலய்யர் நாஸ்திகராகி விட்டார்.

''மங்களம் என்று பெயர் வைத்தேனே. விதவையாய்ப் போனாயே!'' என்று தாயார் குழந்தையைக் கட்டிக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

''நான் செய்த பூஜையெல்லாம் பொய்யாகிவிட்டதே! ஏற்றிய கற்பூரம் பிசாசுக்காயிற்றே! தெய்வமும் இல்லை. தேவியுமில்லை. எல்லாம் பொய்!'' என்றார் கோபாலய்யர். மூன்று மாதங்கள் முழுப் பைத்தியமாகவே நடந்து கொண்டார்.

விவாகம் ஆனபோது மங்களம் சாதாரணப் படிப்புத்தான் படித்து முடித்திருந்தாள். விபத்துக்குப் பிறகு கோபாலய்யர் ஓரளவு சாந்தமடைந்த பின் மங்களத்தைப் பள்ளிக்கூடத்தில் மறுபடியும் சேர்த்தார். மங்களம் படிப்பில் நன்றாகத் தேறி வருஷம் தவறாமல் படிப்படியாக விருத்தியடைந்தாள். பத்து ஆண்டுகள் முடிந்து மங்களம் வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து விட்டாள்.



மங்களத்துக்கு இப்போது இருபத்தைந்து வயது. வைத்தியப் பரீட்சை உயர்தர வகுப்பில் தேறி விட்டாள். வைத்தியக் கல்லூரியில் கூடப் படித்த பல பேர் அவளை மணந்து கொள்ள ஆசைப்பட்டார்கள். தாயாரும்கூட மறு விவாகத்துக்கு ஓரளவு சம்மதித்தாள். ''சாஸ்திரமாவது? கடவுளாவது? அவள் இஷ்டம்'' என்றார் தகப்பனார். வாசு இறந்தது முதல் கோபாலய்யருக்கு எதிலும் நம்பிக்கை இல்லை. மூட நம்பிக்கைகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை; ஆனபடியால் மங்களத்தின் மறு விவாகத்துக்கு முற்றிலும் சம்மதித்தார்.

'அவள் இஷ்டம்' என்று தகப்பனார் சொன்னதைக் கேட்டு மங்களம், ''எனக்கு விவாகம் வேண்டாம். பிரஸவ விடுதி வைத்து என் படிப்பைச் சமூகப் பணியாக்கி அந்த விதத்தில் காலம் கழிப்பேன்'' என்றாள்.

''சமூகப் பணியாவது, மடத்தனமாவது! பணம் சம்பாதிக்கப் பார்'' என்றார் கோபாலய்யர். ''அப்படியே'' என்றாள் மங்களம் சிரித்துக்கொண்டு. ''பிரஸவ விடுதியில் நல்ல பணமும் உண்டு'' என்றாள். தகப்பனாரும் இதற்கு ஒப்புக்கொண்டு வேண்டிய செலவுக்கெல்லாம் தாராளமாகப் பணம் தந்தார்.

ஃ ஃ ஃ

இப்போது 'மங்களம்மாள் பிரஸவ விடுதி'யில் வருஷம் ஒன்றுக்கு ஐம்பது தாய்மார்கள், குழந்தைகள் பெற்று சௌக்கியமடைந்து சந்தோஷமாகத் தத்தம் வீடுகளுக்குச் செல்கிறார்கள். வியாதியஸ்தர்கள் விடுதியில் முப்பது பேர் வரையில் எப்போதும் இருந்து வந்தார்கள். ''இது வல்லவோ வாழ்க்கை'' என்றாள் மங்களம்மாள் தன் தாயாரிடம். 'மங்களம்மாள் பிரசவ விடுதி' பெரிய புகழ் பெற்ற ஸ்தாபனமாகி விட்டது. விடுதியில் பிறந்த ஒவ்வொரு குழந்தையையும் மங்களம் தன் தாயார் கமலம்மாளிடம் காட்டிச் சந்தோஷப்படுவாள். வருமானமும் எதிர்பார்த்ததற்கு மேலாகவே வர ஆரம்பித்தது.

''நான் விதவையானேன் என்று பகவான் பேரில் கோபித்தீர்கள்; ஆண்டவன் சங்கற்பத்தை அறியாமல் நாம் என்ன என்னவோ செய்கிறோம்; எனக்கு எத்தனை குழந்தைகள் பார்த்தாயா?'' என்பாள் மங்களம் தாயாரிடம். கமலம்மாளும் சந்தோஷமாகப் பிரசவ விடுதியில் சில்லறை வேலைகள் செய்து வந்தாள்.

கோபாலய்யர் மறுபடியும் ஸ்வாமி படங்களைச் சம்பாதித்து வீட்டில் சுவரில் மாட்டிப் பூஜை செய்ய ஆரம்பித்தார். திருப்பதி கோவிலுக்கு வருஷம் தவறாமல் மனைவியுடன் போய் வந்தார். ''கோவிந்தா! உன்னைத் திட்டினேன். உன்னைக் கிணற்றில் போட்டேன். நீ சினம் கொள்ளாமல் எங்களைக் காப்பாற்றினாய்'' என்று சொல்லிப் பிராகாரம் சுற்றி உருண்டு சேவை செய்து வந்தார். தினமும் சுந்தர காண்டம் பாராயணம் செய்தார்.

ஃ ஃ ஃ

தகப்பன் யார் என்று இல்லாத ஒரு குழந்தை விடுதியில் பிறந்தது. ஓர் அநாதைப் பெண் விடுதிக்கு வந்து அந்தக் குழந்தையைப் பெற்றாள். ''இந்தக் குஞ்சை நீ எடுத்துக்கொண்டு வளர்த்துக்கொள், டாக்டர் அம்மா! உனக்குக் குழந்தை இல்லையாமே'' என்றாள் அந்த அநாதை ஸ்திரீ தைரியமாக.

''நான் மூன்று குழந்தைகளைக் கொன்ற பாபி. அந்தப் பாவம் தீரும், அம்மா, நீ இதை வளர்த்தாயானால்'' என்று அந்த அநாதை கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

குழந்தை அழகாக இருந்தது; மங்களத்தின் முகத்தை நோக்கிச் சிரித்தது. 'என்ன சொல்லுகிறாய் அம்மா?' என்று மங்களம் தன் தாயார் கமலம்மாளைக் கேட்டாள்.

''அது என்ன ஜாதியோ, என்ன குலமோ, ஒன்றும் தெரியாமல் நாம் எப்படி எடுத்துக் கொள்கிறது?'' என்றாள் கமலம்மாள்.

அப்போதுதான் கோபாலய்யர் திருப்பதியிலிருந்து திரும்பி வந்தவர், ''ஜாதியாவது, குலமாவது? கோவிந்தனுக்கு ஒரே குலம். இன்று அவன் எனக்குப் பிரஸன்னமாகி, 'உனக்கு ஒரு பேரனைக் கொடுக்கிறேன்; வைத்து வளர்த்துக் கொள்' என்றான். அவன் சொன்னது நடந்து விட்டது'' என்று குழந்தையை எடுத்து மகளிடம் தந்தார்.

''இது பிராம்மணக் குழந்தைதான்—முகத்தைப் பார்'' என்றாள் கமலம்மாள்.

''எந்தக் குலமானால் என்ன? அப்பா எடுத்துக் கொடுத்தால் போதும்'' என்றாள் மங்களம்.

அந்தக் குழந்தைதான் இப்போது வாசுக்குட்டி என்கிற பெயர்போன ரண சிகிச்சை வைத்தியர்.


"GOKUL"
SANTOL
TOILET POWDER



உல்லாசத்திற்கு
உயர்ந்தவை!
Sharp
JHANKAR
ஹயாகாவா எலக்ட்ரிக் கம்பெனி லிட்.,
ஜப்பான் தொழில் நுட்பக்
கூட்டுறவோடு தயாரிக்கப்பட்டது.
மாடல் பிஎக்ஸ்எஸ்-338
(போர்டபிள் ஸெட்)
8-ட்ரான்ஸிஸ்டர் 2-பாண்டு
குரல் கட்டுப்பாடு
எக்ஸைஸ் டூட்டி உள்பட ரூ. 365
(வரிகள் தனி) உறை தனி விலை
மாடல் யூஸி-143 (மேஜை மாடல்)
4-ட்யூப் 3-பாண்டு
விசேஷப் பாதுகாப்புவாய்ந்த
ஸர்க்யூட்
எக்ஸைஸ் டூட்டி உள்பட ரூ. 210
(வரிகள் தனி)
மாடல் பிஇஸட்-490
(போர்டபிள் ஸெட்) 9-ட்ரான்ஸிஸ்டர் 4-பாண்டு நேர்த்தியான
ட்யூனிங் & ரேடிக்கேட்டர்
எக்ஸைஸ் டூட்டி உள்பட ரூ. 415
(வரிகள் தனி) உறை தனி விலை
JHANKAR
ட்ரான்ஸிஸ்டர் ரேடியோக்கள்
தயாரிப்பதில் தலைசிறந்தவர்கள்.
ரேடியோ டிவிஷன்,
இண்டியன் பிளாஸ்டிக்ஸ் லிட்.,
பம்பாய்—67
ASPJR-40 TAM
உங்கள் அருகாமையிலுள்ள ஷார்ப் - ஜங்கார் டீலரை அணுகுங்கள்
மதராஸ், ஆந்திரா, கேரளா, மைசூர் பிரதேசங்களுக்கு விநியோகஸ்தர்கள்
ஜே. ஓ. போன் கம்பெனி, 13. தங்கசாலைத் தெரு, மதராஸ்


குண்டு
ல்லிகை
அரு. ராமநாதன்

அத்தியாயம் ஒன்று

பிள்ளையாருக்கு ஒரு முழம்

"குண்டுமல்லி ஒரு முழம் கொடு. பிள்ளையாருக்குத்தான்! நியாயமாக அளந்து கொடு" என்றாள் உமா.

பூக்காரி இருபது காசுக்கு முக்கால் முழத்தை ஒரு முழமாக அளந்து காட்டும் கை வித்தை தெரிந்தவள்தான் என்றாலும், பிள்ளையாருக்கு என்றதினால் தன் வியாபார புத்தியை ஒரு கணம் மறந்து விட்டு ஒன்றேகால் முழமாகவே அளந்து கொடுத்தாள்.

மனிதர்களைச் சுயநல யந்திரங்களாக மாற்றி வரும் இந்த இந்திய யுகத்திலே, பாமர மக்களின் உள்ளங்களில் உறங்கிக் கிடக்கும் பக்தி உணர்வு ஒன்று தான் சட்டங்களின் கெடுபிடிகளைவிட அதி வலிவுள்ளதாக நியாய உணர்ச்சியைத் தூண்டி மனித தர்மத்தை நிலை நிறுத்தி வருகிறது! அப்படித்தான் உமா நினைத்தாள். ஆனால் பக்தி என்பதே பாமர மக்களின் மூட நம்பிக்கை என்றோ, விரக்தியாளர்களின் வெறும் மனப் பிரமை என்றோ, தத்துவ ஞானிகளின் ஆத்ம போதை என்றோ, அறிவாளிகளின் இடைவேளைப் பிதற்றல் என்றோ நினைப்பவர்களும் இந்த உலகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அப்போது 'கிணிங்' 'கிணிங்' என்று சைக்கிள் மணியின் சத்தம் உமாவுக்குப் பின்னால் பாய்ந்து வந்தது.

அவளுடைய தங்கை வசந்திதான் வெகு வேகமாகச் சைக்கிளை ஓட்டிக் கொண்டு வந்து, "அக்கா! அக்கா!" என்று கூவிக்கொண்டே 'சர்'ரென்று 'பிரேக்' போட்டுச் சைக்கிளை நிறுத்தி, சர்க்கஸ்காரி 'ஜம்பிங்' வித்தை காட்டுவது போல் கீழே தாவிக் குதித்து 'ஜம்'மென்று நின்றாள்.

பைஜாமா, கம்மிஸ், நைலெக்ஸ் தாவணி, குதிரை வால் கொண்டை, இவை சகிதம் 'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை காண்' என்று அறைகூவல் விடுவது போலவே விளங்கினாள்.

அவளைக் கண்டதும் உமாவின் முகம் அளவில்லாத உற்சாகத்தால் மலர்ந்தது. இருந்தாலும் செல்லமாகக் கோபித்துக் கொள்பவளைப் போல், அவள் தன் முகத்தை மாற்றிக்கொண்டு "என்னடி, வசந்தி, இப்படி சைக்கிள் ரேஸ் விடுகிறாயே, கீழே தவறி விழுந்தால் என்னடி ஆகிறது?" என்று கடிந்து கொண்டாள்.

"ப்பூ, என்ன ஆகும்? உடம்பிலே எங்கேயாவது பஞ்சர் ஆகும். டாக்டர் கொஞ்சம் டிஞ்சர் போடுவார். சரியாய்ப் போய்விடும்!" என்று வசந்தி அலட்சியமாகச் சிரித்தாள்.

"கூட்டத்திலே சைக்கிளை மெதுவாக விடக் கூடாதோ? யார் மீதாவது சைக்கிள் ஏறிவிட்டால்?"

"என்ன ஆகும்? ஒன்று சைக்கிள் உடையும்! அல்லது அந்த ஆளின் பல் உடையும்!" என்று வசந்தி தமாஷாகச் சொன்னாள்.

"அழகா யிருக்குடி!" என்று உமாவின் வாய் கோபித்துக் கொண்டாலும் அவளுடைய கை அவளை அறியாமலே வாஞ்சையுடன் தன் தங்கையின் கையைப் பற்றிக் கொண்டது.

"அடேடே! அக்கா! உன் கையிலே என்ன? பூவா..? உனக்குக் குண்டு மல்லி என்றால் உயிராச்சே! கொடக்கா, உன் தலையில் 'ஸ்டைலாக' வைத்து விடுகிறேன்!"

"இல்லையடி வசந்தி! இது பிள்ளையாருக்கு! முதலிலே பிள்ளையாருக்குப் பூ வைத்த பிறகுதான் என் தலையிலே பூ வைத்துக் கொள்வேன்!"

"எந்தப் பிள்ளையாருக்கு? அரச மரத்தடியிலே குடியிருக்கிற ஏழைப் பிள்ளையாருக்கா, அல்லது சிவன் கோயிலிலே அப்பா அம்மாவுக்கு அடங்கிய பிள்ளையாகக் குந்தியிருக்கிற பிள்ளையாருக்கா?"

"இல்லே...வீட்டு மாடத்தில் ஒரு சின்னப் பிள்ளையார் வைத்திருக்கிறேன். என் தாத்தா கொடுத்தது" என்று உமா ஒரு பெருமூச்சு விட்டாள்.

"பிள்ளையாருக்கு எதுக்குப் பூ? அவர் தலையிலே சூடிக் கொள்வாரா?" என்று வசந்தி கிண்டலாகக் கேட்டாள்.

"அப்படிச் சொல்லாதேயடி வசந்தி! நீ இந்த வயசிலும் பொம்மை வாங்கிச் சட்டை தைத்துப் போட்டு அழகு பார்த்து ஆனந்தப்படுகிறாயே — அது மாதிரிதான் இதுவும்."

"போக்கா! நீ சுத்த பத்தாம் பசலி! அரை நூற்றாண்டுக்கு முன்னால் பிறக்க வேண்டியவள்!" என்று வசந்தி சொல்லி விட்டுக் குழந்தை போல் சிரித்தாள்.

அந்தச் சிரிப்புக்கு முன்னால் கோபம் வர முடியுமா? உமாவும் அந்தச் சிரிப்பிலே இழைந்துவிட்டாள்.

அக்கா தங்கையின் இந்தப் பாசப் பிணைப்பை வெகு சுவாரசியமாக ரசித்துக்கொண்டிருந்த பூக்காரி, "ஏம்மா! பார்க்க ராசாத்திமாதிரி இருக்கிறீங்க,

தலை நிறையப் பூ வாங்கி வச்சிக்கிட்டுப் போங்கம்மா!'' என்று கூப்பிட்டாள்.

''சரி, ஆளுக்கு ஒரு முழம் குண்டு மல்லி கொடு!'' என்று உமா நாற்பது பைசாவைத் தன் பர்ஸிலிருந்து எண்ணி யெடுத்து நீட்டினாள்.

''எனக்கு வேண்டாம் அக்கா! இரண்டு முழத்தையும் நீயே வைத்துக் கொள்'' என்றாள் வசந்தி.

''ஏண்டி, வெள்ளிக்கிழமையும் நல்ல நாளுமாகப் பூ வேண்டாம் என்கிறாய்! உனக்குத்தான் குண்டு மல் லிகை யென்றால் பிடிக்குமே!''

''ரொம்பப் பிடிக்கும். ஆனால் இந்த டிரஸ்ஸுக்கு மல்லிகைப் பூச் சரத்தைச் சுற்றிக் கொண்டால் பாஷ னாக இராது, அக்கா! நாரதர் பெண் வேஷம் போட்ட மாதிரி இருக்கும்'' என்று வசந்தி தன்னுடைய நாகரிக ஆடை அலங்காரங்களிலும் ஆணைப் போன்ற பாவனைகளிலும் அலாதி யான பெருமைப்பட்டுக் கொண்டாள்.


''இல்லையடி வசந்தி! எந்த டிரஸ் ஸாக இருந்தாலும் நீ தலையில் பூ வைத் துக் கொண்டால் அதுவும் ஒரு புதுப் பாஷனாகி விடும்'' என்று உமா ஒரு முழம் பூவை வற்புறுத்தித் தன் தங்கையிடம் கொடுத்தாள்.

''சரியக்கா! உனக்காக...'' என்று தன் நாகரிகத்தில் ஏதோ ஒன்றைப் பெரி தாகத் தியாகம் செய் பவள் போல் மல்லி கைப் பூச்சரத்தைத் தன் குதிரை வால் கொண்டையில் சுற் றிக்கொண்டாள்.

பிறகு இருவரும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெரு மாள் கோயிலின் வட்டாரத்தி லுள்ள பஜாரிலிருந்து கிளம் பினார்கள்.

வசந்தி தன் சைக்கி ளைத் தள்ளிக்கொண்டு ஜவானைப் போல் ஜம் ஜம் மென்று நடந் தாள். அவள் அருகில் புதிதாக மண மான பட்டிக்காட்டுப் பெண்ணைப்போல் உமா தலை குனிந்தபடி நடந்தாள்.

இருவரும் இரண்டு குண்டு மல் லிகைகள் போல் அழகழகாய் இருந் தார்கள் என்றாலும், முகத் தோற்றத் திலும் நடையுடை பாவனைகளிலும் வளர்ப்பு முறையிலும் கொள்கை களிலும் இருவருக்குமிடையே எவ் வளவோ வித்தியாசம் உண்டு!



இருவரும் தேவாரம் சிவஷண்முகத் தின் செல்விகள். தேவாரம் என்றதும் சிவஷண்முகம் தேவாரப் பாடல்களில் வல்லுனர் என்றோ சிறந்த சிவநேசச் செல்வரென்றோ நினைத்துவிட வேண் டாம்! அவர் தேவாரம் என்னும் ஊரி லிருந்து சென்னைப்பட்டினத்துக்குக் குடி யேறிப் பலவிதமான தொழில்களிலும் ஈடுபட்டு, முன்னுக்கு வந்தும், பின்னுக் குத் தள்ளப்பட்டும் பலவாறாக அலை பாய்ந்து கடைசியில் தொழில் துறையி லிருந்தே 'ரிடையராகி', சம்சார பந் தத்திலிருந்து 'ரிடையராக' முடியா மல் தம் வீட்டுக்குள்ளேயே ஒடுங்கிக் கிடந்தார். இப்போது தேவாரம் என்னும் பட்டத்தையும், முன் கோபத் தையும் தவிர அவரிடம் பழைமையின் சின்னங்கள் எதுவும் இல்லை.

மூத்தவள் உமா, தன் தாயாரைப் பெற்றவளான பாட்டியின் வீட்டி லேயே தன் வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்துப் பழைய பண் பாட்டிலும் எளிமையிலும் ஊட்டமாக வளர்ந்து தெள்ளிய நீரோடை போல் விளங்கினாள். எளிமையான நூலாடை தான் அணிவாள் என்றாலும் அந்த எளிமையிலும் அவளுடைய அழகால் அவளைச் சுற்றிலும் ஒரு தனிக் கவர்ச்சி எப்போதும் பரவி நிற்கும். முகத்திலே ஒருவித அமைதியின் பொலி வும், கருத்தடர்ந்த விழிகளிலே ஓர் ஆழ்ந்த கனிவும், பார்வையிலே தன்னை மறந்த அன்பின் ஒளி யும் குடி கொண்டு ஒரு நளினமான கவிதையை நினைவூட் டும். அவளுக்கு இரு பத்து மூன்று வயது நிறைந்துவிட்டதென் றாலும், இளமையின் கனவுகள் இன்னும் நிறைவேறாமலே இருந்தன.

தங்கை வசந்தி அவளை விட ஐந்து வயது இளையவள்! ஆனால் அவளைவிட நல்ல நிறம்! எல்லாவற்றிலுமே உயர்த்தி! மெழுகுபொம்மையை ஜிகி னாப் பேப்பரில் சுற்றி வைத்திருப்பது போலவே அவளுடைய சுபாவம் இருக்கும். அவளுடைய சிரிக்கும் விழிகள், கலகலவென்ற பேச்சு, முகத் தில் சதா பொங்கி நிற்கும் குதூகலம், துறுதுறுவென்ற சுறுசுறுப்பு, குறும்புகள்

எல்லாம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விடும். ஆனால் சிலருக்கு அது குழந்தைத் தனமாக உறுத்துவதுமுண்டு.

''ஏண்டி வசந்தி! சாந்தோமிலிருந்து நீ எதுக்காக இவ்வளவு தூரம் சைக்கிளிலே வந்தே?'' என்று உமா யோசனையுடன் கேட்டாள்.

''இந்தத் தெருவிலே என் காலேஜ் லெக்சரர் ஒருவர் குடியிருக்கிறார். அவர் காலேஜிலே என்னைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்'' என்றாள் வசந்தி சுவாரசியமாக.

''என்னடி கேள்வி?''

''பெண்கள் காலேஜுக்கு எதற்காகப் படிக்க வருகிறார்கள் என்று என்னிடம் ரொம்பச் சூடாகக் கேட்டார்.''

''எதனாலே அப்படிக் கேட்டார்? நீ பாடத்தைக் கவனிக்காமல் ஏதாவது விஷமத்தனம் பண்ணினாயா?''

''இல்லையக்கா! என் பக்கத்திலே ஒரு சிநேகிதி இருந்தாள். அவள் காதுக்குள் இரகசியமாக ஒரு விஷயம் சொன்னேன்!''

''அது என்னடி அப்படிப்பட்ட விஷயம்?''

''இந்த லெக்சரர் வகுப்புக்கு வரும்போது 'ஸ்டூடண்ட்ஸ்'களுக்கெல்லாம் பஞ்சு விநியோகம் செய்யணும் என்று சொன்னேன்.''

''அப்படிச் சொல்லலாமோ?''

''பின்னே என்னக்கா? அவர் லெக்சர் அடிக்கிறதே ஒரு போர்! கீச்சுக் குரலில் என்னென்னவோ உளறுகிறார். அது போதாதென்று மாணவர்கள் எப்படி நடக்க வேண்டும் என்பதற்கு ஓயாமல் கிளிப்பிள்ளை போல் நீதி வாக்கியங்கள் சொல்லிக் கொண்டிருப்பார். சகிக்க முடியவில்லை!''

''அதனாலே?''

''வகுப்பில் நான் வீணாக வம்பளக்கிறேன் என்று தவறாக நினைத்துக் கொண்டு சூடாக அந்தக் கேள்வியைக் கேட்டார். அதற்குச் சூடான பதில் இப்போதுதான் எனக்குத் தோன்றியது!''

''என்னடி பதில்?''

''ஆண்களுக்குச் சரிக்குச் சரியாகச் சவால் விடக் கற்றுக் கொள்வதற்குத்தான் காலேஜுக்குப் பெண்கள் வருகிறார்கள்!''

''அழகாயிருக்கடி! இந்தப் பதிலையா அவரிடம் சொல்லப் போகிறாய்?''



''என்னக்கா பண்ணுகிறது! இந்தப் பதிலை அவரிடம் சொல்லிவிட்டேனே! பாவம்! மனுஷர் அப்படியே அசந்து ஊமையாகி விட்டார்.''

''என்னடி வசந்தி, கல்வி போதிக்கும் ஆசிரியரிடம் மதிப்பில்லாவிட்டால் உனக்குப் படிப்பு எப்படியடி வரும்?'' என்று உமா தங்கையைக் கடிந்து கொண்டாள்.

இருந்தாலும் அவள் உள்ளத்தில் ஒரு சிந்தனை ஓடியது. பழங் காலத்தில் கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் தெய்வமாகக் கருதப்பட்டார்கள். வாழ்க்கையையும் ஆத்மாவையும் வளப்படுத்திப் பிரகாசிக்கச் செய்யும்படியான அறிவு புகட்டுவதை ஒரு தானமாகவும் தருமமாகவும் கருதினார்கள். ஆனால் இந்தக் காலத்திலோ வெறும் உத்தியோகத்துக்காகவும் கௌரவத்துக்காகவும் பாடத் திட்டங்கள் என்ற பெயரில் பல விதமான அறிவு மூட்டைகளை மாணவர்கள் தங்கள் மூளைக்குள் திணித்துக் கொள்வதும், கல்லூரியை விட்டு வெளியே வந்ததும் அவற்றையெல்லாம் மறந்து விட்டு வெறும் பட்டங்களாலேயே மேலே பறக்க முயல்வதும்தான் கல்வி முறையின் பண்பும், பயனுமாகி விட்டன. கல்வி தானமென்பதோ இப்போது ஒரு பெரிய வியாபாரமாகப் பெருகி வருகிறது. இந்த நிலையில் பெரும் பணம் செலவழித்து அறிவை விலைக்கு வாங்குகிறவர்கள் அறிவை விற்பவர்களிடம் எப்படி மதிப்பு வைப்பார்கள்? இது உமாவின் சுய சிந்தனையல்ல! கல்வி முறையைத் தாக்கி யாரோ ஒரு பேரறிஞர் கூறிய சித்தாந்தம்தான் இப்போது அவள் நினைவில் வந்து முட்டியது.


இருவரும் சிறிது தூரம் மௌனமாக நடந்து சென்றார்கள்.

பிறகு உமா மெல்ல வசந்தியை ஏறிட்டு நோக்கி, ''அப்பா எப்படி இருக்கிறார்?'' என்று விம்மும் குரலில் கேட்டாள்.

தெருவில் வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்த வசந்தி, ''அப்பாவுக்கென்ன, 'ஜாம் ஜாம்' என்று இருக்கிறார்!'' என்றாள்.

''சித்தி...?''

''என் அம்மாவா? மூக்குக் கண்ணாடியைத் துடைத்துத் துடைத்து மாட்டிக் கொள்வதற்கும் அப்பாவை அதிகாரம் பண்ணுவதற்குமே அம்மாவுக்கு நேரம் போதவில்லை! வீட்டுக்கு வந்து





''சே! நான் ரொம்ப துரதிர்ஷ்டம் பிடிச்சவன்! நாலு மணி நேரமா உட்கார்ந்திருக்கேன். ஒரு மீன் தூண்டிலிலே மாட்டலியே?!!''

ஒருமுறை பாரேன் அக்கா! ஒரே அமர்க்களமாக இருக்கும்!''

''வசந்தி! என்னுடன் பாட்டி வீட்டுக்கு வாயேன், போகலாம்!''

''ஐய்யய்யோ! உன் ஜானகிப் பாட்டியா? என்னைக் கண்டாலே போதும். பழைய புராணங்களையெல்லாம் நினைத்துக்கொண்டு உபதேசம் பண்ண ஆரம்பித்துவிடுவாள்! சீதாபிராட்டியார் எப்படித் தன் புருஷனோடு காட்டுக்குப் போய்த் தனிக் குடித்தனம் நடத்தினாள், நளாயினி எப்படித் தன் புருஷனைக் கூடையில் தூக்கிப் போட்டுக் கொண்டு போய்ப் பதி பக்தியோடு கணிகையின் வீட்டில் தள்ளினாள், இப்படி எத்தனையோ சொல்லி, பாரதத்தின் பெண் தர்மத்தை என்னிடம் நிலைநாட்டப் பார்ப்பாள்!'' என்றுவசந்தி முழங்கினாள்.

''வசந்தி! எந்த விஷயத்தையும் கோணலாகப் பார்க்கக் கூடாது! பழைய புராணங்களில் எத்தனையோ உள்ளர்த்தங்களும் உண்மைகளும் அடங்கியிருக்கின்றன. ஆழ்ந்து சிந்தித்தால் தான் அவை உனக்குப் புலப்படும்.''

''அக்கா! பழைய புராணங்களில் தமயந்தியின் கதைதான் எனக்குக் கொஞ்சம் பிடிச்சிருக்கு! ஏனென்றால் நள மகாராஜன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையை மறந்து நடுக் காட்டில் தமயந்தியைக் கைவிட்டு நழுவிப் போனதும் அந்தத் தமயந்தி மறுமணம் செய்து கொள்ளப் போவதாகத் தமுக்கடித்தாள் பார், அது கன ஜோர்!'' என்றாள் வசந்தி வெகு உற்சாகமாக.

''வசந்தி! உனக்கு இத்தனை வயதாகியும் இன்னும் விளையாட்டுப் புத்தி போகவில்லையே!''

''அக்கா! நான் பாட்டியாகி 'ரிடையரா'னாலும் இந்த விளையாட்டுப் புத்தி என்னை விட்டுப் போகாது. ஏனென்றால் வாழ்க்கையை நான் ஒரு தமாஷாக நினைக்கிறேனே தவிர, ஒரு பாரமாக ஆக்கிக் கொள்ள விரும்பவில்லை.''

''எப்பவும் குழந்தையாகவே இருந்து விடமுடியுமாடி வசந்தி?''

''நான் எப்பவுமே குழந்தைத்தனமுள்ளவளாகவே இருக்க வேண்டுமென்று உன் சின்னப் பிள்ளையாரை வேண்டிக் கொள்!'' என்று சொன்ன வசந்தி, ''சரியக்கா, நான் போய்வருகிறேன். எனக்கு நிறைய வேலை இருக்கு!'' என்று கிளம்பியவளாய், குதிரையின் பிடரியைத் தட்டிக் கொடுப்பது போல் தன் சைக்கிளின் சீட்டைத் தட்டினாள்.

''ஏய், வசந்தி! சைக்கிளிலே ஊர் சுற்றாமல், நேரே நேரத்தோடு வீட்டுக்குப் போ!'' என்று உமா சொன்னாள்.

''ஓ! எந்த நேரத்தில் நான் வீட்டுக்குப் போக வேண்டும் என்பதற்கு நான் ஒரு கணக்கு வைத்திருக்கிறேன், அக்கா!'' என்று வசந்தி சொல்லி விட்டு, ''டாட்டா! சீரியோ!...'' என்று கத்திக் கொண்டே சைக்கிளில் ஏறிச் சிட்டுக் குருவி போல் பறந்து போய் விட்டாள்.

அவளை நினைத்ததும் உமாவுக்குக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தது. வசந்தி எவ்வளவு பெரியவளாக வளர்ந்துவிட்டாள்! கல்லூரியில் பி.ஏ. படிக்கிறாள்! எல்லா விஷயங்களையும் வெகு எளிதில் கிரகித்துக் கொள்கிறாள். அவற்றின் கோணல்களை யெல்லாம் கூடப் பளிச் பளிச்சென்று வெளியிடுகிறாள்! இருந்தாலும் குழந்தைத்தனம் அவளை விட்டுப் போகவில்லை. அதன் குறும்புகள், குதூகலம், வேடிக்கை, விளையாட்டுகள், சுவாரசியம் எல்லாம் அவளை விட்டு நீங்காமல் அப்படியே நிறைந்திருக்கின்றன.

இவ்வாறு சிந்தித்துக்கொண்டே உமா திருவல்லிக்கேணியில் உள்ள தன் பாட்டி வீட்டை அடைந்தாள்.

கிராமணித் தெருவில் இருந்த அந்தச் சின்னஞ் சிறு வீடு இரண்டு பெரிய வீடுகளுக்கு இடையே ஒடுங்கிப் பழைமையின் சின்னமாக இருந்தது. ஆனால் வீடு பழையதே ஒழிய அது உமாவினால் எப்போதும் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கும். அந்தச் சுத்தமே வீட்டுக்கு ஒரு தனி அழகு!

''பாட்டி!'' என்று உமா கூப்பிட்டுக் கொண்டே தெருக் கதவைத் தட்டுவதற்காக அதன் மீது கையை வைத்தாள்.

ஆனால் கதவு உட்புறம் தாளிடப் படவில்லை. பாட்டியிடமிருந்து பதில் குரலும் வரவில்லை.

உமா வீட்டினுள்ளே பாய்ந்து, ''பாட்டீ! பாட்டீ!'' என்று கூவிக்

"மலையதனால் அணைகட்டி மதிலிலங்கை அழித்தவன் மலரடி போற்றி,"

லிப்கோ வெளியீடுகள்

யாவரும் எதிர்நோக்கியிருந்த

ஸகல காரிய ஸித்தியும்

ஸ்ரீமத் ராமாயண பாராயணமும்

திராவிட வேதங்களும்

[ஸ்தோத்திர மாலை*யுடன்]



ஸ்ரீமத் ராமாயண கட்ட சித்திரங்கள் — ஸ்ரீ ராம பட்டாபிஷேக மூவர்ணப் படம் — ஸ்ரீ ராமபிரான் ஜாதகம் — பாராயணக் கிரமம், நிவேதனம்: விவரம் — **பலனை உத்தேசித்துப் பாராயணம் செய்யவேண்டிய 'உமா ஸம்ஹிதை'யில் கூறப்பட்ட கட்டங்கள்:** கீர்த்தனாசார்ய ஸ்ரீ C. R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் தமிழ் மொழிபெயர்ப்பு — நவக்ரஹக் கோலங்கள், ஸகல தேவதா ஸ்தோத்திரங்கள் அடங்கிய **ஸ்தோத்திரமாலை★** — ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவர் ப்ரபாவமும், பல திவ்ய க்ஷேத்ரங்களில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ராமர் உற்சவ மூர்த்திகளும் (படங்கள்).

இரண்டாம் பதிப்பின் விசேஷாம்சங்கள்: எவ்வித காரியம் நிறைவேற, கல்வி பெருக, சுகமாக வாழ, ஆபத்து நீங்க, நவக்ரஹ தோஷம் நீங்க, மணவாழ்க்கைச் சுகம் பெற, பிணி நீங்க, கடிதங்கள் மூலம் காரிய ஸித்தி பெற இன்னோரன்ன கோரிக்கைகள் வெற்றி பெற: நாலாயிர திவ்ய ப்ரபந்தம், தேவாரங்கள், திருவாசகம் முதலியவைகளிலிருந்து பாசுரங்கள்—ஸ்ரீமத் ராமாயண நாட் குறிப்பு.

2 - ஆம் பதிப்பு 456 பக்கங்கள் விலை ரூ. 3.75



பெண்மணிகளும் சிறுவருங்கூடப் பாராயணம் செய்வதற்குரிய புத்தகங்கள்

★

தசா புக்திகளும்

ஸ்ரீமத் ராமாயண பாராயணமும்

[ஸ்தோத்திரமாலை*யுடன்]

9 தசைகளுக்கான 9 புத்தகங்கள்

ஒவ்வொன்றும் விலை ரூ. 2.00

★ஸ்தோத்திரமாலை மட்டும்: ரூ. 1.30

பிரதிகள் கிடைக்கும் இடங்கள்: தி லிட்டில் ஃப்ளவர் கம்பெனி (லிப்கோ), (போன்: 41538) ரங்கநாதன் தெரு, சென்னை-17; M. தாமோதரன் & கம்பெனி, அப்பா பில்டிங், எஸ்பிளனேட், சென்னை-1; ஹிக்கின்பாதம்ஸ், (போன்: 86556) சென்னை-2, பெங்களூர், உதகை; ஹிக்கின்பாதம்ஸ், சுதேசமித்திரன் ரெயில்வே ஸ்டால்கள்; C. R. நடராஜன் & ஸன், (போன்: 3610) பெரிய கடைத் தெரு, கோயமுத்தூர்-1; கவிகுயில் பதிப்பகம், (போன்: 2324) 383, ராஜ வீதி, கோயமுத்தூர்-1; P. K. A. குழந்தைவேல் நாடார், மெயின் ரோடு, திண்டுக்கல்: சிவலிங்க விலாஸ் புத்தக சாலை, (போன்: 399) ஈரோடு: ஸ்ரீ வெங்கடேஸ்வரா புக் டிபோ, டவுன் ஹால் ஸ்டேஷன் ரோடு, கும்பகோணம்; M. நடனசுந்தரம் பிரதர்ஸ், 3, புதுமண்டபம், மதுரை; பிரபாத் ஸ்டோர்ஸ், காலேஜ் ரோடு, நாகர்கோவில்; A. K. சந்தனய்யா செட்டியார் & ஸன், கோட்டை, சேலம்-1; M. ஆறுமுகம் பிள்ளை, திருநெல்வேலி ஜங்ஷன்; S. கிருஷ்ணஸ்வாமி & கம்பெனி, தெப்பக்குளம், திருச்சி-2; ஞானப்பிரகாசம் பேப்பர் ஸ்டோர், 207, கிரேட் காட்டன் ரோடு, தூத்துக்குடி: K. V. பிரஸ் புக் டிபோ, (போன்: 111) லாங் பஜார், வேலூர்; [மற்றும் (பம்பாய், கல்கத்தா, டில்லி, இலங்கை, பர்மா, மலேயா உட்பட) அநேக புத்தகக் கடைகள்: லிப்கோ நடமாடும் புத்தக "வான்"கள்.

NALIN

கொண்டே நாலாபுறமும் தேடிப் பார்த்தாள். ஆனால் பாட்டி அவளுடைய கண்களுக்கு அகப்படவில்லை.

பாட்டிக்கு அறுபத்தேழு வயதாகி விட்டது! ஆனாலும் உடம்பில் தளர்ச்சியோ, கண்களுக்கு மூக்குக் கண்ணாடியின் தேவையோ, எந்த நேரத்திலும் ஏதாவது ஆகிவிடுமோ என்ற நிலைமையோ எதுவும் இல்லை. இருந்தாலும் பாட்டி அடிக்கடி உமாவிடம், ''அடி உமா! என் உடம்பு கல்லுக் குண்டு மாதிரி இருக்கிறது என்று நினைக்காதே. என் ஆயுசிலே எந்த வைத்தியனும் வந்து என் கை நாடியைப் பார்ப்பதற்கு முன்னாலேயே உன் தாத்தா திடீரென்று வந்து என்னைக் கூப்பிடுவார். நான் போய் விடுவேன். அதற்குள் உனக்குக் கல்யாணமாகி, உன் கையில் ஒரு குழந்தையை நான் பார்க்க வேண்டாமோ? அப்புறம் நான் உன் தாத்தாவிடம் போய் 'நீங்கள் பேத்தியைத்தான் பார்த்தீர்கள். நான் பேத்திக்கு ஒரு பிள்ளையும் பார்த்தேன்' என்று சொல்லிப் பெருமைப்படுவேன், இல்லையா? அந்தப் பெருமையை நீ கொடுப்பாயா மாட்டாயா?'' என்று சொல்லுவதை வாடிக்கையாக வைத்திருந்தாள். அவ்வார்த்தைகளை வெறும் பயமுறுத்தல்களின் இடியுரைகளாகவோ விரக்தியின் முணுமுணுப்புக்களாகவோ உமா கருதவில்லை. பாட்டியின் நெஞ்சத்து ஆழத்திலிருந்து உலக பந்தத்தின் கடைசிக் காலக் கனவுகளாக வெளிப்படும் இன்னுரைகளாகவே கருதினாள்.



அதனால் உமா மிகுந்த கலவரத்துடன், ''பாட்டீ, பாட்டீ!'' என்று கூவிக் கொண்டே கடைசியாகக் கொல்லைப்புறத் தோட்டத்துக்குள் வந்து பார்த்தாள்.

அங்கே ஜானகிப் பாட்டி மூச்சு விடாமல் ஆட்டுக் கல்லின் முன்னால் உட்கார்ந்து மறுநாள் இட்டிலிக்கு மாவாட்டிக் கொண்டிருந்தாள்.

'அப்பாடா!' என்று பெருமூச்சு விட்ட உமா, ''ஏன் பாட்டி, நீ மாவாட்டுகிறாய்? சரோஜா வரவில்லையா?'' என்று கேட்டாள்.

''அவள் பலே வேலைக்காரி! ஏதோ இங்கிலீஷ் வியாதியின் பெயரைச் சொல்லி 'உடம்பு முடியவில்லை' என்று லீவு போட்டுவிட்டாள். புருஷன் சினிமாவுக்குக் கூப்பிட்டிருப்பான் போயிருப்பாள். அவ்வளவுதான்!''

''அதுக்காக நீ எதுக்குப் பாட்டி மாவரைக்கிறாய்? நான் வந்து அரைக்க மாட்டேனா?''

''நீ வருவதற்குள் அரைத்து முடித்து விடவேண்டுமென்று பார்த்தேன். முடிந்தும்விட்டது. நீ போய்க் கைகால் அலம்பிக்கொண்டு பூஜையறையில் விளக்கு ஏற்றி வைத்து உன் பிள்ளையாரைக் கும்பிட்டுக்கொள். உனக்கு ஒரு நல்ல புருஷனைக் கொடுக்க வேண்டுமென்றும் அவரிடம் கேள். பிள்ளையார் கொடுக்கிறாரா இல்லையா என்று பார்த்து விடுவோம்!'' என்றாள் பாட்டி.

பாட்டிக்குத்தான் எவ்வளவு நம்பிக்கை? பிள்ளையாரிடமே சவால் விடுகிற அளவுக்கு எவ்வளவு பக்தி?

பூஜையறையில் விளக்கேற்றி வைத்த உமா அங்கு மாடத்தில் உள்ள பிள்ளையார் மீது ஒரு முழம் குண்டுமல்லிகையை வைத்தாள். அது சின்னஞ்சிறு வெண்கலப் பிள்ளையார். அதனால் அந்த ஒரு முழ மல்லிகைப் பூவுக்குள்ளேயே பிள்ளையார் அமிழ்ந்து விட்டார். அதாவது பக்திக்கு வெகு' எளியவராகித் தம் உருவத்தையே அதனுள் மறைத்துக் கொண்டு விட்டார். அப்படி உமா நினைத்தாள்.

அந்தச் சின்னப் பிள்ளையாருக்குள் அவள் வாழ்க்கையை ஒட்டி ஒரு பெரிய கதையே அடங்கியிருந்தது. அதை நினைக்கும்போது அவள் நெஞ்சமெல்லாம் உருகும். உலக அறிவையெல்லாம் தாண்டி அவள் உடம்பெல்லாம் ஒரு பரவசத்தால் சிலிர்க்கும். சின்ன வயதில் பொம்மை வைத்து விளையாடும் குழந்தைப் பருவத்திலேயே அந்தப் பிள்ளையாரைத் தன் விளையாட்டுத் தோழராக வைத்துக் கொண்டு கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவாள். சமீப காலம் வரை கூடப் ''பிள்ளையாரே! பிள்ளையாரே!'' என்று அந்தச் சின்னஞ்சிறு வெண்கலப் பிள்ளையார் முன் தன் எண்ணங்களையெல்லாம் வெளியிட்டுக் குழந்தை போலப் பேசுவாள். அது மற்றவர்களின் கண்களுக்குப் பைத்தியம் போலவே தென்படும். ஆனால் இப்போதெல்லாம் பிள்ளையாரிடம் அப்படிக் குழந்தை போல் கொஞ்சிக் கொஞ்சிப் பேச

முடியாது. அத்தகைய குழந்தைத் தனத்தையெல்லாம் அறிவின் வளர்ச்சி தின்று விட்டது. அதை நினைக்கும் போது, 'பிள்ளையாரே! இந்த அறிவை எனக்கு ஏன் தந்தாய்?' என்றுகூடக் கேட்கத் தோன்றும். ஆனாலும் அவளுடைய உள்ளுணர்வில் படிந்திருக்கும் பக்தி மட்டும் உலக விவகாரங்களில் அமுங்கி மறைந்துவிடாமல் ஒரு தனி உலகமாக இயங்கிக் கொண்டிருந்தது.

அது மட்டுமல்ல!

பிள்ளையாருக்குப் போடும் ஒரு முழக் குண்டு மல்லிகையிலேயே அவள் எதிர்காலக் கனவுகளெல்லாம் நம்பிக்கையின் நிழல்களாக அடங்கியிருந்தன.

உமா இந்த உலகின் நினைவு வந்தவளாய் மற்ற ஒரு முழக் குண்டு மல்லிகையையும் தன் கூந்தலில் சூடிக் கொண்டாள்.

அந்த மல்லிகையின் நறுமணம் உள்ளும் புறமும் கமகமவென்று வீசியது.

அந்த வாசனையில் தேவதைபோல் மிதந்தவளாய் முகம் பார்க்கும் கண்ணாடியை எடுத்துத் தன் அழகைப் பார்த்தாள்.

அவளுடைய முகம் குண்டு மல்லிகை போல் மலர்ந்து விட்டது!

அத்தியாயம் இரண்டு

அசட்டுப் பிச்சு

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோவிலில் இராப்பத்து திருவிழாவின் ஆரம்பம்.

அன்று மாலை நேரத்தில் கோவிலைச் சுற்றியுள்ள வீதிகளிலெல்லாம் ஜே ஜே என்று ஜனக் கூட்டம் பல சிற்றாறுகளாகப் பாய்ந்து வந்து கோயிலின் முன் ஜன சமுத்திரமாகப் பெருகிக் கொண்டிருந்தது.

வசந்தி பட்டுப் பாவாடையும், ரவிக்கையும் அணிந்து மேல் தாவணி காற்றிலே சலசலக்க, இரட்டைச் சடைகள் இரண்டும் முன்புறம் சதிராட, சைக்கிள் வாகனத்தில் ஏறி அதைச் சாரத்தியம் செய்து கொண்டு திருவல்லிக்கேணி வட்டாரத்துக்கே வந்து சேர்ந்தாள்.

கூட்டத்தைக் கண்டதும் மரியாதையாகச் சைக்கிளை விட்டு இறங்கி, அதைத் தள்ளிக்கொண்டு ஒரு வளையல் கடை முன் வந்து நின்று சைக்கிளை ஒரு புறம் நிறுத்தி வைத்து விட்டுச் சடைகள் இரண்டையும் பின்னால் தூக்கிப் போட்டுக் கொண்டு வளையல்களில் புது பேஷன்களைத் தேட ஆரம்பித்தாள்.

அவளுக்குப் பின்னால் யாரோ இரட்டைச் சடைகளில் ஒன்றைப் பிடித்து இழுத்தது போல் இருந்தது.

''ராஸ்கல்!'' என்று சீறியபடி வசந்தி பின்னால் திரும்பிப் பார்த்தாள். ஆனால் பின்னால் நின்ற வாலிபனைப் பார்த்ததும் அவளுடைய ஆத்திரமெல்லாம் அணைந்து விட்டது.

''அடே பிச்சு! நீயா?'' என்றாள் வசந்தி வியப்புடன்.

பிச்சு என்ற சுருக்குப் பெயருக்கு ஆளான பிச்சுமணி கலவரத்துடன் குழம்பியவனாய், ''இல்லே.... உன் சடையைப் பிடித்தது நானில்லே..... இந்தக் குழந்தைதான்!'' என்று குளறியபடி தன் அருகில் நின்றுகொண்டிருந்த யாரோ ஒரு சிறுமியைச் சுட்டிக் காட்டி, ''இந்தக் குழந்தைதான் உன் சடையில் தொங்குகிற ரிப்பனைப் பார்த்து வேடிக்கையாக இழுத்திருக்கும்!'' என்று சொல்லி முடித்தான்.

''ஓ! எனக்குத் தெரியுமே!....''

''சத்தியமாகச் சொல்கிறேன் வசந்தி! நிஜமாக நான் இல்லே....!''

''எனக்குத் தெரியுமடா, அதற்கெல்லாம் உனக்குத் தைரியம் கிடையாது!''

பிச்சுமணிக்கு ஒரு விநாடி தூக்கிவாரிப் போட்டது!

''ஆ....! எனக்குத் தைரியம் இல்லையா? எனக்குத் தைரியம் இல்லையா?'' என்று அவன் குமுறினான்.

''ஆமடா, அசட்டுப் பிச்சு!'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே சைக்கிளுடன் மறைந்து விட்டாள் வசந்தி.

பிச்சுமணி ஆத்திரத்தால் படபடத்தான். அவனுக்கு 'அசட்டுப் பிச்சு' என்று வசந்தி ஒரு புதுப் பட்டம் சூட்டி விட்டுப் போனதால், அவன் அசட்டுத்தனமான காரியங்களையே செய்யக்கூடியவன் என்றோ, சினிமா காமெடியன் போலவும், ஒட்டடைக் குச்சி போலவும் ஒல்லியாக இருப்பான் என்றோ நினைத்து விட வேண்டாம். நல்ல கட்டுமஸ்தான உடம்பு வாய்ந்தவன். வீர பரம்பரையில் உதித்தவன். அவனுடைய தாத்தா பட்டாளத்தில் வீரதீரங்களைக் காட்டிப் பல தங்கப் பதக்கங்கள் பெற்றவர். அவனிடமும் தன் வீர தீரங்களைக் காட்டுவதற்கான முரட்டுத்தனம்

இயற்கையாகவே குடிகொண்டிருந்தது. பயில்வான்கள் சவால் விடுத்தாலும், குஸ்திச் சண்டையில் வீழ்த்தி விடுவான். ஒரு கதாநாயகனுக்குத் தேவையான சகல லக்ஷணங்களும் அவனிடம் பொருந்தியிருந்தன. அவனுடைய தாத்தா அவனைப் 'பையன்' என்று அழைத்தாலும் அவனுடைய சாந்தோம் வட்டாரத்துத் தோழர்கள் அவனைப் 'பட்டாளத்தார் வீட்டுப் பையன்', 'பணக்காரப் பையன்' என்றெல்லாம் செல்லமாகப் பெயரிட்டு வழங்கி வந்தாலும் அவன் பையனல்ல! இருபது வயது நிரம்பிய இளங் காளை! அதிலும் கலியாண மைதானத்தில் மஞ்சள் விரட்டுக் காளை! அத்தகைய ஓர் ஆண் மகனைத் தைரியமில்லாதவன் என்றும், அசடு என்றும்—அதாவது கோழை என்றும் மூட்டாள் என்றும் — ஒரு பெண் அவன் முகத்துக்கு நேரே சொல்லி விட்டுப் போகிறாள் என்றால்....? அதிலும் அவனைவிட இரண்டு வயது சின்னவளான ஒரு பெண்!

ஆத்திரத்தால் பிச்சுமணி பொங்கினான். அதோடு வசந்தியை அவன் முதன் முதலில் சந்தித்து அறிமுகமான படலம் வேறு அவனுடைய மனத் திரையில் சினிமாப் படம் போல் காட்சியளித்து அவனை மேலும் உலுக்கியது.

வசந்தியின் அறிமுகப் படலமே அவனுக்குச் சனி தசையில் சரியான ராகு காலத்தில்தான் ஆரம்பித்திருக்குமோ?

சாந்தோம் பீச் ரோட்டில் பிச்சுமணி தன்னுடைய மோட்டார் காரை மெதுவாக ஓட்டிக் கொண்டு போவான். அந்தக் காரை மெதுவாகத்தான் ஓட்ட முடியும்! ஏனென்றால், அவனுடைய தாத்தாவைப் போலவே அதுவும் அபூர்வமான ஓல்டு மாடல் 'பேபி ஆஸ்டின்' கார்! அதற்கும் எத்தனையோ வயதாகி, எத்தனையோ டிரைவர்களுக்கெல்லாம் ஆட்டங் காட்டி விட்டு, எத்தனையோ பட்டறைகளில் எத்தனையோ விதமான அனுபவங்களும், அடிதடிகளும் பட்டுக் கடைசியில் கடைத்தேறாது என்று கைவிடப்பட்ட நிலையில், தாத்தா வீட்டு மாட்டுக் கொட்டகைக்குள் அடைக்கலம் புகுந்து கவனிப்பாரற்று முடங்கிக் கிடந்தது. பிச்சுமணிதான் அந்தப் பேபியின் மீது கடைக்கண் வைத்துக் காதல் கொண்டு அதை வெகு பாடுபட்டு வெளியே கிளப்பியெடுத்து அதற்கு அறுவை, ஒட்டு, கட்டு முதலான 'சிகிச்சை'யெல்லாம் செய்து, புத்துயிர் அளித்துத் தெருக்களில் ஓரளவு நகர வைத்தான். அதை வேகமாக ஓட ஓட விரட்டினால் அது முரண்டு பண்ணி, கோபத்தால் புகைந்து, அதன் பாகங்களெல்லாம் நாலாபுறமும் பிய்த்துக் கொண்டு போய்விடும்!

இந்த அபூர்வமான காரைப் பிச்சுமணி பீச் ரோட்டில் ஓட்டிக் கொண்டு ஊர் வலம் போகும்போதெல்லாம் வசந்தி, அவனுக்குப் போட்டியாகத் தன் சைக்கிளை ஓட்டிக் கொண்டு வந்து ரேஸ் விட்டு அவனுடைய காரைத் தாண்டிக் கொண்டு போய் ஜெயக்கொடி நாட்டுவது போல் பின்னால் திரும்பிப் பார்த்துக் கலகல வென்று சிரிப்பாள். அப்போதெல்லாம் பிச்சுமணிக்குக் கோபம் கோபமாக வரும்! ஆனால் அந்தக் கோபத்தைத் தன் கார் மீது காட்டப் பயமாகவும் இருக்கும்!

இப்படித் தினந்தோறும் அவன் வசந்தியின் சைக்கிளிடம் தோல்வி கண்டு வரும் காலத்தில் ஒரு நாள்—

வசந்தியின் சைக்கிள் ரிப்பேராகி விடவே, அவள் காலேஜுக்குப் போவதற்காகப் பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸை எதிர்நோக்கித் தவம் செய்ய வேண்டியதாயிற்று.

அப்போது பிச்சுமணியின் கார் சப்த ஜாலங்களுடன் புகையைக் கக்கிக் கொண்டே வருவது அவள் கண்ணில் தட்டுப்பட்டு விட்டது.

உடனே வசந்தி அந்தக் காரை நோக்கி மான் குட்டிபோல் துள்ளி ஓடி, ''சார்! சார்!'' என்று கூவியவண்ணம் தன் கையை ஆட்டி நிறுத்தினாள்.

பிச்சுமணி குழம்பினான். அவனுக்கு அந்த மாதிரி அனுபவமே புதிது.

வசந்தியோ வெகு சகஜமாக ஒரு புன்முறுவலைத் தன் முகத்திலும் கரு விழிகளிலும் வரவழைத்துக் கொண்டு, ''ஸார்! உங்களோடு ரேஸ் விட இன்றைக்கு என் சைக்கிள் இல்லே! நான் காலேஜுக்குப் போகணும்! நேரம் ஆயிடுச்சு! ஒரு சின்ன ஹெல்ப் (உதவி)! என்னைக் காலேஜில் கொண்டு போய் இறக்கி விட்டுப் போகிறீர்களா? ப்ளீஸ்! ப்ளீஸ்!'' என்று வெகு உருக்கமாகக் கெஞ்சினாள்.

அவள் தன்னிடம் கெஞ்சும்படியான நிலைக்குத் தாழ்ந்து விட்டாள் என்பதை உணர்ந்ததும் பிச்சுமணி பெருமிதம் அடைந்தான். ஆனால் ஓர் இளம் பெண்ணைத் தன் காரில் ஏற்றிக்கொண்டு போவதை யாராவது பார்த்து, விஷயம் தன் தாத்தாவின் காதுகளுக்கு எட்டிவிட்டால் என்ன செய்வது என்றும் பயந்தான். தாத்தா இரும்புத் தடியை எடுத்து வந்து நாலே அடியில் தன் காரை நாற்பது துண்டுகளாகச் சிதற வைத்து விடுவாரே!

இவ்வாறு பிச்சுமணி யோசித்துக் கொண்டிருந்தபோது வசந்தி அவனது பதிலைக்கூட எதிர்பாராமல் ஒரு குதி குதித்து, காரின் முன் சீட்டுக் கதவைத் திறந்து ஒரே தாவில் சீட்டில் ஏறி, பிச்சுமணிக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டு விட்டாள்.

பிச்சுமணிக்கு மெய் சிலிர்த்தது! என்ன செய்வதென்றே புரிய வில்லை. வாயிலோ வார்த்தை எதுவும் வெளி வர மறுத்தது. ஊமை போலவே ஆகி விட்டான்.

''ஸார்! காரைக் கிளப்புங்கள்! காலேஜுக்கு லேட்டாயிடுச்சு.... ம், சீக்கிரம்!'' என்று வசந்தி ஒரு புன் முறுவலுடனே அதிகாரம் செய்ய ஆரம் பித்துத் தன் காலேஜுக்குப் போகும் வழியைச் சொன்னாள்.

பிச்சுமணி வேறு வழியில்லாததால் காரைக் கிளப்பி ஓட்ட ஆரம்பித்தான். தன் அருகில் ஒரு பெண் குதூகலச் சிரிப் புடன் உட்கார்ந்திருப்பது அவனுக்கு என்னவோ போல் இருந்தது. தெரு வில் போவோர் கண்களுக்கு அது எப் படிப் படுமோ என்று பயந்தான்.

ஆனால் அவளைப் பின் சீட்டில் உட் கார்ந்துகொள்ளும்படி சொல்லலாம் என்றாலோ அதைச் சொல்லக் கூச்சமாக வும் இருந்தது; தன்னை 'அநாகரிக ஜந்து' என்று நினைத்து விடுவாளோ என்றும் சங்கடமாக இருந்தது.

வசந்தியின் துறுதுறுத்த வாய் பேச் சுக் கொடுக்க ஆரம்பித்தது. ஆனால் பிச்சுமணி கூடியவரையில் மௌன மாகவே இருந்தான்.

வசந்திக்கு அது பொறுக்க வில்லை. இப்படியும் ஓர் அப்பாவி உலகத்தில் இருப்பானா என்று வியந்தாள்.

அதனால் அவள் தன்னை முதலில் அறிமுகப்படுத்திக் கொள்ளும் விதமாக, ''என் பெயர் வசந்தி! நான் காலேஜில் பி. ஏ. படிக்கிறேன். எல்லாப் பரீட்சை களிலும் நான்தான் பஸ்டு மார்க் வாங்குவேன்!'' என்று தன்னைப் பிர மாதமாக விளம்பரப்படுத்திக் கொண்டு, ''நீங்கள் யார்? உங்கள் பெயர் என்ன? அவை எனக்குத் தெரிய வேண்டிய அவ சியம் இல்லை என்றாலும், அட்ரஸ் தெரி யாத ஆளின் காரில் நான் பிரயாணம் செய்தேன் என்று இருக்க வேண்டாம் என்பதற்காகக் கேட்கிறேன்!'' என்று அழுத்தம் திருத்தமாகக் கேட்டாள்.

பிச்சுமணி மெல்லத் தன் திரு வாயைத் திறந்து, ''என் பெயர் பிச்சு மணி! என் தாத்தாவின் பெயர் மேஜர் ராமதுரை! நான் எஸ். எஸ். எல். சி. வரைதான் படித்திருக்கிறேன். அதற்கு மேல் படிப்பது அதிகப் பிரசங்கித்தனம்



'' அடுத்த செவ்வாய்க்கிழமை என் பாட்டிக்குத் திதி. ஒரு நாள் லீவு வேணும்?''
'' அன்னிக்குத்தான் ஆபீஸ் லீவாச்சே?''
'' ஓஹோ! அப்படீன்னா புதன் கிழமைதான் திதி. அன்னைக்கு லீவு கொடுங்க.''

என்பது என் தாத்தாவின் தீர்மானம். தாத்தாவின் பணத்தை எப்படிச் செல வழிப்பதென்று கற்றுக் கொள்வதுதான் இப்போது என் வேலை! இதற்கு மேல் உனக்கு ஏதாவது விவரங்கள் தேவை யென்றால், என் தாத்தாவிடமே நேரில் போய்க் கேட்டுத் தெரிந்து கொள்!'' என்று படபட வென்று சொன்னான்.

'' ஓ! பட்டாளத்தார் பையனா?'' என்ற வசந்தி அவனை வியப்புடன் ஒரு முறை உற்றுப் பார்த்தாள். ஒரே பார்வையிலேயே அவள் எந்த ஆளையும் எடை போட்டு விடுவாள். அதன் விளை வாக அவனை 'சார்' என்று கூப்பிடுவது தன் படிப்புக்குத் தகுதியல்ல என்று நினைத்து அவனைப் 'பிச்சு' என்றே கூப்பிடத் தீர்மானித்து விட்டாள்.

பேபி ஆஸ்டின் கார் பெரு முழக் கத்தோடு கல்லூரி வாசலை அடைந்து. அதிலிருந்து வசந்தி கீழே இறங்கிக் கொண்டதும், ''பிச்சு! நான் இந்தக் காரில் வந்திருப்பதற்குப் பதில் பஸ்ஸி லேயே வந்திருக்கலாம்! 'வெரி லேட்! ஷேம், ஷேம்!' '' என்று முழங்கி விட்டுக் கல்லூரிக்குள் 'குடுகுடு' வென்று வேக மாக ஓடி விட்டாள்.

அந்தச் சம்பவம் வேறு இப்போது பிச்சுமணியின் மனத்தில் வந்து நின்று அவன் ஆத்திரத்தை அதி உக்கிரமாய்க் கிளப்பி விட்டது. அந்த ஆத்திரத்தை யெல்லாம் எதன் மீதாவது காட்ட வேண்டும் என்று படபடத்தவனாய், தன் கையைப் பிசைந்து முஷ்டி பிடித்துக் கொண்டு வேகமாக நடந்தான். அதற்கு அருமையான ஒரு சந்தர்ப்பமும் அவ னுக்குக் கிடைத்தது! (தொடரும்)



அசையாது நிற்கும் அரண்



இன்ற தருணத்தில் தினப் பத்திரிகைகளில் வெளியாகியுள்ள மேற்படி செய்திகள் எல்லைப்புறத்தில் நிலவும் பேராபத்தான நிலைமை நமக்கு நன்கு உணர்த்துகின்றன. தங்கள் ஆளுகைக்கு உட்பட்டிருக்கும் பகுதிகளில் நல்ல



நேபா எல்லையில் சீனர்கள் நடமாட்டம்

மக்மாகன் கோட்டை நோக்கி முன்னேற்றம்

புதுடில்லி, ஜூலை, 26—சீனர்கள் தாங்களாகவே அமைத்துக்கொண்ட போர் நிறுத்தப் பகுதியைக் கடந்து எல்லைப்புறம் முழுவதும் இருபது கிலோ மீட்டர்கள்வரை மக்மாகன் கோட்டை நோக்கி உட்புகுந்திருக்கிறார்கள். நம்மிடம் நேசப்பான்மையுடன் விளங்கும் எல்லா அரசாங்கங்களுக்கும் இந்த நடவடிக்கையைப் பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.



சாலைகள் அமைத்திருப்பதுடன் பீரங்கிகள், மிஷின்கன்கள் போன்ற போர்க் கருவிகளைச் சீனர்கள் மலை மலையாகக் கொண்டுவந்து கொட்டியிருக்கின்றனர். லாரி லாரியாகக் கணக்கற்ற சிப்பாய்களை ஏற்றி வந்து குவித்திருக்கின்றனர். விமானப் படையெடுப்புக்கும் ஆயத்தமாகவே உள்ளனர். பெருமளவுக்குச் சீனப் படையெடுப்பு நேர்ந்தால் (நேரும் என்பதற்கு எல்லா விதமான ஆதாரங்களும் உள்ளன) முதலில் பாதிக்கப் படப் போகிறவர்கள் வடக்கு எல்லைப்புறத்தில் வாழும் மக்களே. ''ஜப்பான்காரன் வந்

பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ சவான் பங்களூரில் தம் அலுவல்களை ரத்து செய்துவிட்டு புது டில்லி திரும்புகிறார். அமெரிக்காவில் நல்லெண்ணச் சுற்றுப் பயணம் செய்யும் ஜெனரல் சௌத்ரி புது டில்லிக்கு அவசரமாகத் திருப்பி அழைக்கப்பட்டிருக்கிறார்....



இந்தப் பக்கங்களிலுள்ள புகைப்படங்களுக்கு விளக்கம் எழுது









ட்டான் ஸார்!'' என்ற குரலைக் கேட்டதுமே கைக் கெட்டியதைச் சுருட்டிக்கொண்டு சென்னையை விட்டுத் தெற்கே ஆயிரக் கணக்கானோர் ஓடினார்களே அந்த நாட்கள் நினைவிருக்கிறதா?




அத்துடன், இன்று வரை அசையாது நிற்கும் அரணாக விளங்கி வரும் எல்லைப்புற மக்களின் நடத்தையை ஒப்பிட்டுப்பாருங்கள்! விவசாயி முதல் வீரப் பெருங்குடி மகன் வரை, தொண்டு கிழவன் முதல் இரிந்து பறந்து வரும் பாலகன் வரை யாரும் அமைதி இழக்கவில்லை; அஞ்சி ஓடவில்லை.





அவர்களது துணிவைத் தலைவணங்கிப் போற்றும் முகமாக இங்கே அவர்களுடைய புகைப் படங்கள் சிலவற்றைப் பிரசுரிக்கிறோம்.

அதே நேரத்தில் அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கவேண்டிய நமது இந்தியமையாத கடமையையும் நாம் நினைவூட்டிக் கொள்ள வேண்டியதாகிறது. அதில் தவறினோமானால் நன்றி மறந்தவர்களாவோம்; நம்பிக்கைத் துரோகம் இழைத்தவர்களாவோம். சீனர்களுக்குத் தெரிந்த ஒரே விஷயம் பலம்தான். அவர்களை விடப் பலசாலிகளாய் விளங்குவோரிடம் சீனர்கள் வாலாட்டத் துணியமாட்டார்கள் என்பதற்குச்



சீனவுக்குள்ளேயே அமைந்துள்ள பிரிட்டிஷ் நகரமாகிய ஹாங்காங் சிறப்பான எடுத்துக்காட்டு. சீனர்களைவிட எல்லா விதங்களிலும் வலிமை பெற ஒரே வழி தான் உண்டு. வறட்டுக் கௌரவத்தைக் கட்டிக்கொண்டு அழாமல் நம்மிடம் நேசப்பான்மையுடன் விளங்கும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாட்டினருடன் நாம் இன்னும் மனம் விட்டு நெருங்கிப் பழகி, தயங்காது உதவிகளைக் கோரிப் பெறுவது தான் அது.


★





'பசியினின்று விடுதலை' என்ற அகில உலக இயக்கத்தை யொட்டி இ. நா. ஸ்தாபனத்தின் ஆதரவுடன் அமெரிக்கத் தலைநகரில் நடைபெற்ற மகாநாட்டில் ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணனும் ஜனாதிபதி கென்னடியும் அரிய உரைகளை நிகழ்த்தினர். அமைச்சர் திரு பக்தவத்சலம் இதில் கலந்து கொண்டார். காரியதரிசியாகப் பணியாற்றிய திரு எஸ். ஒய். கிருஷ்ணசுவாமியின் அயரா உழைப்பே மகாநாட்டின் வெற்றிக்குக் காரணம்.







ராஜ்கோட் தேர்தலில் வெற்றிவாகை சூடிய பிறகு முதன் முறையாகச் சென்னை நகருக்கு வந்த சுதந்திரக் கட்சி பொதுக் காரியதரிசி ஸ்ரீ எம். ஆர். மஸானி அவர்களைப் பாராட்டச் சென்னை கோகலே மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ பி. டி. ராஜன், ஸ்ரீ ரங்கா, ராஜாஜி முதலியோர் வாழ்த்துரைகள் வழங்கினார்கள். கட்சி ஸ்தாபகர் ராஜாஜியுடன் ஸ்ரீ மஸானி அவர்கள் ஏதோ முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசிச் சிந்திப்பதைப் படத்தில் காணலாம்.



எனக்கு ஒரே குஷி!

இனிமே க்ளாக்ஸோ—குழந்தைகளின்

உணவு—நிறைய கிடைக்குமாம்:

எல்லா ஊர்லேயும்

எல்லாக் கடையிலேயும்

நிறைய இருக்காம்.

"தாராளமாக் கிடைக்கும்"னு

அம்மாவே சொல்லிட்டா.

க்ளாக்ஸோ சாப்பிட்டு

பலசாலியா வளந்துடுவேன்.

ஆரோக்கியமாயும் இருப்பேன்.

எல்லாம் உங்களுக்கு தெரிஞ்சதுதானே?

அப்புறம் குஷிக்குக் கேக்கணுமா?

தாய்ப்பாலில் உள்ள எல்லா
நல்ல அம்சங்களும் க்ளாக்ஸோ
வில் இருக்கின்றன...ஆம்!
உங்கள் குழந்தை பலசாலியாக
வளர அவசியமான
யாவுமே உள்ளன. இலவசமாக
'க்ளாக்ஸோ குழந்தைப் புத்தகம்'
(தமிழ்) பெற விரும்புவோர்
(தபால் செலவுக்காக)
50 நயா பைசாவுடன்,
'க்ளாக்ஸோ, வுட்ஸ் ரோட்,
சென்னை-2' என்ற
விலாசத்திற்கு எழுதவும்.



GLY—1—TAM

Glaxo

க்ளாக்ஸோ–குழந்தைகளுக்கான மிகச் சரியான பாலுணவு.



அந்த ஒரு நாள்

அகிலன்



அன்பர் சாரங்கனின் வீட்டு மாடி அறைக்குள் அந்தப் படத்தை நான் தூரத்திலிருந்து பார்த்தபோது மற்ற எத்தனையோ படங்களைப் போல் அது சாதாரணமாய்த்தான் தோன்றியது. சுமார் அறுபது ஆண்டுகளைக் கடந்த ஒரு முதியவர்; அவரை விட ஐந்தோ பத்தோ வயது குறைந்த ஒரு பெண்மணி; அந்தப் பெரியவரின் மடியில் தலை வைத்துப் படுத்தபடி அவருடைய முகத்தையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அந்தக் கிழவி.

'சரிதான், முதுமைப் பருவத்து மனிதர்களை வைத்துக் கொண்டு ஒரு பைத்தியக்கார ஓவியன் சித்திரம் தீட்டியிருக்கிறான் போலும்!' என்று நினைத்துக்கொண்டு படத்தின் அருகில் சென்றேன்.

என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை; அவை இமைப்பதை மறந்தன. ஏதோ ஒருவிதப் பரவச உணர்ச்சி என்னுள் பரவி, அந்தச் சித்திரத்திடம் சிறிது சிறிதாக என்னை ஈர்த்து இழுத்தது.

இரண்டே உருவங்கள் மட்டும் அதில் இருந்ததாகச் சொன்னேனா? இல்லை! இப்போது நான்கு உருவங்கள் தென்பட்டன. எந்த நிலையில் அந்த முதியவர் மடியில் கிழவி தலை வைத்துப் படுத்திருந்தாளோ, அதே போல் தன்னை மறந்த லயந்தன்னில் ஒரு வாலிபனின் மடியில் இறங்கிக் கிடந்தாள் ஒரு யுவதி.

பளிச்சென்று தெரிந்த முதல் உருவங்களுக்குப் பின்னால் நிழல் போன்ற அந்த இளமைச் சித்திரம் தீட்டப் பெற்றிருந்தது; ஊன்றிக் கவனித்தேன். மெல்லிய பூந்திரைக்குப் பின்னால் தங்களை ஒளித்துக் கொண்டிருக்கும் காதலர்களைப் போல் அவர்கள் காட்சி அளித்தார்கள். வானவில்லின் வண்ணக் கலவையால் உருவாக்கப் பெற்ற உயிர்ச் சிற்பங்கள் இரண்டு. ரோஜா நிறக் கொசு வலைக்குப் பின்னால் தெரிவது போல் ஒரு தோற்றம்...

திடீரென்று அந்தப் படத்துக்கு உயி வந்து விட்டது! காதலர்களின் அருகி பூந்தொட்டியில் குலுங்கிய மலர்கள் மண சொரியத் தொடங்கின. ஊதுவத்தியி புகை மண்டலம் அந்தப் படத்துக்கு விருந்து கமழ்ந்தது. காதலர்களின் அருகி



இருந்த பழங்களும் பாலும் எனது நாவில் கலைத்தன. — என்ன இது? அவர்களுடைய இதயங்கள் இரண்டும் ஒன்றித் துடிப்பதைக் கூட என்னால் உணர முடிகிறதே!

இவையெல்லாம் உண்மைதானா? அல்லது மனப் பிரமையா? இலக்கியங்களில் மட்டுமே காணக் கிடைக்கும் ரதி தேவியின் அந்தப்புரத்துக்குள் அவளும், மன்மதனும் தனித்திருக்கும் வேளையில் நான் அனுமதியின்றி நுழைந்து விட்டேனா?

மன மயக்கம் தீரவில்லை எனக்கு.

"நீங்கள் இப்போது எந்த உலகத்தில் இருக்கிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே என் தோளைப் பற்றி உலுக்கினார் அன்பர் சாரங்கன்.

"ஒன்றுமில்லை; வந்து..." என்று நான் தடுமாறினேன்.

"அப்பாடா!" என்று மன நிறைவோடு பெருமூச்சு விட்டவர், "இது வரையில் என்னைத் தவிர வேறு யாரும் இதை இவ்வளவு ஆவலுடன் பார்த்ததில்லை. உங்களுடைய ஆர்வம் எனக்கு மகிழ்ச்சி தருகிறது" என்று பெருமைப்பட்டார்.

"சித்திரத்துக்குள் ஏதோ ஒன்று இருக்கிறது; அது என்னைக் கவர்ந்து விட்டது."

"ஏதோ ஒன்று என்றால்?" என்ற கேள்வி பிறந்தது அவரிடமிருந்து.

"அதுதான் விளங்கவில்லை" என்றேன் நான். "கண்ணுக்குத் தெரியும் உருவங்களை வரைந்து, அடுத்தாற் போல் கண்ணின் கருமணிப் பாவைகளுக்கு மட்டுமே புலனாகும் சித்திரங்களை எழுதி, அதற்கும் அடுத்தாற் போல் நுண் புலன்களால் மட்டும் உணரக் கூடிய

ஏதோ ஓர் இன்ப ரகசியத்தையும் ஒளித்து வைத்திருக்கிறார் இந்த ஓவியர்.''

''நீங்கள் கண்டுபிடித்து விட்டீர்கள். ரகசியத்தைக் கண்டு பிடித்து விட்டீர்கள்!'' என்று உற்சாகத்துடன் கூவினார் சாரங்கன்.

கண்டுபிடித்துவிட்டேனா! எதைக் கண்டு பிடித்திருக்கிறேன்? நான் விழித்தேன்.

நண்பரும் நானும் மாடியின் திறந்த வெளியில் கிடந்த நாற்காலிகளில் அமர்ந்தோம். மயிலாப்பூர் கடற்கரையின் மாலை நேரத்துக் காற்று குளுமையாக வீசியது. அவர் அந்தப் படத்திலுள்ள ரகசியத்தை வெளியிடப் போகிறார் என்ற ஆவலுடன் அவர் முகத்தை நோக்கினேன்.

சாரங்கன் பழம் பெரும் குணச்சித்திர நடிகர். வயதில் மிகுந்தவரானாலும் உடற்கட்டிலும் உள்ளத்திலும் இளமையின் துடிப்பிருந்தது. அவருடைய இளமைக் காலத்தில் நடைபெற்ற பல விதமான நிகழ்ச்சிகளை அவர் சுவையுடன் என்னிடம் கூறுவதுண்டு.

அவர் கூறிய கதையை நான் உங்களுக்குச் சொல்கிறேன்:

2

'ரமாமணி ஸ்பெஷல்' என்ற சொல்லை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சுமார் நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன்பு அந்தப் பெயரில் ஒரு ரயில் விடப்பட்டதாம். ரமாமணியின் நாடகத்தைப் பார்ப்பதற்காக வெளியூர்களிலிருந்து புறப்படுகிறவர்களுக்கென்றே விடப்பட்ட தனி ரயில் அது.

அப்படியானால் ரமாமணியின் புகழ் எப்படிப்பட்டது என்பதை ஓரளவு தெரிந்து கொள்ளலாம்.

இருபத்தைந்து வயதுக்குள் அவ்வளவு பெயரும் புகழும் பெற்ற நடிகை அப்போது யாருமே இல்லை. அவள்தான் ரமாமணி நாடகக் குழுவின் தலைவி. அவளுக்கு இருந்த செல்வம் அந்தக் காலத்து ஜமீன்தார்களிடம் கூடக் கிடையாதாம். செல்வாக்கில் அவள் 'கலெக்டர்'களையும் மிஞ்சியவள்.

கூட்டமென்றால் கூட்டம், கணக்கிலடங்காத கூட்டம் அவளுக்கு. அவளுடைய பேரழகைத் தொலைவிலிருந்தாவது பார்க்க வேண்டும் என்று நாடகத்துக்கு வருபவர்கள் பலர்; அவளுடைய பாடல்களில் மயங்கியவர்கள் பலர்; நடிப்பில் தங்களைப் பறிகொடுத்தவர்கள் பலப் பலர்.

அழகென்றால் அழகு, சொல்லால் தீட்டக் கூடிய அழகா அது!

அவளுடைய பளிங்குப் பாதங்களிலிருந்து முழங்காலுக்குக் கீழே அவிழ்ந்து விழும் நெளி நெளியான கருங்கூந்தல் வரையிலும் அவளைப் பற்றி வர்ணனை செய்தார் சாரங்கன். கடைந்தெடுத்த பத்தரை மாற்றுச் சிற்பம் போலிருந்த அவள் கட்டழகு ஒரு கண்கொள்ளாக் காட்சியாம். அவளுடைய கண்கள் காந்தக் கண்கள். சுழலும் விழிக் கோணத்தால் அவள் லட்சக்கணக்கான இதயங்களைப் புழுவாய்த் துடிதுடிக்க வைத்தாளாம்.

அரங்கில் அவளை அல்லி ராணியாகக் கண்டவர்கள் அவளுக்கு அடிமையாக மாட்டோமா என்று ஏங்கினார்கள். பவளக்கொடியாகப் பார்த்தவர்கள் பரிதவித்துத் துடித்தார்கள். மேனகையாக அவள் வந்து நடனமாடியபோது விசுவாமித்திரர்போல் உறுதி படைத்த ரசிகர்கள் கூடத் தடுமாறினார்கள். அவளுடைய ஒரு சொல்லுக்காக, ஒரு கணப் பார்வைக்காக அந்தக் காலத்து ஜமீன்தார்களும், அதிகாரிகளும், பிரமுகர்களும் போட்டி போட்டுக் கொண்டிருந்தார்களென்றால் போதும்!

இவ்வளவுக்கும் அவள் சாதாரணக் கலைக் குடும்பத்தில் பிறந்த கணிகை. பரம்பரை பரம்பரையாகக் கோயிலில் ஆடிப் பாடிக் கலைப் பணி புரிந்து வந்த குடும்பத்தைச் சேர்ந்தவள்.

சமஸ்தானத்து இளவரசர் ஒருவர் அவளை அணுகித் தம்மை மணந்துகொள்ளுமாறு எவ்வளவோ வற்புறுத்தினாராம். சமஸ்தானத்தின் எதிர்கால அரசியாக்கி விடுவதாகவும் அவர் வாக்களித்தாராம். ஆனால் அவள் இசையவில்லை. நாடகக் கணிகைக்குக் குடும்ப வாழ்வு உற்றதல்ல என்று மறுத்து விட்டாளாம்.

இளவரசரோ அவள் சென்றவிடமெல்லாம் பின்தொடர்ந்து மன்றாடினார். கடைசியில் தன்னைச் சுற்றியும் ஒரு வேலி வேண்டும் என்பதற்காக ''எப்போதாவது எனக்கும் உங்களுக்கும் ஓய்விருக்கும்போது நாம் சந்தித்து மகிழலாம். உங்களைப் பொறுத்த வரையில் நான் ஒரு கணிகை; நீங்கள் என் ரசிகர்'' என்றாளாம்.

இந்த அளவுக்கு ரமாமணி தன்னிடம் பரிவு காட்டியதையே ஒரு பெரும் பேறாகக் கருதிய அந்த இளவரசர் அவளுக்கென்று தம்முடைய தலைநகரில் ஒரு பெரிய பங்களா கட்டினார். மழைக் காலங்களில் நாடகங்கள் நடத்த முடியாதல்லவா? அப்போது சில நாட்கள் அவள் அங்கு சென்று தங்கி வருவது வழக்கம்.

சமஸ்தானத்து இளவரசரின் ஆதரவு இருந்ததால், மற்றப் பிரமுகர்களின் தொல்லையும் அவளுக்குக் குறையத் தொடங்கியது.

இந்தச் சமயத்தில்தான் எங்கிருந்தோ வந்த ஓர் இளைஞன் அவளுடைய வாழ்வில் குறுக்கிட்டு, அவளால் மறக்க முடியாதவனாகி விட்டான்.

3

ரமாமணியின் நாடகக் குழு அப்போது கும்பகோணத்தில் முகாமிட்டிருந்தது. சென்னையிலிருந்து புறப்பட்ட 'ரமாமணி ஸ்பெஷலில்' நாடகம் பார்த்துவிட்டுத் திரும்புவதற்காக வந்து சேர்ந்தான் ஓர் இளைஞன். ஆனால் ஒரு நாடகம் பார்த்தவுடனேயே கும்பகோணம் அவனை விடவில்லை. அங்கேயே தாற்காலிகமாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தினந்தோறும் நாடகம் பார்க்கத் தொடங்கினான்.

அரங்கத்தில் முதல் வரிசைக்குப் பதிவு செய்து கொண்டு முன்னதாக அங்கு வந்து விடுவது அவன் வழக்கம். பத்து நாட்களுக்கு மேலாகி விட்டன. ஒரு நாள் முன் வரிசையில் அவனுக்கு இடம் கிடைக்கவில்லை. மறு

னாளே வந்து சேர்ந்தாற்போல் ஒரு வாரத்துக்குப் பதிவு செய்து கொண்டு டிக்கட்டுகளை வாங்கிக் கொண்டான். முதல் வரிசையில் அரங்கத்துக்கு நேர் எதிரில் உள்ள நாற்காலி அவனுடையது.

வழக்கமாகப் பெரும் புள்ளிகளே முதல் வரிசைக்கு முந்துவார்கள். செல்வம், செல்வாக்கு, அந்தஸ்து உள்ளவர்கள் போட்டி போட்டுக் கொண்டு உட்காரும் இடம் அது. மற்றவர்களிடம் பணம் இருந்தாலும் துணிவிருப்பதில்லை. அந்த இளைஞனோ தனது எளிய தோற்றத்தைக் கண்டு மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதையும்பொருட்படுத்தாமல், தனது உரிமையை நிலை நாட்டிக் கொண்டிருந்தான். 'ராமலிங்கம்' என்ற பெயர் ஒட்டியிருந்த அவனுடைய நாற்காலியை அரங்கத்து வேலையாள் கூடச் சரியாகத் துடைப்பதில்லை.



ராமாமணியின் உருவம் மேடையில் தோன்றி விட்டால் போதும். கண்ணிமைக்க மறந்து விடுவான் ராமலிங்கம். ஆனால், அதே சமயம் அவனுடைய வலது கரம் காகிதத்தில் எதையோ குறித்துக் கொண்டிருக்கிறதே, என்ன அது ?

ஒரு நாள் 'கேட்'டிலிருந்த வேலையாளின் கண்களுக்கு ராமலிங்கத்தின் நடவடிக்கை தெரிந்து விட்டது. ஏற்கனவே ராமலிங்கத்தின் மேல் அவனுக்குச் சிறிது வெறுப்பு. சிறிதும் தகுதியில்லாதவன் பெரியவர்களுடன் சமமாக வந்து உட்காருகிறானே என்ற ஆத்திரம். இப்போது அந்த வெறுப்பும் ஆத்திரமும் அதிகமாயின.

ஏதோ கெட்ட நோக்கத்துடன் அவன் காகிதத்தில் குறிப்பெடுப்பதாக மற்றவர்களிடம் பற்ற வைத்தான். அன்றைக்கு ராமலிங்கம் வெளியே போன போது நாடகக் குழுவைச் சேர்ந்த சிலர் அவனைச் சந்தேகத்தோடு பார்த்தார்கள்.

வேண்டுமென்றே அவனை வம்புக்கிழுத்து அவனுடைய கையில் இருந்த காகிதங்களைப் பிடுங்க வேண்டும் என்றான் ஒருவன். ஆனால் ராமாமணியின் காதுக்குச் செய்தி எட்டினால், அவள் தங்களைக் கண்டிக்கக் கூடும் என்று பயந்து சும்மா இருந்து விட்டார்கள். விஷயம் நாடகக் குழுவின் நிர்வாகிக்கு எட்டியது. அவர் அதை ராமாமணிக்கு எடுத்துக் கூறினார்.

''அவனைப் பார்த்தால் சந்தேகமாக இருக்கிறது. முதல் வகுப்பில் உட்காரத் தகுதி உள்ளவனாகவும் தெரியவில்லை. தினமும் வந்து அவன் ஏதோ கிறுக்கிக் கொண்டு போகிறானாம்.''

யோசனை செய்தாள் ராமாமணி. எவ்வளவு நாட்களாக அவன் தொடர்ந்து வருகிறான் என்பதையும் கேட்டுக் கொண்டு, ''நீங்கள் ஒன்றும் அவசரப்பட வேண்டாம்; நான் அந்த மனிதரைக் கவனித்துக் கொள்கிறேன்'' என்றாள்.

மறு நாளே அவளுடைய கவனம் ராமலிங்கத்தின் மீது திரும்பியது. மேடையின் படுதாவுக்குப் பின்பு மறைந்து கொண்டு அவனை உற்றுக் கவனித்தாள். வேலையாட்களுக்கு இதனால் ஒரு திருப்தி ஏற்பட்டது. திடீரென்று ஒரு நாள் போலீஸ்காரர்களை வரவழைத்து, அவனைப் பயமுறுத்தி வெளியே அனுப்பப் போகிறாள் என்று அவர்கள் முடிவு கட்டி விட்டார்கள்.

சந்தேகத்துக்கு இடமாக நடந்து கொள்பவர்களிடமும் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்களிடமும் ராமாமணி சிறிதும் இரக்கம் காட்டுவதே இல்லை.

ஒரு வாரத்துக்குச் சேர்ந்தாற் போல் அவன் இடம் பிடித்திருந்தான் அல்லவா? அன்றைக்கு ஆறாவது நாள். 'மேனகை விசுவாமித்திரா' என்ற நாடகத்தை அவன் மூன்றாவது முறையாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அரங்கத்தில் மேனகையாக வந்து அற்புத சாகஸங்கள் புரிந்த ராமாமணியின் விழிகள் அடிக்கடி ராமலிங்கத்தின் பக்கம் திரும்பின. ராமலிங்கத்துக்கு அவளுடைய ஒவ்வொரு விழிவீச்சின் போதும் மெய் சிலிர்த்தது. தனக்காகவே அவள் அன்று அப்படி ஆடிச் சுழல்கிறாள் என்று பூரித்துப் போனான்.

இந்த நிலையில் இருந்த அவனுக்கு அடுத்தாற்போல் உட்கார்ந்திருந்த முரட்டு மனிதனைக் கவனிக்க நேரமில்லை. அந்த முரடனோ நாடகத்தைப் பார்க்காமல் ராமலிங்கத்தையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நாடகம் முடிந்தது. எழுந்து வர மனமில்லாமல் வீட்டுக்குத் திரும்பினான் ராமலிங்கம். திரும்பிய பிறகுதான், அன்றைக்கு அவன் குறிப்பெடுத்த காகிதங்கள் அவனிடம் இல்லை என்பது தெரிந்தது. பதறிப் போய் நாடகக் கொட்டகைக்குத் திரும்பினான். அப்போது அவனுக்குப் பதில் சொல்லக் கூடியவர்கள் அங்கு யாரும் இல்லை. நாடகக் கொட்டகையிலோ, வழியில் எங்காவதோ கைதவறிப் போயிருக்கும் என்று நினைத்துக்கொண்டான்.

இரவு முழுதும் சரியான தூக்கமில்லை ராமலிங்கத்துக்கு. இன்னும் ஒரே ஒரு நாள் தான் அவனால் நாடகம் பார்க்க முடியும். அவளை அருகில் இருந்து காண முடியும். கையிலிருந்த பணம் இரண்டொரு நாட்களுக்கு முன்பே தீர்ந்து விட்டது. வீட்டுச் சொந்தக்காரருக்கு வாடகை பாக்கி; சாப்பிட்ட ஹோட்டலில் பாக்கி. அன்றைக்குக் காலையிலேயே ஹோட்டல்காரர் கண்டித்துச் சொல்லி விட்டார். ஆதலால் மத்தியானமும் இரவும் அவன் முழுப் பட்டினி. பசி

வேறு அவன் அடிவயிற்றைக் கிண்டி இழுத்தது. எப்படி அடுத்தாற்போல் அவன் சாப்பிடுவது? கடன் கட்டுவது? நாடகம் பார்த்துவிட்டு ஊருக்குத் திரும்புவது?

எப்படியோ பொழுது விடிந்தது. இன்னும் ஒரு நாளாவது நாடகம் பார்க்க முடியுமல்லவா! இந்த நினைவு அவனது மற்றக் கவலைகளையெல்லாம் துரத்தியடிக்கப் பார்த்தது.

தான் அதுவரையில் குறித்துக் கொண்டு வந்திருந்த காகிதங்களைப் புரட்டினான். ஒவ்வொரு காகிதத்திலும் விதம்விதமான தோற்றத்தில் ரமாமணி இருந்தாள். பென்சிலால் வரைந்த கோடுகளுக்குள் அவளுடைய அழகு, இளமை, உயிர்த் துடிப்பு, கலை நயம், நடிப்புத் திறன் இவ்வளவும் சிறைப்பட்டிருந்தன.

'இன்றைக்கு முடிந்த மட்டும் படங்களை வேகமாக வரைந்துகொள்ள வேண்டும். நேற்றுக் கைநழுவ விட்டது போலல்லாமல் பத்திரமாகக் கொண்டு வர வேண்டும்!'

அங்கங்கே கிடந்த சில்லறைகளைப் பொறுக்கி எடுத்து, பக்கத்துப் பெட்டிக் கடையில் வாழைப் பழங்களும் நிலக் கடலையும் வாங்கித் தன் பசியை விரட்டப் பார்த்தான் ராமலிங்கம். தாராளமாகத் தண்ணீரைக் குடித்தான்.

மறு நாள் பொழுது விடிந்தால் நடக்கிறபடி நடக்கட்டுமே !

மாலை நேரம் வந்தது. ஒழுங்காகக் கண்ணாடியைப் பார்த்துத் தலை வாரிக் கொண்டான். உயரமான ஒல்லியான தேகம்; கூர்மையான கண்கள்; எடுப்பான மூக்கு. நீண்டு தொங்கிய கரங்களின் விரல்கள் கூர்மையாகவும் அழகாகவும் இருந்தன. நல்ல சிவப்பு நிறம் அவன்.

அன்றைக்கும் 'மேனகை விசுவாமித்திரா' நாடகம்தான்....

மேனகையின் சாகஸங்கள் அரங்கத்தையே மெய்ம்மறந்த மயக்கத்தில் ஆழ்த்தியிருந்தன. முதல் நாள் அருகில் அமர்ந்திருந்த அதே முரடன் இன்றும் அமர்ந்திருப்பதைக் கவனியாமல் ராமலிங்கம் படங்களை வரையத் தொடங்கினான். கண்கள் மேனகையுடன் தொடர்ந்து சுழன்றன. விரல்கள் காகிதத்தில் நடனமாடின. ஆவேசம் வந்தவனைப் போல் ரமாமணியின் ஒவ்வொரு உயிர்த் துடிப்பையும் தனது கற்பனை வெறியோடு அவன் பதிய வைத்துக் கொண்டிருந்தான்.

நாடகமும் முடிந்தது. எழுந்திருக்க மனமின்றி அதே நாற்காலியில் அமர்ந்துவிட்டான் ராமலிங்கம். எல்லோரும் கலைந்துவிட்டார்கள். தடுமாறியபடியே எழுந்து நடந்தான். 'கேட்'டை விட்டுத் தாண்டும் போது முரட்டுக் கரம் ஒன்று அவன் தோளைப் பற்றி நிறுத்தியது.

திரும்பிப் பார்த்தான். முறுக்கு மீசையும், நெருப்பு விழிகளும், கிருதாவும் உள்ள ஒரு முரட்டு மனிதன் அவனைப் பிடித்துக்கொண்டிருந்தான்.

''இந்தாப்பா! சத்தம் போடாமல் என்னோடு வா!''

பதில் ஏதும் பேசும் நிலையில் இல்லை ராமலிங்கம். வாயைத் திறந்தால் அந்த முரடன் எலும்பை நொறுக்கி மூட்டை கட்டிவிடுவான் போலிருந்தது. இருளுக்கு ராமலிங்கத்தைப் பற்றி இழுத்தான் அவன். அங்கு தயாராக நின்று கொண்டிருந்த காருக்குள் தள்ளினான். தானும் ஏறிக்கொண்டான். கார் எங்கோ கிளம்பியது.

''நாடகத்தில் நடப்பது போல் நடக்கிறதே!'' என்று முணுமுணுத்துக் கொண்டான் ராமலிங்கம்.

4

ஆமாம், நாடகத்தில் நடப்பது போலத் தான் எல்லாம் நடந்தன.

சுற்றுச் சுவருள்ள பெரிய பங்களாவுக்குள் நுழைந்து கார் அதன் உள்முகப்பில் நின்றது. அங்கு வாயிலில் தயாராக நின்றுகொண்டிருந்தாள் ரமாமணி. காரிலிருந்து இறங்கிய ராமலிங்கத்தின் முகத்தை நோக்கி அவளுடைய மயக்கும் விழிகள் புன்முறுவல் பூத்தன. செந்தாமரைக் கரங்கள் குவிந்து வணக்கம் தெரிவித்தன.

எந்த முரடனைக் கண்டு ராமலிங்கம் பயந்தானோ அவன் ரமாமணியின் முன்பு பெட்டிப் பாம்பாக அடங்கி, பய பக்தியோடு கரங்களைக் கட்டிக் கொண்டு கூனிக் குறுகிப் போய் நின்றான்.

''முனியாண்டி!''

''அம்மா!''

''எனக்குத் தலையை வலிக்கிறது. ஓய்வெடுத்துக்கொள்ளப் போகிறேன். யார் வந்தாலும் சரி, இப்போது பார்க்க முடியாதென்று சொல்லி விடு.''

பிறகு, ''வாருங்கள்!'' என்று இனிய குரலில் ராமலிங்கத்தை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றாள். கூடத்தில் கிடந்த சோபாவைச் சுட்டிக் காட்டிவிட்டுத் தானும் அமர்ந்தாள்.

''நீங்கள் இன்றைக்கு எழுதிய படங்களை நான் பார்க்கலாமா?''

ராமலிங்கம் தயங்கினான். ''படங்கள் என்று சொல்ல முடியாது. முழுச் சித்திரங்கள் வரைவதற்காக உள்ள வெளிக் கோடுகளை மட்டும் பென்சிலால் வரைந்திருக்கிறேன். இவைகளை வைத்துக் கொண்டு பிறகு வண்ணப் படங்கள் போடுவேன்.''

தன் கையிலிருந்த காகிதங்களை ரமாமணியிடம் நீட்டினான் ராமலிங்கம். அவைகளை வாங்கிப் புரட்டிப் பார்த்துக்கொண்டே அவள் நாற்காலியிலிருந்து எழுந்தாள். ''சரி! நான் அரங்கிலிருந்து வந்தவுடன் இன்னும் குளித்துவிட்டு உடை மாற்றிக்கொள்ளவில்லை. படங்களைப் பார்த்துவிட்டுத் திருப்பித் தருகிறேன்'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

வேலையாட்களுக்கு அவள் என்ன உத்தரவிட்டாளோ தெரியாது. நாடக மேடையின் காட்சித் திருப்பம் போல் அங்கே அவனுக்கு மளமளவென்று ராஜ உபசாரம் நடக்கத் தொடங்கியது.

குளிக்கும் அறையில் இதமான வெந்நீர், சந்தனச் சோப்பு, தைலங்கள், பவுடர், தேங்காய்ப்பூத் துண்டு, கண்ணாடி, சீப்பு முதலிய எல்லா வசதிகளும் இருந்தன. புத்தம் புதிய ஜரிகை வேஷ்டி ஒன்றும், வெள்ளை பட்டு அங்கவஸ்திரமும் உடை

மாற்றிக் கொள்வதற்கு முன்னேற்பாடாக அங்கே வைக்கப்பட்டிருந்தன.

வேஷ்டியைப் பார்த்து விட்டு, "இதெல்லாம் யாருக்கு?" என்று வேலையாளைத் திகைப்புடன் கேட்டான்.

"உங்களுக்குத்தான் வாங்கி வந்து வச்சிருக்காங்க. நீங்க கட்டிக்கலேன்னு எங்களைக் கோவிச்சுக்குவாங்க" என்று அவனிடமிருந்து பதில் வந்தது.

ராமலிங்கமாகக் குளிக்காவிட்டால் அந்த வேலையாளே அவனுடைய பழைய உடுப்புக்களைக் களைந்துவிட்டு, அவனுக்குக் குளிப்பாட்டி விட்டு விடுவான் போலிருந்தது. பணிவோடும் அன்போடும் அந்த வேலையாள் பிடிவாதம் பிடித்தான்.

வெந்நீர்க் குளியல் இதமாக இருந்தது. புத்துடை உடுத்துத் தன்னை விட உயரமாக இருந்த கண்ணாடியின் முன்பு நின்று தன்னை அலங்கரித்துக் கொண்டான். வயிற்றுப் பசி ஒரு பக்கம் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தது.

மூன்றாவது மாடிக்கு அவனை அழைத்துக் கொண்டு போய், அங்கு மேஜை மேல் பரிமாறப்பட்டிருந்த சாப்பாட்டுக்கு முன்பு விட்டுவிட்டு, ஓசைப் படாமல் தலை மறைந்து விட்டான் வேலையாள். மேஜையில் இருவருக்கு உணவு தயாராக இருந்தது.

வானத்தில் வளர்பிறை நிலவு பாலைப் பொழிந்தது. தோட்டத்து மரங்களிலிருந்து கிளிகள் கொஞ்சின. வண்டுகளின் ரீங்காரம் ஒரே சுருதியில் இழைந்தது.

பாதச் சதங்கையொலி கேட்டுத் திரும்பினான் ராமலிங்கம். நிலவே பெண்ணுருக் கொண்டது போன்று நடை பயின்று வந்து அவன் எதிரில் அமர்ந்தாள் ராமாமணி.

தன் கையால் மாம்பழங்களை நறுக்கி அவனுடைய இலையில் போட்டுக் கொண்டு, "சாப்பிடுங்கள்!" என்றாள் தேனிற்குழைத்தகுரலில்.

"ஏன், நீ சாப்பிடவில்லையா?"

"இருவருமே சாப்பிடுவோம்" என்று கூறியவள் ஏதோ ஒரு காரணத்துக்காக அவனைப் பார்த்துச் சிரித்தாள். 'என்ன?' என்று கேட்பது போல் தலை நிமிர்ந்தான் ஓவியன்.

"எடுத்த எடுப்பில் என்னை நீ என்று அழைக்கிறீர்களே, என்ன துணிச்சல் உங்களுக்கு?"

"நீ வயதில் சிறியவள்! இதில் என்ன துணிச்சல் இருக்கிறது?"

"வயதில், செல்வத்தில், அந்தஸ்தில் உயர்ந்தவர்களெல்லாம் என்னிடம் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் தெரியுமா?"

கேலிப் புன்னகை உதிர்ந்தது ராமலிங்கத்தின் உதட்டில். "ஒன்று,—அவர்கள் எல்லா விஷயங்களிலும் உன்னை விடச் சிறியவர்களாக இருக்க வேண்டும்; அல்லது உன்னை ஏமாற்றுவதற்காக உன்னிடமே அப்படி நடித்திருக்க வேண்டும்."

"அடேயப்பா! எவ்வளவு செருக்கு உங்களுக்கு?" என்றாள் ராமாமணி.

சிறிது நேரப் பழக்கத்திலேயே அவளுடைய போக்கு அவனுக்கு விசித்திரமாகத் தோன்றியது. வெளி உலகம் கண்டு நடுங்கக் கூடிய பல பெரிய மனிதர்கள் அவள் காலடியில் மண்டியிட்டுக் குழைந்திருக்கிறார்கள். அவனோ முற்றிலும் நேர்மாறாகக் காட்சி யளித்தான்.



"உங்களிடம் ஒன்று நான் கேட்கலாமா?" என்று கொஞ்சலாகக் கேட்டாள் ராமாமணி.

"என்ன?"

"துணிவுள்ளவராக இருந்தால் நேரில் என்னைச் சந்தித்துப் படம் போட விரும்புவதாகச் சொல்லியிருக்கலாமே! அதற்காக இப்படியா நான் தவறாமல் நாடகத்துக்கு வருவது! அந்தச் சாக்கில் என்னையே கண்ணிமைக்காமல் உற்றுப் பார்ப்பது? மற்றவர்களெல்லாம் உங்களைப் பைத்தியக்காரர் என்று நினைக்கமாட்டார்களா?"

பதிலளிக்காமல் தலையைக் குனிந்து கொண்டு சாப்பிட்டான். பிறகு எழுந்துசென்று கைகழுவி விட்டு வந்தான். அப்போதும் அவன் மௌனம் கலையவில்லை.

"ஏன், தயங்குகிறீர்கள்?" என்று கேலியாகக் கேட்டுக் கொண்டே பாலை ஊற்றி அவனிடம் கொடுத்தாள் ராமாமணி.

பதிலுக்கு ஒரே ஒரு பார்வை! நெடு நேரம் அவளுடைய விழிகளின் வாயிலாக அவளுடைய இதய வாயிலையே ஊடுருவுவது போல் பார்த்தான். கொடுத்த பால் அவன் கரத்தில் அப்படியே இருந்தது. அவள் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

"ராமாமணி!" அவன் குரல் தழுதழுத்தது. "படம் போடும் நோக்கத்துடன்

நான் இங்கு வரவில்லை. வந்திருந்தால் திரைச்சீலைகள், தூரிகைகள், வண்ணக் கலவைகளோடு வந்திருப்பேன்.''

அவன் பேசுவது அவளுக்குப் புரியாத புதிராக இருந்தது.

''நான் ஒரு ரசிகன்; கலைஞன்; அழகுப் பித்தன். நெடுநாட்களாக அழகின் முழுத் தோற்றத்தை அதன் பூரணப் பொலிவோடு காண வேண்டும் என்ற பேராசை எனக்கு உண்டு. என் கற்பனையில் மட்டும் சுழன்ற அற்புதப் பெண்ணழகை இதற்கு முன்பு என்னால் காணவே முடியவில்லை. உன்னைப் பற்றிப் பலர் கூறினார்கள். நான் அலட்சிய மாக இருந்து விட்டேன். கடைசியில் உன்னை யுந்தான் ஒரு முறை பார்த்து விட்டுப் போவோமே என்று அரை மனத்துடன் வந்தேன். பார்த்தேன். பற்றிக்கொண்டு விட்டாய். என்னால் மீள முடியவில்லை. என் கற்பனையையும் மிஞ்சிய களஞ்சியம் நீ!''

கண்ணீரைத் துடைத்துக் கொண்டான் ராமலிங்கம். நீண்ட பெருமூச்சு விட்டாள் ரமாமணி.

''நாளைக்கு ஊருக்குப் போகப் போகிறீர் களாக்கும்?'' என்று வருத்தத்தோடு கேட் டாள் ரமாமணி.

''நாளைக்கு என்ன செய்வேனோ தெரி யாது!''

''சென்னையில் உங்களுக்கு மனைவி? குடும்பம்?....''

சிரித்தான் ராமலிங்கம். ''நானும் தாயா ரும் இருக்கிறோம். இந்தக் குடும்பமே எனக் குப் பெரியது. மனைவி, குழந்தை, குட்டிகள் என்ற வாழ்க்கை எனக்கு ஒத்து வராது.''

''தாயாருக்குப் பிறகு என்ன செய்வீர் களாம்?''

''பிறகு யோசிக்க வேண்டிய விஷயம் அது....''

ராமலிங்கத்தைப் பற்றிய விவரங்களைச் சிறிது சிறிதாகக் கேட்டுத் தெரிந்துகொண் டாள் ரமாமணி. தாயாரும் தானும் பட் டினி கிடக்கக் கூடாதே என்பதற்காக அவன் செல்வந்தர் சிலருக்கு அவர்களுடைய உரு வங்களைப் படம் போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தான். மற்றப்படி இயற்கைக் காட்சிகளையும், அவனுக்குப் பிடித்த உரு வங்களையும் எழுதிப் பொழுது போக்குவது தான் அவன் வேலை. பிறவிக் கலைஞன் அவன்.

''அப்படியானால் என் படங்களை ஏன் வரைந்தீர்கள்?''

''எப்போது வேண்டுமானாலும் தனிமை யில் உன்னைப் பார்த்து மகிழலாம். உன் னோடு இருக்கலாம். நாடகம் பார்ப்பதற் காக ஊர் விட்டு ஊர் வந்து பைத்தியக்கார னென்று பெயர் எடுக்க வேண்டாம்.''

அவளுடைய மார்பகம் விம்மி வடிந்தது. கண்களில் பனி படர்ந்தது.

''ஆமாம், இந்தக் கோடுகளை வைத்துக் கொண்டே முழுப் படமும் வரைந்து விடுவீர்களா?''

மெல்லச் சிரித்தான் ராமலிங்கம். ''ரமா மணி! உன் உருவம் இந்தக் காகிதத்தில் பதிந்திருப்பது அவ்வளவுதான். ஆனால் அது இங்கே பதிந்துவிட்டது பசுமையாக!''

என்று தனது நெஞ்சைத் தட்டிக் காட்டி னான். ''எனது இதயத்தின் நாடி நரம்புகள் சிந்தனையின் கருவூலம் இங்கெல்லாம் ஒன்றிப் பரவிவிட்டாய் நீ. இனி இந்தக் காகிதங்கள் கூட எனக்கு வேண்டியதில்லை.''

மெய்சிலிர்த்தது ரமாமணிக்கு. ஏதோ ஒரு நூதனமான உலகில் நுழைவது போல் அவளுக்கொரு மயக்கம்.

''ஒரே ஒரு வேண்டுகோள் — எனக்கு ஒரே ஒரு படம் அனுப்பி வைக்கிறீர்களா?''

''அனுப்பி வைக்கிறேன். ஆனால் நீ என்ன தருகிறாய்?''

''என்ன வேண்டும் உங்களுக்கு?''

''எனக்கு வேண்டியது நீ! நீ வேண்டும் எனக்கு! உன் உடல் மட்டுமல்ல, உள்ளம் மட்டுமல்ல, உடல், உள்ளம், உயிர் மூன்றும் வேண்டும்! தருகிறாயா?''

நாற்காலியிலிருந்து தட்டுத் தடுமாறி எழுந்து, தரையில் உட்கார்ந்து, அவன் முழங் கால்களில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு தேம்பினாள் ரமாமணி;

5

மூன்றாவது மாடியின் திறந்த சன்னல்கள் வழியே காலை இளம் காற்று வீசியது. தோட் டத்துப் புள்ளினங்களான கிளி, குயில், பூஞ் சிட்டு இவை குதூகலத்துடன் பாடிப் பறந் தன. பன்னீர் மரம் சாமரம் வீசித் தனது பூங்காற்றால் ராமலிங்கத்தைத் துயில் எழுப்பி விட்டது.

சோம்பல் முறித்துக் கொண்டே எழுந்த வன் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தான். ரமாமணியின் நித்திரை இன்னும் கலையவில்லை. ஓர் ஓரமாகத் திரும்பிப் படுத்திருந்தாள். அவளுடைய இதழ்க் கோணத்தில் புன்னகை அரும்பி யிருந்தது.

முன்னிரவுகளின் இனிய நினைவு அவன் கண் முன்னே சுழன்றது.

''கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே!''

நாடக மேடையில் இந்தப் பாடலைப் பல முறை கேட்டு ஏற்கனவே இன்புற்றிருக்கிறான் ராமலிங்கம். கோடையிடி போன்ற வெண் கலக் குரலில் பாடிக் கொண்டே தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வார்கள் சில கதா நாயகர்கள்.

ஆனால் அதே பாடலை ரமாமணி அவனுக் காகவுந்தான் பாடினாள். அதில்தான் எத் தனை உருக்கம், எத்தனை மென்மை, எத்தனை குழைவு! ஊதுவத்தியின் மணம் போலவல்லவா இழைந்து இழைந்து நெளிந்து அவன் இதயத்தை ஈர்த்தது அது?

''ஆடையிலே எனை மணந்த மணவாளா!''

அந்த ஒரே வரியை அவள் ஒன்பது முறை, ஒன்பது வகையான உணர்ச்சி பாவங்களுடன் பாடி, வீணையும் தானுமாய் ஒன்றிப் போனாள் ரமாமணி. நெக்கு நெக்குருகிப் பரவசத்தால் கசிந்து உருகியது ராமலிங்கத்தின் உள்ளம்.

ஏதோ ஒரு நாடகக் கணிகையுடன் கழிக் கும் பொழுதாகவே அது அவனுக்குத் தோன்ற வில்லை. காலம் காலமாய்த் தனக்காகக்

எழிலின் எல்லையை எட்ட...

"'ஹேஸலின்' ஸ்னோ"

மேனிக்கு மென்மையாக மெருகிடுவதிலே தன்னிகரற்றது
"'ஹேஸலின்' ஸ்னோ." மென்மையான,
எண்ணெய்ப் பசையற்ற இவ்வழகுப் பொருள்
சருமத்துக்கு மழமழப்பையும் வனப்பையும் ஊட்டுகிறது.
பவுடர் படிவதற்கெனவோ அல்லது தனிப்பட்ட
முறையிலோ உபயோகித்து உங்கள் சருமத்துக்குப்
பொலிவுடன் கூடிய பாதுகாப்பை அளியுங்கள்.
"'ஹேஸலின்' ஸ்னோ" அரம்பையர் குலத்தின்
பரம்பரை அழகுசாதனம்.





பர்ரோஸ் வெல்கம்
தயாரிப்பு

BWY-11-TAM

காத்துக் கொண்டிருந்த ஒருத்தியின் தாபத் துடிப்பாக இருந்தது அது.

ராமாமணியின் துயிலும் கலையவில்லை; புன்னகையும் வாடவில்லை. சட்டென்று அருகில் இருந்த காகிதத்தையும் பென்சிலையும் எடுத்துக் கொண்டு அவள் அருகில் அமர்ந்தான் அவன். அவளுடைய வட்டமான முகம், வளைந்த புருவங்கள், எடுப்பான நாசி, மிருதுவான கன்னங்கள், மலரிதழ்கள், அடர்ந்த கேசம் — யாவுமே காகிதத்துக்கு வந்து விட்டன.

திடீரென்று விழித்துக் கொண்ட ராமாமணி அவனுடைய விரல்களை இறுகப் பற்றினாள், தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள். "ஆமாம், இதென்ன வேடிக்கை? எப்போதும் படந்தானா?"

"இன்னும் ஒரு அரை நிமிஷம் தூங்கு! அல்லது தூங்குவதுபோல் நடித்துக்காட்டு!"

"ஊஹூம்!" என்று படுக்கையை விட்டு எழுந்தாள் ராமாமணி. "இனி என்னால் உங்களுக்கு முன் நடிக்கவே முடியாது. உண்மை தான்! நடிக்கவே முடியாது!"



காலைக் கதிரொளி அறைக்குள் எட்டிப் பார்த்தது.

ராமலிங்கம் வியப்பால் வாயடைத்துப் போகும்படியான ஒரு காரியத்தைச் செய்தாள் ராமாமணி. திடீரென்று தரையில் மண்டியிட்டு அவன் பாதங்களில் தலை வைத்து வணங்கினாள். குடும்பப் பெண்கள் தங்கள் மாங்கல்யத்தை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொள்வது போல், தனது மார்பகத்தில், தொங்கிய தங்கச் சங்கிலியை இழுத்து, அதில் இணைந்திருந்த பொட்டை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

பொழுது விடிந்து விட்டது.

6

நாடகத்தின் அடுத்த காட்சி இவ்வளவு கொடுமை நிறைந்ததாக இருக்குமென்று ராமலிங்கம் எதிர்பார்க்கவே இல்லை. இரவில் நடந்தது நடிப்பா, பகலில் நடப்பது நடிப்பா என்ற திகைப்பு அவனுக்கு.

எப்படி அவளால் திடீரென்று தன்னை இவ்வளவு சுவிரக்கமற்றவளாக மாற்றிக் கொள்ள முடிகிறது?

காலையில் சிற்றுண்டி வந்தது. இருவரும் ஒன்றாக அமர்ந்துதான் சாப்பிட்டார்கள். பிறகு பரிமாறியவளை வெளியில் அனுப்பி விட்டு ராமலிங்கத்திடம் பேசத் தொடங்கினாள் ராமாமணி.

"இன்றைக்கு ரயிலில் உங்களுக்கு இடத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். அந்தச் சமயத்தில் நீங்கள் தங்கியிருக்கும் வீட்டுக்கு என்னுடைய கார் வரும். நீங்கள் அங்கிருந்து ரயிலுக்குப் புறப்படலாம்."

ராமாமணியா இப்படிக் கனிவற்ற குரலில் பேசுகிறவள்!

"உங்களுடைய வீட்டு வாடகை பாக்கி, ஓட்டல் பாக்கி இதை யெல்லாம் இதற்குள் கட்டியிருப்பார்கள். அதனால் அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்."

கசீர் என்று தைத்தது ராமலிங்கத்துக்கு.

இந்த விஷயங்களை யெல்லாம் அவன் அவளிடம் சொல்லவில்லை. எப்படித் தெரிந்து கொண்டிருப்பாள்?

"நீங்கள் நேற்றைக்கு முதல் நாள் நாடக அரங்கில் காணாமல் போக்கிய படக் குறிப்புகளும் இதில் இருக்கின்றன. எல்லாவற்றையும் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்."

காகிதக் கற்றைகளை அவனிடம் நீட்டினாள் கணிகை.

"நீ என்னிடம் கேட்டாயே ஒரு படம், அது....?"

"முடிந்தால் ஊருக்குப் போய் எழுதித் தபாலில் அனுப்புங்கள். இல்லாவிட்டால் அந்தச் சிரமமும் உங்களுக்கு வேண்டாம்."

"ராமாமணி!" என்று அலறினான் ராமலிங்கம்.

"உங்களுக்கு ஒரு வேண்டுகோள்: இனி எப்போதும் எந்தக் காரணத்துக்காகவும் என்னைச் சந்திக்க முயலாதீர்கள். அது உங்களால் முடியாது. கடிதமும் எழுத வேண்டாம்; என் நாடகங்களைப் பார்க்கவும் வர வேண்டாம்."

அவமானத்தாலும் ஏமாற்றத்தாலும் குமுறியது ராமலிங்கத்தின் நெஞ்சு.

"என்னை அடியோடு மறந்து விடுங்கள்! அது ஒன்றுதான் நீங்கள் நிம்மதியாக வாழ்வதற்கு வழி!" என்று மீண்டும் கூறினாள் அவள்.

சீறினான் ராமலிங்கம். "உன்னை மறந்து விடச் சொல்வதற்கு நீ யார்? உனக்கு அதைச் சொல்ல என்ன உரிமை இருக்கிறது? நான் பணம் கொடுத்து என் செலவில் நாடகம் பார்ப்பதையும் நீ தடுக்க முடியாது."

"அதைத் தடுக்க என்னால் முடியும்! யாரையும் அனுமதிக்க வேண்டும் என்ற கட்டாயம் எனக்கு இல்லை."

"சீ! நீயும் ஒரு பெண்தானா?"

"நான் ஒரு பெண்ணில்லை! என்னை நினைத்துக் கொண்டு சீரழிந்தவர்கள் எத்தனையோ பேர். பணம், புகழ், குடும்பம், பொறுப்பு எதையெல்லாமோ இழந்திருக்கிறார்கள். உங்களுடைய நன்மைக்காகத்தான் சொல்கிறேன். நான் ஒரு நடிகை! கோடை வெய்யிலில் நிமிஷ நேரம் இளைப்பாறும் குளிர் மரத்தை யாரும் நினைப்பதுமில்லை; அதன் கீழ் குடியிருப்பதுமில்லை; இதை நீங்கள் மறந்து விடாதீர்கள்!"

"சரி, நான் போகிறேன்" என்று புறப்பட்ட ராமலிங்கம், "என்னுடைய பழைய துணிகளைக் கொடுக்கச் சொல்; நான் எப்படி இங்கே வந்தேனோ, அப்படியே போகிறேன்"

நண்பர்: நீ எழுதிய நாடகத்தை நீயே செலவழித்து மேடையேற்றினாயாமே! நல்ல வெற்றிதானா?



நாடக ஆசிரியர்: நாடகம் வெற்றி தான். பார்க்க வந்தவர்கள்தான் படு மட்டமாய்ப் போய்விட்டார்கள்.

என்று மேலே போட்டிருந்த வெண்பட்டு அங்கவஸ்திரத்தை வீசி எறிந்தான்.

ஆத்திரத்தோடு அவனை உறுத்து விழித்தாள் ராமாமணி. குபீரென்று அவள் விழிகளில் கண்ணீர் கொப்புளித்தது. "பழைய துணிகளை வெளுக்கப் போட்டிருப்பார்கள்; இப்போது கிடைக்காது" என்று கத்தினாள்.

ராமலிங்கம் மாடியிலிருந்து கீழே இறங்கி ஓடினான். குளிக்கும் அறையை ஒட்டி அவனது பழைய உடுப்புக்கள் உலர்த்தப்பட்டிருந்தன. அவற்றை எடுத்து உடை மாற்றிக் கொண்டு மின்னலென வெளியேறினான். அவன் கையில் சித்திரக் குறிப்புக்கள் பத்திரமாக இருந்தன.

கார் அவனைப் பின்பற்றியது. ஆனால் அவன் அதில் ஏறிக் கொள்ள வில்லை.

ராமாமணி தான் நடித்து முடித்த கொடுமைக் காட்சிக்காக விம்மி விம்மி அழுதாள்.

ராமலிங்கம் அன்றைக்கே சென்னைக்குப் புறப்பட்டான். சரியாக ஒரு மாதத்தில் அவனிடமிருந்து ஒரு பெரிய படம் ராமாமணிக்குத் தபாலில் வந்தது. அத்துடன் ஏதும் கடிதம் வரவில்லை. ராமாமணியும் படத்தைப் பற்றி அவனுக்கு எழுதவில்லை.

ஆண்டுகள் சென்றன; பலப் பல ஊர்களில் ராமாமணியின் நாடகக் குழு முகாமிட்டு வெற்றிக் கொடி நாட்டியது.

ராமலிங்கமும் முன்போலில்லை. நாளுக்கு நாள் அவனுடைய திறமை நாட்டில் பரவியது. காவியங்களிலும் இலக்கியக் கற்பனைகளிலும் வரும் பல காட்சிகள் அவன் கைவண்ணத்தால் அற்புதச் சித்திரங்களாக வெளிவந்தன. சிவபார்வதி நடனம், மாதவி கோவலன், மேனகை விசுவாமித்திரா, ரதி மன்மதன் இப்படிப் பல்வகைப் படங்கள் பிரபலமாயின. இந்நிலையில் அவன் தாயார் இறந்து விட்டார்கள். ஆனால் அவன் அதற்குப் பிறகும் திருமணம் செய்து கொள்ளவில்லை.

ராமாமணியின் நாடகக் குழு சென்னைக்கு வருவதாகச் செய்தி கிடைத்தது. தெருவெங்கும் விளம்பரத் தாட்கள் பளபளத்தன. ராமலிங்கம் திடீரென்று பங்களூருக்குக் கிளம்பிச் சென்று விட்டான். சென்னையிலிருந்து அவள் வெளியூர் சென்ற பிறகுதான் அவனால் சென்னைக்குத் திரும்ப முடிந்தது.

நாடகக் குழுவிலிருந்து அடிக்கடி சிலர் அவனைத் தேடிக் கொண்டு வந்தார்களாம். சித்திரங்கள் போடச் சொல்வதற்காக வந்ததாகத் தெரிவித்தார்களாம். ராமலிங்கம் அதைக் கேட்டுத் தனக்குள் வேதனையோடு சிரித்துக் கொண்டான்.

பத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் சென்றன. ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளவில்லை. அவளை முற்றிலும் மறந்து விட்டதாகவே நினைத்துக் கொண்டிருந்தான் ராமலிங்கம்.

அவனுக்கென்று ஒரு தனி அறை உண்டு. அந்த அறைக்குள் புகுந்து அவன் சித்திரம் வரையும்போது மட்டிலும் யாரையும் அவன் அனுமதிப்பதில்லை. அந்தச் சித்திரங்கள் யார் கண்ணிலும் படுவதைக்கூட அவன் விரும்புவதில்லை. அவனுடைய வாழ்க்கையில் ஏதோ ஒரு ரகசியம் இருப்பதாக மட்டும் சிலர் பேசிக் கொண்டார்கள்.

அந்த அறைக்குள் எந்த ரகசியமும் இல்லை. திரும்பிய பக்கமெல்லாம் ராமாமணி காட்சியளித்தாள். எத்தனையோ வகைத் தோற்றங்களில் அவள் அங்கு உயிர்ச் சித்திரமாக விளங்கினாள். அவள் துயிலெழுவதற்கு முன்பாகப் புன்னகை அரும்பிய இதழ்களோடு பஞ்சணையில் இன்பக் கனவு கண்டு கொண்டிருந்தாளே, அந்த ஒரு தோற்றம் மட்டிலும் ஒரு பக்கத்துச் சுவரில் மிகப் பெரியதாக வரையப் பெற்றிருந்தது.

பதினைந்தாவது ஆண்டு....

சென்னைக்கு மீண்டும் அவளுடைய நாடகக் குழு வந்து சேர்ந்தது. ராமலிங்கம் முதலில் ஊரை விட்டுப் போகத்தான் நினைத்தான். பிறகு அவன் மனம் மாறியது. 'இவளுக்குப் பயந்து கொண்டு எதற்காக நாம் ஊரை விட்டுப் போவது ?'

இம்முறை நாடகக் கொட்டகைகூட அவனுடைய வீட்டின் அருகில்தான் இருந்தது. முதல் நாள் நாடகத்துக்கு ஏகப்பட்ட கூட்டம். நாடகம் தொடங்க வேண்டிய நேரமும் நெருங்கியது. ராமலிங்கத்துக்கு இருப்புக் கொள்ளவில்லை. தன்னுடைய தனி அறைக்குள் சென்று அவளுடைய படங்களை ஒரு முறை சுற்றிப் பார்த்தான். இந்தப் பதினைந்து ஆண்டுகளுக்குள் அவளுடைய தோற்றம் எப்படியெல்லாம் மாறியிருக்கிறதோ! அதையாவது பார்க்க வேண்டாமா? கட்டுப்பாட்டை உதறிவிட்டு, கூட்டத்தில் இடிபட்டு ஒரு டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான் ராமலிங்கம். உள்ளே அரங்கத்திலிருந்து ஒலிபெருக்கி ஒரு திடுக்கிடும் செய்தியை அறிவித்தது.

"கலை அரசி ராமாமணிக்கு இரண்டு வாரங்களாகவே உடல் நலமில்லை. இந்த நிலையில் அவர் மேடையில் தோன்றினால் அவருடைய உயிருக்கு ஆபத்து என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். ஆகவே இன்றிலிருந்து ராமாமணிக்குப் பதிலாகக் காந்தாமணி மேடையில் தோன்றுவார் !"

ராமலிங்கத்துக்கு உடனே போய் ராமாமணியைக் காண வேண்டும் என்ற துடிப்பு. ஆனால் எந்த வீட்டில் தங்கியிருந்தாள் என்று தெரிய வில்லை. நாடகம் பார்க்காமலேயே விரக்தியோடு தன் வீட்டுக்குத் திரும்பினான்.

வீட்டு வாயிலில் ஒரு கார் நின்று கொண்டிருந்தது. அதைக் கவனியாமல் கதவைத்

ஜம்மியின்

லிவர்க்யூர்



குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி கோளாறுகளுக்கு

வழக்கமான மாதாந்திர விஜயம்

இடம்	தேதி	நேரம்		விலாசம்
ஈரோடு	1	9 to 11 காலை		நவபவனம் வாட்ஜிங்
சேலம்	2	9 to 11 காலை 3 to 5 மாலை	&	கோயமுத்தூர் வாட்ஜ் பிராஞ்ச்
திருப்பூர்	3	9 to 11 காலை		ஆர். எஸ். வாசன் & Co.
கோயமுத்தூர்	4	9 to 11 காலை 3 to 5 மாலை	&	சஸ்வர் & கம்பெனி, கெமிஸ்ட்ஸ் ரங்கை கவுடர் தெரு
பாலக்காடு	5	9 to 11 காலை		நாதம் & கோ., மெடிகல் ஷாப்
திண்டுக்கல்	6	9 to 11 காலை		சி. ஆறுமுகம் பிள்ளை & சன்ஸ் ஜெனரல் மெர்ச்சண்ட்ஸ்
மதுரை	7	9 to 11 காலை 3 to 5 மாலை	&	உடுப்பி போர்டிங் வாட்ஜ், மேல மாசி வீதி
,,	8	9 to 11 காலை		,, ,,
ஸ்ரீவைகுண்டம்	9	9 to 11 காலை		எஸ். கோமதிநாயகம் பிள்ளை மெடிகல் ஷாப்
ஆத்தூர்க்குடி	9	3 to 5 மாலை		வி. எஸ். சங்கரலிங்கம் பிள்ளை, மெடிகல் ஷாப்
திருநெல்வேலி-ஜங்ஷன்	10	9 to 11 காலை 3 to 5 மாலை	&	சந்திர விலாஸ் ஹோட்டல்
அம்பாசமுத்திரம்	11	9 to 11 காலை		கோமதி மெடிகல் ஸ்டோர்ஸ்
தென்காசி	12	9 to 11 காலை		எஸ். கிருஷ்ணு & கம்பெனி, மெடிகல் ஸ்டோர்ஸ்
ராஜபாளையம்	13	9 to 11 காலை		அசோகா போர்டிங் & லாட்ஜிங்
ராமநாதபுரம்	14	9 to 11 காலை		ராஜன் மெடிகல் ஷாப்
காரைக்குடி	15	9 to 11 காலை 3 to 5 மாலை	&	ஏவி.எம். பிஎல். ரெஸ்ட் ஹவுஸ்
புதுக்கோட்டை	16	9 to 11 காலை		வசந்தா லாட்ஜ்
கரூர்	25	10 to 12 பகல்		தி சென்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்
குளித்தலை	25	3 to 5 மாலை		வி. சீனிவாச ராவ், 51, முத்துபூபால சமுத்ர அக்ரகாரம் (கரூர் வைஸ்ய பாங்க் அருகில்)
கரக்பூர்	4	9 to 11 காலை 3 to 5 மாலை	&	யுனைடெட் மெடிகல் ஸ்டோர்ஸ் என்.டி.இ. 155, ரயில்வே மார்க்கெட்
ஜாம்ஷெட்பூர்	15	9 to 11 காலை 3 to 5 மாலை	&	மெஸர்ஸ் ஸிடி கெமிஸ்ட்ஸ், சாக்சி

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்

திருச்சிராப்பள்ளி — கிளை: கும்பகோணம்

குறிப்பு: வழக்கம்போல் எல்லா நாட்களிலும் எமது கிளைகளில் ஆலோசனைகள் கூறப்படும்

இறந்துகொண்டுஉள்ளே நுழைந்தான் ராமலிங்கம். யாரோ பின்னாலிருந்து ஓடி வரும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்ப்பதற்குள் அவன் காலடியில் வந்து நெடுஞ்சாண் கிடையாக விழுந்தது ஒரு பெண் உருவம். கீழே குனிந்து தோளைப் பற்றித் தூக்கி நிறுத்தினான். அவள் ராமாமணி!

"உங்களை என்னால் மறக்க முடியவில்லை. மறக்கவே முடியவில்லை" என்று தேம்பினாள் அவள்.

பேசுவதற்கு நா எழவில்லை ராமலிங்கத்துக்கு.

"உனக்கு உடல் நிலை சரியில்லையென்று.."


"உடல் நிலை சரியாகத்தான் இருக்கிறது. மனம்தான் சரியில்லை. நான் என் நாடகக் கம்பெனியையே விட்டு விட்டுவந்திருக்கிறேன்!"

"என்ன!"

"ஆமாம், இனி என்றைக்குமேநான்மேடைக்குத் திரும்பப் போவதில்லை. அந்த ஒரு நாளில் தொடங்கிய என் மனவேதனையை மறக்க இத்தனை ஆண்டுகள் முயற்சி செய்தேன். முடியவில்லை. நான் நடிகை யானாலும் பெண்தானே? நீங்களோ ஆண்பிள்ளை! உடனுக்குடன் எதையும் மறந்து விடுவீர்கள்; மறந்தும் விட்டீர்கள்!"

"நானா?"

"முதல் முறை சென்னைக்கு வந்தபோது என்னைக் காணக் கூடாதென்றுதானே வெளியூர் போய்விட்டீர்கள்?"



"நீதானே அப்படியொரு தண்டனை விதித்தாய்?" தழுதழுத்தது ராமலிங்கத்தின் குரல். "ராமாமணி! நான் உன்னை மறந்து விட்டேனென்கிறாயே, நீ என் சித்திரங்களை நன்றாக கண்டிருகிப் பார்த்திருக்கிறாயா? பார்த்திருந்தால் படங்களில் நீ மோகினியாக, அல்லியாக, இன்னும் எத்தனையோ தோற்றங்களில் மறைந்திருப்பதைக் கவனிக்கவில்லையா?"

"உங்களுடைய படங்கள்தான் என்னைப் பைத்தியமாக்கி விட்டன."

ராமலிங்கம் தன்னுடைய தனி அறைக்குள் அவளை அழைத்துச் சென்று, மின் விளக்கைப் போட்டான். ராமாமணிக்கு அங்கு அவள் கண்ட காட்சி, இந்தப் பிறவியில் என்றுமே காணாத காட்சியாக இருந்தது. திரும்பிய பக்கமெல்லாம் அவள் இருந்தாள்; அவனும் உடன் இருந்தான்.

கண்ணீர் சொரிந்தாள் ராமாமணி.

"அந்த அழகி ராமாமணி இப்போது உங்க வீடம் வரவில்லையே!... அவளுடைய அழகு, அவளுடைய இளமை...."

சட்டென்று தன் கரத்தால் அவள் வாயைப் பொத்தியவாறே, "என்றைக்கும் அது இருக்கும்!" என்று குறுக்கிட்டான் ராமலிங்கம். "நம்முடைய சித்திரங்களில் நாம் என்றென்றும் அழகாக, இளமையாக இருப்போம்!"

அவனுடைய கரங்களைப் பற்றித் தன் கண்களில் நீண்ட நேரம் ஒற்றிக் கொண்டிருந்தாள் ராமாமணி.

* * *

கதையைக் கூறி முடித்த நண்பர், "அன்றிலிருந்து அவர்களிருவரும் ஒருவரை விட்டு ஒருவர் கடைசி வரையில் பிரியவேயில்லை" என்றார்.

"இந்தப் படம் இருக்கிறதே, இது வந்து...?"

"ராமலிங்கத்தின் மடியில் ராமாமணி உயிர் நீத்த காட்சிதான் இது. அப்போதுகூட அவரால் அவர்களுடைய முதல் சந்திப்பை மறக்க முடியவில்லை. மறக்க முடியாத இரு நிகழ்ச்சிகளையும் ஒன்றாக இணைத்து விட்டார் இந்தச் சித்திரத்தில்."


"ராமலிங்கம் இப்போது எங்கே இருக்கிறார்?" என்று அவரோடு கேட்டேன்.

"அவர்கள் இருவருமே இப்போது இந்தச் சித்திரத்தில்தான் இருக்கிறார்கள்."

மாலை நேரத்து வானத்தில் பற்பல வண்ண ஓவியங்கள் தோன்றி மின்னத் தொடங்கின. இருவரும் ஒன்றாக நீண்ட பெருமூச்சு விட்ட வண்ணம் அந்தப் படத்தை மீண்டும் கவனித்தோம். அதன் உயிர்த் துடிப்பு எங்களை என்னவோ செய்தது.

கைவண்ணம் இங்குக் கண்டேன்

லண்டனில் உள்ள பிரசித்தி பெற்ற லார்ட் கிரிக்கெட் மைதானத்தில் எம்.ஸி.ஸி. கிரிக்கெட் குழுவுக்கும் மேற்கு இந்தியத் தீவு கிரிக்கெட் கோஷ்டிக்கும் மும்முரமாக இரண்டாவது டெஸ்ட் பந்தயம் நடந்து கொண்டிருந்தது. இந்த இரண்டாவது டெஸ்ட்



லார்ட் கிரிக்கெட் மைதானமும் ஆங்கில ஆட்டக்காரர் கௌட்ரியும்.

எதிர்பாராத முடிவை அடைந்து ஆங்கில கிரிக்கெட் ரஸிகர்களுக்கு மறக்க முடியாத அநுபவத்தை அளித்து மகிழச் செய்தது.

கடைசிவரை வியப்புக்கும் திகைப்புக்கும் இடமளித்த இந்தப் பந்தயத்தில் ஐந்தாவது நாளன்று இரு கோஷ்டிகளுக்குமே வெற்றி கிடைக்க வாய்ப்பிருந்தது. அதுவும் கடைசி ஓவர் பந்து வீசும் சமயத்தில் இங்கிலாந்து கோஷ்டியின் வெற்றிக்கு எட்டு ரன்களே தேவையாயிருந்தன. மேற்கு இந்திய கிரிக்கெட் பந்து வீச்சு நிபுணர் ஹால் வீசிய நான்காவது பந்திலே ஆங்கில கோஷ்டியைச் சேர்ந்த ஆலனும் ஷாக்லிட்டனும் விரைவாக ரன்களை எடுத்து வெற்றி பெற முயன்றனர்.

ஆனால் மேற்கு இந்தியக் குழு காப்டன் வோரல் பாய்ந்து சென்று பந்தை ஸ்டம்புக் குச்சியில் அடித்து ஷாக்லிட்டனை அவுட்டாக்கி விட்டார். இடது கையில் பிளாஸ்டர் கட்டோடு 'பெவிலியனில்' அமர்ந்திருந்த கௌட்ரி வந்தும் அந்த வெற்றிக்குரிய ரன்களை எடுக்க முடியவில்லை. ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. ஹாலின் பந்து வீச்சும், வோரலின் அபார பீல்டிங்கும் இந்த எதிர்பாராத முடிவைக் கொடுத்தன.

லார்ட் கிரிக்கெட் மைதானம் முதலில் 'புதிய ரோட்'டில் டோர்ஸெட் ஸ்குயரில் இருந்தது. முதல் கிரிக்கெட் பந்தயம் இங்கு 1787ம் வருஷம் ஜூன் மாதம் 20ந் தேதி நடைபெற்றிருக்கிறது. லார்ட் என்ற பிரமுகரின் பணியாளர் ஒருவரால் இந்த மைதானம் தொடங்கப்பட்டது என்பது அனைவருக்கும் வியப்பளிக்கக் கூடிய விஷயம்: இந்த லார்ட் மைதானம் கிரிக்கெட் மைதானத்துக்குப் பயன்பட்ட நிலை மாறி டோர்ஸெட் ஸ்குயராகிவிட்டது. அதிலிருந்து விரட்டப்பட்ட லார்ட் ஒரு பெரிய இடத்தை வாங்கி அதில் கிரிக்கெட் மைதானத்தை உருவாக்கினர். ரீஜண்ட் கால்வாய் இங்கு உருவாகி விடவே இந்த மைதானத்திலிருந்தும் அவர் விரட்டியடிக்கப்பட்டார்: பிறகு இப்பொழுதுள்ள லார்ட் மைதானத்துக்கு—மெரல்போர்ன், செயின்ட் ஜான் வுட் ரோடிலுள்ள மைதானத்துக்கு—மாற்றினர். இந்த மைதானம் எட்டேகால் ஏக்கர் பரப்புள்ளது. பல பிரமாதமான சரித்திரப் பிரசித்திபெற்ற கிரிக்கெட் மாட்சுகள் இங்கு நடந்துள்ளன. லார்ட் நிறையப் பொருளும்,

வசதியும் பெறவே கிரிக்கெட் பந்தயங்கள் நடத்துவதிலிருந்து ஓய்வு பெற்றார். வார்ட் என்பவர் கிரிக்கெட் ஆட்டம் இந்த மைதானத்தில் தொடர்ந்து நடைபெற வேண்டும் என விரும்பிக் குத்தகைக்கு மைதானத்தை ஏற்றுக் கொண்டார். இதன் பிறகு டார்க் என்பவர் இந்த மைதானத்தை வாங்கிப் பல வித நவீன வசதிகளைச் செய்துள்ளார்.

லார்ட் டெஸ்ட் பந்தயத்தை வெற்றி தோல்வியின்றி முடியச் செய்த ஹால் நமக்குப் புதியவரல்ல. சென்னையில் சில ஆண்டுகளுக்கு முன் நடந்த கிரிக்கெட் டெஸ்டில் கலந்துகொண்டவர். அப்போது நடந்த சம்பவத்தை ரஸிகர்களுக்கு நினைவூட்டுகிறேன்.

இந்திய கோஷ்டி மட்டை பிடித்து விளையாட வந்தபோது சென் குப்தா முதலில் ஆடவந்தார். ஹால் பந்து வீசத் தொடங்கியதும், 'ஐயா! இவர் விக்கெட்டை வீழ்த்தப் பந்து வீசுகிறாரா, அல்லது ஆளை அடிக்கப் பந்தை வீசுகிறாரா?' என்று ரசிகர்கள் பயந்தார்கள். சென்குப்தாவும் உடலில் பல இடங்களில் அடி வாங்கி, 'தப்பித்தோம், பிழைத்தோம்' என்று ஸ்டேடியம் மைதானத்துக்கு ஒரு ரன் எடுத்தார்.

ஹாலின் பந்து வீச்சைக்கண்டு எல்லோருமே பயப்பட்டனர். ராம்சந்த் முகத்தில் அடிபட்டு ஆட முடியாமல், தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றபோது ''ஹால் ஒழிக!'' என்று மக்கள் கூச்சலிட்டுத் தங்கள் வெறுப்பைத் தெரிவித்துக் கொண்டனர். மறுபடியும் ராம்சந்த் சிறிது நேரம் கழித்ததும் அடியைப் பொருட்படுத்தாமல் விளையாட வந்தபோது 'பேஷ்! இவரல்லவா உண்மையான விளையாட்டுக்காரர்!' என்ற கருத்தை மக்கள் கரகோஷ ஆரவாரம் செய்து தெரிவித்தனர்.

அடிபட்டிருந்தும் வார்ட் டெஸ்ட்டில் விளையாடச் சென்ற காலின் கௌட்ரி 1932ம் வருஷம் டிசம்பர் 24-ந் தேதி நம் நாட்டில் பங்களூரில் பிறந்தவர் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்காது. இதுவரை அவர் முப்பத்தொன்பது டெஸ்ட் பந்தயங்களில் கலந்து கொண்டிருக்கிறார். இங்கிலாந்து ஆட்டக்காரர் மே உடல்நிலை சரியில்லாது, காப்டன் பதவி வகிக்க இயலாத சமயத்தில் இவர் 1959–60ல் மேற்கு இந்தியத் தீவுகளில் நடைபெற்ற பந்தயங்களிலும் தென் ஆப்பிரிக்க கோஷ்டிக்கு எதிராகவும் காப்டன் பதவி வகித்துச் சிறப்பித்திருக்கிறார். 1957ம் வருஷம் மேற்கு இந்தியக் கோஷ்டிக்கு எதிராக நடந்த ஆட்டத்தில் இவர் 411 ரன்கள் எடுத்ததை மறக்கவே முடியாது.

லார்ட்ஸில் பல வருஷங்களுக்கு முன்பு ஒரு டெஸ்டில் மேற்கு இந்தியத் தீவு கோஷ்டியினர் முதல் தடவையாக வெற்றி பெற்றபோது சந்தோஷ ஆரவாரம் கணக்கிலடங்காது பெருகியது. வெற்றி யடைந்தவர்களை மேற்கு இந்தியக் கோஷ்டி ஆதரவாளர்கள் கொண்டாடிய விதமும் நினைவை விட்டு அகலாது. வார்ட்ஸிலேயே இதுவரை அத்தகைய ஆரவாரத்தையும் கோலாகலத்தையும் கண்டதில்லையாம். ஹாலி வார்டில் 'அவுட்' என்று அறிவித்ததும் ஆதரவாளர் வெற்றிக்கோஷம் முழங்கியும், டோர் வாத்தியங்களை இசைத்துக்கொண்டும், குப்பைத் தொட்டி மூடிகளில் தட்டிக் கொண்டும் மைதானத்திலுள் படையெடுத்தனர். அதுமட்டுமல்ல; எக்காளமிடும் நாடோடி நடனங்களும் தொடர்ந்தன அங்கே. வெற்றி பெற்றவர்களை முற்றுகையிட முடியாமல் போகவே பவுண்டரி கோட்டைச் சுற்றி இந்த நடனக் கோஷ்டி வலம் வந்தது. ரோடில் செல்லும்போது ''மேற்கு இந்தியத் தீவு இங்கிலாந்தை முற்றுகையிட்டது!'' என்று கத்திக் கொண்டே அவர்கள் சென்றார்களாம்!

இவ்வருஷம் மான்செஸ்டரில், முதல் டெஸ்டில் மேற்கு இந்தியக் கிரிக்கெட் கோஷ்டியினர் எம். ஸி. ஸி. குழுவைத் தோல்வியுறச் செய்து முதல் வெற்றியைச் சம்பாதித்துக் கொண்டனர். இரண்டாவது டெஸ்ட் பந்தயம் வார்ட்ஸில் வெற்றி தோல்வியின்றி முடிந்ததைக் கண்டோம். பர்மிங்ஹாமிலுள்ள எட்பாஸ்டன் மூன்றாவது டெஸ்ட் பந்தயத்தில் இங்கிலாந்து கோஷ்டி வெற்றி பெற்றிருக்கிறது. இந்த ஆட்டத்தின் வெற்றிக்கு ட்ருமனின் பந்து வீச்சே மூல காரணமாகும். 119 ரன்களுக்குப் பன்னிரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்திய ட்ருமனின் சாதனை மெச்ச வேண்டியதாகும். இன்னும் லீட்ஸ், ஓவல் டெஸ்ட் பந்தயங்கள் பாக்கியிருக்கின்றன.

மூன்றாவது டெஸ்டில் ட்ருமன் வீசிய பந்தில் மேற்கு இந்தியத் தீவு காப்டன் வோரல் பூஜ்யம் எண்ணிக்கையில் பந்து பிடிக்கப்பட்டு அவுட்டானார். ஆனால் அந்த அவுட் நேர்மையுடன் கொடுக்கப்படவில்லை என்பது அவரது அபிப்பிராயம். அவர் மைதானத்தை விட்டு நடந்து செல்லும்போது, மைதானத்தில் நின்ற ஆட்டக்காரர்களிடம் கையில் பந்துபட்ட பகுதியைக் காட்டிக் கொண்டே சென்றார். எனினும் அம்பயர் 'அவுட்' கொடுத்துவிட்டால் அப்பீல் ஏது?


ட்ருமன்



இங்கிலாந்தின் முப்பத்திரண்டு வயது நிரம்பிய பந்து வீச்சு நிபுணர் ட்ருமன் நீண்ட நெடுங் காலமாக இங்கிலாந்துக் கோஷ்டிக்கு வெற்றி சம்பாதித்துத் தருபவர். ஸ்டாதம் — ட்ருமன் இரட்டையர் ஜோடி பந்து வீச்சில் பிரசித்தி பெற்றது. ட்ருமன் பந்து வீசுவதில் மட்டுமின்றி மட்டையைப் பிடித்து அடிப்பதிலும் திறமை மிக்கவர். ஒரு டெஸ்ட் பந்தயத்தில் ராம்தின் வீசிய ஒரு ஓவரில் மூன்று பந்துகளை அவர் ஸிக்ஸர்களாக அடித்தது என்றும் நினைவில் நிற்கக் கூடியது.

- குண்டுமணி

கலை வளர்க்கும் கோயில்கள்



நான் குதிரையைப் பற்றி அடிக்கடி சிலாகித்துப் பேசும் ஓர் ஆசாமி ஒரு நாள் திடீரென்று ''அது ஒரு மடக் கழுதை'' என்று தன் நண்பனிடம் குறைப்பட்டுக் கொண்டான்.

''அதென்ன அப்படிச் சொல்கிறாய்? போன வாரம் கூட அதன் மேலிருந்து கீழே விழுந்து நீ மயக்கமடைந்தபோது அது உன் சட்டையைப் பிடித்துக் கவ்வியவாறு வீட்டில் கொண்டு வந்து சேர்த்து விட்டதாகச் சொன்னார்களே? அந்தக் காரியம் தவறான செயலா?'' என்று வினவினான் நண்பன்.

''அதோடு நின்றிருந்தால் இந்தப் பேச்சு எழ அவசியமே இல்லையே! ஓடிப் போய் டாக்டரை வேறு இழுத்துக் கொண்டு வந்து விட்டது சனியன்!'' என்று அலுத்துக் கொண்டான் அந்தக் குதிரைக்குச் சொந்தக்காரன்.

''ஆஹா! என்ன அறிவு'' என்று ஆனந்தமும் அதிசயமும் பட ஆரம்பித்த நண்பனை முதல் ஆசாமி முறைத்துப் பார்த்தான். ''எந்த டாக்டர் என்று கேட்காமல் பாராட்டுகிறாயே? ஒரு வெடரினரி டாக்டரையாக்கும்!'' என்று சொன்னபோதுதான் நண்பனுக்கு விஷயம் புரிந்ததாம்.

இது ஒரு மேல்நாட்டு நகைச்சுவைத் துணுக்கு. மேல் நாடுகளில் குதிரைகளுக்கு கூடத் தங்கள் வைத்தியர்கள் யார் என்று தெரியும் போலும். ஏனென்றால் அங்கெல்லாம் கால்நடை மருத்துவர்களைக் 'குதிரை டாக்டர்' என்றுதான் குறிப்பிடுவார்களாம்! காரணம்,



நம் நாட்டில் மாடுகள் செய்யும் பணிகளை அநேகமாக அங்கு குதிரைகள்தான் செய்கின்றன.

உழுவதற்கும் குதிரைதான். ஊர்ந்து செல்லும் வண்டிகளை இழுப்பதும் குதிரைதான்! இந்த மேல்நாட்டுக் குதிரை உபயோகிப்பு வாசனை, சென்னையை ஒட்டிய சில வயோதிகக் கிராமவாசிகளிடம் இன்னமும் இருக்கிறது என்றுதான் தெரிகிறது. ஏனென்றால், சென்னை வேப்பேரி நெடுஞ்சாலையில் கம்பீரமாக வீற்றிருக்கும் கால்நடை மருத்துவக் கல்லூரிக்குச் சமீபத்தில் இறங்க விரும்பும் அவர்கள் ''இந்தாப்பா! 'குதிரை காலேஜ்' வந்தால் நிறுத்தப்பா!'' என்றுதான் இன்னும் பஸ் கண்டக்டர்களிடம் சொல்லுகிறார்களாம்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் நகரத்தில் வெள்ளையர்களும், அவர்களுடைய குதிரைகள் பூட்டிய சாரட்டு வண்டிகளும் மலிந்திருந்த காலத்தில் இப்போது கால்நடை மருத்துவக் கல்லூரியாக இருக்கும்



இடத்துக்கு எதிர்த்தாற்போல் ஒரு குதிரை வைத்தியசாலை இருந்ததாம். அங்கு அடிக்கடி ஆங்கிலேயர்களும் மற்றும் உள்ளூர்க் கனவான்களும் தங்கள் குதிரைகளை வைத்தியத்துக்கு அழைத்து வருவார்களாம்.

ஆனால் காலம் மாறி, கார் யுகம் வந்து, குதிரைகளில் கொழுத்தவை சில கிண்டிப் பந்தய மைதானங்களிலும் எஞ்சியவற்றில் நோஞ்சான்களான சில புராதன ஜட்கா வண்டி

ஓட்டிகளிடமும் காணப்படும் இன்றுகூட, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியுடன் ஒட்டிக்கொண்ட 'குதிரை காலேஜ்' என்ற பெயர் ஓடிப் போகவில்லை.

இப்போது இந்தக் கல்லூரிக்கு 'டீனு'க இருப்பவர் பெர்ட்டி ஏ. டிரூசா அவர்களாவார். அமெரிக்க நாட்டுக்குப் போய்ப் பயிற்சி பெற்றவர். கால்நடைகளுக்கான நோய்த் தடுப்பு மருந்துகள் சம்பந்தப்பட்ட பாடங்களை இவர் தம் மாணவர்களுக்குப் போதிக்கிறார்.

அவரைச் சந்திக்க வருபவர்களிடம் சரளமாகவும் இனிமையாகவும் பழகுகிறார்.

இந்த மருத்துவக் கல்லூரியிலும் இடப் பிரச்னை சமாளிக்க முடியாமல்தான் இருந்ததாம் இந்த ஆண்டு! முதல் வருடத்துக்கான சுமார் நூறு இடங்களுக்கு ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்து குவிந்தனவாம். மலேயா, சிங்கப்பூர், ஆப்பிரிக்க நாடுகள் முதலியவற்றிலிருந்தெல்லாம் மாணவர்கள் இந்தக் கல்லூரியில் படிக்க வருகிறார்கள். சில பெண்மணிகளும் மாணவிகளாக இருக்கிறார்கள்.

'சாதாரணக் கால்நடைகளுக்கான மருத்துவம் போதிக்கும் கல்லூரிதானே?' என்று நினைத்து உள்ளேயிருக்கும் பல பகுதிகளைப் பார்வையிட ஆரம்பிக்கும் எல்லோருக்கும் தோன்றும். நவ நாகரிக அமைப்பையும் சாதனங்களையும் கொண்ட இந்தக் கல்லூரி மனித மருத்துவக் கல்லூரிகளுக்கு எந்த வகையிலும் சளைத்ததில்லை என்ற எண்ணம் பிறகு ஏற்படும்.

பெரிய 'சிவப்புத் திரை'யான ஆரம்ப நாள் செங்கல் கட்டிடத்தைத் தாண்டிப் போனதுமே 'க்ளினிக்கல் பிளாக்' என்ற புத்தம் புது மண்டபம் வருபவர்களை உற்சாகத்துடன் வரவேற்கிறது. எட்டு லட்சத்து அறுபத்தி ஐயாயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுச் சென்ற ஆண்டு முதல் உபயோகத்தில் வந்திருக்கும் இந்தக் கட்டிடம் ஐந்து முக்கிய பாடப் பிரிவுகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. கட்டிடமும் புதிது: அதில் இருக்கும் சாதனங்களும் புதியவை.

கால் நடைகளுக்கான உணவுச் சத்து ஆராய்ச்சி இலாகா மற்றொரு மண்டபத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. இந்த ஆராய்ச்சிப் பிரிவின் பேராசிரியரான டாக்டர் வேங்கடாசலத்துடன் கழித்த நேரம் வெகு குறைவாக இருந்தாலும் தெரிந்து கொண்ட விஷயம் ஏராளம்.

பால் மாடுகளுக்குப் பசும் புல்தான் சிறந்த ஆகாரம். பசும்புல் பால் கொடுக்கும் சக்தியை அதிகப்படுத்துகிறது. வருடம் முழுதும் பசும் புல் கிடைக்கும் என்று சொல்ல முடியாதல்லவா? அதற்காக, கிடைக்கும் காலத்திலேயே நிறையப் பசும் புல்லைச் சேகரித்துப் பெரிய பள்ளமாகத் தோண்டி அதில் போட்டுக் கருப்பட்டி நீரையும், உப்பையும் கலந்து அந்தப் புல்லில் தெளித்து அந்தப் பள்ளத்தை மூடிவைத்து விட வேண்டும். அப்புறம் அடுத்த கோடைக் காலம் வந்து போகும்வரை கவலை இல்லை. பதனப்படுத்திய அந்தப் புல் பசுமை குறையாமல் பசுக்கள் விரும்பும் உணவாகிறது. பாலும் குறையாமல் கிடைக்கிறது.

''இப்படி ஊறுகாய் போட்ட புல்லை மாடுகள் விரும்பிச் சாப்பிடுமா?''


''தாராளமாய்! பன்னீர்ப் புகையிலை பாணியில் தயாராகும் இதை இரண்டு நாள் பழக்கத்துக்குப் பின் மாடுகளுக்கு விட மனம் வராதாக்கும்!''

தெருவில் நடக்கும்போது கோழி இறகு ஏதாவது மேலே பறந்து வந்து விழுந்தால் ''சூ! சூசூ!'' என்று அலட்சியமாக உதறித் தள்ளிவிட்டுத்தான் நாம் நடப்போம். அப்படி நாம் அலட்சியப்படுத்தும் கோழி இறகுகள் கோழிகளுக்கே சிறந்த சத்துள்ள ஆகாரமாக மாற்றப்படலாம் என்ற வியப்பூட்டும் செய்தியையும் அந்தப் பேராசிரியர் சொன்னார். அப்படித் தயாரித்து வைத்திருக்கும் மாதிரி ஆகாரத்தையும் காட்டினார். ஆராய்ச்சியின் சாதனைதான் அது.

கோழிகள் உதிர்க்கும் இறகுகளையும் மற்றப் பறவைகளின் இறகுகளையும் வீணாக விடாமல் சேர்த்துப் பதப்படுத்தித் தயாரிக்கப்படும் ஆகாரத்தில் எண்பத்தி ஐந்து சதவிகிதத்தில் புரோட்டீன் சத்து இருக்கிறதாம். இதை உண்ணும் கோழிகள் திடகாத்திரமாக வளர்கின்றனவாம். 'இறகு ஆகாரம்' என்று குறிக்கப்படும் இந்த ஆகாரம் போல், மற்றக் கழிபொருள்களிலிருந்தும் 'மீன் ஆகாரம்', 'இறைச்சி ஆகாரம்', 'நாய்களுக்கான பிஸ்கோத்துக்கள்' எல்லாவற்றையுமே கால்நடைகளின் ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்காக இந்த ஆராய்ச்சி இலாகா கண்டுபிடித்திருக்கிறது. பரிசோதனையில் நல்ல வெற்றியும் கண்டிருக்கிறது.

கடந்த பத்து வருட காலத்தில் இந்த ஆராய்ச்சித் துறைக்காக மாத்திரம் சர்க்கார் பத்து லட்சம் ரூபாய்க்கு மேல் செலவிட்டிருக்கிறதாம். 'ஒரே இடத்தில் பலவித உணவு ஆராய்ச்சிகளுக்கும் தேவையான சாதனங்களும் கருவிகளும் கொண்ட பரிசோதனைச் சாலை பாரத நாட்டிலேயே இது ஒன்றுதான்' என்று டாக்டர் வேங்கடாசலம் தெரிவித்தார். இதற்கெல்லாம் சென்னை சர்க்காரின் ஒத்துழைப்பு நல்ல முறையில் கிடைத்திருப்பதாக நன்றியுடன் தெரிவித்தார்.

கால்நடைகளுக்கு வரும் தடுக்கக் கூடிய நோய்களைப் பரவ விடாமலேயே தடுப்பது. மற்ற சாதாரண நோய் நொடிகளிலிருந்து





அவைகளைக் காப்பாற்றி அவைகளின் உபயோகத்தை அதிகப்படுத்துவது, அவைகளிலிருந்து மனித வர்க்கத்துக்குப் பரவக்கூடிய சில தொட்டுவாரொட்டி நோய்களை விசேஷ கவனத்துடன் போக்குவது ஆகிய மூன்று கடமைகளையும் தன் மாணவர்களுக்கு இந்தக் கல்லூரி வற்புறுத்துகிறது. இந்த மூன்று கடமைகளிலிருந்தும் வழுவாமல் பணி ஆற்றும் கால்நடை மருத்துவர்கள் கால் நடைகளுக்கும் மனித சமூகத்துக்கும் சிறந்த சேவை செய்தவர்களாவார்கள்.

ஐந்தரை ஆண்டுகள் படித்து இந்தத் துறையில் பட்டம் பெறும் மாணவர்கள், மேலும் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டுத் தங்கள் அறிவை விருத்தி செய்துகொள்ள வசதியாக 1958ம் ஆண்டிலிருந்து இரண்டே வருட ஆராய்ச்சிப் பட்டப் படிப்பும் இங்கு அளிக்கப்படுகிறது.

ஒரு சமயம் ஒரு செல்வந்தர் வீட்டு அம்மாள் தம்முடைய விலை உயர்ந்த நாய்க் குட்டியுடன் பரக்கப் பரக்கக் காரில் வந்து இறங்கினாளாம். 'டாக்டர்! என் நாய் ஒரு நாணயத்தை விழுங்கி விட்டது. அதை உடனே வெளியேற்ற வேண்டும்' என்று பதறினாளாம். நீண்ட பரிசோதனைக்குப் பிறகு டாக்டர் 'எக்ஸ்ரே எடுத்துப் பார்க்க வேண்டும்' என்றாராம். ''எத்தனை எக்ஸ் ரேக்கள் வேண்டுமானாலும் எடுங்கள். செலவைப் பற்றிக் கவலை இல்லை' என்று கைப் பையைத் திறந்தாளாம் அந்த அம்மாள்.

எக்ஸ்ரே படம் எல்லாம் எடுத்துப் பார்த்து ஆபரேஷன் செய்து வெளியேற்றப்பட்ட அந்த நாணயம் கடைசியில் ஒரு செல்லாத சவ நாலணா நாணயமாக இருந்ததாம்.

இந்தச் சம்பவத்தைச் சொன்ன ஒரு பழைய மாணவர், இதை நினைத்து வெகு நேரம் சிரித்துக் கொண்டிருந்தார். தொடர்ந்து மற்றொரு சம்பவத்தையும் சொன்னார்.

நாயோ, பூனையோ, கன்றுக்குட்டியோ வைத்தியத்துக்கு அழைத்து வரும்போது அவைகளைப் பரிசோதிக்கக் கல்லூரி ஆஸ்பத்திரியில் சீட்டுக் கொடுப்பார்களாம்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு கிராம வாசி தம் கன்றுக்குட்டியை இழுத்துக் கொண்டு வந்தார் வைத்தியப் பரிசோதனைக்கு. சீட்டுக் கொடுக்கும் இடத்தில் டாக்டர் 'வயது என்ன?' என்று விசாரித்தார். சாதாரண ஆஸ்பத்திரியில் நோயாளிகளின் வயதைக் கேட்பது போல் கால் நடை ஆஸ்பத்திரியிலும் நோயாளியின் வயதைக் குறித்துக் கொள்வார்கள். கிராமவாசிக்கு இந்த விஷயம் தெரியாது. பணிச்சென்று ''ஐம்பத்தி ஏழு வயசுங்க'' என்றார்.

டாக்டருக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. 'ஐம்பத்தி ஏழு வயசுக் கன்றுக் குட்டியை இப்போதுதான் நான் முதல் தடவையாகப் பார்க்கிறேன்' என்றார். ஏனெனில் சாதாரணமாகக் கால்நடைகளுக்கு அதிகபட்ச வயதே இருபத்தி ஐந்துதான்.

கிராமவாசி டாக்டரின் நகைச்சுவையைப் புரிந்துகொண்டார். ஆனாலும் சமாளித்துக் கொண்டார். 'ஆமாங்க! எங்க அப்பாருக்கு நான் இன்னும் கன்றுக்குட்டியாகத்தானுங்க இருக்கேன்! தொண்ணூறு வயசாச்சு மனுஷனுக்கு. என்னை என்னு விரட்டு விரட்டுறாரு!' என்றாராம்.

இந்தக் கல்லூரியின் ஐம்பதாவது ஆண்டு தங்க விழா சில ஆண்டுகளுக்கு முன் நடந்த போது அதில் நமது பாரதப் பிரதமர் நேரு அவர்களும் கலந்து கொண்டார். அந்த வேளையில் ஹோசூர் கால்நடைப் பண்ணையிலிருந்து பிரத்தியேகமாக ஒரு சிந்திப் பசுவை வரவழைத்துப் பிரதமரிடம் காட்டினார்களாம். பிரதமர் அதன் தோற்றத்தையும் செழிப்பையும் பார்த்துப் பிரமித்துப் போனாராம். 'அதன் விலை என்ன ஆகும்?' என்று கேட்டாராம்.

அவர் பக்கத்தில் நின்ற இலாகா உயர் அதிகாரி பதில் சொல்ல சில விநாடிகள் தயங்கிவிட்டுப் பிறகு ''இதன் விலையை என்னவென்று சொல்வது? எட்டு ஈத்துக்கள் பால் கொடுத்துத் தற்சமயம் ஒன்பதாவது ஈத்திலும் பால் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இதுவரை இது கொடுத்துள்ள பாலின் மதிப்பைக் கணக்கிட்டுப் பார்த்தால் ரூபாய் பதினைந்து ஆயிரம் ஆகிறது. அதோடு மட்டுமல்லாமல் ஒன்பது உயர்ந்த ஜாதிக் கன்றுகளை இது நமக்குக் கொடுத்திருக்கிறது. ஆதலால் இதன் விலையை நாம் எப்படி மதிப்பிடுவது? விலை மதிக்க முடியாத செல்வம் அல்லவா இது? எப்படி இருந்தபோதிலும் இது விலையாக்கப்படும் பிராணிகள் ஆதலால் தற்சமயம் ரூபாய் எண்ணூறு முதல் ஆயிரம் வரையில் மதிப்பிடலாம்'' என்றார். பிரதமர் ஆச்சரியத்துக்குள்ளானாராம்.

இந்தக் கல்லூரி மாணவர்கள் விளையாட்டுக்களிலும் வீரர்களாக விளங்குகிறார்கள். வி. சுப்பையா என்ற மாணவர் உடலழகுப் போட்டியில் கலந்து 'மிஸ்டர் சர்வகலாசாலை' என்ற பட்டத்தைப் பெற்றிருக்கிறார்.

ஆசிரியர்களில் அநேகர் வெளிநாடுகளில் பயிற்சி பெற்று வெளிநாட்டுப் பட்டங்கள் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது.

கால் நடை மருத்துவக் கல்லூரியில் படித்து முடித்து வெளி வருபவர்கள் நாட்டின் பொருளாதார மருத்துவர்களாகத் திகழக் கூடிய வாய்ப்புப் பெற்றவர்கள். ஏனெனில், 'காளை மாட்டு வைசிராய்' என்று புகழ்பெற்ற லார்டு லின்லித்கோ கூறியதுபோல், 'நாட்டுக்கு ஒத்தாசை செய்வதாக இருந்தால் விவசாயிகளுக்கு ஒத்தாசை செய்ய வேண்டும். அதற்குச் சிறந்த வழி அவர்களுடைய கால்நடை இனங்களை நாடு முழுதும் அபிவிருத்தி செய்வதுதான்.'



பரம்பொருளும் ஜீவனும் ஒன்றே என்ற ஒப்பற்ற நிலையை ராமகிருஷ்ணர் அப்பியசிப்பதற்கு அறை கூவினார் தோதாபுரி. காலை வேளையில் பஞ்சவடி யருகே யிருந்த ஒரு சிறிய குடிலில் அவரது வார்த்தைகள் குமுறிக் கொண்டு சுழன்றன. மணத்தைத் தன்னிடமே வைத்துக் கொள்ளாமல் வெளியிலே பரப்பும் மலர் போல், தாம் பெற்ற அத்வைத அநுபவத்தை சிஷ்யருக்கு அளிக்கும் ஆர்வத்துடன் அவர் சாதனை முறையை உபதேசிக்கலானார்.

''காலம், இடம், காரண காரியம் இவற்றுக்குக் கட்டுப்படாத பிரம்மம் ஒன்றே சத்தியமானது; அதுவே நித்தியமானது; அதுவே சுத்தமானது. மாயா பலத்தால் அதுவே இப்படி உலகங்



களாகவும் உருவங்களாகவும் பல வானவை போல் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் அது பிரிக்க முடியாத ஒரே வஸ்து. அந்த வஸ்துவே நானும், நீயும், நானிலம் யாவும். இது வெறும் பேச்சில்லை மகனே! சாதனை செய்து பார்த்தால், மாயையால் தோன்றிய காலமும், தேசமும், உருவமும், குணமும் லவலேசமும்கூட நெருங்க முடியாத சமாதி நிலையை அடைய முடியும்.

''அந்த சமாதி நிலையில் நீ வாழ மாட்டாய்; வாழ்வாகவே ஆகி விடுவாய்! அந்த நிலையில் நீ அறிய மாட்டாய்; அறிவாகவே ஆகி விடுவாய்! அந்த நிலையில் நீ ஆனந்திக்க மாட்டாய்! ஆனந்தமாகவே ஆகி விடுவாய்!''

அத்வைத சாதனை தொடங்கிற்று.

சுத்தமான வாழ்க்கை வாழ்ந்து, ஆசைகளைக் களைந்து, பிராணாயாமம் முதலியவற்றால் சித்தத்தை ஒருமுகப் படுத்துவதுதான் இதன் முக்கியமான பாகம். எழுத மிகவும் எளிதுதான். எழுத்தில் உள்ள நெருப்புக்கும் உண்மை நெருப்புக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரம் 'சித்த ஒருமைப்பாடு' என்ற இந்தச் சொற்றொடருக்கும் அதனை அநுபவமாக்கிக்கொள்வதற்கும்.

ராமகிருஷ்ணரின் தூய வாழ்வுக்குக் கேட்க வேண்டுமா? வெகு லகுவாக அவருடைய உள்ளம் குவிந்து ஒருமுகப் பட்டது. புலன்களையும், புலன்களுக்குக் கோசரமாகும் பொருட்களையும் வெகு எளிதில் விலக்கி விட்டுத் தியானிக்கத் தொடங்கினார்.

பிராண சக்தி மூலாதாரத்திலிருந்து மேலே ஏறத் தொடங்கியது. இந்த உலகத்தை மட்டுமே கண்டறிந்த நாம் விளக்க முடியாத காட்சிகள் தோன்றின. அவற்றை யெல்லாம் விலக்கியது அத்வைத நாட்டத்தில் பற்றி யெரிந்த கதாதரரின் உள்ளம். காட்சிகள் எதுவும் வேண்டாம் —காண்பவன், காணப்படும் பொருள், காண்பது என்ற மூன்றும் ஒன்றேயாகிற நிலை வேண்டும்—என்றல்லவா ராமகிருஷ்ணர் சாதனை புரிகிறார்?

எல்லாக் காட்சியையும் விலக்கி யாயிற்று.

ஆனால் இதோ.....!

இந்தக் காட்சியை எப்படி விலக்குவது....?

விலக்குவதா?

இந்தக் காட்சி வேண்டுமென்றே யல்லவா அவர் எத்தனையோ காலம் அனற் புழுவாகத் துடி துடித்திருக்கிறார்?

அப்பேர்ப்பட்ட காட்சியை விலக்க ராமகிருஷ்ணருக்கு மனசு வரவில்லை.

யாருக்குத்தான் வரும்?

அணு அணுவிலும் அழகு கொப்புளிக்கும் அம்பிகையின் காட்சியை, அணு அணுவிலும் பொழியும் அன்பின் காட்சியைக் கண்ட யாருக்குத்தான் அதனை விலக்க மனசு வரும்?

அம்பிகையே இப்போது ராமகிருஷ்ணரது உள்ளக் கோயிலில் தரிசனமளித்தாள். அவளை நீத்துவிட்டு அத்வைதானுபவத்துக்குச் செல்ல ராமகிருஷ்ணர் விரும்பவில்லை.

அவரது மனநிலைகளை அப்படி அப்படியே படம் பிடித்தது போலக் கண்டு வந்த தோதாபுரி அவரை விடுகிற வழியாக இல்லை.

"ம்.... போ, மேலே.... ஏன் நின்று விட்டாய்?" என்று



தூண்டுகோல் போட்டார் தோதாபுரி.

ராமகிருஷ்ணர் மிகவும் கலங்கிப் போனார்.

அம்பிகை அவரைச் சோதனை செய்கிறாள்! தரிசனம் தராமலே அவரை அவள் சோதித்த நாட்கள் எத்தனையோ உண்டு. இப்போதோ தரிசனம் தருவதாலேயே அவரைச் சோதிக்கிறாள்!

அத்வைதத்துக்கே தோதாபுரி ராமகிருஷ்ணரை உசுப்பினார்.

ராமகிருஷ்ணர் பரிதாபமாக, "என்னால் முடியவில்லை, ஐயனே! மனசை வேலை செய்ய முடியாமல் ஆக்கி, குணமும் குறியுமற்ற ஆத்மாவில் லயிக்க என்னால் முடியவே இல்லை" என்று அரற்றினார்.

சர்வேசுவரியை நீத்து விட்டு அப்படி லயிக்க வேண்டியது அவசியம்தானா என்றுகூட அவர் எண்ணினார்.

ஆனால் சர்வேசுவரியோ அவர் அப்படி லயித்துத்தான் ஆக வேண்டும் என்று விரும்பினாள். பிறகு எப்படியும் அவரைத் தம்மிடம் அழைத்துக்கொண்டு விடும் உத்தேசம் அவளுக்கு இருந்தது. இதயத்துக்குக் கீழ்ப் பாகத்தில் பாய்கிற ரத்தம் மட்டுமின்றி மேல் பாகத்தில் பாயும் ரத்தமும் அந்த இதயத்துக்கேதான் திரும்பத் திரும்ப வரவேண்டும்! ராமகிருஷ்ணரின் வாழ்வுக்கு இதயம் அம்பிகை. ஸகுணமான அம்பிகை நிலைக்கு மேலே நிர்க்குண பிரம்மத்திடம் அவர் சென்றாலும் மீண்டும் அவளிடமேதான் வரவேண்

டும். அத்வைதம் என்பது உண்மைதான் என்பதை ராமகிருஷ்ணர் எடுத்துரைக்க வேண்டும் என்ற ஒன்றுக்காகவே அவர் அவ்வப்போது தன்னை விட்டு விட்டு மேலே செல்ல வேண்டும் என்று தேவி விரும்பினாள்.

''சை, இதென்ன மடத்தனம்!'' என்றார் தோதாபுரி.

சுற்று முற்றும் பார்த்தார். அங்கே கண்ணாடித் துண்டு ஒன்று கிடந்தது. அதைக் கையில் எடுத்துக் கொண்டார் தோதாபுரி. ஊசி போல் கூரிய அதன் முனையால் ராமகிருஷ்ணரின் புருவமத்தியில் அழுத்திக் கீறினார்.

''நோவு காணும் இந்த ஸ்தானத்தில் மனசை ஒருமுகப்படுத்து'' என்றார்.

நோவுகளைத் தீர்க்கும் அம்பிகை செய்யாததை அந்த நோவு செய்தது. சட்டென்று ஆக்ஞா சக்கரமுள்ள அந்த இடத்தில் ராமகிருஷ்ணரின் உள்ளம் குவிந்து விட்டது. எல்லா உருவங்களும் குணங்களும் — அம்பிகையின் அழகு உருவமும், அன்புக் குணமும் கூட — மறைந்தே போயின. ஸஹஸ்ராரத்தில் பிராண சக்தி சிவத்துடன் இரண்டறக் கலந்து விட்டது!

அத்வைத நிலையை யார் விளக்க முடியும்? 'அதுவானால் அது ஆவர்; அதுவே சொல்லும்' என்று தாயுமானசுவாமிகள் கூறிய நிலையல்லவா அது?

அந்த அற்புத சிஷ்யரையே நீண்ட நேரம் கூர்ந்து கவனித்த தோதாபுரி அவருக்கு நிர்விகல்ப சமாதி கூடி விட்டது என ஐயமறத் தெரிந்து கொண்டார்.

குடிலுக்கு வெளியே வந்தார். கதவை வெளிப்புறம் பூட்டி விட்டுப் பஞ்சவடிக்குக் கிளம்பி விட்டார்.

அன்றைய பகல் போது கழிந்தது. இரவுப் படுதாவை விரித்தாள் தேவி. அதுவும் விலகியது. மீண்டும் ஒரு பகல்—ஓர் இரவு. மூன்றும் நாலும் சிறிது சிறிதாகக் கழிந்து முடிந்து விட்டது.

மூன்று முழு நாட்களும், மும்மைக்கு மேற்பட்ட மோன நிலையிலேயே திளைத்துக் கொண்டிருந்தார் ராமகிருஷ்ணர்.

தினமும் கதவத்தை நீக்கி அவரைப் பார்த்து வந்த தோதாபுரிக்கு நாலாவது தினமும் ராமகிருஷ்ணர் சமாதி நிலை கலையாமல் இருப்பதைக் கண்டதும் இதயம் விம்மியது.

'இப்படியும் ஓர் அதிசயம் உண்டா? நாற்பதாண்டுகள் அப்பியாசம் புரிந்து தாம் பெற்ற அத்வைத அநுபவத்தை —நாற்பதாயிரம் பிறப்பிலும் எத்தனையோ கோடி ஜீவர்கள் எய்த முடியாத அத்வைதத்தை — இந்தப் பிள்ளையாண்டான் எப்படி இவ்வளவு எளிதில் அடைந்தான்?'

ராமகிருஷ்ணரை சமாதியிலிருந்து எழுப்ப எண்ணினார் அவர். அவரது காதுகளில் 'ஹரி ஓம், ஹரி ஓம்' என்று நீர்க்கமான குரலில் பல முறை கோஷித்தார்.

காட்சிகள் அற்றுப் போன நிலையில் மூடியிருந்த கமலக் கண்கள் திறந்தன.

உலக மாந்தரோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் ராமகிருஷ்ணருக்கு அத்வைதாநுபவம் மிக மிக எளிதில் கிடைத்தது எனினும், மற்ற சாதனைகளைப் போலன்றி இதில் ஒரு தடங்கல் இருக்கத்தான் செய்தது. அவரது புருவமத்தியில் பிராண சக்தி ஏறும் போது அவருக்குத் திவ்விய தரிசனம் தந்த திவ்விய மாதாதான் அது. அவளைத் தடங்கல் என்று யாரேனும் சொல்வார்களா? தடைகளை நீக்குபவள் அல்லவா அவள்? என்றாலும், குணமும் குறியுமற்ற பரம்பொருளில் ஒன்றுவதற்கு இந்த அமிருத தரிசனம் தடையாகத்தான் இருந்தது. அம்பாளையும் துறந்து அத்வைதம் பெற்றுத்தான் என்ன என்று கூட ராமகிருஷ்ணர் எண்ணி விடுவார்.

அப்போதெல்லாம் தோதாபுரி மிகவும் கடுமையாக இருப்பார். இங்கு எழுதவே கூசுகிற மிகவும் கொடுமையான வார்த்தைகளைச் சொல்வார்.

''ஞானத்தை ஒரு கத்தியாக்கி அந்தத் தேவியை வெட்டி எறி'' என்று கட்டளையிடுவார்.

இனிமையே உருவான ராமகிருஷ்ணரும் அந்தக் கொடுமையைச் செய்வார்.

இதே ராமகிருஷ்ணர் பிற்காலம் முழுவதும் பரம்பொருளைப் பற்றிச் சொல்வதைவிட, 'காளி', 'காளி' என்று தேவியின் பெயரையே வழுத்தி, அவளது உருவையே வாழ்த்தி, அவளது நினைவிலேயே தமது உள்ளத்தை ஆழ்த்தப் போகிறார். வேதாந்த அநுபவமாகிய அத்வைதத்தைக் கூட அம்பிகையிடமே அவர் அர்ப்பணிக்கப் போகிறார்.

''வேதம், வேதாந்தம், தரிசனம், புராணம் எல்லாம் நான் கேட்டறிந்திருக்கிறேன். அவற்றின் உண்மைகளை உணர்ந்திருக்கிறேன். அவற்றை யெல்லாம் ஒரு மாலையாகக் கோத்து என் கழுத்தில் அணிந்து கொண்டேன். பின்பு மாலையைக் கழற்றிக் காளியின் கழலிணைகளில் சூட்டி விட்டேன். 'உன்னுடைய வேத சாஸ்திர புராணமெல்லாம் இதோ இருக்கின்றன. அவை உன்னிடமே இருக்கட்டும். எனக்கு உன்பால் தூய பக்தி ஒன்றை மட்டும் தா' என்று அவளை வேண்டிக் கொண்டேன்'' என்று பிற்காலத்தில் தமது சீடர்களிடம் அவர் கூறியிருக்கிறார்.



அப்படியிருக்க அம்பிகையை அவர் இல்லாமற் செய்து மேலே சென்றார் என்பது எதனால்? சிறிது சிந்திக்துப் பார்த்தால் இதன் உட்பொருள் புரியும்.

மாயையே அம்பிகை என்பார்கள். அப்போது அவளின் பெருமை குன்றத் தான் செய்கிறது. தோதாபுரி நினைத்தது போல் அவளே அஞ்ஞானத்துக்குக் காரணமாகி விடுகிறாள். தேவியின் பரம பக்தர்களும், 'மாயையை நாமாகக் கடக்க முடியாது: அவளாகக் கருணை வைத்தால்தான் விலகுவாள். அதற்காகத்தான் அவளிடம் பிரார்த்திப்பது' என்று சொல்லும்போதே, ஏதோ துர்த்தேவதையை அருகே வராதிருப்பதற்காக உபாசிப்பது போன்ற ஒரு சிறுமை தேவி உபாஸனையில் இருப்பதாகத் தானே தோன்றுகிறது? இது சரிதானா?

அல்லவே அல்ல. பிரம்மத்தின் நிலையில் இருந்து பார்க்கிற போது அதனைக் கீழே இழுத்து உலகமாகத் தோற்றுவிக்கிற படிவரிசையாக இருக்கும் அதே தேவி, ஜீவராசிகளின் நிலையிலிருந்து பார்க்கும் போது பிரம்ம நிலைக்கு இட்டுச் செல்லும் உயர்வைத் தருகிற படிவரிசையாகிறாள்.

அம்பிகை ஜீவர்களைப் பொறுத்தமட்டில் பிரம்ம நிலையை மறைக்கவில்லை. அதனை அருளுபவளே அவள். பிரம்மம் என்ற அமிருதக் கடலைக்கண்டு பயப்படும் சர்க்கரைப் பதுமைகளாக இருப்பவர்கள் நாம். அந்த அமிருதமே கற்கண்டாக இறுகி அழகிய நாவாயாக வருகிறது. அதைத்தான் அம்பிகை என்கிறோம். அந்த நாவாயில் ஏறிச் செல்லும் ஆனந்தமே அம்பிகை பக்தி. சர்க்கரைப் பதுமை அச்சமின்றி சிறிது சிறிதாக முற்றிலும் அமிருத சாகரத்தில் கரைகிற வரை நாவாயின் ஒரு பகுதியேனும் அதற்கு ஓர் ஆசிரயமாய் இருக்கிறது. பிறகு கற்கண்டுப் படகும் கரைந்து விடும். பக்தன் ஞானத்தில் கரைந்தபின் தேவியும் பிரம்மமாகக் கரைந்து விடுகிறாள்.

படகில் செல்லும் போதே சாகரத்தைப் பற்றி பயம் நீங்கி, அதில் கரைய ஆசைப்படுகிறவர்கள் 'ஞானிகள்'. அவர்கள் படகை விட்டுக் கடலில் குதித்துக் கரைகிறார்கள். அதனால் கற்கண்டு படகு கரையாமல் இருந்து விடுமா, என்ன?

ராமகிருஷ்ணருமே தேவியின் தரிசனத்தில் இப்படித்தான் எண்ணி விட்டார். அவள் நிச்சயமாகப் பிரம்ம நிலையில் தம்மைச் சேர்ப்பாள் என்பதை அப்போது அவர் மறந்துதான் இருந்தார். எனவே படகைத் தகர்த்து விட்டுக் கடலில் குதிக்க வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டது. இதைத்தான் 'அம்பிகையை வெட்டினேன்' என்னும்போது குறிப்பிடுகிறார் அவர்.

பிற்பாடு, அம்பிகையை வெட்டாவிட்டாலும், அவளாகத் தனது உருவையும் குணத்தையும் பரமானந்த சாகரத்தில் கரைத்திருப்பாள் என்பதைத் தெரிந்து கொண்டார் பரமஹம்ஸர். 'அம்மை நம் சிவசக்தி—எமை அமரர் தம் நிலையினில் ஆக்கிடுவாள்' என்பதையும் தெரிந்து கொண்டார். மாயையாக இருந்து உலகை நடத்துபவளே உலகிலிருந்து ஜீவனைக் கடத்தி, பிரம்ம நிலையில் தன்னுடன் ஒன்றாக்கிக் கொள்கிறாள் என்பதை அறிந்தார். ஆனந்த சாகரத்தில் கரையாத கண்ணாடியாக அம்பிகையை நினைத்த தோதாபுரியிடமும் 'அவள் கண்ணாடி அல்ல, கற்கண்டு' என்று மீண்டும் மீண்டும் கூறினார்.

தோதாபுரியிடம் ராமகிருஷ்ணர் அப்யாசம் பெற்றபோது குரு சிஷ்யர்களிடையே ரசமான 'மோதல்கள்' ஏற்படும்.

குழந்தைப் பருவத்திலிருந்து காலையிலும் மாலையிலும் சிறிது போது ஆடிப் பாடி இரு கைகளையும் தட்டி நாம சங்கீர்த்தனம் செய்வது பரமஹம்ஸரின் வழக்கம். இதைக் காணும் தோதாபுரிக்குப் பரிகாசமாக இருக்கும்.

ராமகிருஷ்ணர் இரு கைகளையும் தட்டிக் கும்பிடும் போது, ''என்ன,



சப்பாத்தி தட்ட ஆரம்பித்து விட்டாயா? என்ன மடத்தனம்!'' என்று கேலி செய்வார்.

''ஆமாம், மடத்தனம்தான்! பகவானைப் பற்றிய காரியத்தில் நான் ஈடுபட்டிருக்கும் போது, வயிற்றுப்பாட்டுக்கான உணவைப் பற்றி நினைக்கிறீர்களே, அது மடத் தனமில்லாமல் வேறென்ன?' என்பார் ராமகிருஷ்ணர்.

ஒரு நாள் துனி அக்கினியை மூட்டி விட்டு அதன் எதிரே அமர்ந்து சகலமும் பிரம்மம் என்பதைப் பற்றி ராமகிருஷ்ணரிடம் பிரவாகமாகப் பொழிந்து தள்ளினார் தோதாபுரி.

அப்போது விஷயம் தெரியாத ஒரு கோயில் சிப்பந்தி புகையிலை எரிப்பதற்காக அந்தத் தீயிலிருந்து சிறிது அனல் கட்டிகளைத் தள்ளிக் கொண்டான்.

அவ்வளவுதான், அந்தத் தீக்கு மேல் உக்கிரமாகக் கிளம்பி விட்டார் தோதாபுரி.

ராமகிருஷ்ணர் விலாப் புடைக்க விழுந்து விழுந்து சிரிக்கலானார்.

''என்ன கண்டு விட்டாய், இப்படிச் சிரிப்பதற்கு?'' என்று உறுமினார் தோதாபுரி.

''ஒன்றுமில்லை, நீங்கள் மாயை மாயை என்று தூஷிக்கிறீர்களே, அந்த என் அம்மா உங்களை என்ன பாடுபடுத்துகிறாள் என்பதை நினைத்துத்தான் சிரிக்கிறேன். இவ்வளவு நாழிகை நாம் காண்பதல்வளவும் பிரம்மம் என்று எத்தனை உபதேசம் செய்திருப்பீர்கள்! இதோ இந்தச் சிப்பந்தி மட்டும் உங்களுடைய எல்லாம் தழுவும் பிரம்மத்தில் சேராமல் போய் விட்டானே!'' என்றார் ராமகிருஷ்ணர் குறும்புக் குரலில்.

தோதாபுரி நாணினார்.

தமது தீர்த்த பாத்திரத்தையும், இடுக்கியையும் நாள் தவறாமல் நன்றாகத் தேய்த்துச் சுத்தம் செய்வார், தோதாபுரி. ''இதே போலத்தான் மட்டமான உலோகமாகிய மனசையும் தினம் தினம் தேய்த்துக் கழுவ வேண்டும்'' என்றார் ராமகிருஷ்ணரிடம்.

''அது சரி, மட்டமான உலோகத்தைத்தான் தினமும் தேய்க்க வேண்டும். தங்கமாகி விட்டால்?'' என்று குழந்தைபோல் வினவினார் சிஷ்யர்.

பக்தி என்பது ரஸவாதம் செய்து உள்ளத்தைத் தங்கமாக்கி விடுகிறது; அம்பிகையிடம் தம்மை ஒப்பித்துக் கொண்டு விட்டால் பின்னர் ஒருவர் பிரத்தியேகமாகப் பிரயாசைப்பட்டு உள்ளத்தைக் கழுவிக் கொள்ள வேண்டாமே!

வாட்ட சாட்டமாக வளர்ந்திருந்த தோதாபுரி நோய் நொடிகளின் உபா



மாமியார்: பக்கத்து வீட்டுப் பட்டுவின் மாமியார் காலமாய்விட்டதற்குப் பட்டுவிடம் போய்த் துக்கம் விசாரித்தாயோ?

மருமகள்: 'நீ அதிர்ஷ்டக்காரியடி! நான் அப்படியா?' என்றேன்.

தையை இந்நாள் வரை அறிந்திருக்கவில்லை. எந்த விதமான துன்பமும் அவருக்கு நேராதிருந்ததே அவர் மகாசக்தியின் பிரபாவத்தை அறியாததற்கு ஒரு காரணமாகும்.

அப்படிப்பட்டவருக்கு இப்போது ஆரோக்கியம் குன்றத் தொடங்கியது. குடலில் குடைச்சல் கண்டது. நரம்புகளை முறுக்கிப் பிழிவது போல் இருந்தது. ரத்தக் கடுப்பும் கண்டு விட்டது அவருக்கு.

உடல் பொய் என்று தள்ளி, ஆத்மாவில் வாழப் பயின்ற அவரால் இப்போது இந்த உடல் வலியைப் பொய் என்று தள்ள முடியாமல் அவ்வளவு தீவிரமாக நோவு கண்டது. வேதனையோடு வெட்கமும் சேர்ந்து கொண்டது தோதாபுரிக்கு. 'இந்த உடலை ஏன் நான் என்று எண்ணி மயங்குகிறேன்?' என்று ஆற்றிக் கொள்ளப் பார்த்தார். ஆறுகிற வழியாக இல்லை.

தக்ஷிணேசுவரம் தமக்கு ஒத்துக் கொள்ளவில்லை என எண்ணினார். ஆனால் ஏனோ இந்தச் சீடரை விட்டுப் பிரிந்து போகவும் அவரால் இயலவில்லை. ராமலாலாவை ராமகிருஷ்ணர் ஸ்வீகரித்துக் கொண்டபோது ஜடாதாரியால் கிளம்ப முடியாமல் போயிற்றல்லவா? ராமகிருஷ்ணருக்குப் போதிக்க வந்தவர்கள் தாங்கள் பெற வேண்டிய போதனையையும் பெறும் வரை அன்னை அவர்களை வெளியேற அனுமதிக்க வில்லை.

ராமகிருஷ்ணர் தமது குருநாதருக்கு அன்போடு வாங்கிக் கொடுத்த மருந்துகளும் பயனளிக்க வில்லை. வேறொரு மருந்தை ராமகிருஷ்ணர் அறிவார். ஆனுல் அதைக் குருதான் ஏற்றுக் கொள்ள மாட்டாரே!

அன்றிரவு தோதாபுரிக்கு வலி தாங்கவே முடியவில்லை.

ஒரு பயங்கர சங்கல்பம் செய்து கொண்டு விட்டார் அவர். 'உடல் நோவுதானே தீரமாட்டேன் என்கிறது? நல்லது, உடலையே தீர்த்துக் கொண்டு விடுகிறேன். ஆம். இந்த உடலுக்கு நோவு வருவதை விட இந்த உடம்பே தான் ஆத்மாவுக்குப் பெரிய நோவாக வந்து சேர்ந்திருக்கிறது. இதைக் கங்கையில் மூழ்கி விட்டு, நான் ஆத்மாவாக உயரே கிளம்புவேன்' என்று முடிவு செய்து கொண்டு விட்டார் அவர்.

ஆலயத்திலிருந்து வெளியேறினுர். கங்கையில் இறங்கி நடக்கலானுர்.

நடந்தார், நடந்தார், நடந்து கொண்டே யிருந்தார்.

அதோ, எதிர்க் கரையில் உள்ள மரம் மட்டைகள், கரை எல்லாம் புலப்படுகின்றன!

இன்னமும் — கங்கையின் மையத்தைத் தாண்டிய பின்பும் — அவர் நடந்து கொண்டே யிருந்தார்.

இதென்ன விந்தை!

கங்கையில் ஏன் அவர் மூழ்கவில்லை? நீராவிக் கப்பல்கள் செல்கிற அந்த மாநதியில் ஆறடி உயரமுள்ள அவரை முழுக வைப்பதற்கு ஏன் ஆழமில்லாமல் போயிற்று?

இதோ அக்கரையே அல்லவா வந்து விட்டது!

ஆற்றங்கரை மணலைப் பார்த்தார். கரையோரத்தில் பச்சைக் கரை கட்டியிருந்த மரங்களைப் பார்த்தார். மரங்களின் உச்சி மீதாக நீல விசும்பினைப் பார்த்தார்.

விசும்பினுர் தோதாபுரி.

மணலையும், மரங்களையும், வனத்தையும், வானத்தையுமா அவர் பார்த்தார்?

எங்கும், எல்லா விடத்திலும் அவர் ஒன்றைத்தான் பார்த்தார். 'ஒன்று ஒன்று' என்று திரும்பத் திரும்ப அவர் சொல்லிக் கொண்டிருந்த நிர்க்குணப் பிரம்மம் அல்ல அது. அவர் எதை இழித்துப் பேசி வந்தாரோ அந்த சகுண பிரம்மமே அது. சகுணமா, கருணமா?

அம்பிகை, அம்பிகை, அம்பிகை!

அவளன்றி வேறெதுவுமே அவருக்குத் தெரியவில்லை.

வானத்தில் கண் சிமிட்டிய கோடானு கோடி தாரகைகளும் பவதாரிணியாயின. அவர் பார்வையிலிருந்து வானத்துக்கு வரை கட்டிய மரங்களெல்லாம் அமர நாயகியாயின. அவர் முன் விரிந்து கிடந்த மணற் பரப்பு அவ்வனவும் திவ்விய மணம் வீசும் தேவியாயின.

அவரின் காலளவோடு அடங்கி நின்ற நீர்ப் பெருக்கும், அதனில் இலேசாக எழுந்து அவருடைய பாதத்தைத் தீண்டும் அலையும், அந்த அலை நுனியிலுள்ள நுரையும், அந்த நுரை உடைந்து வெளிப்படும் சின்னஞ்சிறு காற்றும்— இவை யாவும் அலை பாய்கிற உள்ளத்தை நிலையாக நிறுத்தும் மலைமகளாயின.

'உலகம் எல்லாம் அம்பிகை; உலகத்தைத் தோற்றுவித்தவள் அம்பிகை; அந்தத் தோற்றத்தை நீக்குபவள் அம்பிகை; மாயை அம்பிகை; மாயையை மாய்ப்பவள் அம்பிகை; உடல் அம்பிகை; எண்ணம் அம்பிகை; அம்பிகையைப் பக்தி புரியும் எண்ணம் அம்பிகை; அவளைப் பக்தி புரிவதாவது என்ற எண்ணமும் அம்பிகையே; அம்பிகை அஞ்ஞானம் என்றெண்ணிய தனது மகத்தான அஞ்ஞானமும் அந்த அம்பிகை அன்றி வேறு அல்ல; அந்தப் பொய்மையைப் போக்க இந்தப் பொய்யான உடலுக்கு நோய் தந்து அதனை மெய்யாக நினைந்து தம்மைத் துடிக்க வைத்ததும் அம்பிகை தான்; இத்தனை நாள் தாம் செய்த தவறுகள் அம்பிகையின் ஆணையே; இனி தாம் தவறு செய்யாமல் இருக்கப்போவதும் அம்பிகையின் அருளே; ஏன், தாம் அத்வைதானுபவம் பெற்றதும் அம்பிகையின் அநுக்கிரகத்தால்தான்; அத்வைதானுபவம் பெற்றது மட்டும் தானு, அந்த அநுபவமே அம்பிகைதான். அமுதமாகிய அந்த அம்பிகையேதான் சாவாகவும் வருகிறுள். சாக விடாமல் தம்மைத் தடுத்ததும் அந்த அம்பிகையன்றி வேறு யார்? இந்த உலகையும் சகல ஜீவராசிகளையும் மட்டுமின்றி பிரம்மத்தையும் உலகாக ஆட்டிப் படைத்து அந்தப் பிரம்மமாகவும் இருப்பவள் அம்பிகையே. அப்படிப்பட்ட பிரபாவம் பொருந்திய பிரபாவதி தனது முழு ஒளியையும் இன்று நான் காணுமாறு அருளியது எதனுல்?'

தோதாபுரி இத்தனை நாட்களாக அறிந்திராத ஈரம் அவர் இதயத்தில் சுரந்தது. கனிவு அவர் கருத்தில் பொங்கியது. அன்பு அவர் உள்ளத்தில் துள்ளியது.

"அம்பிகே, அம்பிகே!" என்று அலறியபடி திரும்பி கங்கையை மீண்டும் கடந்தார். கரை சேர்ந்தார்.

உண்மையாகவே கரை சேர்ந்து விட்டார் தோதாபுரி. (தொடரும்)



அவள் பெற்ற செல்வன்

ராஜம் கிருஷ்ணன்

வெங்கதிரோனின் கடுமை தணிந்து மாலை வந்ததென்று அறிவிப்பதே போல் சரஸ்வதி யாற்றிலே தவழ்ந்தாடி, சோலை மணம் சுமந்து வந்த பூங்காற்றில் ராஜக்ருஹ வீதிகளிலெல்லாம் அயர்வு நீங்கிய கலகலப்பும் பிறந்தது. வெம்மையடங்க வீதிகளிலே மாந்தர் நீர் தெளித்ததும் மாலை நெருங்கியதேயென்று காதலரைப் பிரிந்த மங்கையர் வெய்துயிர்த்தாற்போன்று ஆவி பரந்தது.

பிம்பிசார மன்னனின் நோக்கிலே பொன் கொழித்த ஆடல் மகளிர் வாழ்ந்த மாளிகைகளிலெல்லாம் சேடியர், மாலை மலரும் மண மலர்களைக் கொய்வதும், மாலை தொடுப்பதுமாகத் தத்தம் தலைவியரின் அலங்காரங்களுக்காகப் பரபரக்கலாயினர். தைலங்கள், வாசனைச் சுண்ணங்கள், நறுமலர்கள் எல்லாமாக ஒரே நறுமணப் போதையை ஊட்டும் வண்ணம் இரவென்னும் இன்பப் பெட்டகத்தின் மூடி திறந்தாற் போன்று மாலை குறுக வந்தாயிற்று.

ஸாலவதியின் மாளிகையிலே மட்டும் இன்னும் அந்த விழிப்பு வரவில்லை. சேடியர் இருக்கும் திசையே தெரியவில்லை. முற்றத்திலே படர்ந்து பூத்துச் சொரியும் முல்லைக் கொடியிலே மலர்கள் கொய்வாரின்றி உதிர்ந்து கிடந்தன. வீணை கானமும், மத்தள ஓசையும், சலங்கை ஒலியும் கொஞ்சிக் குலவும் இசைக் கூடத்திலே இசைக் கருவிகள் தூசு படியத் தூங்கின. சாளரங்களையும், வாயில்களையும் அலங்கரித்த மணித் திரைகளிலும் அலங்காரப் பொருள்களிலும் பொலிவில்லை. மது வழியும் கிண்ணங்களும் கனித் தட்டங்களும் வெறுமையாக ஒரு மூலையிலே காட்சி அளித்தன.

வெறுப்பும் கவலையும் குலவும் முகத்தோடு மாளிகையின் வெறிச்சிட்ட வாயில்களைப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள் ஸாலவதியின் தாயார். பிறகு மெள்ள அவளுடைய சயனக்கிருஹத்தை எட்டிப் பார்த்தாள். அங்கே ஒரு புனிதமான இன்ப உலகம் நிர்மாணமாகி யிருந்தது. வானத்து முழு மதி, தடாகத்து அல்லி மலரை அணைந்துக் கிடந்தாற் போன்று மஞ்சத்திலே தாயாரும் மகனும் பிரிக்க இயலாத முழுமையாய், பிரியாத இரு உயிர்களாகக் கிடந்தனர்.

அவள் பதினாறு வேனில்களை முழுதும் கண்டிராத கட்டழகி. கூந்தல், மஞ்சத்தைக் கடந்த கார் முகிலாய்ப் பரவிக் கீழே புரண்டது. 'முத்துச் சரங்களும் மலர்ச் சரங்களும் இழைய அலங்கரித்து முடியப் பெற்றால்தானா நான் அழகு?' என்று வினவாமலே வினவும் குழல் கற்றைகள். பிறை நுதலில் திலகக் குறி மங்கிச் சற்றே அழிந்திருந்தாலும் பருவத்தின் பூரிப்பு மங்கிவிட வில்லையே? தந்தம் கடைந்த மேனியிலே புது இரத்தம் பாய்ந்து பசுமையை அல்லவோ கூட்டியிருக்கிறது? மதர்த்து நீண்ட விழிகளை மூடி, உள்ளே எந்தப் பொய்யுலகைக் காண்கிறாள் இந்தப் பேதைப் பெண்? செவ்விதழ்களிலே அரும்பியுள்ள மந்தகாசம் எந்தப் பொய்த் தோற்றம் கண்ட மயக்கத்தின் அறிகுறி? நெஞ்சகம் விம்மித் தணிய, சரியும் துகிலை அணைப்பிலுள்ள குழவிக்குக் குளுமையாக விசிறச் செய்யும் மெல்லிய இழை மூச்சு, எந்தப் பொய்க் கனவினின்றும் பிறக்கும் ஆனந்தம்?

தாய் நெஞ்சிலே மண்டிய ஆற்றாமை உணர்வுகளை அடக்கிக் கொண்டு, ஸாலவதியின் கையணைப்பைத் தளர்த்தி, குழந்தையை அவளிடமிருந்து பிரிக்க முயன்றாள். ஆறு பட்சங்கள் காணாத பூங்குழந்தை. அவர்கள் குலத்துக்கு உதவாத ஜீவன்! தான் இவ்வுலகில் பிறவியெடுத்தது. அந்தத் தாயின் பிரச்

லைக்குக் காரணமாக இருப்பதை அறியாமல் தெளிந்து சோம்பல் முறிக்கும் பிரும்மம்.

உயிரின் மறுபாதியிலிருந்து கை அகற்றப் பட்டதும் தூக்கிவாரிப் போடக் கண் மலர்ந்தாள். சாலவதி. பாய்ந்து குழந்தையை மீட்டுக் கொண்டாள்.

முதியவளுக்கு ஏமாற்றம்தான். கோபமும் கூடத்தான். என்றாலும் குழைவும் கனிவுமாக, ''சாலவதி! மாலையாக வில்லையா? மைக் கூந்தலுக்கு வாசனையூட்டாமல், அணி மணிகள் மறந்து, எத்தனை நாட்கள் இருப்பாயடி? அருகிலேயே இருந்து உன் உடல், நலத்தை யெல்லாம் உறிஞ்சுகிறது. மகளே! நான் சொல்வதை இன்று கேளடி!'' என்று கெஞ்சுகிறாள்.

''அம்மா! இந்தச் செல்வன் தூங்கும்போது அழகைப் பார்க்க வில்லை? என் குழந்தை. என் செல்வம். இது தவிர எனக்கு என்னம்மா இனி வேண்டும்?''

இதுவா மறுமொழி?

''இதென்ன வீண் பிடிவாதம் கண்ணே? இந்த மாளிகையே கலகலப்பிழந்தது. இந்த மாளிகையிலே செடியாக இருந்தவள் பொன் கொழிக்கிறாயடி! இதோ பார்! மலர்கள் கொய்வாரற்று நிலத்திலே உதிர்ந்து வாடி வழிகின்றன. முத்தாரங்களும் பொன்னிழைகளும் பட்டுப் பட்டாடைகளும் சாலவதியின் எழில் மேனியைத் தழுவாமல் பெட்டிகளில் புலம்புகின்றன...... மகளே! இம் மாளிகையில் இன்னிசை கொழிக்க வேண்டாமா? பிம்பிசார மன்னர் தம் நோக்கினால் உள்ளம் உன்பாலென்று வெளியிட்ட பின்னும் அறிந்தும் அறியாமல் என்னிடம் நடிக்கிறாயோ? அடுத்த பௌர்ணமியன்று மன்னர் வருவாரடி! சாலவதி...!''

சாலவதி அவ்வார்த்தைகளைச் செவிகளில் ஏற்றதாகவே தெரியவில்லை. நெஞ்சத்திலே பூஞ்செண்டு போன்ற குழந்தையுடன் அவள் ஒரு கேள்வியைப் போட்டாள்.

''தாயே! பெண்கள் எதற்கு இம்மண்ணில் பிறக்கிறார்கள் தெரியுமா?''

''இந்த நியாய வாதக் கேள்விகளெல்லாம் பண்டிதர்களுக்குரியவை. இந்த நகரத்து மகளிரெல்லாம் பொறாமைப்படும் பேறடி உனக்குக் கிடைத்திருப்பது! சாலவதி, பெண்கள் ஆடவரைக் களிப்பூட்டுவார்கள். எழிலும் இன்பமும் மகிழ்வும் உல்லாசமுமே நமது குறிக்கோள்.....''

''இல்லை, தாயே! மலரின் கனவு என்றும் ஒய்யாரமல்ல என்பதை உணர்வாய். மனித குலத்தை வாழ வைக்கும் நன் மக்களே பெண்மையின் கனவு. நான் மாதா'' என்றாள் சாலவதி, தாய்மையின் உச்சியிலே நிற்கும் பெருமிதத்தோடு.

''இது என்னம்மா? உன் பிடிவாதத்திலே உன் சௌந்தரியமும் இளமையும் மாய்வதா? பிச்சியும் மந்தாரமும் முல்லையும் காயாகிக் கனிய வேண்டும் என்று சொன்னால் உலகம் சிரிக்கும். அரச கோபத்துக்கு ஆளாகாதே, சாலவதி...''

தாயின் கெஞ்சல், குழைவு, வேண்டுதல் எல்லாம் கோரிய பலனைக் கொடுக்க வில்லை.

பெண்கள் எதற்கு இந்த மண்ணில் பிறக்கிறார்கள்?

அறியாப் பருவத்திலே சாலவதி கேட்ட வாக்கு, அதன் மறுமொழி. வேணுவனத்தின் பக்கமாக மண் வீடு சமைத்து அவள் விளையாடிக் கொண்டிருந்த காலம் அது.

அவளுடைய மண் வீட்டிலே எங்கிருந்தோ வந்ததொரு பளபளத்த கூரிய அம்பு துளைத்தது. அதை அழித்துக் கொண்டு நிலத்தில் பாய்ந்தது. அவள் கஷ்டப்பட்டு அந்த அம்பை எடுத்துக் கொண்டிருக்கையில் அந்த அம்புக்குச் சொந்தக்காரன் அங்கு வந்தான்.

வீரமும் ஒளியும் கூடிய இளைஞன் அவன்.

''நீயா? ஓகோ? கொண்டா, அதை!''

''என் வீட்டை அழித்து விட்டீரே? நான் கொடுக்க மாட்டேன்!'' அவன் சிரித்தான்.

''நீ அழகாக இருக்கிறாய், பெண்ணே! வேறு மாளிகை கிடைக்கும் உனக்கு. இந்த வீடு போனால் போகட்டும். அம்பைக் கொடு.''

அவளுக்கு அவன் கூற்று புரியும் பருவம் இல்லை அது. மகத நாட்டின் அழகிகளையெல்லாம் தம் உரிமையாக்கிக் கொள்ளும் மன்னனின் தன்மையை அவள் அப்போது அறியாத பேதை. எனவே, ''எப்போது?'' என்று கேட்டாள்.

அவன் பின்னும் இடிஇடி என்று சிரித்தான்.

''முகை மலராகும் போது!''

இதுவும் புரியவில்லை அவளுக்கு.

''அது வரை நானும் இதைத் தரமாட்டேன்!'' என்றாள்.

''பெண்களுக்கு இந்த அம்பு தேவையே இல்லை. கொடு!''

''நானும் வில்லை வளைத்து நாண் பூட்டி.... அம்பு தொடுக்கக் கூடாதா?''

''வேண்டாம். உன் போன்ற பெண்களெல்லாம் நல்ல நாயகரை மணம் புரிந்து நன்மக்களைப் பெற்றாலே போதும்!''

குமின் சிரிப்போடு அவன் அம்பை வாங்கிக் கொண்டு போய் விட்டான். மகத நாட்டுப் படையில் எத்தனையோ குமாரர்கள், படை வீரர்கள்! யாரோ?

முகையிலே அன்று கனவாகப் புகுந்த மனத்



தின் மெல்லிய இழை அது. முகை மலரும் வரை மணம் புரிவதில்லை. கனவின் மணம் தன் மேனியின் எழிலோடு கலந்தும் சாலவதி தன் பிறப்பிடத்தின் இயல்பு கண்டு இனந் தெரியாக் கலக்கத்தில் ஆழ்ந்தாள். அவள் எழிலும், இளமையும் ராஜக்கிருஹ நகரப் பிரபுக்களுக்கு, கனவு காணும் இளைஞர்களுக்கு, ஏன் அரசருக்கும்கூடத்தான்—சொந்தமாக்கிக் கொள்ளக் கூடிய உரிமை உண்டு. ஓரிரவுக்கு நூறு 'தகபணம்' பெற்று, அன்னவை மகிழ்விக்கும் அற்புதச் சொத்து.

இயல்புக்குப் பொருந்தாத இடத்திலே, மலர்ந்து விட்ட மணம் கமழும் நாட்களில் கனவு கனியாகும் சந்தர்ப்பம் வராமலில்லை. அந்த ஆணழகன் மாவீரனுக்குரிய இலக்கணங்களனைத்தும் பெற்றவனாக அவளுடைய கனவுக் கண்களுக்குத் தோன்றினான்.

இளஞ் சூரியனின் செவ்வொளி பரவிய முகம். அகன்ற மார்பும், திரண்ட தோள்களும் நீண்ட கரங்களும் கொண்டிருந்த அவனை ஏதோ ஒரு நாட்டின் இளவரசன் என்று அவளுடைய அன்னை அறிவித்தாள்.

வன்னி மரத்திலே ஒளி தோன்றிய பின் மரத்தின் நினைவு நிலைப்பதில்லை. சாலவதியின் கனவுகள் அவனுள் உருவான ஒளியை வட்டமிடும் அலைகளாகி, பின் கையிலேந்தியதும் பரிபூரண நிறைவில் ஒன்றி விட்டன. அவள் இவ்வுலகையே அநேகமாக மறந்து போய்க் கிடந்தாள்.

மகளின் உள்ளோட்டங்களையெல்லாம் அறிந்திராத தாய் குழம்பித் தவித்தாள்.

கண்டோர் நகைக்க, இளமையின் பொற்காலத்தை நழுவ விடலாமா? தன் மேனி நலனையும் கன்னாளிப்பையும் மறந்து கையில் கிடைத்த கனியென்று கொஞ்சி மகிழ்கிறாளே, இது குலம் விளங்க வந்த பெண் மகவா? இல்லையே?

பொன்னின் மணி விளக்கேயானாலும் பகலில் எரித்தென்ன புண்ணியம்? இதைக் கொஞ்சுவதும், பொட்டிட்டு மையிட்டுச் சீராட்டிப் பாலூட்டித் தாலாட்டுவதுமே வாழ்வென்று மூழ்கி விடுவதை, அழகும் இளமையும் பொற்குவியல் சேர்க்கும் உடைமைகள் என்று கணிக்கும் மரபில் வந்த அவளால் எப்படிப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்க முடியும்? தாய் தீவிரமான சூழ்ச்சிகளை எண்ணத் தொடங்குகையில், மகளோ, உலோபி தன் பொருளைப் பாதுகாப்பதுபோல் அந்தச் செல்வத்தைப் பாதுகாத்தாள். தாய்மையின் வெறி குழவியைக் காக்கும் கவசமாகக் கவிந்திருந்தது.

சயன அறையிலே மங்கலாக ஒளி பரப்பும் விளக்கு ஒளிருகிறது. பின் பனிக் காலத்தின் இறுதியானாலும் உடல் நடுக்கும் சீதக் காற்று சாளரத்தின் வழி புகுகிறது.

சாளரங்களை மூடி விட்டு, சாலவதி மஞ்சத்திலே சாய்ந்தவளாக மென் குரலில் இனிமையாகப் பாடுகிறாள்.

அவளுடைய விரல்கள் பூப் போன்ற மகவின் மேல் இளந் தளிர் படிவது போல் மெல்லத் தட்டு



சிறு வயதிலேயே புகட்டுங்கள்...
சிறந்த முறையில் புகட்டுங்கள்...
காலையில் முதல் வேலையாக ஒரு முறை
இறுதியாக இரவில் ஒரு முறை
வாய்கொப்பளிக்க

லிஸ்டரின்!

—வாழ்நாள் முழுதும்
அவர்களுக்குப் பாதுகாப்பு!



பழக்கம் படிவதற்கு வாகானது இளமைப் பருவம்! லிஸ்டரின் உபயோகிக்கும் ஆரோக்கிய நற் பழக்கத்தைப் புகட்டுவதற்கு இதைவிட வாய்ப்பான சமயமும் உண்டோ! அன்றாடம் அதிகாலை ஒரு தடவை, இரவு ஒரு தடவை லிஸ்டரின் கொண்டு வாய் கொப்பளித்தால் கிருமிகளினின்று நாள் முழுதும் காத்துக்கொள்ளலாம். பட்ட மாத்திரத்திலே கிருமிகளைக் கொன்று மூச்சிலே இனிமை தவழச் செய்வது லிஸ்டரின் ஆன்டிஸெப்டிக் (நச்சுமுறி மருந்து).

திடமுடன் முன்யோசனையைக் கைக்கொள்ளுங்கள்! தினம் இருமுறை லிஸ்டரின் உபயோகிக்கும் ஆரோக்கிய நற் பழக்கத்தை இப்போதே துவக்குங்கள்!

வாய் நிறைந்த சுகாதாரத் தூய்மைக்கு வழி: லிஸ்டரின்; இன்றும் என்றும் உங்கள் துணை!



வார்னர்-லாம்பர்ட் பார்மஸூட்டிகல் கம்பெனி
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யூ.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது).

WL.7018.TM

கின்றன. உலகத்து இன்பமெல்லாம் திரண்டு தாரையாக வடிவது போன்ற இசையொலி யாய்க் குரல் இழைகிறது.

இசை மெல்ல மெல்லக் கம்பியாய் இழைந்து அலைஅலையாக அசைவுகளே பரவும் வண்ணம் நுண்ணிழைத் துளிகளாகி மெல்ல மெல்ல ஓய்ந்து போகிறது. செவ்விதழ்கள் பாடிய நிலையிலேயே நிற்க, மைவிழிகள் அரவிந்த மொட்டுக்களாய்க் கூம்புகின்றன. ஆனால் கை மட்டும் அணைப்பினின்றும் தளர்ந்துவிட வில்லை. மூச்சுக் காற்று மெல்ல இழைய, நிறைவின் அலைகளிலே மிதக்கும் இன்பக் கனவுகளோடு கூடிய இயல்பான உறக்கம், கனவுகளைப் பற்றி ஆழத்தின் மயக்கில் அழுக்கி விடும் இயல்பு மீறிய உறக்கமாக மாறுவதை அந்தத் தாய் அறைக்கு வெளியேயிருந்து கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண் டிருக்கிறான்.

மெல்லிய இழை மூச்சு, குறட்டை ஒலியாக வலுக்கிறது. உடல் உணர்வும் கனவு நிலை களும் மறக்கும் உறக்கம். திங்களிச் சாந் றோடு மகனுக்குக் கொடுத்த மருந்து வேலை செய்யத் தொடங்கியதும் அடி மேல் அடி வைத்து அவன் உள்ளே செல்கிறான். பஞ்சணை யும் பூஞ்செண்டு போன்ற குழவியும் மெல்ல இடம் மாறுகின்றன. துணியைப் போட்டு மூடிக் குழந்தையைத் தோளில் சாத்திக் கொண்டு வெற்றிச் சிரிப்புடன் அவன் ஒரு கணம் நிற்கிறான்.

பொன்னின் வெறியில் தாய் என்னும் மென்மையான உணர்வு நசுங்கி விட்டது.

பிம்பிசார மன்னரின் போக்கைப் புறக் கணிப்பது தகாது. பிறகு, அவள் பெறும் மைந்தனை மன்னவரே ஏற்பார். மன்னரின் அன்பைப் பெறும் மங்கையரின் புதல்வர்களை மன்னர் புறக்கணிப்பதில்லை. வைசாலியின் எழிலரசி அம்பபாலியின் மைந்தனை மன்னரே ஏற்று வளர்த்திருப்பது ஊர் உலகமெல்லாம் அறிந்த செய்தி.

நீண்ட உறக்கம் தெளிந்து மகன் எழுந்த தும் அவனுடைய உள்ளத்தைத் தேற்றி உற் சாகமளிக்கச் செய்யும் உபாயங்களையெல்லாம் சிந்தித்தவனாக அவன் அறையை விட்டு வெளியேறு முன் —

கருக்கிருட்டைப் பிளந்து கொண்டு பாயும் ஒளிச் சிதறு போல் உணர்வு உறக்க மாயை யின் கருந் திரையைக் கிழித்துக் கொண்டு மகனை உலுக்கி விட்டது. உயிரோடு அணையும் உயிரைப் பஞ்சணை ஈடு செய்யுமோ? பாய்ந்து வந்த அவன் தன் செல்வத்தை மீட்டுக் கொண்டாள்.

மூச்சிரைத்தது. கண்களில் கடுமை கொப் புளித்தது.

"நீ.... நீ.... தாயா? அடி, பேதையே? மதுக் கோப்பை மாய்க்கும் சக்களைப் போல், ஆண்மையையும் ஒளியையும் மாயச் செய் வதா ஒரு வாழ்வு?"

இதழ்கள் துடிக்கின்றன. நெஞ்சோடு சேர்ந்த பூம் பிஞ்சின் ஸ்பரிசத்திலே நெஞ்சின் ஆழத்தில் தளம் கட்டி நின்ற சோகமெல்லாம் கண்களில் வெம் பனியாய்க் கரைந்து பெருகுகிறது.

இந்தச் சாபக்கேட்டிலிருந்து அவன் எப்படி விடுதலை பெறுவாள்?



கடைசியில் நிற்பவர்கள் : நான் அப்பவே சொன்னேன்...காலேஜ் அவ்வளவு மோசம் இல்லே...நிறைய மார்க்குகள் வாங்கினவர்களை மேளதாளத்துடன் சேர்த்துக் கொள்வார்கள் என்று சொன்னேன். நீங்க நம்பமாட்டேன் னேளே இப்ப பார்த்தீர்களா...!

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

நினைக்கையிலேயே அவன் உடல் விதிர் விதிர்க்கிறதே? ஒரு கணப்போது அவன் தெளியாமலிருந்தால் செல்வம் பறி போயிருக் குமே......?

தாயா....? இல்லை. இவள் இந்தப் பேரின்ப நிறைவறியாத பாவி! போ... போ!....

மகளின் தோற்றம் கண்டு அவன் நடு நடுங்கி விட்டாள். பாயும் புலிக்கு முன் நிற்க விரும்பாத நரி போல் எங்கோ போய்ப் பதுங் கிக் கொண்டாள்.

வாலவதியின் முன் இருளே நிலவாய், நிலவே இருளாய்க் கப்பினாற் போல் கண்கள் மருண்டன.

இன்று கைகளில் தெளியும் பாலகன் நாளை தவழ்ந்து செல்வான்; தளர் நடை நடப் பான். அவனை வெகு சுலபமாக அபகரிக்க முடியும். கொடிய பசியுடன் உலவும் விலங் கைப் போன்று பொன்னின் பசியோடு உலவும் தாயிடமிருந்து அவன் அந்த மகனை எப்படிக் காப்பாள்?

பிச்சியும் மந்தாரையும் கனியாகும் கனவே காணலாகாது. உலகம் நகைக்கும். பௌர் ணமையன்று மகதத்தின் மன்னர் அவளைத் தேடி வருவார். ராஜனின் காப்பு, அவளுக்குத் தளை. போக வாழ்வின் அடிமைத் தளை. அவனையும் மைந்தனையும் பற்றிப் பிணைக்கும் இன்ப உறவின் அழிவுத் தளை.

தாய் ஒவ்வொரு சமயமும் அறிவுறுத்திய போதெல்லாம் அவள் உள்ளம் அஞ்சி ஏற்காத உண்மைகள். அலட்சியமாகவே ஒதுக்கித்



''நீங்க வெளியிலே போயிருந்த போது யாரோ உங்களை ரொம்ப முக்கியமா, அர்ஜெண்டா போனில் கூப்பிட்டா!''

''அவசரமா? அர்ஜெண்டா? பேரு என்ன வென்று சொன்னு?''

''மறந்து போச்சு!''

''நம்பர் சொன்னுளா?''

''அதுவும் மறந்து போச்சு!''

''அட, ராமச்சந்திரா! உனக்கு ஞாபக சக்தியும் ஏன் போகல்லே!''

''ஏன்?''

''போனில் கூப்பிட்டதையும் மறந்து போயிருந்தால் என்னை இப்படித் தவிக்க விட்டிருக்கமாட்டாயே!''

தன்னிய உண்மைகள். அவள் ஒதுக்கித் தள்ள முடியாது.

ஆனுல் சன் னூன் செல்வொளியாய் வளர விருக்கும் கனவின் கருவூலத்தை நீக்கவே பதறும் வகையில் அவளிடமிருந்து பிரிக்கும் துணிவை அவனுடைய அன்னை பெற்று விட்டாளே? என்று செல்வான்? எப்படி மீளுவான்?

ஸாலவதி மெள்ளச் சாளரத்தைத் திறந்து நோக்குகிறுள். எங்கோ கோழி கூவுகிறது. பனிப் போர்வை நகரை நாணம் கொண்ட நங்கையின் துகிலைப் போல் மறைத்துக் கொண்டிருக்கிறது.

இரவின் களியாட்டங்களில் ஈடுபட்ட மாந்தர் உறங்கும் நேரம். புனிதச் செல்வர்களும், கண் விழித்தெழும் நேரம்.

ஸாலவதி உறுதியுடன் தன் செல்வத்தை மூடிச் சேர்த்துக் கொண்டாள். தலையோடு கால் போர்த்தவளாய் அடிமேல் அடி வைத்து, மாளிகையை விட்டு வெளியேறி ஞள்; விரைவாக நடந்தாள்.

துயரறுக்கும் ஞான ஒளியினராய், பாவி களையும் தன் கருணை விழிகளால் ஈடேற்றும் போதி முனிவர் நிருமாணித்த சங்கத்தைப் பற்றியும், மன்னரும் அக்கருணையில் கனிந்து பேராதரவும் பெருமதிப்பும் நல்லிருப்ப தைப் பற்றியும் அவள் அறிவாள். அற வோர்கள் உறையும் அந்தத் திருமடத்தின் இருப்பிடமும் அவள் அறிவாள். அதிகாலை யில் அந்தப் புனித சீலர்கள் வெளிப்பட்டு நதிக்குச் செல்வார்கள்.

தன் மகவைக் கைவிட்ட பாவி என்று பின் ஞல் ஒருகால் நல்லோர் உலகு அவளைத் தூற் றும். தூற்றட்டும்.

அவள் போகத் தளைகளுக்குள் கழலும் பாவியானுலும் அவள் மகன் வாழ வேண்டும். அவன் மண்ணை வாழ வைக்கும் மைந்தனாக வேண்டும். அவள் அழிந்தாலும் அவளுடைய கனவின் மணத்தை அவன் மெய்யாக்க வேண்டும். வழியிலே கிடக்கும் பச்சிளம் பாலகனை அருளாம் விழிகள் கொண்டு நோக் கிய பின்னரும் எவரும் விட்டுச் செல்வரோ?

அவன் வளருவான். மண்ணை வாழ வைக்க வளருவான்! அதோ.... உள்ளே கலகலப்புக் கேட்கிறது.

''செல்வமே! கையிலே கிடைத்தும் இழக் கும் பாவி நான். நீ.... வாழ வேண்டும். வாழ வைக்க வேண்டும். வாழ்வாய்!''

கடைசியாக உச்சி மோந்து கண்ணீர் பெருக முத்தமிட்டு வாழ்த்துகையில் யாரோ வரும் அரவம் கேட்கிறது. ஸாலவதி அங் கேயே துணிச் சுருளோடு குழவியைக் கிடத்தி விட்டு ஓடிச் சென்று ஒரு மரத்தடியில் மறைந்து நிற்கிறுள்.

உள்ளம் குலுங்குகிறது.

ஐயோ, காலடிச் சத்தம் கேட்கிறதென்று அங்கேயே கிடத்தி விட்டாளே? அது குப்பை மேடு! குப்பையிலல்லவா விட்டிருக்கிறுள்? அந் தச் செல்வன் அன்னையின் அணைப்பிலிருந்து விடுபட்டதும் குளிரில் விறைப்பானே?

தாயுள்ளத்தின் தவிப்பு உச்சத்துக்கேற, மரத்தின் கிளைகளிலிருந்து இரு காக்கைகள் பறந்து சென்று குழவியை மூடி யிருந்த துணியை விலக்குகின்றன.

கா....கா.... கா....!

உலகமெல்லாம் உய்ய வரும் பேரொளியே! ஓர் தாயுள்ளத்தின் ஓலம்! என் செல்வன் வாழ வேண்டும்!

காக்கைகளை விரைந்து ஓட்டிக் கொண்டு ஓர் இளந் துறவி வருகிறார். ஆகா! அம்ப பாலியின் புத்திர மைந்தர் அல்லவோ இந்த இளந் துறவி!

ஸாலவதியின் விழிகள் நீரைப் பெருக்கு கின்றன.

இளந்துறவியின் கண்களில் கருணை நதி பெரு வெள்ளமாகத் தெரிகிறது. குப்பை மேட்டிலே கிடக்கும் குழந்தையை, குளிரிலே விறைத்து நீலம் பூத்த உதடுகளுடன் கிடக் கும் பச்சிளம் பாலகனை வாரி எடுத்துக்கொள் கிறுர்; சுற்றுமுற்றும் நோக்குகிறுர்.

கணங்கள் யுகமாக நீளுகின்றன.

பிறகு திரும்பிச் செல்கிறுர்.

இன்னமும் பனிப் போர்வை அகலவில்லை.

ஸாலவதி மணம் கழன்ற வெற்று மலராக, மாளிகையை நோக்கி நடக்கிறுள்.

காலம் விரைந்தோடுகிறது.


ராஜக்கிருஹத்துப் பொதுமகள் ஸாலவதி, தன் பச்சிளம் பாலகனைக் குப்பை மேட்டில் விட்டு விட்டு இன்பத்தை நாடிச் சென்றுள் என்று ஊரும் உலகமும் இகழ்கிறது; வரலாறு தூற்றுகிறது.

தட்ச சீலத்துக் குருகுலத்திலே ஒரு மருத் துவ மாமணி உதயமாகிறது. போரியலைக் கற்பிக்கும் அதர்வ வேதத்துடன் இணைந்த ஆயுர்வேதம் பயின்று, நாடு நகரமெல்லாம் புகழ் பரப்பும் ஒரு மருத்துவன் பாரதத்தின் மருத்துவ வரலாற்று ஏடுகளிலே இடம் பெறு கிறுன். மகதத்தின் இணையில்லாத அந்த ராஜ வைத்தியன், ஸாலவதி பெற்ற மைந்தன் ஜீவகன்தான்.

உங்கள் கேசம் உதிருகிறதா?




இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



பொடுகு

இது சாதாரணமான உபாதை. இதை ஒருபோதும் அலட்சியம் செய்யக்கூடாது.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது. ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டம் இல்லாததுதான்.

இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்.

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-1 சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ், பீசாம் (இந்தியா) பிரை. லிட்., பீசாம் ஹவுஸ், மாஹிம், பம்பாய்—16.



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



Silvikrin

சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி

SP/1/P/6/63

'கஸ்தூரி, வருகிறேன்'

வி. எஸ். சுப்பையா

"நான் வருகிறேன்: காலை ஸ்டேஷனுக்கு வரவும்" என்ற தந்தி என் கையில் கிடைத்த போது மணி கிட்டத்தட்ட இரவு பன்னிரண்டு இருக்கும். தந்திக்காரனின் சைக்கிள் மணிச் சத்தம் கேட்டு விழித்து நான் தந்தியையும் வாங்கிக் கொண்டு திரும்பி வந்த பிறகும் சம்பகம் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். தந்தியின் வாசகம் எனக்கு மிகவும் கலக்கத்தைக் கொடுத்து விட்டது. இவ்வளவு கெடுபிடியாகக் கஸ்தூரி வரவேண்டிய அவசியம் இல்லை. அப்படி வருவதாக இருந்தாலும், கஸ்தூரியே தந்தி கொடுத்திருக்க வேண்டாம், அவளுடைய கணவரோ அல்லது அவர்களுடைய வீட்டிலிருந்து வேறு யாரோ தந்தி அனுப்பியிருக்கலாம். அப்படியெல்லாம் இல்லாமல், "நான் வருகிறேன்;



காலை ஸ்டேஷனுக்கு வரவும்" என்று தந்தி வருவதானால் அந்தத் தந்தி வெறும் இந்த வரவு சமாசாரத்தை மட்டும் சுமந்து கொண்டு வரவில்லை; வேறு என்னவோ இன்னதென்று இனம் கண்டு பிடிக்க முடியாத கவலையையும்தான் கொண்டு வந்திருக்கிறது. எனவே, கவலையற்றுக் கட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கும் கஸ்தூரியின் தாயாரிடம் உடனே அதைச் சொல்ல விரும்பாமல் காலையில் கஸ்தூரியே அதைத் தன் தாயாரிடம் சொல்லிக் கொள்ளட்டும் என்று தீர்மானித்தேன்.

சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு தந்திக் கடிதத்தை விரித்து மார்பில் வைத்துக் கொண்டிருந்த எனக்குக் கஸ்தூரி தவழும் குழந்தையாக இருந்தபோது விளையாடிய தெல்லாம் ஞாபகத்துக்கு வந்தது.

ஆகா! இந்தக் கஸ்தூரி எவ்வளவு பொல்லாதவள்! ஆனால் எவ்வளவு புத்திசாலி! அவள் புத்திசாலித்தனத்தை எண்ணி



எண்ணி எவ்வளவு நான் வியந்திருக்கிறேன்! தற்பெருமை என்று பழிக்குக்கூட அஞ்சாமல் நண்பர்களிடமெல்லாம் எத்தனை தரம் சொல்லிப் பூரித்துப் போயிருக்கிறேன்! இருந்தாலும் இன்னும் இப்படிச் சிறு பிள்ளையாக இருக்கிறாளே! எப்போதுதான் பொறுப்புத் தன்மை ஏற்படப் போகிறதோ....!

கஸ்தூரிக்கு அப்போது ஏழு வயது நடந்து கொண்டிருந்தது. ஒரு நாள் நான் ஆபீஸிலிருந்து வீடு வந்து சேர்ந்த சமயம் பக்கத்து வீட்டுக் கோமதியோடு சற்றுப் பலமான வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. நான் வந்து வீட்டுக்குள் நுழைந்ததைக் கூடப் பொருட்படுத்தாமல் சம்பகம் கோமதியோடு காரசாரமாக விவாதித்து எதையோ ஒன்றை நிலைநிறுத்த முயன்று கொண்டிருந்தாள்.

நான் ஆடை மாற்றிக் கொண்டு கொஞ்ச நேரம் பொறுத்துப் பார்த்தேன். அப்புறம் பொறுமை இழந்து வெளியே வந்து என்ன விசேஷம் என்று கொஞ்சம் அதட்டலாகச் சம்பகத்திடம் வினவினேன்.

விஷயம் மிகவும் அற்பம். பக்கத்து வீட்டுக் குழந்தையின் பொம்மையை உடைத்தது கஸ்தூரியின் தம்பி சுந்தரம் என்பது கோமதியின் கட்சி. அப்படி இல்லை, சுந்தரம் அப்பாவி, அவன் மீது அபாண்டமான பழி சுமத்தப் பார்க்கிறாள் பக்கத்து வீட்டுக் கோமதியின் மகள் என்பது சம்பகத்தின் வாதம். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. என்னுடைய ஆச்சரியம் எல்லாம் சம்பகம் படித்தவள், விவேகம் உடையவள். இவள் இந்த அற்ப விஷயத்துக்காக இப்படி வாதாடிக் கொண்டிருக்கிறாளே என்பதுதான். பக்கத்து வீட்டுக்காரர்கள் நல்லவர்கள். இந்தச் சின்னப் பொம்மையின் காரணமாக எங்கள் நட்பு முறிந்து விடக் கூடாதே என்பது என் கவலை. எனவே, "சரி, சம்பகம்! போதும். அதே மாதிரி ஒரு பொம்மை வாங்கிக் கொடுத்து விடலாம். நீ போய்க் காப்பி கொண்டு வா!" என்றேன்.

"வீண் தண்டமாக எப்படிக் கொடுக்க முடியும்?" என்றாள் சம்பகம்.

"உடைத்தது சுந்தரம்தான் அண்ணா!" என்றாள் கோமதி.

"யாராவது பார்த்தார்களா?" என்றேன்.

"நான் பார்த்தேன் அப்பா!" என்றாள் கஸ்தூரி.

"யார் உடைத்தது?"

"சுந்தரம்தான் அப்பா!"

இதைக் கேட்ட மாத்திரத்தில் சம்பகத்தின் குரல் தளர்ந்து விட்டது. எங்கள் எல்லோருக்குமே ஒரு மாதிரியாகப் போய் விட்டது. கோமதிகூடக் கஸ்தூரி இப்படிச் சொல்லுவாள் என்று எதிர்பார்க்கவில்லை!

"சரி, போனால் போகிறது. நீங்கள் அண்ணாவுக்குக் காப்பி கலந்து கொடுங்கள்" என்றாள் கோமதி. அவள் குரலின் அடித்தளத்தில் வெற்றி தொனித்தது.

சம்பகம் கஸ்தூரியை நோக்கி, "ஏன் கஸ்தூரி! இதை முதலில் ஏன் சொல்லவில்லை?" என்று கடிந்தாள்.

"நான் சொல்ல வந்தேன் அம்மா; நீ தான்..."

நான் கஸ்தூரியை அப்படியே வாரி அணைத்துக் கொண்டேன்.

இது அற்ப விஷயம்தான். ஆனாலும் உண்மையைச் சொல்லக் கொஞ்சம்கூடத் தயங்காமல் கஸ்தூரி, சுந்தரம்தான் உடைத்தது என்று சொன்னாளே அந்தப் பெருமை எனக்குத் தாங்க முடியவில்லை. சம்பகம் அப்புறம் அதைப் பற்றிப் பேசவே இல்லை.

* * *

கஸ்தூரி அப்போது எட்டாவது வகுப்போ அல்லது ஒன்பதாவது வகுப்போ படித்துக் கொண்டிருந்தாள். அவளை மிக மிகச் செல்லம் கொடுத்து வளர்த்து விட்டதற்குச் சம்பகம் அடிக்கடி தன்னை நொந்து கொள்வது வழக்கம். அதற்கு அவசியமே இல்லை. கஸ்தூரி நாளடைவில் தன் காரியங்கள் எல்லாவற்றையும் தானே சிறந்த வண்ணம் பார்த்துக் கொள்ளக் கூடிய பொறுப்பு வாய்ந்தவளாக ஆகி விடுவாள் என்று சமாதானம் சொல்லி வந்தேன்.

ஆனால் உண்மையில் கஸ்தூரி மற்றப் பெண்களைப் போல் அல்லதான். வீட்டில் எல்லோருக்கும் மூத்த பெண்ணான அவள் அம்மாவுக்கு ஓரளவு ஒத்தாசையாக இருக்கலாம். ஆனால் அவள் புஸ்தகம் உண்டு, தான் உண்டு என்றுதான் இருந்தாள். முதலில் பிறந்து விட்ட காரணத்தினால் அவளுக்கு எதிலும் தனிச் சலுகை; எந்தப் பொருள் வந்தாலும் அவள் கழித்ததுதான் மற்றவர்களுக்கு; மற்றக் குழந்தைகளுக்குக் கூடக் கஸ்தூரி என்றால் ஒருவித பயம்; மரியாதை.

ஒரு நாள் வழக்கத்துக்கு மாறாக நான் சற்று நேரம் கழித்து வீடு திரும்பினேன். வீட்டில் ஓர் அசாதாரண அமைதி. குழந்தைகள் சத்தம் எதுவும் இல்லாமல் அவரவர் இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

'நேரம் ஆகி விட்டது. இப்போது காப்பி வேண்டாம்' என்று காப்பியை என் அறைக்குக் கொண்டு வந்த சம்பகத்திடம் சொல்லி விட்டு மீண்டும், "ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? வீட்டில் ஏதோ ஒரு மாற்றம் காணப்படுகிறதே" என்று கேட்டேன்.

"ஆமாம், உங்கள் செல்லக் குழந்தை செய்கிற ஒவ்வொன்றையும் பார்த்தால்—"

"ஏன், என்ன சமாசாரம்?"

"யாரோ ஒருவருக்குத் திடீர் மாறுதல் ஆகி அரை விட்டுப் போய் விட்டாராம். அரை வருஷப் பரீட்சை முடியும் வரை அவர்களுடைய பெண்ணை — இவளோடு கூடப் படிக்கிறவளாம் — நம் வீட்டில் இருந்து கொள்ளப் பெட்டியும் படுக்கையுமாய் அழைத்து வந்திருக்கிறாள்!"

'ம்' என்றேன். எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அரை ஆண்டுப் பரீட்சைக்கு இன்னும் எவ்வளவு நாட்கள் இருக்கின்றன வென்று மனத்துக்குள் கணக்குப் போட்டேன்.

"என்ன பேசாமல் இருக்கிறீர்கள்?"

"என்ன சொல்லச் சொல்லுகிறாய்? அவள் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் பொறுப்பு உனக்குப் பாதி; எனக்குப் பாதி" என்று சொல்லிச் சிரித்து மழுப்பினேன். சம்பகத்துக்கு அது பிடிக்க வில்லை. "உங்களுக்கு



இயற்கை நெசவின்
இன்பமான இயல்பு
சான்போரைஸ்ட் பாப்லின்ஸ் :
ஷர்ட்டிங்ஸ் :
ஸ்ட்ரைப், டாப்பி, செக்ஸ், பைஜாமா
தோதிஸ் :
சாதா ஸ்பெஷல், ராணி ஸ்பெஷல், போர்டர்ஸ், கம்பாரி
ஸூட்டிங்ஸ் :
காபர்டின்
நைசான கலர் புட்டாக்கள் :
பிரிண்ட்ஸ் :
பிரிண்டட் லான்ஸ், வாயில்ஸ், பாப்லின்ஸ், க்ரீப்ஸ்,
பிரிண்ட் சாடீன்
2x2 கவர்ச்சியான முழு வாயில்கள்—
வீரேவிலும் புட்டாக்களிலும்
·SANFORIZED·
Arvind
Quality
FABRICS
அரவிந்த்
மில்ஸ் லிமிடெட்
அகமதாபாத்

என்ன? படுகிறவள் நான்தானே?" என்று சொல்லி விட்டு அறையை விட்டு அகன்றான்.

'கஸ்தூரியின் தோழி ரங்கமணி இரண்டு நாட்களுக்குள் எங்கள் குடும்பத்தோடு ஐக்கியமாகி விட்டாள். நான் மாமா, சம்பகம் அம்மா! அவளால் யாருக்கும் எந்தவித சங்கடமும் இல்லே. அவள் இருக்கிற இடமே தெரியாமல் பழகினாள். ஒரு வாரத்துக்குள் சம்பகத்தின் மனமே மாறிப் போய் விட்டது. இவ்வளவுக்கும் ரங்கமணியின் பெற்றோர்களைக் கூட நாங்கள் பார்த்ததில்லே. ரங்கமணியின் அப்பாவிடமிருந்து மட்டும் ஒரு கடிதம் வந்தது. எங்கள் உதவிக்கு நன்றி தெரிவித்து. சம்பகத்துக்குத் தலே வாருவது, சாதம் போடுவது முதலிய வேலைகள் அதிகந்தான் ரங்கமணி சேர்க்கையால். ஆனால் அதைப் பற்றி லவலேசமும் அவள் எண்ணவில்லே.

அரை வருஷப் பரீட்சை முடிந்து விட்டது. ரங்கமணியின் பெற்றோர்கள் அவளே அழைத்துப் போக வந்திருந்தார்கள். நாங்கள் செய்த உதவியைப் பல வழிகளில் புகழ்ந்து பேசினார்கள். ரங்கமணியின் அம்மாவும் சம்பகமும் நெடு நாட்கள் பழகியவர்கள் போல் பேசிக் கொண்டிருந்தார்கள். வாசலில் டாக்ஸி வந்து நின்று சாமான்கள் ஏற்றப்பட்டு விட்டன. ஏதோ ஒரு விஷயத்துக்காகத் தயக்கம் ஏற்படுகிறதென்று நான் புரிந்து கொண்டேன். ரயிலுக்கு நேரம் ஆகிக் கொண்டிருந்தது. அதை நான் சுட்டிக் காட்டினேன்.

அப்போது ரங்கமணியின் தாயார் ஒரு முழு நூறு ரூபாய் நோட்டை மடித்துச் சம்பகத்தின் கையில் கொடுத்து, "உங்களுக்கு மிகவும் சிரமம் கொடுத்து விட்டோம். ரங்கமணியை எங்கே விட்டு விட்டுப் போவது என்று நாங்கள் தயங்கிக் கொண்டிருக்கையில் கஸ்தூரி எங்களுக்குத் தெய்வம் போல் அடைக்கலம் கொடுத்தாள். அவள் சாதாரணப் பெண் அல்ல" என்றாள்.

"ரங்கமணி மிகவும் புத்திசாலி. இந்த வருஷம் முழுதுமே இங்கே இருக்கலாம். நீங்களோ மாற்றல் சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்! அவளேப் பிரிவது எங்களுக்கும் சங்கடமாக இருக்கிறது" என்று சொல்லி அந்த ரூபாயை அப்படியே ரங்கமணியிடம் கொடுத்து, "எங்கள் ஞாபகமாகக் கழுத்தில் நல்ல செயின் ஒன்று வாங்கிப் போட்டுக் கொள். அப்புறம் உன்னேப் பார்க்கும் போது முதலில் அதைப் பற்றித்தான் விசாரிப்பேன்" என்றாள்.

இதைக் கண்டு எனக்கு உள்ளுக்குள் பெருமிதம் தாங்க முடியவில்லே.

எல்லோரும் விடைபெற்றுக் கொண்டு டாக்ஸியில் போய் விட்டார்கள்.

"ரங்கமணி வந்த போது, நாம் கொஞ்சம் சங்கடப்பட்டோம்" என்றேன் மெதுவாக.

"கொஞ்சம் என்ன? ஆனால் இப்போது அவள் போனவுடன் மனம் கேட்க மாட்டேன் என்கிறது. கஸ்தூரி புத்திசாலி" என்றாள்.

நான் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லே.

கஸ்தூரி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயம். கல்லூரிச் சம்பளம் கட்ட அவசர அவசரமாய் ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்தேன். அன்று கடைசி நாள்.



"அதென்னமோ அம்மா, என் புருஷன் செக்கிலே கையெழுத்துப் போடணும், போடணும்னு ரொம்பத் துடியா இருந்துக்கிட்டு இருக்காரு!"

அதற்கும் பரீட்சைக்கும் சம்பந்தம் இருந்தது. அந்தச் சமயத்தில் சில்லறை தேடி அலேய நேரம் இல்லே.

அன்று மாலே சம்பளம் போக மீதி என்னிடம் வந்து சேரவில்லே. அதைச் சொல்லச் சம்பகம் வந்தாள்.

"யாரோ ஒரு வகுப்புத் தோழிக்கு எதிர் பார்த்த மணியார்டர் வரவில்லேயாம். அவள் சம்பளத்தையும் கஸ்தூரி சேர்த்துக் கட்டி விட்டு அவள் பரீட்சை ஹால் டிக்கெட்டை வாங்கிக் கொடுத்துப் புண்ணியம் சம்பாதித்துக் கொண்டு வந்திருக்கிறாள் கஸ்தூரி."

எனக்குச் சட்டென்று எரிச்சல் சிரசு முட்டியது. "கஸ்தூரி!" என்று இரைந்து கூப்பிட்டேன்.

"என்ன அப்பா?" என்று வந்தாள்.

"என்ன அம்மா, இது? இங்கே என்ன பணம் காய்த்துத் தொங்குகிறதா? வீட்டில் ஏற்படும் செலவுகளேப் பற்றி உனக்குத் துளிக் கவலே கிடையாது" என்று பாதிக் கோபமும் பாதி எரிச்சலுடனும் சொன்னேன்.

"என்ன அப்பா செய்கிறது? எனக்குப் பிடிச்ச சிநேகிதை. நல்லா படிக்கிறவள். அவள் அழுது விடுவாள் போலிருந்தது. நாளேக்குப் பணம் வந்து விடும் அப்பா!" என்றாள் கஸ்தூரி.

எனக்கு அதற்கு மேல் பேச வரவில்லே. கஸ்தூரி பிறந்ததிலிருந்து, ஏன் பிறப்பதற்கு முன்பிருந்தேதான் — கஸ்தூரி பேரில் எனக்கும் அவளுக்கும் அதிக பாசம். அவள் ஜனித்தவுடன் சம்பகம் மகிழ்ச்சியால் பூரித்தாள். என் பெற்றோர்களுக்கே சம்பகத்தின் மீது தனி அன்பு பிறந்து அவளேப் பூப்போலப் பாவித்து நடத்தினார்கள். என் தாயார், சம்பகம் குளிக்கும்போது, சாப்பிடும்போது, மத்தியானம் களேப்பாகப் படுத்திருக்கும் போது கூட அருகிலேயே இருந்து கண்ணே இமை காப்பது போல் காத்து வந்தாள். மாமியாருக்கும் மருமகளுக்கும் இருந்த சில்லறைப் பூசல்கள் சூரியனேக் கண்ட பனி போல் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன.

ஒரு நாள் இரவு சம்பகம் நிம்மதி இல்லாமல் அப்படியும் இப்படியும் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

"என்ன சம்பகம், அம்மாவைக் கூப்பிடட்டுமா?" என்று கேட்டேன்.

"வேண்டாம். இப்போதே என்ன பாடு படுத்துகிறது இது?"



''டாக்டர் அம்மாவை அழைத்து வரட்டுமா?'' என்று கவலை தெரிவித்தேன்.

''ஏன்? 'அவன்' வருவதற்கு இன்னும் மூன்று மாதங்கள் இருக்கின்றனவே'' என்று மகிழ்ச்சியோடு சொன்னான்.

'''அவன்' என்று கண்டுகொண்டாயோ?''

''அது அவன்தான். பெண்தான் இந்தப் பாடுபடுத்தும் என்று சொல்கிறார்கள். அப்பா வில்லாக வளைகிறது! ஆமாம், உங்கள் மகனுக்கு என்ன பேர் வைக்கப் போகிறீர்கள்?''

''அதை நான் இப்போது சொல்ல மாட்டேன். ஒரு வேளை ஆணாகப் பிறந்தால்?''

''அதற்கு நான் பேர் தயாராக வைத்திருக்கிறேன். மோகன். ஆனால் இது 'அவன்' தான். கம்மா சொல்லுங்கள்.''

''சொல்லட்டுமா?''

''பார்ப்போம், உங்கள் தேர்வை!''

''கஸ்தூரி!''

''அழகான பெயர். ஆனால் நான் இப்போது சொன்னேனே, அந்தப் பேரிலிருந்து யோசனை பிறந்ததோ?''

''இல்லவே இல்லை. இந்த யோசனை நம் கல்யாணத்தன்றே பிறந்து விட்டது. அம்மாவின் பெரிய அப்பா ஆசீர்வாதம் செய்தாரே ஞாபகம் இருக்கிறதா? 'காந்தி போல ஒரு மகனும், கஸ்தூரி போல ஒரு பெண்ணும்' என்று. அன்றே அந்தப் பேரைப் பதிவு செய்து வைத்து விட்டேன்.''

''எனக்கு அந்தப் பெயர் மிகவும் பிடித்திருக்கிறது. ஆமாம். நாளைக்கே மதுரைக்குப் போக வேண்டுமோ?''

''எடுத்தது ஒரு வாரம் லீவுதானே? இனி அடிக்கடி லீவும் எடுக்க முடியாது. எல்லா லீவும் தீர்ந்து போய் விட்டது.''

''நீங்கள் கவலைப்படாதீர்கள் என்னைப் பற்றி. கஸ்தூரி பிறந்தவுடன் தந்தி கொடுக்கிறோம். உடனே புறப்பட்டு வாருங்கள்.''

இந்தச் சமயத்தில் அம்மா வெளியில் கதவருகில் வந்து நின்று, ''என்னடா, அது பேச்சு? சம்பகத்துக்கு ஏதாவது செய்கிறதா, என்ன?'' என்று விசாரித்தாள்.

''இல்லை, அம்மா! கஸ்தூரி.... வந்து.... இல்லை, சம்பகத்துக்குத் தூக்கம் வராமல் சங்கடப்படுகிறாள்.''

''அது யார் கஸ்தூரி? டாக்டரா ?''

''இல்லை. பிறக்கப் போகிறவளுக்குச் சம்பகம் கஸ்தூரி என்று பேர் வைத்திருக்கிறாள்.''

''நான் ஒன்றும் பேர் வைக்கவில்லை.... உங்கள் மகன்தான் கஸ்தூரி என்று பேர் சூட்டப் போகிறாராம்.''

அம்மாவுக்கு இதைக் கேட்ட மாத்திரத்தில் சிரிப்பு பாதி, கோபம் பாதி என்று அவள் குரலில் இருந்து தெரிந்தது. ''போதும், போதும். அவள் நல்லபடியாகப் பெற்றுக் கரையேறட்டும். பேர் பூச்சி அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்'' என்று சொல்லிக் கொண்டே போய் விட்டாள்.

மதுரையில் அன்று பகல் இரண்டு மணி இருக்கும், தந்தி என் கையில் கிடைத்தபோது. தந்தியின் வாசகம் 'நான் வந்து விட்டேன்—கஸ்தூரி' என்று இருந்தது. என் உள்ளப் பூரிப்பை என் சகாக்கள் அறியா வண்ணம் மறைத்துக் கொண்டேன். அந்த நிமிஷமே அவசர காரியம் என்று லீவு வாங்கிக்கொண்டு அடுத்த ரயிலில் ஊருக்குப் புறப்பட்டேன்.

ஆனால் அந்த 'வந்து விட்டேன்' என்று வந்த தந்திக்கும் இப்போது 'நான் வருகிறேன்' என்று வந்திருக்கும் தந்திக்கும் எவ்வளவு வித்தியாசம்! என்றாலும் ஒங்கி எழுந்த கவலையை அடக்கிக் கொண்டு 'சம்பகத்திடம் அப்போதே சொல்லக் கூடாது; காலையில் அவளே தெரிந்து கொள்ளட்டும்' என்று நினைத்து, சிறிது கண்ணயர முயன்றேன்.

மறு நாள் காலையில் காரை எடுத்துக் கொண்டு தூத்துக்குடி எக்ஸ்பிரஸைப் பிடிக்க எழும்பூர் ஸ்டேஷனுக்கு ஓடினேன். நான் பிளாட்பாரத்துக்குப் போவதற்கும் வண்டி வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

ஒரு முதல் கிளாஸ் வண்டியின் கதவைத் திறந்து கொண்டு ஒரு 'ஸூட்கேஸு'டன் கஸ்தூரி இறங்கினாள். என்ன ஆச்சரியம்! அவளுக்குப் பின்னால் இன்னொரு சூட்கேசுடன் கஸ்தூரியின் கணவனும் இறங்குவதைக் கண்ட என் கண்களை நம்பவே முடியவில்லை.


''அப்பா ! அம்மா எங்கே? என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?''

''நமஸ்காரம் மாமா!'' என்றான் கஸ்தூரியின் கணவன்.

''நீ மட்டும் வருவதாய்த்தானே தந்தி அனுப்பியிருந்தாய்?''

''ஆமாம், ஆனால் இது கடைசி நிமிஷ ஏற்பாடு. நானும் வருகிறேன் என்று இவர் புறப்பட்டு விட்டார்.''

''சரி, புறப்படுங்கள்'' என்று அவர்களை அழைத்துக் கொண்டு வெளியே வரும்போது உண்மையில் என் மனம் அடைந்த மகிழ்ச்சியால் கால் பூமியில் பட்டதாகவே இல்லை. அந்த மகிழ்ச்சியையும் நான் சம்பகத்தினிடம் தான் பூரணமாக வெளியிட முடியும். ஆனால் அவளிடம் சொல்லாமல் நான் மட்டும் ஸ்டேஷனுக்கு வந்ததற்கு அவள் எப்படிக் கோபித்துக் கொள்ளப் போகிறாளோ? அதற்கு நான் என்ன பதில் சொல்லப் போகிறேனோ?



சலவைக்குப்பின்
இந்த முத்திரை மறைந்துவிடும்—
ஆனால் பின்னி துணியின் உன்னதத் தரமும்
உறுதியும் நீண்டகாலம் மறையாது.

ஒவ்வொரு நயா பைசாவையும் நன்கு யோசனை செய்து செலவிடும்போது நம் பணத்திற்கு முழு மதிப்பையும் எதிர்பார்க்கிறோம். பின்னி துணிகள் உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு அளிப்பவை—சந்தேகமில்லை.

கவனிக்கவும்: துணிகளை வெள்ளாவியில் வைக்காமல் ஜாக்கிரதையாக சலவை செய்தால் நீடித்து உழைப்பதுடன் சாயம் போகாமலும் இருக்கும்.

பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட், பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட், பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட் ஸ்தாபனத்தின் கிளைகள்.

BINNY'S FABRICS

BINNY & CO. MADRAS LTD

உங்களுக்குத் தேவையான பின்னி துணிகளை இந்த அடையாளம் காணும் அனுமதி பெற்ற பின்னி விற்பனையாளரிடமிருந்து கண்ட்ரோல் விலைக்கே வாங்குங்கள்.

BNT/BY/2204



பொன் விலங்கு

மணிவண்ணன்



முப்பதாவது அத்தியாயம்

கல்லூரி யூனியன் தேர்தலுக்கு மாணவர்கள் அபேட்சை மனுவைக் கொடுக்கும் இறுதி நாளான மறு நாள் மாலை மகேசுவரி தங்கரத்தினமும் மற்ற மாணவிகளும் எப்படியோ பாரதியைச் சம்மதிக்கச் செய்து அவள் கையாலேயே சத்தியமூர்த்தியிடம் அபேட்சை மனுவைக் கொண்டு வந்து கொடுக்கச் செய்து விட்டார்கள். அபேட்சை மனுவைக் கொடுப்பதற்காகச் சத்தியமூர்த்தியைத் தேடி வந்திருந்தபோது பாரதியின் முகத்தில் சிறிது கூட மகிழ்ச்சியே இல்லை. முன்பின் பழக்கமில்லாத மூன்றாம் மனிதனைத் தேடிக் கொண்டு வந்து அபேட்சை மனுவைக் கொடுப்பதுபோல் அவனிடம் கொடுத்து விட்டுப் போனாள். அவள் சற்றே அலட்சியமாக வந்து போனது போலவுமிருந்தது. சத்தியமூர்த்தியும் அவளிடம் அப்படியே நடந்து கொண்டான். தனக்கு அவள் பிரியமாக எழுதியிருந்த கடிதங்களை அவன் கண் முன்பே சுக்கல் சுக்கலாகக் கிழித்தெறிந்திருந்தது அவளுடைய மனத்தை அவ்வளவு ஆழமாக வேதனைப் படுத்தி ஆத்திரத்துக்குள்ளாக்கியிருக்கிறதென்று சத்தியமூர்த்தியால் தெரிந்து கொள்ள முடிந்தது. அப்படி அவள் மாறியிருந்தாலும், அவளைப் பொறுத்த வரை அந்த மாற்றத்தையே சத்தியமூர்த்தியும் நீடிக்க விரும்பினான்.

தன்னைப் பார்த்துப் பேசி விட்டுப் போன பின்பு மகேசுவரி தங்கரத்தினம் பாரதியைச் சந்தித்திருந்தால் அந்தச் சந்திப்பின்போது அவள் பாரதியைக் கேட்டிருக்கும் முதல் கேள்வி, ''உனக்கும் சத்தியமூர்த்திசாருக்கும் ஏதாவது தகராறு பாரதி?'' என்பதாகத்தான் இருந்திருக்க முடியும் என்று அவனால் இருந்த இடத்திலிருந்தே அனுமானம் செய்ய முடிந்தது. அபேட்சை மனுக்களை வாங்க வேண்டிய தேதி முடிந்து விட்டதனால் வந்திருந்த மூன்று அபேட்சைமனுக்களையும் ஏற்றுக்கொண்டு நோட்டீஸ் போர்டில் அறிவிப்பு ஒட்டச் செய்து விட்டான் சத்தியமூர்த்தி. அந்தந்த அபேட்சகர்களே விரும்பி கேட்டிருந்தபடி புவிகோவிந்தனுக்கு 'ஸ்கூட்டர்' வாகனச் சின்னமும், இன்னொரு மாணவனுக்குச் சைக்கிள் சின்னமும், பாரதிக்கு ரோஜாப் பூச் சின்னமும் தேர்தல் அடையாளங்களாகக் கொடுக்கப் பட்டிருந்தன. ஏதோ

பொதுத் தேர்தல் நடப்பதுபோல் கல்லூரி எல்லைக்குள் கூட்டமும் விளம்பரமும் பிரசாரச் சொற்பொழிவுகளும் தடபுடலா யிருந்தன. தரையில் சுண்ணாம்பினால் எழுதியும், சுவரொட்டிகள் அச்சடித்து ஒட்டியும், கூட்டம் போட்டுப் பேசியும் மாணவர்களின் ஆர்வம் பிரமாதப்பட்டுக் கொண்டிருந்தது. மூன்றாவது நாள் மாலையில் தேர்தல் வாக்குச் சீட்டுப் பதிவு நடைபெறுவதாக இருந்ததால் அதற்கு முந்திய இரண்டு தினங்களுக்குள்ளேயே மாணவர்கள் தங்களுடைய எல்லா விளம்பர வேலைகளையும் முடித்துக் கொண்டு விட வேண்டுமென்று தேர்தல் அறிக்கையில் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. சைக்கிள் சின்னத்துக்குரிய மாணவன் கடைசி நேரத்தில் என்ன காரணத்தாலோ மனம் மாறித் தன்னுடைய அபிமானிகளிடமும், அநுதாபிகளிடமும் பாரதியை ஆதரிக்கும்படி வேண்டுகோள் விடுக்கத் தொடங்கியிருந்தான். அவனுடைய ஆசை எப்படியாவது புலிகோவிந்தனைத் தோற்கும்படி செய்ய வேண்டுமென்பதுதானாம். அதனால் தான் விட்டுக் கொடுத்துப் புலிகோவிந்தனுக்கு எதிராகப் பாரதியின் கைகளை வலிமைப்படுத்தும் வேலையை மேற்கொண்டிருந்தான் சைக்கிள் சின்னத்துக்குரிய மாணவன். முடிவில் ஸ்கூட்டருக்கும், ரோஜாப் பூவுக்கும் கடுமையான போட்டி மூண்டிருந்தது. கல்லூரி மைதானத்தில் இரண்டு கட்சிக்காரர்களும் தீவிரமாக விளம்பரம் செய்யலானார்கள். ரோடுகளில் சுண்ணாம்பால் எழுதினார்கள். போஸ்டர்கள் அச்சிட்டு ஒட்டினார்கள். துண்டுப் பிரசுரங்களும் அச்சிட்டுக் கொடுத்தார்கள். கூட்டம் போட்டுச் சொற்



பொழிவுகள் செய்தார்கள். ஒரு கூட்டத்தில் புலி கோவிந்தன், ''ரோஜாப் பூவைக் காட்டிப் பூவையர்கள் உங்களை மயக்க முயல்கிறார்கள். மயங்காதீர்கள் ஆண் சிங்கங்களே! நம்முடைய ஸ்கூட்டரின் சக்கரங்களுக்குகீழே ரோஜாப் பூ நசுங்கப் போவது உறுதி! உறுதி!! உறுதி!!!'' என்று கடுமையாகப் பேசினானாம். அப்படி அநாகரிகமாகப் பேசியதற்காக அவன் மேல் விசாரணை நடத்த வேண்டுமென்று தேர்தல் அதிகாரியான சத்தியமூர்த்தியிடம் வந்து பாரதியின் சார்பில் புகார் செய்தாள் மகேசுவரி தங்கரத்தினம். அவள் தன்னுடைய புகாரைச் சொல்லி விட்டுப் போன கால் நாழிகைக்கெல்லாம் 'புலி'யின் சார்பில் ஒரு முரட்டு மீசைக்கார மாணவன் ஓடி வந்து, ''உங்களை எல்லாம் ஏறி மிதித்துச் சவாரி செய்ய நினைக்கிறார்கள் என்பதற்கு அவர்களுடைய ஸ்கூட்டர் சின்னமே சரியான அடையாளமாக இருக்கிறது மாணவர்களே! ஆகவே ஸ்கூட்டரை நம்பாதீர்கள்! அது உங்களை ஏறி மிதித்துச் சவாரி செய்து அதன் மூலம் தாங்கள் முன்னுக்குப் போய் விட விரும்புகிற சுயநலமிகளின் சின்னம் என்பதை மறவாதீர்கள்'' என்று அந்த யாழ்ப்பாணத்துப் பொண்ணு பேசறா சார்! இதை நீங்க கண்டிக்கணும்'' என்று ரிப்போர்ட் செய்தான். 'தேர்தலுக்கான பிரசாரக் கூட்டங்களில் இரு தரப்பாரும் நாகரிகமாகப் பேச வேண்டும்' என்று பொதுவாக மாணவர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பி விட்டுப் பேசாமல் இருந்தான் சத்தியமூர்த்தி. இந்த மாதிரித் தேர்தல் வேளைகளில் கல்லூரிகள் உணர்ச்சி வெள்ளமாயிருப்பதை யாரும் தடுக்க முடியாது. 'வயதானவர்கள் நடத்துகிற தேர்தல்களிலேயே சிறுபிள்ளைத்தனம் நிறைந்திருக்கும் போது சிறுபிள்ளைகளாகவே நடத்துகிற தேர்தல் வம்பில்லாமல் எப்படியிருக்கமுடியும்?' என்று நினைத்து மன அமைதி பெற்றான் அவன். தன்னுடைய கல்லூரி நாட்களில் அவனும் இப்படித் தேர்தல்களை அநுபவித்திருந்தான். 'இவைகளில் நிரம்பியிருக்கும் உணர்ச்சிப் போராட்டங்களும், ஆர்வங்களும்தான் சுவையான அம்சங்கள். அவற்றை முயன்று தடுக்க முடியாது. தடுப்பதும் கூடாது' என்பது அவன் எண்ணமாயிருந்தது. தேர்தலுக்காக மறு நாள் பிற்பகல் கல்லூரி வகுப்புக்கள் நடைபெறவில்லை. கல்லூரி நூல் நிலையம் 'போலிங் பூத்' ஆக மாறியிருந்தது. லைப்ரேரியன் ஜார்ஜ் சத்தியமூர்த்திக்குத் தேர்தல் உதவியாளராயிருந்தார்.

கல்லூரி மாணவர் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் இந்தச் சின்னஞ் சிறு தேர்தல் விழாவுக்கே இத்தனை பரபரப்பும், ஆர்வமும் இருக்குமானால், 'நாட்டளவில், நகரளவில், ஊரளவில் நடைபெறும் பொதுத் தேர்தல்களும் நகரசபைத் தேர்தல்களும், பஞ்சாயத்துத் தேர்தல்களும், அடிபிடி, குத்து வெட்டு, சொற்கொலை, உயிர்க் கொலை, மரியாதைக் கொலைகளை விளைவிப்பதற்குக் கேட்பானேன்?' என்றெண்ணினான் சத்தியமூர்த்தி. இளம் மாணவர்கள் இந்தத் தேர்தலில் கொண்டுள்ள சபலங்களையும், ஆர்வங்களையும் பார்த்த போது மனித மனத்தின் இயல்பைப் பற்றி நவநீத கவி பாடியிருக்கும் பாடல் வரிகள் சில அவன் நினைவுக்கு வந்தன. திரும்பத் திரும்ப அன்று அவன் இந்தப் பாடலையே நினைத்தான்.

என்சாண் உடம்பினில்
ஐம்புலக் கூடுவைத்தாய் — அந்த
ஐம்புலக் கூட்டினுள்ளே
ஆயிரம் நினைவுகளலைந்திட — ஓர்
ஒற்றை மனம் படைத்தாய்
ஒற்றை மனத்தினுள்ளே
கற்றைச் சபலங்களாய்ப் — பல
காரியச்சுமைகள் கனக்கவைத்தாய்

'ஆயிரம் நினைவுகள் அலைந்திட— ஒற்றை மனம் படைத்தாய்' என்ற ஒரு வரியை எத்தனை முறை வாய் விட்டுச் சொல்லிப் பார்த்தாலும் இன்பமாகத்தான் இருந்தது.

தேர்தல் முடிந்து, கல்லூரி நூல் நிலையத்தின் உள்ளே அமைக்கப் பட்டிருந்த 'போலிங் பூத்'தில் கடைசி மாணவனும் தன் வாக்குச் சீட்டைப் பதிவு செய்துவிட்டு வெளியேறிய பின்பு ஜார்ஜும், சத்தியமூர்த்தியும் வாக்குச் சீட்டுக்களை எண்ணுவதற்காக உட்புறம் தாழிட்டுக் கொண்டு உட்கார்ந்தார்கள். அப்போது ஜார்ஜிடம் இந்தப் பாடலைச் சொல்லி இதிலுள்ள கருத்து நயங்களை விளக்கினான் சத்தியமூர்த்தி:

''லைப்ரேரியனாக இருப்பதிலுள்ள ஒரே ஒரு தொல்லை, புத்தகங்களைப் படிக்க வேண்டுமென்ற தாகமே இல்லாமல் போய்விட்டது சார்! நீங்கள் இப்போது இந்தக் கவிதையை விளக்கிச் சொல்கிறீர்கள். கேட்பதற்குச் சுவையாக இருக்கிறது. இதே நவநீத கவியின் கவிதைப் புத்தகங்கள் நமது நூல் நிலையத்தில் நிறைய இருந்தும் நானாக இதுவரை எடுத்துப் படிக்க வேண்டுமென்று தோன்றவே இல்லை சார்!'' என்று பதில் சொன்னார் ஜார்ஜ்.



ரசிக பெருமக்களுக்கு இம்மாத பரிசு
சிவாஜி கணேசன்
ஸ்ரீ கிருஷ்ண
கெமிட்டி
புவனேஸ்வரி
நூர்ஜஹான்
ராஜாமணி பிக்சர்ஸ்
குங்குமம்
டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
சக்தி கிருஷ்ணசாமி • கவிஞர் கண்ணதாசன் • K.V. மஹாதேவன் • K. மோகன் • மாருதிராவ்
தயாரிப்பு: K. மோகன்
MOHAN ARTS
ELEGANT

அப்போது பிற்பகல் நாலரை மணிக்கு மேல் ஆகியிருந்தது. ஆறு மணி ஆறரை மணிக்குள் வாக்குச் சீட்டுக்களை எண்ணி மாணவர்களுக்குத் தேர்தல் முடிவை அறிவித்துவிட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு ஜார்ஜும், சத்தியமூர்த்தியும் வோட்டுக்களை எண்ண ஆரம்பித்தார்கள். நூல் நிலையக் கட்டிடத்துக்கு வெளியே முடிவை அறிந்து கொள்ளத் தவிக்கும் ஆர்வத்தோடு மாணவர்களும், மாணவிகளும் ஏராளமாகக் கூடியிருந்தார்கள்.

கைகள் வாக்குச் சீட்டை எண்ணிக் கொண்டிருந்தாலும் அந்த இரண்டு மூன்று நாட்களில் பாரதியிடம் ஏற்பட்டிருந்த மாறுதல்களைப் பற்றியே சத்தியமூர்த்தியின் மனம் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தது. 'பிளவர்ஸ் கார்னரில்' பூ வாங்குவதற்காக வந்திருந்த தினத்தன்று, அவள் தன்னைத் தேடி அறைக்கு வந்து தான் கிழித்தெறிந்திருந்த கடிதத் துணுக்குகளைப் பார்த்துவிட்டு நடைப் பிணமாகத் திரும்பியதையும் பின்பு அன்று முழுவதும் கல்லூரிக்கு வராமலிருந்ததையும் மறு நாள் கல்லூரிக்கு வந்து தன் முகத்தைக் கூட நன்றாக நிமிர்ந்து பாராமலே அபேட்சை மனுவைக் கொடுத்து விட்டுச் சென்றதையும் ஒரு சேரச் சிந்தித்து அவளுள்ளே நிகழ்ந்திருக்கும் மாறுதல்களை அவன் அநுமானிக்க முயன்றான். தான் கடுமையாகவும், நெகிழ்ச்சியின்றியும் இருப்பதைப் புரிந்து கொண்ட பிறகு, அவளுடைய பணிவும், விநயமும் தன்னிடம் மாறியிருப்பதாகத் தோன்றியது அவனுக்கு. முதன் முதலாகப் பூபதியின் மாளிகையில் இன்டர்வியூவுக்கு வந்திருந்தபோது ஓவிகள் எழுதிய திரைச் சீலையை விலக்கிக் கொண்டு எழுதாத பசுங் கிளியாய் எட்டிப் பார்த்து நாணமும் அழகும் போட்டியிடும் முகத்தோடு தலையைக் குனிந்துகொண்ட பாரதிக்கும், நேற்று முன் தினம் அபேட்சை மனுவைக் கொடுப்பதற்கு வந்திருந்த பாரதிக்கும் நிறைய வேறுபாடு இருந்தது. 'அன்பைச் செலுத்துவதற்கு நம்பிக்கை வாய்ந்த அந்தரங்க மனிதன் இவன்' என்று ஒரு பெண் தான் மனப் பூர்வமாக நேசிக்கத் தேர்ந்தெடுத்த ஒருவனிடம் அந்த நம்பிக்கையும் அந்தரங்கமும் இல்லையென்று தெரிந்து மனம் உடைந்த பின் தெரிகிற சோர்வும் அலட்சியமும் இப்போது பாரதியிடம் ஏற்பட்டிருப்பதாக அவனுக்குப் புரிந்தது. 'செல்வக் குடும்பத்துப் பெண்களில் இத்தனை பணிவாகவும், நாணமாகவும் ஆண்களுக்கு முன் நடந்து கொள்கிறவர்கள் கூட இருக்கிறார்களா?' என்று பாரதியைச் சந்தித்த முதல் சந்திப்பின்போது அவன் வியந்திருக்கிறான். அதே பாரதி தான் அவனிடம் அபேட்சை மனுவைக் கொடுக்க வந்த தினத்தன்று முற்றிலும் மாறிப் போயிருந்தாள். அவள் மாற வேண்டுமென்றுதான் அவனே ஆசைப்பட்டான். ஆனால் அந்த மாறுதல் இப்படி ஓர் அலட்சியமாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கவில்லை. முன்பு 'இண்டர்வ்யூ' முடிந்ததும் தன்னை பஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றபோது ஆர்வத்தோடு கல்லூரிக் கட்டிடங்களை யெல்லாம் சுற்றிக் காண்பித்த பாரதியையும், அன்று பஸ் நிலையத்தில் மழை பெய்திருந்த செம்மண் பூமியைப் பார்த்து, 'இண்டர்வ்யூ'வின்போது நீங்கள் கூறிய பாடலில் வந்த உவமையின் அழகு இப்போதுதான் நன்றாகப் புரிகிறது சார்!' என்று கூறிய பாரதியையும் இப்போது நினைவுகூர முயன்றான் சத்தியமூர்த்தி. அவள் எந்தவிதமான அன்பை அவனிடம் எதிர்பார்த்தாளோ அது அவனிடம் இல்லை யென்று புரிந்ததும், பணிவு, விநயம் எல்லாம் கூட அவளிடமிருந்து இன்று உடனடியாக மாறிப் போய் விட்டாற் போலிருந்தது. அவள் மதுரையில் தனக்குக் கிடைக்கும்படி எழுதியிருந்த கடிதங்களைத் தான் படித்தபோது, 'உலகத்தில் இப்படியும் ஓர் அன்பு உண்டா?' என்றெண்ணி வியந்ததையும் இப்போது

> ★
>
> **சில சமயங்களில் பெண் என்பவள் மனிதனுடைய சிந்தனைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்ட அதிசயமாயிருக்கிறாள். அப்படிச் சமயங்களில் அவள் அதிசயமாயிருக்கிறாள் என்ற ஒன்றைத் தவிர வேறு எதையுமே அவளைப் பற்றிப் புரிந்து கொள்ள முடிவதில்லை.**
>
> ★

நினைத்தான் சத்தியமூர்த்தி. அந்தக் கடிதங்களை அவனே விழித்திருந்ததைப் பார்த்துத்தான் அவள் மனம் மாறியிருக்கிறாள். ஏதோ ஒன்றை எதிர்பார்த்துப் பணிகிற பணிவும், நாணமும் நிலையானவை அல்ல என்றுதான் இப்போது அவன் எண்ண வேண்டியிருந்தது. சில சமயங்களில் பெண் என்பவள் மனிதனுடைய சிந்தனைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட அதிசயமாக இருக்கிறாள். அப்படிப்பட்ட வேளைகளில் அவள் அதிசயமாயிருக்கிறாள் என்ற ஒன்றைத் தவிர வேறு எதையுமே அவளைப் பற்றிப் புரிந்து கொள்ள முடிவதில்லை. 'உங்களைப் பாராதபோது பார்க்கத் தவித்திருக்கிறேன். பார்த்தபோது பிரியத் தவித்திருக்கிறேன்' என்று நவநீத கவியின் கவிதையைச் சொல்லி ஒருநாள் தன்னிடம் அழுத அதே பாரதி அபேட்சை மனுவைக் கொடுக்க வந்த தினத்தன்று அலட்சியமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு போனதை நினைத்துப் பார்த்து அவள்தான் அப்படிச் செய்தாள் என்பதை நம்ப முடியாமல் மனம் குழம்பினான் சத்தியமூர்த்தி. 'ஆயிரம் நினைவுகள் அலைந்திட ஒற்றை மனம் படைத்தாய்' என்று நவநீத கவி பாடினாரே; அது பெண்களுக்குத்தான் மிக மிகப் பொருத்தம் என்று நினைக்கத் தோன்றியது அவனுக்கு. அவளுடைய மாறுதலால் தான் எதையும் இழப்பதாக அவனுக்குத் தோன்றாவிட்டாலும் அவள் ஏன் இப்படி மாறினாள்?' என்று மட்டும் சிந்திக்கத் தோன்றியது. அப்படிச் சிந்தித்ததில் மோகினியின் அன்பைப் போல ஆட்படுகிற அன்பைச் செய்வதற்குப் பாரதி பொறுமையற்றவள் என்றும் பாரதியால் செய்ய முடிந்த அன்பு ஆள விரும்புகிற அன்பே என்றும் அவனால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

ஜார்ஜ் தாம் எண்ண வேண்டிய வாக்குச் சீட்டுக்களை எண்ணி முடித்து அந்த எண்ணிக்கையையும் ஒரு துண்டுத் தாளில் குறித்துத் தயாராக வைத்து விட்டார். சத்தியமூர்த்தி இரண்டு மூன்று முறை எண்ணும் போதே எண்ணிக்கையை மறந்து போய்ச் சிந்தனையில் ஆழ்ந்து விட்டதன் காரணமாக மீண்டும் மீண்டும் அவற்றை எண்ண வேண்டியிருந்தது. சந்தேகமாக இருந்ததனால் சத்தியமூர்த்தி தான் எண்ணிய வாக்குச் சீட்டுக்களையும் ஒரு முறை ஜார்ஜிடம் கொடுத்து அவரை எண்ணச் செய்தபின் மொத்தம் கூட்டிப் பார்த்ததில் நானூறு வோட்டுக்கள் அதிகமாகப் பெற்றுப் பாரதியே வெற்றியடைந்திருப்பதாகத் தெரிந்தது.

''இப்போது நம்முடைய நிலை மிகவும் தர்மசங்கடமானது சார்! 'புலி கோவிந்தனும்' அவனுடைய ஆட்களும் வெளியே ஆவலோடு காத்திருக்கிறார்கள். பாரதிக்கு வெற்றி என்று வாயில் பக்கம் போய் அறிவித்தோமானால் நீங்களும் நானும் ஏதோ சூழ்ச்சி செய்து கல்லூரி நிர்வாகியின் மகளாகிய பாரதியை வெற்றி பெற வைத்து விட்டோம் என்று தோல்வி ஏமாற்றத்தில் வாய் கூசாமல் பழி சொல்லுவார்கள். பேசாமல் மாணவர்கள் எல்லாரையும் வீட்டுக்குப் போகச் சொல்லி விட்டு நாளைக் காலையில் 'நோட்டீஸ் போர்டில்' முடிவு வெளியாகும். விடிந்ததும் வந்து பார்த்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லி அனுப்பி விடலாம்'' எனக் கூறி மருண்டார் ஜார்ஜ்.

''இதிலென்ன பயம் வந்தது? வாக்குச் சீட்டுக்களை எண்ணிப் பார்த்து உண்மை முடிவை அறிவிக்கிறோம் நாம். நம்மை யார் எதற்காகப் பழி சொல்ல முடியும்?'' என்றான் சத்தியமூர்த்தி. அதைக் கேட்ட பின்பும் ஜார்ஜ் பயந்து தயங்கத்தான் செய்தார்.

''உங்களுக்குத் தயக்கமாக இருந்தால் நான் வெளியே போய்த் தேர்தல் முடிவை அறிவிக்கிறேன் மிஸ்டர் ஜார்ஜ்!'' என்று கையில் இரண்டு அபேட்சகர்களுடைய மொத்த வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கைத் தொகையும் எழுதிய காகிதத்துடன் நூல் நிலையக் கதவுகளைத் திறந்து கொண்டு வெளியே வந்தான் சத்தியமூர்த்தி. அவன் வெளியே வந்ததும் அங்கு நிலவிய சந்தைக் கடை இரைச்சல் போன்ற கூப்பாடுகளும், மாணவ மாணவிகளின் பேச்சுக் குரல்களும் அடங்கி எல்லார் முகங்களும் அவனையே நோக்கின. எல்லார் செவிகளும் அவன் கூறப்போகும் சொற்களுக்காகத் தாகத்தோடு காத்திருந்தன. புலிகோவிந்தனுடைய ஒரு கை வலது பக்கத்து மீசை நுனியிலிருந்தது. பாரதி மட்டும் தலையைக் குனிந்து கீழே தரையைப் பார்க்கத் தொடங்கியிருந்தாள்.

மிஸ். பாரதி.....என்று பேரைப் படித்து விட்டு அவளுடைய மொத்த வோட்டுக்களின் எண்ணிக்கையையும் படித்து அவள் வெற்றி பெற்றதாக அறிவித்து விட்டுப் புலிகோவிந்தனின் மொத்த வாக்குக்களையும் கூறி, அவற்றை விடப் பாரதிக்கு எவ்வளவு வோட்டுக்கள் அதிகம் என்பதையும்

அவன் சொல்லி முடிப்பதற்குள்ளேயே பாரதியோடிருந்த பெண்களின் வெற்றி ஆரவாரமும், புலிகோவிந்தனோடிருந்த ஆண்களின் முரட்டுக் கூக்குரல்களும் ஒலிக்கத் தொடங்கி விட்டன. 'ஸ்கூட்டர் பஞ்சராகி விட்டதுடா' என்று ஒரு குறும்புக்காரப் பெண் கூச்சலிட அதைக் கேட்டு ஆத்திரமடைந்த புலிகோவிந்தனின் தோழன் ஒருவன் கீழே கிடந்த சரளைக் கல் ஒன்றை எடுத்து அந்தப் பெண்ணின்மேல் வீசுவதற்குக் குறி பார்த்தான்.

''எங்கே எறியுங்கள் மிஸ்டர்! நீங்கள் மட்டும் என் மேல் இந்தக் கல்லை எறிந்து விடுங்கள் பார்க்கலாம்'' என்று அந்தப் பெண் முன்னால் ஓடி வந்து அசட்டுத் துணிவோடு நின்றாள். சத்தியமூர்த்தி ஓடிப் போய் அந்தப் பையனின் கையில் இருந்த கல்லைப் பறித்து எறிந்தான்.

''வயதினால் சிறு பிள்ளைகளாக இருக்கலாம். அது தவறில்லை. ஆனால் புத்தியினாலும், செயலினாலும் கூடச் சிறு பிள்ளைகளாயிருப்பதை மன்னிக்க முடியாது'' என்று ஆத்திரத்தோடு அந்த மாணவனையும், அவனைக் கோபமூட்டிய மாணவியையும் கண்டித்தான் சத்தியமூர்த்தி. கூட்டத்தைக் கலையச் செய்து மாணவர்களுக்குள் தேர்தல் முடிவு பற்றிக் கலகம் மூளாமல் வீட்டுக்கு அனுப்புவதற்கு அவன் அரும்பாடு பட வேண்டியிருந்தது. எல்லாரும் கலைந்த பின்பும், பாரதியும், அவள் தோழிகள் சிலரும் தங்களுக்குள் ஏதோ பேசியபடி நூல்நிலையத்துக்கு வெளிப் பக்கத்திலிருந்த மைதானத்திலேயே தயங்கி நின்றார்கள். ஒரு நாகரிகத்துக்காகப் பாரதியிடம், 'கங்ராஜுலேஷன்ஸ்' என்று அவளருகே சென்று சத்தியமூர்த்தி வெற்றியைப் பாராட்டித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்த போதும் கூட அவள் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதது போல் அலட்சியமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''சார் உன்னைத்தான் கூப்பிடறார்டீ'' என்று பாரதிக்கு அருகில் நின்ற மங்கை வரி தங்கரத்தினம் எடுத்துக் கூறியும் அவள் சத்தியமூர்த்தியை ஏறிட்டுப் பார்க்கவேயில்லை. சத்தியமூர்த்திக்குச் சுருக்கென்றது. ''சிரமப்படுத்தியதற்கு மன்னிக்க வேண்டும் மிஸ் பாரதி!'' என்று கூறி விட்டுப் பதிலை எதிர்பாராமல் உள்ளே திரும்பி விட்டான் அவன். ஆனாலும் அப்போது அவள் நடந்து கொண்ட விதம் அவனுடைய மனத்துக்குள் ஒரு தீராத புதிராகவே இருந்தது. (தொடரும்)

மோட்டார் தயாரித்த மேதை

இன்றைக்கு அறுபத்தேழு வருஷங்களுக்கு முன்னால் ஹென்றி போர்டு தமது முப்பத்தி மூன்றாவது வயதில் தயாரித்த முதல் மோட்டர் கார் ஒரு கள்ளிப் பெட்டி போலத்தான் இருந்தது. ஒருவர் மட்டுமே உட்காரக்கூடிய இதில் ஸ்டியரிங் சக்கரத்துக்குப் பதில் தெம்புகோல் போன்ற கம்பி ஒன்று மட்டுமே இருந்தது. சைக்கிள் சக்கரங்கள் மாட்டப் பட்டிருந்தன. ரோட்டில் இருந்தோர் வழி விட்டு விலக வேண்டுமானால் கணகணவென்று மணி அடிக்க வேண்டியதுதான். எனினும் இன்று விநோதமாய்த் தோன்றும் இந்தக் கார் அன்று அனைவரையும் அதிசயத்தில் ஆழ்த்தும் வகையில் ஓடியது; இன்றும் ஓடி அனைவரையும் அதிசயத்தில் ஆழ்த்துகிறது!



மோட்டார்கள் தயாரித்ததோடு நில்லாது, அமெரிக்காவில் சாதாரணத் தொழிலாளர்களும் வாங்கக் கூடிய வகையில் அதனை மலிவான விலையில் ஏராளமாய்த் தயாரித்ததுதான் போர்டுக்குப் பெருமை. உலகிலேயே மிகப் பெரிய தொழிற்சாலையாக அவர் மோட்டார் கம்பெனி விருத்தி அடைந்தது. இன்றைய தினம் உற்பத்தித் துறையில் கையாளப்படும் 'கன்வேயர் பெல்டு' போன்ற இயந்திர முறைகள் பலவற்றுக்கும் காரணகர்த்தா ஹென்றி போர்டுதான். தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு லாபத்தில் பங்கு, குறைந்தபட்ச சம்பளம், எட்டு மணி நேர வேலை போன்ற சீர்திருத்தங்களைக் கொணர்ந்தார் அவர்.

இரண்டாவது உலக யுத்தத்தில் அமெரிக்கா இழுத்து விடப்பட்டதும் வெகுண்டு எழுந்த போர்டு 'ஒரு மணி நேரத்துக்கு ஒரு பாம்பர் விமானம் வீதம் தயாரிப்பேன்' என்று சவால் விட்டார். யுத்தம் முடியும் வரை பி-24 விமானங்களைச் செய்து குவித்தார்.

ஹென்றி போர்டு பிறந்து ஜூலை 30ந் தேதியோடு நூறு வருஷங்கள் பூர்த்தியாகி நூற்றாண்டு விழா கொண்டாடுகையில் நாமும் அன்னாருக்கு அஞ்சலி செலுத்துவோம்.



நீதிமன்ற நகைச்சுவை



குருடாக இருப்பது கஷ்டம்தான். ஆனால் சிலர் குருடாகத்தான் இருக்க வேண்டும்.

"நீதி எந்தக் கட்சியைச் சேர்ந்தவன் குற்றவாளி என்று கவனிப்பதில்லை; அவனுடைய சிநேகிதர்கள் யார் என்று எண்ணுவதில்லை; அவனுக்கு யார் சொந்தக்காரர்கள் என்று பார்ப்பதில்லை — அதனாலேயே, நீதிக்குக் கண் குருடு" என்கிறார் ஓர் ஆங்கில அறிஞர்.

பாரத நாட்டு ஜனநாயகத்தைத் தாங்கும் தூண்களில் முக்கியமானது நீதி மன்றம். ஆனால் இந்த நீதிமன்றத்தை மேற்கூறிய ஆசிரியர் கூறியபடி குருட்டுத்தனமாக நீதி வழங்கவிட மறுக்கிறார்கள் ஆட்சியாளர்கள். கண் திறந்து நாங்கள் யார் என்று பார்த்துக் கொள் என்று மிரட்டுகிறார்கள். நீதிமன்றத் தீர்ப்புக்கு முரணாக அரசியல் நிர்ணயச் சட்டத்தையே மாற்ற முயல்கிறார்கள். இச்சமயத்தில் நாம் சில பழைய கால நீதிமன்ற நிகழ்ச்சிகளையும் நகைச்சுவையையும் நேயர்களுக்கு நினைவுகூர்கிறோம். — ஆசிரியர்

கண்டிப்பும் கருணையும்

ஆச்சாரியாரின் அறிவுக்கூர்மையையும் இருதய தயாளத்தையும் ஒருங்கே எடுத்துக் காட்டும் ஒரு சம்பவத்தைக் கேளுங்கள். அவர் சேலத்தில் பிரபல வக்கீலாக இருந்தபோது நடந்த சம்பவம்தான்.

ஒரு நாள் ஒரு படித்த பிராமணர் தமது குடும்பத்தோடு ஸி. ஆர். வீட்டுக்கு வந்தார்.

"நான் பாலக்காடு ஹைஸ்கூலில் உபாத்தியாயர். பெயர் ஹரிஹரய்யர். திருப்பதிக்குக் குடும்பத்தோடு சென்றிருந்தேன். திரும்பி வரும்போது கையிலிருந்த பணம் களவு போய் விட்டது. தாங்கள்தான் உதவ வேண்டும்."

"சரி; பார்த்துக் கொள்வோம். இன்று சாயங்காலம்தானே இனி மேல் பாலக்காட்டுக்கு ரயில்? இங்கேயே சாப்பிட்டு விட்டு இருங்கள். நான் கோர்ட்டுக்குப் போய் விட்டு வருகிறேன்!" என்று சொல்லி விட்டு ஸி. ஆர். வெளியே சென்றார்.

நேரே தந்தி ஆபீசுக்குப் போய்ப் பாலக்காட்டுக்கு எக்ஸ்பிரஸ் தந்தி அடித்தார். "ஹரிஹரய்யர் என்ற பெயர் கொண்ட உபாத்தியாயர் இங்கு ஒருவரும் இல்லை" என்று பதில் வந்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம் போலீஸ் ஜவான்கள் இருவர் ஆச்சாரியார் வீட்டுக்குச் சென்று போலி ஹரிஹரய்யரைக் கைது செய்துகொண்டு வந்து மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நிறுத்தினார்கள். "பொய் சொல்லி ஏமாற்றிப் பணம் பறிக்க முயன்றதாக" வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

உடனே விசாரணையும் ஆரம்பமாயிற்று. ஆச்சாரியார் சாட்சி கூறியதும், போலி ஹரிஹரய்யர் தாம் சொன்னது பொய்தான் என்று ஒப்புக்கொண்டார்.

கோர்ட்டில் கூடியிருந்த வக்கீல்கள் ஆச்சாரியாரின் அறிவுத் திறத்தை மெச்சினார்கள்.

மாஜிஸ்திரேட்டும் அதே மனோபாவத்துடன், "இருநூறு ரூபாய் அபராதம்; அபராதத்தைக் கட்டத் தவறினால் மூன்று மாதம் கடுங் காவல்" என்று தீர்ப்புக் கூறினார்.

ஹரிஹரய்யரைப் பின்தொடர்ந்து கோர்ட்டுக்கு வந்திருந்த அவருடைய மனைவி மக்கள் 'ஓ'வென்று புலம்பத் தொடங்கினார்கள். ஹரிஹரய்யர் ராஜாஜியைப் பார்த்து, "நீங்கள் தான் காப்பாற்றவேண்டும்" என்று கூறினார்.

ஆச்சாரியார் உடனே ஹரிஹரய்யரின் வக்கீலாகி, "அபராதம் ரொம்ப அதிகம்; தயவுசெய்து குறைக்க வேண்டும்" என்றார்.

"சரி; குறைத்துத் தொலைக்கிறேன்; ஐம்பது ரூபாய்!" என்றார் மாஜிஸ்திரேட்.

"ஐம்பது ரூபாய்க்கு நான் எங்கே போவேன்?" என்று ஹரிஹர அய்யர் மீண்டும் அலறினார்.

"தயவுசெய்து கோர்ட்டார் இன்னும் கொஞ்சம் அபராதத்தைக் குறைக்க வேண்டும்" என்று ஸி. ஆர். கேட்டுக் கொண்டார்.

"இதென்ன தொல்லை? இதற்குக் கேஸ் கொண்டு வருவானேன்? சரி; பத்து ரூபாய்!" என்றார் மாஜிஸ்திரேட்.

"ரொம்ப வந்தனம்!" என்று சொல்லி விட்டு ஸி. ஆர். தமது சட்டைப் பையிலிருந்து பத்து ரூபாய் எடுத்து அபராதம் கட்டினார். ஹரிஹர அய்யரையும் அவருடைய குடும்பத்தாரையும் மறுபடியும் வீட்டுக்கு அழைத்துப் போய்ச் சாப்பாடு செய்வித்து, அவர்கள் உண்மையில் போக வேண்டிய ஊருக்கு டிக்கெட்டும் வாங்கிக் கொடுத்து அனுப்பினார்.



எப்படி இருக்கிறது கதை?

[காட்டுக்கு ஒரு புதல்வர் — கல்கி]

கைதியின் கடிதம்!



சேலத்தில் 1882ம் ஆண்டில் இந்து முஸ்லிம் கலகம் ஒன்று நடைபெற்றது. சேலம் செவ்வாய்ப் பேட்டையில் ஒரு மசூதியிருக்கும் தெருவில் இந்துக்கள் ஊர்வலம் நடத்துவதைத் தடுத்தார்கள். நீதி மன்றத்தில் வழக்கு நடந்து இந்துக்கள் ஊர்வலத்துக்கு அனுமதி கிடைத்தது. ஆனால் முஸ்லிம்கள் தடுத்து நிறுத்துவது நிற்கவில்லை. இதனால் பெருத்த கலகம் விளைந்து முஸ்லிம் மசூதி தரை மட்டமாக்கப்பட்டது. கலகக்காரர்கள் மீது இருந்த வழக்கை விசாரிக்கத் தனி செஷன்ஸ் நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டார். விஜயராகவாச்சாரியாரும் ஒரு குற்றவாளியாக நிறுத்தப்பட்டார். கலகம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட இந்துக்களுக்காக அவர் பரிந்து பேசியதையும் வழக்காடியதையும் அரசாங்கத்தார் தவறாகப் பொருள் செய்து கொண்டு, அவரே மசூதி தரை மட்டமாக்கப்பட்ட போது அதன் பக்கத்திலிருந்து அந்தக் காரியத்தைச் செய்யத் தூண்டினார் என்ற குற்றத்தை அவர் மீது சாட்டினார்கள். விஜயராகவாச்சாரியாருக்கும் மற்ற ஒன்பது எதிரிகளுக்கும் செஷன்ஸ் நீதிபதியினால் பத்து ஆண்டு தீவாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டது.

செஷன்ஸ் நீதிபதியின் தீர்ப்பைக் கேட்டு விஜயராகவாச்சாரியார் அப்படியே திகைத்து விட்டார். அந்தக் காலத்தில் சிறைவாசம் என்றால் சாதாரண விஷயமல்ல. அதுவும் அந்தமான் தீவில் பத்து ஆண்டு தண்டனை என்றால் எவ்வளவோ கஷ்டம். சிறைவாசம் செய்தவர்களுக்கு நமது சமூகத்தில் இடம் இல்லை. விஜயராகவாச்சாரியார் விடவில்லை. சிறையிலிருந்துகொண்டே சென்னை உயர்நீதி மன்றத்துக்கு முறையிட்டார். புகழ்பெற்ற வழக்கறிஞர் நார்ட்டன் துரை அவர் வழக்கை எடுத்து வாதாடினார்.


உயர்நீதி மன்றத்தில் அவர் வழக்கு விசாரணைக்கு வந்தது. நார்ட்டன் துரை ஏதோ கடிதத்திலிருந்து கோர்ட்டாருக்குத் தம் வழக்கறிஞருக்கு விரோதமாகப் படித்துக் காட்டிக் கொண்டிருந்தார். தலைமை நீதிபதி அவரை "நீங்கள் எதைப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு அவர், "கைதி சிறையிலிருந்து எழுதியனுப்பிய வாதத்தைப் படிக்கிறேன். அதைவிட நான் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை" என்று பதிலளித்தார். புகழ்பெற்ற நார்ட்டன் துரை தம்முடைய வாதத்தைவிட விஜயராகவாச்சாரியார் சிறையிலிருந்து எழுதியனுப்பிய வாதமே மேலானது என்று கருதினாரென்றால் அவருடைய சட்ட அறிவைக் குறித்துச் சொல்லவும் வேண்டுமா? உயர்நீதிமன்றம் விஜயராகவாச்சாரியாரைக் குற்றமற்றவர் என்று தீர்ப்பளித்து விடுதலை செய்தது. அது மட்டுமல்லாமல் தலைமை நீதிபதி, அவர் விடுதலை யடைந்ததும் அவருக்குச் சொல்லியனுப்பி அவருடன் உரையாடியது அவருடைய பெருமையை எடுத்துக் காட்டியது. தாம் விடுதலை யடைந்ததோடு, தம்மோடு தண்டிக்கப்பட்ட மற்றத் தோழர்களுக்கும் விடுதலை வாங்கித் தந்தார் விஜயராகவாச்சாரியார். பொய்ச் சாட்சியம் கூறியவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தார்.

['தமிழ்நாடு தந்த தலைவர்கள்' ஆர். டி. பார்த்தசாரதி புத்தகத்திலிருந்து.]

முதல் வழக்கு!

முதன் முதலில் மமிபாய் என்ற ஒருவரின் வழக்கை நடத்துவதற்கு எடுத்துக் கொண்டேன். அது 'ஸ்மால்காஸ்' வழக்கு. அந்த வழக்கைக் கொண்டு வந்து கொடுத்த தரகருக்கு ஏதாவது கொஞ்சம் தரகுப் பணம் தர வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிக் கொடுப்பதற்கு நான் கண்டிப்பாக மறுத்து விட்டேன்.

ஸ்மால்காஸ் கோர்ட்டில் நான் ஆஜராவது அதுவே முதல் தடவை. நான் பிரதிவாதிக்காக ஆஜரானதால் வாதியின் சாட்சிகளை நான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும். அதற்காக எழுந்தேன். ஆனால் என் தைரியமெல்லாம் போய்த் தலை சுற்ற ஆரம்பித்துவிட்டது. கோர்ட்டு முழுதுமே சுற்றுவதாகப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய ஒரு கேள்விகூட என் சிந்தனையில் எழவில்லை. நீதிபதி சிரித்திருப்பார்; வக்கீல்களும் இக்காட்சியை ரசித்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நானோ இதில் எதையும் காணும் நிலையில் இல்லை. பேசாமல் உட்கார்ந்து விட்டேன். 'இந்த வழக்கை நடத்த என்னால் முடியாது. பட்டேலை அமர்த்திக் கொள்ளலாம். எனக்குக் கொடுத்த கட்டணத்தையும் திருப்பித் தந்துவிடுகிறேன்' என்று ஏஜண்டிடம் சொன்னேன். ரூ. 51 கட்டணம் கொடுப்பதென ஸ்ரீ பட்டேல் வக்கீலாக அமர்த்தப்பட்டார்.



என் கட்சிக்காரர் வெற்றி பெற்றாரா, தோற்றாரா என்பதுகூட எனக்குத் தெரியாது. கோர்ட்டை விட்டு அவசரமாகக் கிளம்பினேன். ஆனால் என்னைக் குறித்து எனக்கே வெட்கமாய் இருந்தது. வழக்கை எடுத்து நடத்தும் தைரியம் வரும் வரையில் எந்த வழக்கையும் எடுத்துக் கொள்வதில்லை என்று முடிவு கட்டிக் கொண்டேன்.

— மகாத்மா காந்தி 'சுயசரிதை'யில்



சென்ற நூற்றாண்டில் வில்லியம் ஹாலோவே என்ற புகழ்பெற்ற நீதிபதி சென்னை நீதிமன்றத்தில் இருந்தார். நீதிமன்றத்தில் வக்கீல்கள் தமது வழக்குக்குச் சம்பந்தப்படாத வாதங்களைப் பேசினால் அவரால் ஒரு கணம்கூடப் பொறுக்க முடியாதாம். அதேபோல் உப்புச் சப்பில்லாத வாதத்தைப் படாடோபமான பாஷையில் யாராகிலும் வாதாடினாலும், தமது மேஜைமீது சாய்ந்து ரகசியமாக, "இங்கே கோர்ட்டில் உங்கள் கட்சிக்காரர் இருக்கிறாரா? அப்படியானால் என்னால் புரிந்துகொள்ள முடியும் - அவருக்கு நீங்கள் பிரமாதமாக வழக்காடியதாகப் பிரமையை உண்டாக்க வேண்டியது அவசியம்!" என்பாராம்.

இவருக்கு ஸர் டி. முத்துஸ்வாமி அய்யர் மாணவராக இருந்த காலத்திலேயே, அவரிடம் அபாரமான ஈடுபாடு. ஒருசமயம் தென் கன்னட ஜில்லாவில், மங்களூரில் ஸப் ஜட்ஜ் பதவி காலி விழுந்தபோது, அரசாங்கம் மூன்று பெயர்களைச் சிபாரிசு செய்யுமாறு கேட்டிருந்ததாம். நீதிபதி வில்லியம் ஹாலோவே, முதற் பெயர், இரண்டாவது பெயர், மூன்றாவது பெயர் — எல்லாவற்றுக்கும் ஸர் டி. முத்துஸ்வாமி அய்யர் அவர்கள் பெயரையே குறிப்பிட்டிருந்தாராம்!

வங்காளத்தைச் சேர்ந்த பிரபல வழக்கறிஞரான ஆசுதோஷ் முகர்ஜி ஒரு நாள் பெரிய புத்தகக் கட்டுடன் நீதிமன்றத்துள் நுழைந்தார். அதைக் கண்ணுற்ற நீதிபதிக்கு ஒரு குறும்பு தோன்றியது. "படிப்பதற்காக உங்கள் நூலகத்தையே இன்று கொண்டு வந்து விட்டீர்கள்போலிருக்கிறதே!" என்றார்.

"நான் படிப்பதற்காக அல்ல. கனம் நீதிபதி அவர்களுக்குப் படிப்புச் சொல்லித் தருவதற்காகத்தான்!" என்று அதே குறும்போடு விடையளித்தார் வழக்கறிஞர் ஆசுதோஷ் முகர்ஜி.

ஃ

ஒரு சாட்சி, தம்மை எதிர்க்கட்சி வக்கீல் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறும்போது, "...... என்று நினைக்கிறேன்!" என்று முடித்து வந்தார்.

இதைக் கேட்டு அலுத்துப் போன வக்கீல், "நீர் நினைக்கிறதைச் சொல்லாமல் உமக்குத் தெரிந்ததைச் சொல்லும்!" என்று கோபத்துடன் பேசினார்.

"நான் நினைத்துப் பாராமல் பேசுவதற்கு வக்கீல் அல்லவே!" என்றார் சாட்சி.

ஃ

சென்னை நீதிமன்றத்தை அலங்கரித்த பெரிய நீதிபதிகளில் திவான்பகதூர் வி. பாஷ்யம் அய்யங்கார் ஒருவர். அவர் எப்போதும் சர்க்கார் தரப்பை ஆதரிப்பவர் என்ற ஒரு தவறான கருத்து அந்த நாட்களில் பொதுமக்களிடையே நிலவி வந்தது.

ஒரு சமயம் வி. பாஷ்யம் அய்யங்கார் நீதிமன்றத்தில் ஏதோ ஒரு வழக்கில் சாட்சியம் அளிக்க அழைக்கப்பட்டார். அப்போது அவரைப் பார்த்து, "ஸ்ரீமான் பாஷ்யம் அய்யங்கார் அவர்களே! தாங்கள் எப்போதும் சர்க்காருடன் சேர்ந்து வோட்டு செய்வதாகச் சொல்லப்படுகிறதே — அது உண்மையா, இல்லையா?" என்று கேட்கப்பட்டது.

அதற்குப் பாஷ்யம் அய்யங்கார், "இல்லை; அது உண்மை அல்ல! அரசாங்கம்தான் எப்போதும் என் பக்கத்திலிருந்து என்னுடன் சேர்ந்து வோட் செய்கிறது!" என்றாராம்.

ஃ

ஒரு முறை சென்னை கவர்னர், ஏதோ பொது விஷயமாக ஸ்ரீமான் வி. பாஷ்யம் அய்யங்கார் அவர்களைச் சந்திக்க விரும்புவதாகச் சொல்லியனுப்பினார். 'உத்தியோக ரீதியில் அவர் யோசனை கேட்பதானால், கட்சிக்காரர் என்ற முறையில் கவர்னர் என் வீட்டுக்கு வந்து யோசனை கேட்டுச் செல்லலாம்' என்று பதில் அனுப்பினாராம். பின்னர் கவர்னர், வி. பாஷ்யம் அய்யங்கார் அவர்கள் இல்லத்துக்கு வந்தாராம்!

ஃ

ஒரு முறை பிபின் சந்திர பாலர் சென்னை கடற்கரையில் தேசபக்தியைத் தூண்டும் ஆவேசப் பிரசங்கம் ஒன்று புரிந்தார். அதை வைத்துச் சென்னை அரசாங்கம் பிபின் சந்திர பாலரைக் கைது செய்ய நினைத்தது. அது சம்பந்தமாகக் கவர்னர் ஸ்ரீமான் பாஷ்யம் அய்யங்காரைக் கேட்டபோது, "பேச்சு என்னவோ தீ மூட்டும் பேச்சுத்தான். ஆனாலும் தேசத்துரோகப் பேச்சு என்று சொல்ல முடியாது!" என்றாராம்.

சட்டப்படி 'ஸெடிஷியஸ்' என்று நிரூபிக்கப்பட்டால்தான் கைது செய்ய முடியும். இப்படி மிக நுட்பமான முறையில் தேசபக்தர்களின் இயக்கத்துக்கு உதவி வந்தார் ஸ்ரீமான் வி. பாஷ்யம் அய்யங்கார்.

வழக்கை எடுத்துக் கொண்டு நீதிமன்றத் துக்குப் போவது, பூனையைப் பெறுவதற்காகப் பசுவை இழப்பதற்கு ஒப்பாகும்.



— சீனப் பழமொழி

ஃ

நீதிபதி : குற்றவாளி இந்தக் குற்றத்தை வெகு சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் செய்திருக்கிறார்.

வக்கீல் : அதிகம் புகழாதீர்கள்! குற்றவாளிக்கு மண்டை கனத்து விடும்.

ஃ



"வாழ்க்கையில் இரு முறை நான் அதிர்ச்சியடைந்தேன். முதல் முறை எப்போதென்றால், — என் வழக்கு ஜெயித்தபோது; மற்றொரு முறை வழக்கு தோற்றபோது!"

—வால்டேர்

ஃ

காலந் தாழ்த்து வழங்கிய நீதி அநீதியே ஆகும்!



பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஓர் இளம் வழக்கறிஞர், தாம் நீதி மன்றத்தில் பதிவு செய்து கொள்வதற்கு முன், ஒரு பிரபல வழக்கறிஞரைப் பேட்டி கண்டு, "வக்கீல் தொழிலில் வெற்றியடைவதற்கு என்ன தேவை?" என்று கேட்டார். பின்னால் நீதிபதியாகிய அந்தப் பிரபல வழக்கறிஞர், "எருதின் தேகக் கட்டும், கழுதையின் பொறுமையும் தேவை!" என்றார்.

—ஸி. பி. ராமஸ்வாமி அய்யர்

நீதிபதி: இந்தக் குற்றவாளிக்கு நூறு ரூபாய் அபராதமும் ஏழு நாள் சிறைவாசமும் விதிக்கிறேன்!



குற்றவாளி : நீதிபதி அவர்களே! தண்டனையை மாற்றினால் தேவலே.

நீதிபதி: அப்படியானால் சரி, ஏழு ரூபாய் அபராதமும், நூறு வருஷ சிறைவாசமும் விதிக்கிறேன்.

நீதிபதியானாலும்.....

வேகமாக மோட்டார் கார் ஓட்டிச் சென்றதற்காக இரண்டு நீதிபதிகள் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. இரண்டு பேரும் நண்பர்கள். எனினும் ஒருவரை ஒருவர் நேர்மையான முறையில் நீதி விசாரணைசெய்து கொள்ளத் தீர்மானித்தார்கள். கோர்ட்டில் நீதிபதியின் ஆசனத்தில் முதலில் ஒருவர் அமர்ந்து குற்றவாளிக் கூண்டில் நின்ற மற்றவரைக் கேட்டார்: "குற்றத்தை ஒப்புக் கொள்கிறாயா?"



"ஒப்புக் கொள்கிறேன்!"

"அபராதம் ஐந்து ரூபாய்!"

இதன் பிறகு இருவரும் இடம் மாறினார்கள். மீண்டும் அதே கேள்வி; அதே பதில்.

நீதிபதி ஒரு விநாடி யோசித்துவிட்டுக் கூறினார்: இப்போதெல்லாம் ஓவர் ஸ்பீட் கேஸ்கள் நிறைய வர ஆரம்பித்து விட்டன; இன்று காலையிலிருந்து இது இரண்டாவது கேஸ்! ஆகவே சற்றுக் கடுமையான தண்டனை தேவைப் படுகிறது. பதினைந்து ரூபாய் அபராதம் அல்லது மூன்று நாள் கடுங்காவல்!

யார் யோசனை ?

இரண்டு நண்பர்கள் வெகு நாட்களுக்குப் பிறகு ஒருவரை ஒருவர் யதேச்சையாகச் சந்தித்தார்கள். இவர்களில் ஒருவர், கட்டையின் துணை கொண்டு நொண்டி நொண்டி நடந்து வந்தார். இதைப் பார்த்த மற்றவர், "என்ன ஐயா! என்ன சமாசாரம்? என்ன நடந்தது?" என்று விசாரித்தார்.



"ஒரு கார் மோதி விபத்து ஏற்பட்டது! அதன் விளைவு!" என்று சொன்னார் நொண்டி.

"எப்போது ஏற்பட்டது?"

"அது நடந்து ஒன்றரை மாதமாகிறது!" என்றார்.

"இன்னுமா, குணமாகவில்லை! இன்னுமா கட்டைகளின் துணை கொண்டு நடக்க வேண்டியிருக்கிறது?"

"டாக்டர் கட்டைகளைத் தூர எறிந்து விட்டு எப்போதும் போல் நடக்கலாம் என்கிறார்! ஆனால் வக்கீல் தான் கூடாது என்கிறார்."

தவற்றுக்கு மேல் தவறு

இரா. நெடுஞ்செழியன்



திரு இரா. நெடுஞ்செழியன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயர் தலைவர்களில் முக்கியமானவர். இந்தித் திணிப்பை அடியோடு வெறுப்பவர். பிரசாரம் செய்வதுடன் எதிர்ப்பு இயக்கம் நடத்தித்தான் இந்தி வெறியர்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்று உறுதியான கருத்து கொண்டவர். அரசாங்கத்தின் "வழ வழ" வாக்குறுதிகளையும் சமரச சூத்திரங்களையும் கண்டு ஏமாறாதவர். "ஆங்கில மொழியை நாம் விரும்பி ஏற்கிறோம்; திணிக்கப்பட்ட மொழி அல்ல, நமக்கு இது நல்ல கருவி, அவசியம்" என்றெல்லாம் தி. மு. க.வினருக்கே உரிய அழுத்தத்துடன் மனத்தில் பதியும்படி எடுத்துக் காட்டுகிறார்.

நம் கடமை

இந்தி மொழியை எப்பாடுபட்டேனும் இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்கித் தீருவது என்று இந்தி வெறியர்களால் ஆட்டிப் படைக்கப்படும் இந்தியப் பேரரசு முடிவு செய்துள்ளது. அப்படி இந்தி மொழி ஒரே ஆட்சி மொழியாகத் திணிக்கப்படுவதை எப்பாடு பட்டேனும் எதிர்த்தே தீருவது என்று உறுதி கொள்ள வேண்டியது இந்தி பேசாத மக்கள் அனைவரின் இன்றியமையாக் கடமையாகும்.

இந்தியை இந்தியாவின் முழு ஆட்சி மொழியாக்க இந்தி வெறியர்கள் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தி வெறியர்கள் இந்தி பேசாத மாநில மக்களின் உணர்ச்சிக்கு மதிப்பு அளிப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் தங்கள் இந்தி மொழி எவ்வளவுதான் அறிவற்றதாக, ஆற்றலற்றதாக, தகுதியற்றதாக — இலக்கியமற்றதாக — இலக்கணமற்றதாக — சொல் வளமற்றதாக — பொருட் செறிவற்றதாக இருந்தபோதிலும், அந்த இந்தி மொழி இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆகியே தீர வேண்டும் என்று குதியாட்டம் போடுகின்றனர்.



இந்தி வெறியர்களின் அடிப்படை நோக்கம் என்னவென்றால், தாங்கள் எப்படிக் காங்கிரஸ் கட்சியை ஆட்டிப் படைக்கிறார்களோ, அப்படியே இந்தியாவையும் ஆட்டிப் படைக்க வேண்டும் என்பதுதான். 'தாங்கள் மற்ற மொழிகளை அடக்கி ஆதிக்கம் செலுத்த வேண்டும். அதன் மூலம் தங்கள் இனமும் இந்தியாவை அடக்கி ஆதிக்கம் செலுத்த வேண்டும். இந்தியா 'இந்தி நாடு' என்று ஆகவேண்டும்; அதன் மூலம் இந்தி பேசுவோர் நாடாக ஆகவேண்டும்' என்றெல்லாம் திட்டமிட்டு இந்தி வெறியர்கள் பணியாற்றி வருகின்றனர்.



இந்தி மொழி வெறியர்களின் தலைவராக விளங்கி வரும் திரு சேத் கோவிந்த தாஸ் அவர்கள்,

> "இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்க முடியும்."
>
> "இந்தி மொழி மட்டுமேதான் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்."
>
> "இந்தி மொழியைத் தவிர வேறு எந்த மொழியும் ஆட்சி மொழியாக இருக்கக் கூடாது"

என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்து இந்தி மொழி வெறியர்களின் நோக்கத்தை எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

நியாயம் இல்லை

இந்தி மொழி இந்தியத் துணைக் கண்டத்தின் ஒரே ஆட்சிமொழியாக ஆவதற்கு எந்த வித நியாயமும் கிடையாது.

இந்தி இந்தியா முழுவதும் பரவியுள்ள மொழியா என்றால் இல்லை! உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், பீகார் என்ற நான்கு மாநிலங்களில் மட்டுமே இந்தி என்று அழைக்கப்படும் மொழிகள் பேசப்படுகின்றன.

இந்தி என்பது ஒரே வகையான மொழியா என்றால், இல்லை! மேற்கூறப்பட்ட நான்கு மாநிலங்களிலும் ஏறத்தாழ 80 வகையான இந்தி மொழிகள் பேசப்படுகின்றன. ஒருவகையான இந்தி மொழியைப் பேசுவோர் மற்றொரு வகையான இந்தியை அவ்வளவு எளிதில் புரிந்துகொள்ள முடியாது. பிரஜ்பாஷா இந்தியை அவதி இந்திக்காரர்கள் அவ்வளவு எளிதில் புரிந்துகொள்ள மாட்டார்கள். அவதி இந்தியை கன்னோஜ்ஜி இந்திக்

காரர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். கன்னோஜ்ஜி இந்தியை மைதிலி இந்திக்காரர்கள் புரிந்துகொள்ள முடியாது. மைதிலி இந்தியைக் கடிபோலி இந்திக்காரன் அறிந்து கொள்ள மாட்டான். சுமார் ஐம்பது வகையான இந்திகளில் மார்வாடி, மேவதி, ஜெய்புரி, ஜோத்புரி, கடிபோலி, பிரஜ் பாஷா, கன்னோஜ்ஜி, பண்டேலி, பங்காரு, அவதி, போஜ்புரி, மகதி, மைதிலி என்பன குறிப்பிடத் தகுந்த முக்கியமான இந்தி வகைகளாகும்.

கணக்குப் பார்த்தால்...

இந்தி பெரும்பாலான மக்களால் பேசப்படுகிற மொழியா என்றால், இல்லை! 1951ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்புப்படி இந்தியாவின் மொத்த மக்கள் தொகை 36 கோடி. அதில் உருது, பஞ்சாபி, இந்துஸ்தானி ஆகிய மூன்று மொழிகளைப் பேசுவோர் சுமார் நாலரைக் கோடிப் பேர்கள் ஆவர். மற்ற இந்தியல்லாத மொழிகளைப் பேசுவோர் 21 கோடிப் பேர்கள் ஆவார்கள். இந்தி என்ற தலைப்பின் கீழ் உள்ள மொழிகளை மட்டும் பேசுவோர் பத்தரைக் கோடிப் பேர்கள். இதன்படி பார்த்தால் இந்தியாவின் மொத்த மக்களில் மூன்றில் ஒரு பகுதிக்கும் குறைவான சிறுபான்மையோர்தான் இந்தி மொழியைப் பேசுகிறார்கள்.

இன்று ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டிருக்கும் இந்தி மிகச் சிறந்த வகையான இந்தியா என்றால், இல்லை! டில்லியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் உள்ள மக்களால் பேசப்படும் 'கடிபோலி இந்தி' என்ற இந்தி மொழிதான் இன்று அரியணையில் ஏற்றப்பட்டிருக்கிறது. இந்தக் கடிபோலி இந்தி சுமார் ஒன்றரைக் கோடி மக்களால் மட்டுமே பேசப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

இந்தியாவுக்கே உரிய மொழியா?

இந்தி இந்தியாவுக்கே உரிய மொழியா என்றால், இல்லை! இந்தியை, கடிபோலி இந்தியை ஒருவகையில் இந்தியாவுக்கே அந்நிய மொழி என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் அதில் இந்தியாவைச் சேர்ந்த சமஸ்கிருதம், பிராக்ருதம் முதலிய சொற்களை விட அரபுச் சொற்களும், பாரசீகச் சொற்களும்தான் ஏராளமாகக் கலந்திருக்கின்றன. 'இந்தி' என்ற சொல்லே இந்தியச் சொல் அல்லவென்றும் அது அரபுச் சொல் என்றும் மொழிநூல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். ஒருவகையில் இந்தியை இந்தியாவுக்கு அந்நிய மொழி என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ், தெலுங்கு, வங்காளம், மராட்டியம் போன்ற மொழிகளுக்கு ஆங்கிலம் எவ்வளவு அளவுக்கு அந்நிய மொழியோ, அந்த அளவுக்கு அந்த மொழிகளுக்கு இந்தியும் அந்நிய மொழிதான்.

தொன்மையான மொழியா?

இந்தி தொன்மையானதொரு மொழியா என்றால், இல்லை! சுமார் ஆறு அல்லது ஏழு நூற்றாண்டுக் காலத்துக்குள்தான் பல்வேறு வகையான இந்திகளும் ஒன்றன்பின் ஒன்றாகக் கிளர்ந்தெழத் தொடங்கின. 'கடிபோலி இந்தி' கி. பி. 1803 - ம் ஆண்டுக்குப் பிறகுதான் உருப்பெற்றது என்றும், கி. பி. 1850 - ம் ஆண்டுக்குப் பிறகுதான் அதற்கு இலக்கணம் வகுக்கப்பட்டது என்றும் சொல்லப்படுகின்றன.

இந்தி, இந்திய மொழிகளில் மிகச் சிறந்த மொழியா என்றால், இல்லை! தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, வங்காளம், மராட்டியம், குசராத்தி போன்ற மொழிகளோடு ஒப்பிடும்போது இந்தி இலக்கண இலக்கியத்திலும் சரி, சொல் வளத்திலும் சரி, பொருட் செறிவிலும் சரி மிக மிக மட்டமான மொழியாகும்.

இந்தி இனிமையான மொழியா என்றால், இல்லை! தமிழ் போன்ற திராவிட மொழிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்தி அருவருக்கத்தக்க கடுமையான சொல்லோசைகளைக் கொண்ட மொழியாகும்.

இந்தி வளம் மிக்க மொழியா என்றால், இல்லை! இந்தியில் குறிப்பிடத் தக்க இலக்கியம் துளசிதாஸ் ராமாயணத்தைத் தவிர வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த இலக்கியமும் அவதி இந்தியில் இருக்கும் இலக்கியமாகும். அதுவும் வெறும் மொழிபெயர்ப்பு இலக்கியம் தான் என்று சொல்லப்படுகிறது. இந்தி மொழிகள் அனைத்தும் இலக்கணக் கட்டுக்கோப்பு இல்லாத மொழிகளாகும். தமிழ் இலக்கணத்தைப் போன்ற செவ்வையான இலக்கணம் எந்த இந்தி மொழிக்கும் அமையவில்லை.

வேர்ச்சொற்கள் அற்றது ....

மேலும் இந்தி வேர்ச் சொற்கள் அற்ற மொழியாகையால், அது உயர் தனிச் செம்மொழி ஆகாது.

இந்தி சொல் வளம் மிக்க மொழியா என்றால், இல்லை! இந்தியில் இப்பொழுதுதான் கலைச் சொற்களைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். பிற மொழிகளிலிருந்து கடன் வாங்கி ஏராளமாகச் சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். இந்தியில் பழக்கத்திலுள்ள சொற்களைப் பொறுக்கியெடுக்க வழியில்லாமல் அறையில் உட்கார்ந்து முறுக்குச் செய்வதைப் போல் சொற்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அரசாங்கத்தின் 'கடிபோலி இந்தி' என்று ஒரு புதிய தனிவகையான இந்தி உருவாகிக் கொண்டு வருகிறது. இந்த இந்தியைக் கடிபோலி இந்திக்காரர்களாலேயே



ஷஷ்டி அப்த பூர்த்தி விழா



ஸ்ரீமதி & ஸ்ரீ ஜம்பி லக்ஷ்மி-நரஸிம்ஹன் அவர்களது ஷஷ்டி அப்த பூர்த்தி விழா சமீபத்தில் விஜயநகரம் ஜம்பி கட்டிடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அவ்வளவு எளிதாகப் புரிந்துகொள்ள முடிவதில்லை என்று சொல்லப்படுகிறது.

இந்திக்கு அறிவியலைச் சொல்லித் தரும் ஆற்றல் உண்டா என்றால், இல்லை! கடிபோலி இந்திக்கு அறவே அந்த ஆற்றல் இல்லை. உயர்தனிச் செம்மொழியாகவும், வேர்ச் சொற்களைக் கொண்ட மொழியாகவும் விளங்கி வருகிற தமிழே அந்த ஆற்றலைப் பெறுவதற்குத் தவித்துக் கொண்டிருக்கும்போது, வேர்ச் சொற்களற்ற இந்தி அந்த ஆற்றலை எப்படிப் பெற முடியும்? அறிவியலைக் கற்றுத் தருகிற ஆற்றலை இன்னும் சில ஆண்டுகளில் தமிழ் பெற்றாலும் பெற முடியுமே தவிர, அந்த அளவுக்கு ஆற்றலை இந்தி ஒரு நாளும் பெற முடியாது. இப்பொழுதுள்ள நிலையில் இந்தியாவோடு நெருங்கிய தொடர்பும், உறவும், உரிமையும் கொண்டுள்ள ஆங்கில மொழிதான் அந்த ஆற்றலை நிரம்பப் பெற்றிருக்கிறது.

ஆங்கிலத்தின் தனி ஆற்றல்

இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாகக் கற்றறிந்தவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்களா என்றால், இல்லை! இந்தி பேசாத பகுதியில் உள்ள கல்வி வல்லுநர்கள், அறிவியல் வல்லுநர்கள், அரசியல் தலைவர்கள், தொழில் விற்பன்னர்கள் போன்ற பலரும், இந்தி பேசப்படுகிற பகுதியிலுள்ள அத்தகையோர் சிலரும் இந்தி இந்தியாவின் ஆட்சிமொழி ஆவதை அறவே விரும்பவில்லை. ஆட்சி மொழி என்பது பேசத் தெரிந்தோரை விட எழுதப் படிக்கத் தெரிந்தோரின் பிரச்சினையாகும். இந்தியாவில் கற்றறிந்தோர் அனைவரையும் கணக்கில் எடுத்துக்கொண்டு கேட்டால், நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் இந்தி ஆட்சி மொழியாவதை விரும்ப மாட்டார்கள் என்பது உறுதி.

இந்தி சிறந்த சனநாயகப் பண்புக்கு ஏற்பவா ஆட்சி மொழியாகிறது என்றால், இல்லை! இந்தியை ஆட்சி மொழியாக்கும் சட்டம் உருவான போது அரசியலமைப்பு அவையின் காங்கிரசுக் கட்சிக் கூட்டத்தில், ஒரு வாக்கு வேறுபாட்டில், அதுவும் தலைவர் அளித்த ஒரு வாக்கு வேறுபாட்டில் இந்தி ஆட்சி மொழியாகி இருக்கிறது. அரசியல் அமைப்பு அவையில் கட்சிக் கட்டுப்பாட்டை வலியுறுத்தாமல் அவரவர் விருப்பப்படி வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டிருந்தால், இந்தியை ஆட்சிமொழியாக்கும் சட்டம் நிறைவேறியிருக்காது. ஆட்சிமொழி போன்ற உயிர் நாடிப் பிரச்சினைகளில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்ட ஆதரவு கோருவதுதான் சிறந்த சனநாயக முறையாகும்.

ஜனநாயக முறை அல்ல

இந்தியை ஆட்சி மொழியாக இந்தியாவில் உள்ள அனைத்து மொழிகளின் வல்லுநர்களும் தேர்ந்தெடுத்தார்களா என்றால், இல்லை! இந்தி மொழி வெறியர்களால் ஆட்டிப் படைக்கப்படும் காங்கிரஸ் கட்சியால் வலுக்கட்டாயமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுதான் இந்தி. நாட்டு மக்களின் கவனம் வேறு எந்தப் பிரச்சினையிலோ படிந்திருந்தபொழுதுதான் காங்கிரசுக் கட்சியை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த இந்தி வெறியர்களின் செல்வாக்கின் காரணமாக இந்தி ஆட்சி மொழியாகத் திணிக்கப்பட்டது.

மேற் சுட்டிக் காட்டியுள்ள கருத்துக்களிலிருந்து கடிபோலி இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாகும் தகுதியும், திறமையும், உரிமையும் படைத்ததல்ல என்பது ஆராய்ந்தறிபவர் அனைவருக்கும் தெள்ளத் தெளிவாகும்.

இந்தியா ஒரு மொழி கொண்ட ஒரு நாடல்ல; அது பல மொழிகள் கொண்ட ஒரு துணைக் கண்டமாகும்.

இந்தியா ஓரரசு கொண்ட ஒரு நாடல்ல. அது பல மாநில அரசுகள் இணைந்த ஓர் ஒன்றியம் (யூனியன்) ஆகும்.

இந்தியாவில் ஒரே தேசிய மொழி இல்லை. பல தேசிய மொழிகள் இருக்கின்றன.

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு தேசிய மொழியும், குறிப்பாக இப்பொழுது அரசியல் சட்டத்தால் சுட்டிக் காட்டப்படும் பதினொன்று தேசிய மொழிகளும் தனித் தனித் தன்மையும், தனித்தியங்கும் ஆற்றலும் பெற்றவையாகும்.

தேசிய மொழியாவும் ஆட்சி மொழி

இந்தி மொழிதான் இந்தியாவின் ஆட்சி மொழியாக வேண்டும் என்ற நிலை ஏற்படும்போது இந்தியாவின் குறிப்பிட்ட தேசிய மொழிகள் அனைத்தும் ஆட்சி மொழிகளாகும் உரிமையும், தகுதியும், நியாயமும் படைத்தவைகளாகும்.



இந்தியாவின் குறிப்பிட்ட தேசிய மொழிகள் அனைத்தும் இந்தியாவின் ஆட்சி மொழியாவதற்கான முழுத் தகுதியும், திறமையும், அறிவும், ஆற்றலும் பெறுகிற வரையில், ஆட்சி மொழியாக இப்போது இருந்து வருவதும், இந்திய தேசிய மொழிகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருவதும் ஆன ஆங்கில மொழி,தேவைப்படும் துறைகளி

லும், வகைகளிலும், வழிகளிலும் ஆட்சி மொழியாக நீடிக்கப்பட வேண்டும்.

மாநில ஆட்சியைப் பொறுத்தவரையில் ஆட்சி மொழியாக இருந்து வருகிற ஆங்கிலத்தை அகற்ற வேண்டிய இன்றியமையாமை ஏற்படும் போது அந்த இடத்தை அந்தந்த மாநிலத்துக்குரிய பெரும் பகுதி மக்களால் பேசப்படும் வட்டார மொழிதான் கைப்பற்ற வேண்டும்.

இந்தியா ஒரே அரசின் கீழ் இருக்கும் காலம் வரையில், அகில இந்திய முறையில் ஆட்சி மொழி தேவைப்படுகிறது என்பது உண்மை. இப்பொழுது ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்து, அகில இந்திய மக்கள் அனைவரையும் சமமாகக் கவனித்துத் தேசிய மொழிகள் சொல் வளம், பொருள் வளம் பெறுவதற்குத் துணை புரிந்து வருகிறது. ஆங்கிலம் அந்நிய மொழி என்ற காரணத்துக்காக (இந்தியாவிலேயே பிறந்து, இந்தியாவையே தாயகமாகக் கொண்டு, இந்தியக் குடிமக்களாக வாழும் பல இலட்சக்கணக்கான ஆங்கிலோ – இந்தியரின் தாய்மொழி ஆங்கிலம் ஆகும் என்ற முறையில் ஆங்கிலமும் இந்தியாவுக்குரிய மொழிகளில் ஒன்றுதான் என்று அறிஞர் பெருமக்கள் சிலரால் வலியுறுத்தப்படுகிறது) இந்தியாவின் ஆட்சி மொழி நிலையிலிருந்து அகற்றப்படுகிறது என்றால், அந்த இடத்தைக் குறிப்பிட்ட தேசிய மொழிகள் அனைத்தும், அதாவது 14 தேசிய மொழிகளும் ஒருசேரக் கைப்பற்ற வேண்டும்.

நேர்மையல்ல...

அகில இந்திய அளவில் இந்தி மட்டும்தான் ஆங்கிலத்தின் இடத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று கூறுவது நேர்மையுமாகாது, நீதியுமாகாது, நாணயமுமாகாது, சனநாயகமுமாகாது.

இந்தியாவின் ஆட்சி மொழி ஆவதற்கான சலுகை – வாய்ப்பு – வசதி ஆதரவு – உதவி ஆகியவை இந்திய தேசிய மொழிகளில் மிக மிகத் தாழ்ந்த மொழியாக விளங்கும் இந்திக்கு மட்டுமே தரப்படக் கூடாது; இந்தியாவின் முக்கிய மொழிகளான 14 மொழிகளுக்கும் தரப்பட வேண்டும்.

இந்தியாவின் தேசிய மொழிகள் பதினான்கும் ஆட்சி மொழியாகும் தகுதி – திறமை – அறிவு – ஆற்றல் பெறும் காலம் வரையில் ஆட்சி மொழியாக இருந்து வரும் ஆங்கில மொழிதான் நீடிக்க வேண்டும்.

ஐம்பது இலட்ச மக்களைக் கொண்டிருக்கிற சுவிட்சர்லாந்து நாடு மூன்று மொழிகளை ஆட்சி மொழியாகக் கொண்டிருக்கும்போது நாற்பத்து நான்கு கோடி மக்களைக் கொண்ட இந்தியா பதினான்கு மொழிகளை ஆட்சி மொழியாகக் கொள்வது என்பது இயலுகின்ற ஒரு செயலேயாகும்.

இந்தியை மட்டும் ஆட்சி மொழியாக ஆக்குவதனால் ஏற்படும் தொல்லைகளை விட, பதினான்கு தேசிய மொழிகளையும் ஆட்சி மொழிகளாக ஆக்குவதனால் ஏற்படும் தொல்லைகள் மிக மிகக் குறைவு.

பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஆக முடியுமா என்றால், மொழிகள் வளர்ச்சியுற்ற நிலையில் மத்திய அரசிலும், மாநில அரசுகளிலும் அமைக்கப் பெறும் வன்மை மிக்க மொழிபெயர்ப்புத் துறை அந்தச் செயலை எளிதாக நிறைவேற்றிவிடும்.

ஆங்கில மொழித் தொடர்பு...

மாநில ஆட்சி மொழியாக அந்தந்த வட்டார மொழிகள் ஆகி, அகில இந்திய ஆட்சி மொழிகளாகப் பதினான்கு தேசிய மொழிகளும் ஆகும் நிலையிலும் கூட, அகில உலகத் தொடர்புக்கும், அறிவியல் வளர்ச்சிக்கும் வட்டார மொழி வளர்ச்சிக்கும் ஆங்கில மொழித் தொடர்பு கட்டாயம் இருந்து தீர வேண்டும்.

வட்டார மொழியறிவும், ஆங்கில மொழியறிவும் என்றென்றும் இருந்தால் உலகின் எல்லாத் தேவைகளையும் எப்பொழுதும் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

ஆட்சி மொழியைப் பற்றிச் சுருக்கமாகக் கூற வேண்டுமானால்,

1. இந்தியாவில் அந்தந்த வட்டார மொழியே அந்தந்த மாநிலத்தின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்.
2. இந்தியா ஒரே அரசின் கீழ் இருக்கிற காலம் வரையில், இந்தியாவின் மத்திய ஆட்சி மொழிகளாகப் பதினான்கு தேசிய மொழிகளும் ஆக வேண்டும்.
3. பதினான்கு தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஆகும் காலம் வரையில், தேவைப்படும் அளவுக்கு மாநிலத்திலும், மத்தியிலும் ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும்.
4. உலகத் தொடர்புக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் கலையியல் வளர்ச்சிக்கும், பொதுவியல் வளர்ச்சிக்கும் ஆங்கிலம் என்றென்றும் கருவியாகப் பயன்பட வேண்டும்

என்று கூறலாம்.

பெருந்தவறுகள்

ஆட்சி மொழியைப் பொறுத்து இந்தியப் பேரரசு ஆறு பெருந் தவறுகளை இழைத்துள்ளது.

1. எந்த வகையிலும் பொருந்தி வராத இந்தியை இந்தியாவின் ஒரே ஆட்சி மொழியாக ஏற்கத் திட்டம் தீட்டியது முதல் பெருந் தவறாகும்.

2. அரசியல் அமைப்புச் சட்டத்தில் 1965 சனவரி 26-ஆம் நாளிலிருந்து இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழியாகும் என்று திட்ட வட்டமாக இடம்பெறச் செய்தது இரண்டாவது பெருந் தவறாகும்.



3. "இந்தி பேசாத மாநிலங்களின் கருத்தை அறியாமல் ஆங்கிலம் அகற்றப்பட மாட்டாது; இந்தி திணிக்கப்பட மாட்டாது" என்று இந்தியாவின் தலைமை அமைச்சர் பண்டித நேரு அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமலிருப்பது மூன்றாவது பெருந் தவறாகும்.

4. பொதுவாக இந்தியாவில் உள்ள, குறிப்பாக, இந்தி பேசாத மாநிலங்களிலுள்ள கற்றறிந்த மக்களின் கருத்திற்கிணங்க ஆங்கிலமே (இந்தியாவின் பதினான்கு மொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழிகளாகும் காலம் வரையில்) நீடிக்க வேண்டும் என்பதற்கு வகை செய்யும் அரசியல் சட்டத் திருத்த மசோதாவை இந்தியப் பேரரசு கொண்டு வராமலிருப்பது நான்காவது பெருந் தவறாகும்.

5. 1975-ம் ஆண்டுக்குள், ஆங்கிலத்தை விரைவு விரைவாக அகற்றவும், இந்தியை விரைவு விரைவாகப் புகுத்தவும் வழி வகை செய்யும் முறையில் புதிய ஆட்சிமொழி மசோதாவைக் கொண்டு வந்திருப்பது ஐந்தாவது பெருந் தவறாகும்.

6. இந்தியாவின் தலைமை அமைச்சர் பண்டித நேரு அவர்கள் தம் வாக்குறுதி உறுதியாய் நிறைவேறும் என்றும், பிறகு அது தம் வாக்குறுதி அல்ல, தம் சொந்தக் கருத்துத்தான் என்றும், பிறகு தம் வாக்குறுதியைப் புதிய ஆட்சி மொழி மசோதாவில் புகுத்த வழியில்லை என்றும், பிறகு தம் வாக்குறுதி புதிய ஆட்சி மொழி மசோதாவில் முழுக்க முழுக்க இடம் பெற்றிருக்கிறது என்றும் மாறி மாறிக் கூறி மக்களை ஏமாற்றி வருவது ஆறாவது பெருந் தவறாகும்.

அறக்கிளர்ச்சி

இந்தத் தவறுகளையெல்லாம் அடியோடு போக்க அறக் கிளர்ச்சிகளில் ஈடுபட வேண்டியது அறிவுடையோர் அனைவரது நீங்காக்கடமையாகும்.

ஓயுதல் செய்யோம்; தலை சாயுதல் செய்யோம்!

எஸ். கிருஷ்ணசாமி பாரதி



மதுரை திரு எஸ். கிருஷ்ணஸ்வாமி பாரதி அவர்கள், சிறந்த தேசபக்தர், தீவிர தேசியவாதி. முன்னாட்களில் காங்கிரஸ் பணியில் ஈடுபட்டிருந்தபோது அவருடைய பிரசங்கங்களில் தேசியக் கனல் ஜ்வலிக்கும். அரசியல் நிர்ணய சபையின் அங்கத்தினராகப் பணியாற்றியவர். ஆட்சிமொழி சம்பந்தமாக நடைபெற்ற விவாதங்களை நேரில் கேட்டதுடன், அவற்றில் பங்கு கொண்டவர். 'இந்தியா - ஆங்கிலம்' என்ற பிரச்னையில் விஷயமறிந்து பேசக்கூடியவர்கள் வரிசையில் உயர் இடம் பெற்றுள்ளவர்.

அன்னவிசாரம்

இந்திய நாட்டு மக்களின் இன்றைய நிலை என்ன? ஒரே வாக்கியத்தில் சொல்லிவிடலாம். 'அன்ன விசாரம் அதுவே விசாரம்' — இதுவே பெரும்பாலான மக்களின் நிலையாகும். கவலை தரும் அவல நிலையிலுள்ள இம் மக்கட் கூட்டம், வாழ்வின் மிக முக்கிய பிரச்னைகளில் கூடச் சிறிதும் சிந்தை செலுத்தாது இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லைதான். ஆட்சி மொழி விஷயமும் இப்படிப் பொது மக்களில் பெரும்பாலோர் போதிய அக்கறை

மேலும் 1000

தமிழறிந்த மக்களின் இல்லம் அனைத்திலும் "வீட்டிற்கு ஓர் நிலையம்" திட்டப்படி ஒரு நூல் நிலையம் ஏற்பட வேண்டுமென்ற கருத்தைக் கொண்டு திட்டத்தில் சேரும் முடிவு தேதியை 1963 செப்டம்பர் 7உக்கு ஒத்தி வைத்திருக்கிறோம்.

ஆயிரம் ஆயிரமாக அங்கத்தினர்கள் சேர வாய்ப்பு இன்னமும் இருக்கிறது. நல்ல வாய்ப்பு இன்றே சேருங்கள். உங்களுக்கு விருப்பமான புத்தகங்களைக் கொண்டு ஒரு நூல் நிலையம் அமைக்க வேண்டியது அவசியத்திலும் அவசியமல்லவா?

திட்டத்தின் விபரம்

இந்தத் திட்டத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் யாவரும் சேரலாம் மாதம் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 18 மாதங்கள் தொடர்ந்து செலுத்த வேண்டும். அதாவது

தினம் ஒன்றுக்கு 17 காசுக்கும் குறைவாகவே ஆகிறது.

★ முதல் சந்தா கிடைத்ததும் இலவசமாக ரூ. 5. விலையுடைய புத்தகங்களும், விபரப் பட்டியலும் அனுப்பப்பெறும்.

6வது மாதக் கடைசியில் ரூ. 25 மதிப்புடைய புத்தகங்களுடன், இலவசமாக ரூ. 5 மதிப்புடைய புத்தகங்கள் அனுப்பப்பெறும்.

★ 12வது மாதக் கடைசியில் ரூ. 30 மதிப்புடைய புத்தகங்களுடன், இலவசமாக ரூ. 5 மதிப்புடைய புத்தகங்கள் அனுப்பப்பெறும்.

★ 18வது மாதக் கடைசியில் ரூ. 35 மதிப்புடைய புத்தகங்களுடன், இலவசமாக ரூ. 5 மதிப்புடைய புத்தகங்கள் அனுப்பப்பெறும்.

மேலே கண்டபடி 18வது மாத இறுதியில் ரூ. 110 மதிப்புடைய புத்தகங்கள் தபால் முதலிய எவ்விதச் செலவுமின்றி, நீங்கள் செலுத்திய ரூ. 90க்குக் கிடைக்கிறது.

இலவசமாகப் பெறும் புத்தகங்களின் பெயர் மற்றொரிடத்தில் உள்ளது. நீங்கள் விரும்பும் புத்தகங்களை அதிலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

விதிகள்: 1. பிரதி மாதமும் 10ம் தேதிக்குள் சந்தாவை செலுத்திவிட வேண்டும்.

2. புத்தகங்களை, கழகம் அனுப்பிய விலைப்பட்டியலிலிருந்துதான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

3. 18 மாதங்களும் சந்தா செலுத்ாதவர்கள் இலவசப் புத்தகங்கள் பெறும் வாய்ப்பை இழக்கிறார்கள்.

4. சில மாதங்கள் சந்தாச் செலுத்தி நிறுத்தியவர்களுக்கு, அவர் செலுத்திய தொகையளவுக்குத்தான் புத்தகங்கள் அனுப்பப்பெறும். அவ்வாறு அனுப்பும்போது, இலவசமாக ஏற்கெனவே அனுப்பப்பட்ட புத்தகங்களின் விலையைக் கழித்து மீதித் தொகைக்குத்தான் புத்தகங்கள் அனுப்பப்பெறும்.

5. இந்தத் திட்டத்தின் சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு 'ஜூரிஸ்டிக்ஷன்' சென்னை நகரம்.

6. ஒரே தவணையில் ரூ. 90ம் செலுத்தி ரூ. 110 மதிப்புள்ள புத்தகங்களைப் பெறலாம்.

வீட்டிற்கு ஓர் நூல் நிலையம் இலவசமாகப்பெறும் புத்தகங்களின் பட்டியல்:

(1) அனுபவ அறிக, நா. லெ. நாகராஜன்-1-50; (2) அறம் பிழைத்தது, எம். ஏ. அப்பாஸ், 2.00; (3) அறிவியல், கி. மா. பக்தவத்சலன் - 2.00; (4) ஆபத்தில் சிக்கிய அபலைகள்- மேதாவி - 1.50; (5) இந்தியாவின் கதை, முல்க்ராஜ் ஆனந்த் -1.00; (6) இரண்டு ஆள் ஒரு ராணி, சிரஞ்சீவி-1.50; (7) உதயசந்திரன், விக்ரமன்-4.00; (8) உலகத்துச் சிறந்த நாவல்கள், க.நா. சுப்ரமண்யம்-1.50; (9) உலகப் புகழ்பெற்ற நாவலாசிரியர்களும் நாவல்களும்-2.00; (10) உலகில் ஒரு மேதை, ம. லக்ஷ்மி நாராயணன் - 1.50; (11) உருவகக்கதைகள், க. ரத்தினம்-1.50; (12) உன் உயிர் என் கையில் வாசவன் - 2.00; (13) [illegible] இன்பம், எம்.ஏ.அப்பாஸ்-1.25; (14) என் காதலி, சிரஞ்சீவி-1.00; (15) கணவனின் ரகசியம், மேதாவி- 3.00; (16) கள்ளத்தோணி, எம்.ஏ. அப்பாஸ்-2.50; (17) கல்வியின் இலட்சியம், ராமராஜன்&

கல்யாண சுந்தரம் - 3.00; (18) கலியின் விலை, எம். ஏ. அப்பாஸ் - 1.50; (19) காட்டுப்பாக்கம் கண்ணம்மா, ரெஞ்சினி - 1.50; (20) காவநாகம், வ. லக்ஷ்மி நாராயணன் - 1.50; (21) கார்லைல் தீரச் செயல்கள், தமிழன்பன் - 2.50; (22) கன்றுக்கலி, ஹரிந்திரநாத் சட்டோபாத்யாய - 1.00; (23) சத்ரபதி சிவாஜி, இ. மா. பக்தவத்சலன் - 1.50; (24) சமையல் கலை, சீதாலக்ஷ்மி - 1.00; (25) தமிழ்நாட்டுச் சரித்திரக் கதைகள், பி. ஸ்ரீ. - 1.75; (26) தர்மரக்ஷகன் (நாவல், கதை, கட்டுரை) - 1.00; (27) இறந்த ஜன்னல் மர்மம், மேதாவி - 1.50; (28) திரிவேணி, (கதை, கட்டுரை, கவிதை) 1.00; (29) இரு ஆபிரிக்கா உலா, காளமேகப் புலவர் - 2.50; (30) தெய்வங்கள், எம். ஏ. அப்பாஸ் - 2.00; (31) பத்தினிகள் பிரைவேட் லிட்., மேதாவி - 1.50; (32) பணம், எமிலி போர்ஸ் - 1.00; (33) பெண்ணாகப் பிறந்தாலே, ஆர். சந்திரா - 1.50; (34) பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும், கார்க்கி - 1.00; (35) பாகிஸ்தான் கதைகள், எம். ஏ. அப்பாஸ் - 2.50; (36) பாரதநாட்டுச் சரித்திரக் கதைகள், பி. ஸ்ரீ. - 1.75; (37) புதுச்சேரியைப் பாருங்கள், மன்னர் மன்னன் - 1.00; (38) பேயாய்த் திரிந்த பித்துக்குளி, ரெஞ்சினி - 1.50; (39) போலி இளவரசன், நா. வயிரவன் - 1.00; (40) மனித மிருகம், எமிலி ஜோலா - 1.50; (41) மாயமாய் மறைந்த பெண் போலீஸ், மேதாவி - 1.50; (42) முத்திரைக் கவியாழி, விசாகதத்தர் - 1.00; (43) மேதைகள் தமாஷ், மயிலைநாதன் தொகுத்தது - 0.50; (44) ரத்தக்களரி, நேதாஜி - 1.50; (45) ரைட்லெப்ட் ராதாராணி, மேதாவி - 1.50; (46) வாசந்தி (சிறுகதைகள் தொகுப்பு) 1.00; (47) வனிதாலயம், சுருத்தவாராஜன் - 2.00; (48) வாழ்க்கை முறைபற்றி மணமக்களுக்கு, இ. மா. பக்தவத்சலன் - 2.00; (49) வாழத்தான் வேண்டும், மாஜினி - 1.75; (50) வாழ்க்கையே ஒரு கலை, கயிலன் - 1.00; (51) வேதாள மாளிகை, மேதாவி - 2.00; (52) விக்கிரமன் கதை, இ. மா. பக்தவத்சலன் - 4.00; (53) ஜீவப்பிரவாகம் (நாவல், கதை, கட்டுரை) 1.00; (54) ஜெயப்பிரகாஷ், கோ. அருணாசலம் - 1.00; (55) ஹிந்துபத பாதுஷாஹி (ஹிந்து சாம்ராச்சிய சரித்திரம்) வீரசாவர்க்கர் - 3.75.

முக்கிய குறிப்பு: மேலேயுள்ள பட்டியலிலிருந்து ரூ. 3.00 (ஐந்து) பெறுமான புத்தகங்களின் பெயரைக் குறித்து முதல் சந்தாவை ரூ. ஐந்துடன் அனுப்ப வேண்டும். இப் பட்டியலில் கண்ட சில புத்தகங்கள் விற்பனையாகி இருக்கலாம். ஆதலால் அங்கத்தினர் அதிகமான புத்தகங்களைக் குறித்து எழுதினால் கிடைக்காத புத்தகங்களுக்குப் பதிலாக வேறு புத்தகங்கள் அனுப்பத் தோதாக இருக்கும்.

வீட்டிற்கு ஓர் நூல் நிலையம்

தென் இந்தியப் புத்தகத் தொழிற் கழகம்
8, பெஸன்ட் ரோடு, கோபாலபுரம், சென்னை - 14

அன்புள்ள ஐயா,

நான் "வீட்டிற்கு ஓர் நூல் நிலையம்" திட்டத்தில் அதன் விதிகளுக்கு உட்பட்டு அங்கத்தினராகச் சேர விரும்புகிறேன். இத்துடன் முதலாவது தவணைத் தொகை ரூ. ஐந்து மணியார்டர் மூலம் / போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பியிருக்கிறேன்.

தேதி.................... கையொப்பம்....................

பெயர்.................... தொழில்....................

முகவரி ....

.... ரயில் நிலையம்....................

தென் இந்தியப் புத்தகத் தொழிற் கழகம்
BOOK INDUSTRY COUNCIL OF SOUTH INDIA
8, பெஸன்ட் ரோடு, கோபாலபுரம், சென்னை - 14

வீட்டிற்கு ஓர் நூல் நிலையம்



காட்டாத விஷயங்களில் ஒன்றாக இருப்பது மிகவும் வருந்துவதற்கு உரியது. இப்பிரச்னையில் போதிய கவனம் செலுத்தி மக்கள் விழித்தெழாவிட்டால் வருங்காலத்தில் அவர்கள் பேரிழப்புக்கு உள்ளாவார்கள் என்று எச்சரிக்க வேண்டியது தேச மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்களின் முக்கியமான கடமையாகும்.

'ஆட்சி மொழி ஆங்கிலமா, ஹிந்தியா ?'—

இக் கேள்விக்குத் தெளிவான விடை காணு முன்னர் சில விவரங்களைத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

இந்திய நாடு பல ராஜ்யங்களைக் கொண்ட ஓர் இணைப்பு (Union) அரசாங்கமாகும். ஒவ்வொரு ராஜ்யமும் தனியாக மந்திரி சபை, கவர்னர் கொண்ட அரசாகும். யூனியன் அரசாங்கம் என்பது நாடு முழுவதற்கும் செய்ய வேண்டிய சில காரியங்களுக்காக மட்டும் அமைக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். ராஜ்யங்கள் இப்பொழுது மொழிவாரியாக மொழி அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசுப் பிரச்னையே

எனவே, 'ஆட்சி மொழி ஆங்கிலமா, ஹிந்தியா?' என்ற கேள்வி மத்திய யூனியன் அரசாங்க மொழியைப் பற்றியதே என்பதை நினைவுறுத்திக் கொள்ள வேண்டும். ராஜ்ய ஆட்சி மொழியோடு இந்தப் பிரச்னையைக் குழப்பிவிடக் கூடாது. தமிழக அரசில் தமிழே ஆட்சி மொழியாகும். கேரள அரசில் கேரளம். இப்படியேதான் எல்லா ராஜ்யங்களிலும் தொடரும்.

எல்லா ராஜ்யங்களுக்கும் பொதுவான சில பணிகளைச் செய்வதற்கான யூனியன் அரசின் ஆட்சி மொழி எதுவாக இருத்தல் வேண்டும்? எது இருந்தால் நீதியும், நியாயமும், தருமமும் கிரமமுமாகும்? எம்மொழி இருந்தால் நிருவாக இயந்திரம் திறம்படச் செயல்படும்? ஆங்கிலத்தை மாற்ற வேண்டிய அவசியம் ஏதேனும் உண்டா? மாற்றுவதால் வரும் விளைவுகள் என்ன? அதனால் இப்போது இல்லாத ஏதேனும் ஒரு நன்மை நாட்டு மக்கள் எல்லோருக்கும் கிடைக்குமா?

இக் கேள்விகளுக்கு உண்மையான விடை தருவோர் நியாயத்தைக் காண்போராவார்.

இன்று யூனியன் அரசின் ஆட்சிமொழி ஆங்கிலமாகும். அது உலக மொழிகளில் ஒன்றாகும். அம்மொழி மூலம் நடைபெற்று வருகிற ஆட்சி, மொழி அளவில் செவ்வனே நடைபெற்று வருகிறது. அம் மொழியை மாற்றிவிடுவதற்கு எவ்வித அவசியமோ, அவசரமோ கிடையாது: அது ஆட்சி மொழியாக இருந்து வருவதுதான் பல்வேறு மொழிகள் பேசுவோர் கொண்ட எல்லா ராஜ்ய மக்களுக்கும் நியாயம் வழங்குவதாகும். அதுவே நீதி, தருமம், கிரமம், முறை. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி, குஜராத்தி, அஸ்ஸாமி, வங்காளம், ஒரியா, ஹிந்தி, காஷ்மீரி, பஞ்சாபி, உருது, சம்ஸ்கிருதம் ஆகிய பதினான்கு தேசிய மொழிகள் கொண்ட நாட்டில் அதன் பிராந்திய மொழிகளில் ஒன்றான ஹிந்தியை யூனியன் ஆட்சியின் ஒரே தனி மொழியாக அமைப்பது எந்த விதத்தில் நியாயமாகும்? அப்படி ஏற்படுத்துவது மற்ற மொழி பேசுவோருக்கு இழைக்கும் அநீதியாகும். அநியாயமாகும், அக்கிரமமாகும்.

நேருஜியின் வாக்குறுதி

இந்த அதருமத்தை ஒருவாறு உணர்ந்துதான் முன்பு பிரதமர் ஹிந்தி பேசாதோருக்கு உறுதிமொழி அளித்தார். நேரு அவர்களின் வாக்குறுதியின் உட்கிடக்கைகள் யாவை?

(1) ஆங்கில மொழி யூனியன் அரசின் இணை ஆட்சி மொழியாக இருந்து வரும். அதாவது ஆங்கிலம், யூனியன் நிருவாகத்தில் முன்னைப் போலவே தொடர்ந்து இருந்து வரும்.

(2) ஹிந்தி தாய்மொழியாக இல்லாதவர்கள், தாங்களாக முன் வந்து கோரும் வரை, ஆங்கிலம் ஆட்சி மொழியாக (ஹிந்தியோடு கூடத்தான்) இருந்து வரும். அதற்குக் காலவரையறை கிடையாது.

(3) ஹிந்தி யார் மீதும் திணிக்கப்பட மாட்டாது. அதாவது ஹிந்தி தெரியாத காரணத்துக்காக இந்தியக் குடிமக்கள் யாருக்கும் வேலை வாய்ப்புக்கள், வேலை உயர்வுகள் தடுக்கப்பட மாட்டா.

புது டெல்லியில் 13–8–62 நிகழ்ந்த பத்திரிகை நிருபர் மகாநாட்டில் நேரு அவர்கள் கூறினார்கள்: "மற்றவைகள் எல்லாம் ஒருபுறம் இருக்க, உங்களுக்கு (அதாவது நிருபர்களுக்கு) ஒன்று நினைவிருக்கலாம். திரு பந்த் உள்நாட்டு மந்திரியாக இருந்தபோது ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாக இருந்து வரும் என்று ஒரு வாக்குறுதி கொடுத்தார். நானும் ஒரு வாக்குறுதி கொடுத்தேன். இந்த வாக்குறுதி வலியுறுத்தப்பட்டு ஜனாதிபதி அவர்களின் உத்தரவு ஒன்று இருக்கிறது. மக்கள் சபைக்கு இது தெரிவிக்கப்பட்டது. மக்கள் சபையும் இதை ஏற்றுக்கொண்டது. இந்த

வாக்குறுதி எல்லா மக்களாலும் — சிறப்பாகத் தென்னக மக்களால் — வரவேற்கப்பட்டது.''

மீண்டும் 2–10–62ல் மகாத்மாஜி பிறந்த தின விழாப் பொதுக்கூட்டத்தில் புதுடெல்லியில் நேரு அவர்கள் பேசியதாவது:

''ஆங்கிலத்துக்கு இணை ஆட்சி மொழி ஸ்தானம் கொடுப்பதைச் சிலர் எதிர்த்துக் கிளர்ச்சி செய்கிறார்கள். அவர்கள் நிம்மதியான மனப் பிராந்தியில் இருக்க வேண்டாம். ஆங்கில மொழி விஷயத்தில் நான் மக்கள் சபையில் கொடுத்த சத்திய வாக்குக்கு (Pledge) மாறாக எதுவும் செய்யப்பட மாட்டாது! சத்திய வாக்கை நாம் மீறுவதா என்ன? இது ஒருநாளும் நடவாத காரியம்!''

நெஞ்சறிந்த பொய்

இப்படியெல்லாம் கொண்டாடப்பட்ட வாக்குறுதியை ஆட்சி மொழிச் சட்டம் அறவே புறக்கணித்துள்ளது. ஆங்கில மொழிக்கு இணை அல்லது துணைமொழி ஸ்தானம் கொடுக்கப்படவில்லை. இந்திபேசாத மக்கள் குறிப்பிடும் காலம் வரை ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருக்கும் என்ற வாக்குறுதியும் இடம் பெறவில்லை. இந்தச் சட்டத்தில் இவ்வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது என்று கூறுவது அறியாதார் கூற்று என்று சொல்வதை விட நெஞ்சறிந்து கூறுகிற பொய் என்றே துணிந்து கூறுவேன்.

திருப்பதியில் 1962 செப்டம்பர் 23-ம் நாள் நடந்த இளைஞர் காங்கிரஸ் மகாநாட்டில் உள்நாட்டு அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரியாரின் சொற்பொழிவில் ஒரு பகுதி: ''ஆங்கிலம் எல்லா ராஜ்யங்களுக்கும் சந்தேகத் தாழ பொதுவான மொழியாக இருப்பதோடு ராஜ்யங்களுக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் கடிதப் போக்குவரத்துக்கும் உரிய மொழியாக இருக்கிறது. ஆங்கிலம் நீக்கப்பெற்றால், இந்தியா ஒன்றுக்கொன்று தொடர்பற்ற ராஜ்யங்களாகப் பிரிக்கப்படுவதோடு நாட்டின் ஒருமைப்பாடும் குலைந்து போகும். மொழிப் பிரச்னையைத் தேசிய ஒருமைப்பாடு என்ற பரந்த விரிந்த நோக்கோடு கவனிக்க வேண்டும்!''

இந்தச் சொற்பொழிவுக்கு விளக்கம் தேவை உண்டா?

''ஆங்கிலம்தான் காரியாம்சத்தில் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்; குறிப்பிட்ட சில காரியங்களில் ஹிந்தியும் இருக்கலாம்'' என்பதுதான் இதுவரையில் இருந்த நிலை. இதுதான் புதுச் சட்டம் வந்த பின்னரும் உள்ள நிலையாமா? 'ஹிந்தியே ஆட்சி மொழி; அவ்வப்போது குறிப்பிடுகிற சில காரியங்களுக்கு மட்டும் ஆங்கிலமும் இருக்கலாம்' என்பதுதான் புதுச் சட்டத்தினால் ஏற்படக் கூடிய நிலை. இரண்டும் ஒன்று என்று அறிவுடையோர் யாரும் கூற முடியுமா? இனி ஆங்கில மொழி பயன்படுத்தப்படுவது அதிகாரிகளின் தயவுக்கு உட்பட்டதாகிவிடும்.

மொழிச்சட்ட விளைவுகள்

ஹிந்தி மொழி மட்டும் ஒரே ஆட்சி மொழியாக இருந்து வருமானால் விபரீத விளைவுகள் ஏற்படும்.

(1) நாட்டின் ஒருமைப்பாட்டுக்குப் பேராபத்து ஏற்படும்.

(2) இந்திய நாட்டில் ஹிந்தி பேசாத தமிழ் மக்கள் எல்லாரும் இரண்டாம் தரக் குடிகளாகி விடுவார்கள்.

(3) மத்திய யூனியனில் அலுவலகங்களில் எல்லாம் ஹிந்தி மொழி அறியாத தமிழர்களுக்கு வேலைகள் கிடைப்பது அரிதாகிவிடும்.

(4) நாட்டில் ஹிந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களிடம் மற்றவர்களுக்கு வெறுப்புணர்ச்சி ஏற்படும்.



ஹிந்தி மொழி தெரியாததனால் வேலை வாய்ப்புக்கள் வேலை உயர்வு முதலியன தடைப்படாது என்று பிரதமர் நேரு பல முறையும் கூறி வருகிறார்கள். ஆனால் நடைமுறையில் அதர்மமான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சைகளை ஹிந்தியிலும் எழுதலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இது அநீதிகள் எல்லையின்றி வளர்வதற்கே இடம் அளிக்கும். இரண்டு மொழிகளிலும் எழுதப்படும் விடைகளின் தரத்தை ஒரே பொது அடிப்படையில் மதிப்பிட முடியுமா? ஹிந்தி விடைத் தாள்களைப் பரிசீலிக்கப் போவது ஹிந்தியர்தாமே? தகுதியற்ற ஹிந்திக்காரர்கள் நிறையப் பேர் தேறி விட்டதாக அறிவிக்கக்கூடிய ஆபத்து இதனால் ஏற்படக் கூடும். இது பிற மொழியினர் வேலை வாய்ப்புக்களையெல்லாம் குறைத்து, அவர்களுடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்வதாகும்.

தமிழ் மொழிக்குத் தீங்கு

ஹிந்தி ஒரே ஆட்சி மொழியாகிவிடுமானால், தமிழ்மொழிக்குப் பெரிய தீங்கு நேரிடும் என்பது என்னுடைய திட்டவட்டமான கருத்து. ஆங்கிலம் அந்த ஸ்தானத்தில் இருப்பதால் அத்தகைய ஆபத்து தமிழுக்கு இல்லை. காரணம், ஆங்கில மொழியைத் திணிக்க வேண்டும் என்று நினைக்கக்கூடிய ஆங்கிலேயர் ஆட்சி பீடத்தில் இல்லை. ஆனால், ஒரு மதத்தைப் பரப்ப வேண்டும் என்று நினைக்கிற மத வெறியர்களைப்போல, ஹிந்தியைத்

இணைக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிற ஹிந்தி மொழியினர் ஆட்சி பீடத்தில் இருக்கிறார்கள்.

பொது அகராதி

இக் கருத்தரங்கில் இதுவரை வெளிவராத ஒரு காரியத்தை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அரசியல் நிர்ணய சபைத் தலைவர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் மேற்கண்ட சட்டத்தில் வரும் ஆங்கிலச் சொற்களுக்கு எல்லா மொழியினரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பொது அகராதி தயார் செய்வதற்கு மொழி நிபுணர்கள் கமிட்டி ஒன்றை 1949-ல் நிறுவினார்கள். அச்சொற்கள்—இந்தியா முழுதும் உபயோகிக்க வேண்டிய—இந்தியச் சொற்கள் எனப்படும். அச் சொற்கள்தான் அரசியல் சட்ட மொழிபெயர்ப்புக்களில் பயன்படுத்தப் படவேண்டும். பல்வேறு மொழியினரும் அவற்றையே பயில வேண்டும். இக்கமிட்டியில் அரசியல் சட்டத்தில் கண்ட பதினான்கு மொழியினரும் மொழிக்கு இருவர் வீதம் பிரதிநிதித்துவம் பெற்றார்கள். இந்திக்கும் வடமொழிக்கும் மட்டும் தலா ஐந்து வீதம் பத்துப் பேர்கள். தமிழ் மொழிக்குப் பிரதிநிதியாகக் காலஞ்சென்ற பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளையோடு அடியேனும் இடம் பெற்றேன். இந்தியச் சொற்கள் எல்லா மொழிகளிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது தலைவர் ராஜேந்திர பிரசாத் அவர்களின் கருத்து. இவ்வாறு ஆங்கிலச் சொற்களுக்குப் பிரதிச் சொற்களாக அமைப்பதற்காக அரசியல் சட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட சொற்கள் 965 ஆகும். பதினான்கு மொழியினரைச் சேர்ந்த நிபுணர்கள் பலரும் — அடியேன் உள்பட — பல மாதங்கள் இவ்வரிய பணியில் ஈடுபட்டோம். ஒருவாறு முடிவு கண்டோம். ஆங்கிலச் சொற்களுக்குப் பதிலாக ஏற்பாடு செய்த இவ் இந்தியச் சொல் அகராதியில் தமிழ்ச் சொற்கள் எத்தனை இடம் பெற்றன தெரியுமா? மருந்துக்கு ஒரு சொல்கூடக் கிடையாது! நாங்கள் எவ்வளவோ கராடியாகக் கத்தியும் பொது அகராதியில் உள்ள சொற்கள்தான் இந்திய நாட்டில் எல்லா மொழியினரும் பயில வேண்டிய சொற்கள் என்று மொழி நிபுணர் மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றினார்கள். அந்தக் காலத்தில் நான் இதைப் பற்றிக் 'கல்கி'யில் எழுதினேன். அப்பொழுதிருந்த சென்னை அரசாங்க முதல் அமைச்சர் அவர்களிடம் கூறினேன். பொதுக் கூட்டங்களில் பேசினேன்.

செவிடன் காதில்..

யாவும் செவிடன் காதில் ஊதிய சங்காய் முடிந்தது. தமிழ் மக்களும் உபயோகப்படுத்த வேண்டும் என்றுள்ள அவ்வகராதிப் பட்டியலில் உள்ள சொற்கள் தமிழர்களுக்கு மட்டுமின்றி ஹிந்தி மக்களுக்குமே புரியாத விநோத சிருஷ்டிகளாகும்.

இந்தப் பட்டியலில் தேர்தல் சம்பந்தமான சொற்கள் பெரும்பாலும் இடம் பெற்றிருக்கின்றன. இன்சூரன்ஸ், போலீஸ், சம்பளம், பார்லிமெண்டு உறுப்பினர் போன்றவற்றைக் குறிக்கும் சொற்களும் இடம் பெற்றிருக்கின்றன. ஹிந்தி மொழி ஆதரவாளர்களுக்கே புரியாத இச் சொற்கள் தமிழ் நாட்டில் புகுமானால், தமிழ் மொழியின் தூய்மைக்கும் தரத்துக்கும் தீங்கு நேராதா?

தமிழ் மக்களே, விழித்தெழுங்கள். ஹிந்தி மட்டும் ஒரே ஆட்சி மொழியாவதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வோமாக. பிரதமர் நேரு வழங்கிய வாக்குறுதி அரசியல் சட்டத்தில் இடம் பெற வேண்டும்; அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

மொழி விஷயம் ஒரு கட்சிப் பிரச்னையல்ல. ஹிந்தி மொழி பேசாத மக்களின் வாழ்க்கைப் பிரச்னை. எனவே ஜனநாயக தத்துவ அடிப்படையில் ஹிந்தி பேசாத மக்களின் கருத்துக்கிணங்கவே இம் மொழிப் பிரச்னையில் முடிவு காண வேண்டும். நமது நியாயமான கோரிக்கைக்கு அரசினர் இணங்கும்வரை ஓயலாகாது; அதிகாரத்துக்குப் பயந்து தலை சாயலாகாது.



தனிமை



ஆர். சூடாமணி

நாலுபுறமும் அலைந்து சுழலும் பார்வை. கண் சிமிட்டும்போதெல்லாம் அருகில் வந்து உற்றுப் பார்க்கும் அந்நிய உருவமொன்று எதிர்ப்பட்டு விட்டது போன்ற பிரமையில் உடல் கூசிச் சிலிர்க்கிறது. இரண்டு வந்து மூடும் இருளின் மறைப்பு ஒன்றுதான் அவன் நம்பிக்கையின் மூலவேர். மாலையில் கடைவீதிக்குக் கிளம்பியவன் இருளுக்காகக் காத்திருந்து திருடன் போல் ஒதுங்கிக் குனிந்து சுற்றிலும் தோன்றும் பார்வைகளின் இலக்கைத் தப்பும் வேதனையில் விரைந்து செல்கிறான். வீட்டை அடைய இன்னும் தொலை தூரம் இருக்கிறதே! நடந்து வந்த கால்களில் இனியும் நடக்க இயலாத களைப்பு.

களைப்பு! கால்களுக்கு மட்டும்தானா? எண்ணிக் களைத்து விட்டது மனம். மீண்டும் மீண்டும் ஒரு பார்வையின் அர்த்தத்தால் தாக்குறும் நோவு. அதன் கொடுமைக்கு இன்னும் பழகிப் பக்குவமடைந்திராத மனிதக் கூச்சம். அவன்மீது தன் பிடியைச் சற்றும் தளர்த்தவில்லை. யாராவது தன்னை நோக்கும்போது மனம் மரத்து விட்டிருந்தாலும் உடல் தனி உயிர் படைத்த வேறு பொருள் போல் இன்னும் கூசிப் பின்னடையத்தான் செய்கிறது.

நம்பிக்கை இருக்கும் வரை பொழுதெல்லாம் யுகமாய் நீண்டு, நம்பிக்கை அழிந்ததும் நிராசையின் பூரண அமைதியில் சட்டென்று மூடிக் கொள்ளும் உள்ளத்தைப் போல் வான் விளிம்பில் சந்திப் பொழுதின் காலங்களில் சற்றே தயங்கி நின்ற இருள் வேகமாய் இறங்கி உலகை மூடிக்கொள்கிறது. அவன் நெஞ்சில் சிறிது ஆறுதல். மாலை மறைந்து இரவு எழும்போதுதான் இருளடைந்த உள்ளத்துக்குத் தோழமை. இரவின் திரையில் முகத்தை மறைத்துக் கொண்டால்தான் இமைகளின் வேதனைக்குச் சிறிது மாற்று.

உலகில் எத்தனையோ இன்பங்கள் உண்டு. ஆனால் அவை யாவினும் பெரியது.....ஆம், தனிப்பட்டு நிற்காமலிருப்பதே! தெருவில் போகும்போது கூட்டத்தோடு இழைந்து கலக்கவல்ல பொதுத் தன்மை; தன் வடிவின் மீது படும் பிறரின் பார்வை அதிலேயே மோதி அதிர்ந்து நின்றுவிடாமல் மேலே செல்லும் இயல்பான நடப்பினால் நெஞ்சுக்குக் கிடைக்கும் சுதந்திரம்; 'இவனும் ஒருவன்' என்ற சராசரி நிலைக்கு மேல் ஏதுமின்றிக் காண்பவர் கண்ணின் மறதியிலே பயமின்றி நிமிர்ந்து செல்லும் தெய்வீகமான சாதாரணத் தன்மை — இவை அவனுக்குக் கிட்டவில்லை!

அவன் பிறரிடமிருந்து பெறுவதெல்லாம் உறுத்துப் பார்க்கும் விழிகள்; அவற்றில் அதிர்ச்சி அல்லது அருவருப்பு ஏளனம் தோய்ந்த இரக்கம், அல்லது எந்த விளக்கத்துக்கும் உட்படாத வியந்த கவனிப்பு. அவன் தலைகுனிந்து நடக்கும்போதும் அந்த விழிகளின் தீவிரம் வந்து தொடர்ந்து இதயத்தில் தாக்கும்.

பின்தலை மீதிருந்து முகத்தைச் சுற்றிப் பிடித்துள்ள துவாலையின் ஓரங்களை அவன் கைகள் இழுத்து மூடிக்கொள்கின்றன. திருடன் போல் தன்னை மறைத்து விரைகிறான்:

இதோ, யாரோ அவனைத் தாண்டிப் போகிறார்கள். ஒளி மங்கிய நேரமென்றாலும்..... அவர்கள் பாதங்கள் அவன் அருகில் சற்றுத் தயங்கி நிற்பது போல் இருக்கிறதோ? கவனித்து விட்டார்களோ? உற்றுப் பார்க்கிறார்களோ?

ரகசியமாய்ப் பார்வையை உயர்த்தும் அவன் முன் ஓர் அன்னியனின் பார்வை மோதுகிறது. ஆமாம், அதே பார்வை: அவன் கலவரமடைந்து தலையைத் திருப்பிக்கொண்டு மேலே விரைகிறான். திட்டுத் திட்டாய் வெள்ளை பரவி மனிதச் சதையையே ஒரு குழந்தையின் கேலிச் சித்திரம்போல் தாறுமாறாய்க் குழப்பி விட்டிருந்த அவன் முகத்துக் கோலத்தை அந்த ஆள் நிச்சயம் பார்த்துத்தான் இருப்பான். இதோ அவன் உடனே படபடப்பாய் இன்னும் சிலரோடு ஏதோ பேசிக்கொள்வதெல்லாம் தான் முதுகுக்குப் பின்னால் மெலியதாய் ஒலிக்கிறதே!

அவன் விரைகிறான். நெஞ்சுக் குழாயுள் விம்மல் இறுக்குகிறது.

இந்த அனுபவம் எத்தனை நாளைக்கு? இதற்கு முடிவே கிடையாதா?

எப்படி இருக்கும்? வைத்தியத்தில் பயனிருக்கவில்லை. இத்தனைக்கும் அது ஒன்றும் தொற்று நோயல்ல. ஒழுக்கக் குறைவுக்குச் சான்றான முத்திரை ஏதுமல்ல. இடரென்று தசையின் வண்ணச் சேர்க்கை பலம் இழந்து

குறைகிறது. அவ்வளவுதான். அது அதிர்ச்சிக் குறைவே தவிர, அவமானத்துக்கு ஏது இல்லை. அப்படிப்பட்டவர்கள் தங்களது எல்லா அலுவல்களிலும் சகஜமாக ஈடுபட வைத்திய அனுமதி உண்டு. ஆனால் அது உருவத்துக்குச் செய்யும் விகாரம்! கண்ணாடியின் வடிவம் அவனுக்கே வெறுத்துவிட்டதே. மற்றவரைச் சொல்லி என்ன பயன்?

''ஏ, இதோ பாருடா!''

''என்னடா இத்தனை கோரமாயிருக்கு?''

''இது என்ன வியாதி? குஷ்டரோகமா?''

''இல்லே, இது வேறு.''

''என்ன கண்ணாவி?''

''பாவம், இப்படியெல்லாம் மனுஷனுக்கு ஏன்தான் வருதோ!''

அந்த இரக்கத்தின் தொனியிலே இத்தகைய சாபக்கேடு தமக்கு நேராததைக் குறித்த ஆறுதலின் எதிரொலியும் ஒலிப்பது புரியாமலில்லை. அவன் உணர்வுகளுள் உள்ளம் படபடத்துத் தவிக்கிறது. இம்மாதிரியான பேச்சுக்கள் எத்தனை காலமாய்க் காதுகளுக்குப் பழகிவிட்டன! ஆனால் நெஞ்சுக்குப் பழகவில்லை. எத்தனை நாட்கள் வாழ்ந்தாலும் எத்தனை மறக்க முயன்றாலும், இறை சிருஷ்டியின் அமைப்பினின்று நழுவும் எந்தச் சிறு மாறுதலும் மனித நெஞ்சுக்குப் பழகிப் போகாது. அவன் தன் மீது விழுந்த அடியைச் சமாளித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்த அவசியத்திலே எதிரே நிற்கும் உருவங்களை விழித்துப் பார்த்துவிட்டுச் செல்கிறான். அந்த உருவங்கள் காட்டும் வியப்பு மிகுந்த உள்ளிப்புக்குத் தான் ஏதும் அக்கறை செலுத்தாத மாதிரியான கோப நடிப்பில் ஒரு விதத் தற்காப்பு கிடைக்கிறது. இதுவும் வழக்கமான அனுபவம்.

மறைப்பு! மறைப்பு! அவன் மறைப்பைத் தேடி ஓடுகிறான். யாருமே இல்லாத ஒரு தனி உலகில் கருவில் இயற்கையிலிருந்து மாறுபட்ட தன் சிதைவை ஒரு புது உயிராக அடக்கம் செய்து ஆறுதல் பெற நெஞ்சு துடிக்கிறது. தன்னைக் கண்டதும் இடறி நிற்கும் கண்களின் மலைப்பை நினைக்கும் போதே உயிர் கூசுகிறது. நோக்கும் பார்வை பாறை மேல் நீரைப் போல் தங்கு தடையின்றி வழிந்து ஓடியிருந்த பழைய நாட்களின் எண்ணம் விஷமாய்த் தகிக்கிறது. தனித்து நிற்காத சலுகையை நாடி அவன் இருளின் தாயகத்துக்கு விரைகிறான். பாதி குனிந்த கண்கள் தெருவில் பத்திரமாய் நடந்து செல்ல மட்டுமே நோக்குகின்றன: கண்ணோரத்தில் உருவின்றி நெருங்கி விலகும் மனிதர்களின் நினைவையும் அவர்களது பார்வையில் துளிர்க்கக் காத்திருக்கும் மலைப்பையும் நெஞ்சிலிருந்து பிரித்து விலக்கிக் கொண்டவாறே அவன் நடக்கிறான், மனிதர்களின் கவனத்திலிருந்து தப்பும் தனிமையை வேண்டி.


இதென்ன கூட்டம்?

அரண்டு போன அவன் உடல் நாணுக ஒதுங்கிச் சுருங்குகிறது. வெள்ளை படர்ந்த முகத்தின்மேல் கைகள் துவாலையை இறுக்குகின்றன. துணியின் அழுத்தத்தில் கண்களின் மேல் பாரமான நோவு.

எத்தனை காந்த ஒளிகள்! பெரிய மேடை மேல் சித்திர அலங்காரம். என்ன கூட்டமோ வைபவமோ தெரியவில்லை. ஆனால் உயர் மேடை மீது பந்தல் விரிப்பின் கீழ் கழுத்து மாலை மேஜை மேல் குவிந்திருக்க மைக்கின் முன் நின்று பேசும் ஆளை அவனுக்குத் தெரிகிறது. அவர் ஒரு புகழ் பெற்ற திரைப்பட நடிகர். வசீகரமான உருவத்தோடு சிறந்த நடிப்புத் திறனும் கொண்டு இம் வழியேயே ரசிகர்களின் பாராட்டை அமோகமாய் அடைந்துள்ளவர். அவரைப் போல் அவன் இருக்க முடிந்தால்! அவன் விரக்தியாய்த் தனக்குள் சிரித்துக்கொள்கிறான். விகார வடிவின்றிச் சாதாரணமாய் இருந்தாலே போதும் என்ற நிலையில் உள்ள தனக்கு இது என்ன பேராசைக் கனவு!

அவன் சுற்றி விலகி நடக்கிறான். கவலையாய்த் திரும்பிப் பார்த்த அவனது ஓரக்கண்ணின் விளிம்பில் கும்பலிடையே சிலரது பார்வைகள் தோற்றமளிக்கின்றன. அதே கவனம், மலைப்பு, விமரிசனம் — அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டு மேலே நடக்கிறான். சூடேறிய இரும்பின் தீண்டல் போல் அந்தப் பார்வை கண்ணுக்கு மறைந்த பின்னும் உணர்வில் நெடு நேரம் வெம்மையைத் தேய்த்துப் பதிக்கிறது. ஆனால் நல்ல வேளை. சினிமா நடிகரின் தோற்றத்திலும் பேச்சிலும் ஆழ்ந்திருந்த கூட்டம் அவனை அதிகமாகக் கவனிக்க வாய்ப்பில்லாமல் போயிற்று. ஆயினும் ஐலண்ட் கிரௌண்டைத் தாண்டி வரும்வரை அவனுக்குத் திகில்தான்.

கூட்டம் நெடுந்தூரம் பின்னுக்குத் தள்ளிப் போய்விட்டது. அவன் பெருமூச்செறிகிறான். அதன் ஆறுதல் நிமிஷ நேரப் பொருள்தான். கூட்டத்தின் பார்வையிலிருந்து மீண்டுவிட்டா



னும் வீதியில் எதிர்ப்படுபவர்களின் பார்வை அந்த விகார முகத்தைத் தூண்டிலில் வளைக் காமல் இருக்குமா? கூழும் நெஞ்சுக்கு அந்தக் கடும் பார்வை கூட்டமாக வந்தாலும் ஒன்றுதான், தனித் தனியாய் வந்தாலும் ஒன்றுதான். அது விஷம். துளியானால் என்ன? துளிகளானால் என்ன? அவன் கைகள் முகத்தை இறுக மூடுகின்றன. துணியில் ஒட்டுப் போட்டது போன்ற படை படையான அந்த வெள்ளையைப் பிய்த்து எறிந்து விடத் துடிக்கும் கைகளுக்கு வெற்றியில்லை. உணர்ச்சிகளுக்கு உள்ள வலிமை விரல்களுக்குச் சிறிதும் இல்லை.

நடந்த கால்கள் களைப்புத் தீங்காமல் பின்னுகின்றன. அங்குமிங்குமாக இருளில் தட்டுப்படும் நிழலுருவங்களைத் தாண்டிக் கொண்டு ஒதுக்குப்புறமான ஓர் இடத்தை அவன் தேடுகிறான்.

சென்டிரல் ரயில் நிலையத்திலிருந்து துரத்தி வந்த ஒலிகளும் ஒளிகளும் பின்னே சரிய அவன் முன்னேறுகிறான். எங்கே இளைப் பாறுவது? தனியிடம் தேவை.

''பீப்பிள்ஸ் பார்க்கு இது. பக்கத்திலே உயிர்க் காலேஜ் இருக்குது. தெரியுதா? முன்னே நாம் பார்த்தது செத்த காலேஜ்.''

எவனோ ஒருவன் ஊர் பார்க்க வந்த தோழனுக்கு விவரித்துக் கொண்டு செல்கிறான். உயிர்க்காலேஜ். சட்டென்று அவனுக்குநினைவு வருகிறது. அதையடுத்த வெளியில் இந்த நேரத்தில் ஜனநடமாட்டம் அதிகமிருக்காது. மிருகங்களின் ஒலிதான் கேட்கும். அதில் அவனுக்கு அச்சம் இல்லை. அவன் பயமெல்லாம் மனிதர்களிடம்தான்.

சிந்தித்துக் கண நேரம் தயங்கியவன் அதிர்ந்து விழிக்கிறான்.

எதிரே நின்று பார்க்கிறவர்களுள் ஒன்று பெண் வடிவம். கண்களில்தான் எத்தனை அருவருப்பு! அச்சம்! அவனைக் கண்டு அஞ்சும் உலகம்தானே அவனுக்கும் அச்சத்தைக் கொடுக்கிறது.

''என்னங்க இந்த மனிசன் மூகம் இப்படி இருக்குது?''

பதிலை அறிய அவன் நிற்கவில்லை. பீப்பிள்ஸ் பார்க்குக்குள் வேகமாய் நுழைந்து மிருகக் காட்சிச் சாலையை ஒட்டிய திறந்த வெளிக்கு வருகிறான். மூச்சு இரைக்கிறது. நெற்றியில் வியர்வை ஊற்று.

அவன் நம்பிக்கை வீண் போகவில்லை. அவ்விடம் அப்போது ஜன சஞ்சாரமின்றியே காணப்படுகிறது. அடர்ந்து வளர்ந்திருந்த ஒரு மரத்தை நோக்கி அவன் தாவிச் செல்கிறான். அதனடியில் அமர்ந்து வேர்த் தண்டின் மீது சாய்ந்து கொண்டு தலையைச் சுற்றித் துவாலையைப் போர்த்துக்கொள்ளுகிறான். விழித்துப் பார்க்கும் பற்பல கண்களை உள்ளத்தில் நினைக்கும்போதே உடல் கூசுவது மட்டுமின்றிப் பூமிக்குள் புதைந்து மறைந்துகொள்ளப் பதைக்கிறது. இந்தத் தனிமை எத்தனை இதமாயிருக்கிறது! மனிதர்களின் பார்வையிலிருந்து தப்பி அமைதியாய் இருக்கும் இந்தத் தனிமை எத்தகைய உயர்ந்த பொருள். தோழமையும், உற்சாகமும், சிரிப்பும் வண்ண ஆட்டம் ஆடிக் களிக்கும் இந்த உலகிலே மற்றவரிடமிருந்து ஒதுங்கி நிற்கும் தனிமையும் ஒரு விலைமதிப்பற்ற முத்தாக இருக்க முடியும் என்பதை அவனைப் போன்றாரன்றி யாரறிவார்! — ஆம், அது முத்துத்தான். கண்ணீர் படிந்த பொக்கிஷம்.

அவன் சிறிது நேரம் கண்ணை மூடி அந்தத் தனிமையின் தீவிரத்தை ஆனந்தமாய் அனுபவிக்கிறான்.

என்ன இது! மெல்லொலியா?

திடுக்கிட்டுக் கண் விழிப்பவனின் முகம் வேதனையில் சுருங்குகிறது. உற்றுக் கேட்கிறான். சந்தேகமில்லை. அது ஓர் அடியோசைதான். கும்மென்று மௌன ரீங்காரமிடும் நிசப்தத்தின் ஆழத்தில் அந்த மெல்லிய அடியோசை சுழி பரப்பி அலையெழுப்பி வருகிறது.

நெருங்குகிறது!

வேறு திக்கில் திரும்பிவிடுமோ அந்த ஒலி? ஒரு நிமிஷம் தலை தூக்கும் நம்பிக்கை உடனே குன்றி மடிகிறது. அங்குதான் — அந்த மரத்தை நோக்கித்தான் — அவன் இருப்பிடத்தைக் குறித்துத்தான் — நிச்சயமாய் நெருங்கி வருகிறது அந்தக் காலடியோசை.

உள்ளே திகிலின் நீராக்குகள் பற்றிக் கொள்கின்றன. இந்த இடத்திலும் தொந்தரவா? அவனால் இப்போது அதைத் தாங்க முடியாது. வேறு இடம் கிடைக்கவில்லையா? திருடனாக இருக்குமோ? இந்த எண்ணத்தால் விசேஷ பயம் ஏதும் தோன்றவில்லை. திருடனும் மனிதன் என்பதில்தான் அவனுக்குப் பயம். —

எழுந்து வேறிடம் சென்றுவிடலாமா? அவன் எண்ணி முடிப்பதற்குள் அடியோசை பக்கத்தில் ஒலிக்கிறது. இருளின் பின்னணியில் மங்கலான உருவம். தெளிவு இல்லை. கோட்



டுக் காலர்கள் உயர்ந்து கன்னங்களை உரசுகின்றன. முன்புறத் தலையிலிருந்து கவிழ்ந்து முகத்தை மறைக்கும்படியாய்த் தாழ்ந்திருக்கும் தொப்பி. நிச்சயம் இவனும் தன்னை மறைத்துக் கொண்டுதான் வந்திருக்கிறான். நாகரிகத் திருடன்!

எழுந்து ஓடக் கால்களைப் பெயர்க்கிறான் அவன். எதிரிலிருந்த உருவம் முதலில் அவனைக் கவனிக்கவில்லை போலும். ''அப்பாடா!'' என்று ஆசுவாசத்துடன் பெருமூச்சு விட்டவாறே தொப்பியை வெடுக்கென்று வலக் கையால் பறித்து எடுத்துவிட்டு, இடது கையிலிருந்த கைக்குட்டையால் முகத்தின் வியர்வையைத் துடைத்துக்கொள்கிறது.

அதன் பார்வையினின்று மீண்டு சென்றுவிட அவன் எழுந்திருந்து பாய நிமிர்ந்த அதே விநாடி அந்த உருவமும் சற்றுத் திரும்பியதில் இருவரும் திடீரென்ற ஓர் அதிர்ச்சிக் கணத்தில் ஒருவரையொருவர் நேருக்கு நேர் பார்த்தபடி ஸ்தம்பித்து நிற்கிறார்கள்.

இது அந்தச் சினிமா நடிகரல்லவா? சற்று முன் மைதானத்தில் மேடை ஏறி நின்று நூற்றுக் கணக்கானவர்களின் பாராட்டுப் பார்வைக்குக் கேந்திரப் பொருளாய் அழகு மொழிகளை அள்ளி வீசிச் சொக்க வைத்தவர்: அவன் கூட அம்மாதிரி தான் இருக்கவில்லையே என ஏங்கி யிருந்தானே. அவர் தான்!

ஒன்றையொன்று எதிர்த்து நிற்கும் பார்வைகள் குழம்பி வழிகின்றன. ஆனால் — தன்னைக் கண்டு விமரிசிக்கும் தன்மையை அவர் பார்வையில் அவன் தேடியபோது அதற்குப் பதில் தன்னைப் போல் ஒடுங்கும் நிலைமையே அதில் கண்டுகொண்டு அவன் பிரமித்து நிற்கிறான்.

''அட கடவுளே! தனிமையைத் தேடி வந்தால் இங்கேயும் ஓர் ஆளா!'' நடிகர் வெறுப்போடு கையிலிருக்கும் தொப்பியைக் கீழே விட்டெறிகிறார்.

''நானும் தனியாயிருக்கத்தான் வந்தேன்'' என்று அவன் முணுமுணுக்கிறான்.

மௌனத்தில் கண்கள் திரும்பவும் சந்திக்கின்றன. அவர் மெள்ள நாவசைகிறார்.

''நான் யார் தெரியுதா உங்களுக்கு?''

''தமிழ் சினிமா பார்க்கிற யாரும் உங்களைத் தெரிஞ்சுக்காம இருக்க முடியுமா? புகழ் பெற்ற நடிகர், தயாரிப்பாளர்களுக்குப் புதையலெடுத்துத் தரும்....''

''ஆமாம், ஆமாம்....'' நடிகர் அலுப்புடன் இடையில் பாய்கிறார். திடீரென்று அவர் பேச்சு ஆத்திரமாய்ப் பொங்கி எழுகிறது. ''புகழ் பெற்ற நடிகர். அதனாலே? ஒரு நிமிஷமும் நிம்மதியில்லே. வெளியிலே தலைகாட்டினாலும் போறவராவங்கள்ளாம் உத்து உத்துப் பார்க்கிறது. உன்னிப்பாய்க் கவனிக்கிறது. ஒருத்தருக்கொருத்தர் சைகை காட்டி விமரிசிக்கிறது. சேசேசே! என்ன பிழைப்பு! இப்பவும் ஏதோ விழான்னு பேசச் சொன்னாங்க. பேசினேன். என்ன கூட்டம்! நம்மையே நூற்றுக் கணக்கான கண்கள் வெறிச்சுப் பார்த்தா எப்படி இருக்கும்? எல்லாம் முடிஞ்சு திரும்பறப்போ என் கார் பக்கத்திலே கூடியிருந்த ஜனங்களைப் பார்த்தேன். இலேசிலே விடமாட்டாங்கன்னு தோணிச்சு. அவங்க கிட்டே யிருந்து தப்ப இருட்டிலேயும் தொப்பியிலேயுமா மறைஞ்சுக்கிட்டுத் தனிமையைத் தேடி ஓடி வந்துட்டேன்.''

அவன் திகைத்து நிற்கிறான்.

''என்னையும் எல்லாரும் வெறிச்சுப் பார்க்கறாங்க'' என்னும்போது அவன் குரல் அந்தரங்கத்தில் ஆழ்ந்து ஒலிக்கிறது.

அவர் கண்கள் இப்போதுதான் அவனை உண்மையில் கவனிக்கின்றன. இருவரும் தலை குனிகிறார்கள்.

''ஸாரி! நான் போயிடறேன்.''

''பரவாயில்லே. இத்தனை கஷ்டப்பட்டு வந்திருக்கீங்களே. உட்காருங்க. நான் தொந்தரவு செய்ய மாட்டேன்.''

அவர் நன்றிப் பெருக்கோடு உட்காருகிறார். தொப்பி கீழே கிடக்கிறது. அவனும் துவாலையை இழுத்துக் கீழே போட்டுவிட்டுச் சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொள்கிறான். இருவரும் வெவ்வேறு திசைகளில் நோக்குகின்றனர்.

எங்கும் அமைதி.

''இது தனிப்பட்ட இடம். யாரும் வராமல் இருந்தா நல்லா யிருக்கும்.''

''ஆமாம். இந்த மரத்தடியில் நல்ல மறைப்பு இருக்குது. இல்லே?''

இப்போது அவனிடம் சிறிதும் பயம் இல்லை. நடிகரும் விச்ராந்தியுடன் வேரின் மீது சாய்ந்து கொள்கிறார்.

''சேசே, என்ன மனுஷங்க! ஒருத்தன் வித்தியாசமாயிருந்தால்...'' அழகு நிறைந்த அந்தப் புகழ்பெற்ற மனிதர்தான் நொந்து கொள்கிறார்.

''ஜனங்களே ரொம்ப மோசம்'' என்று ஆமோதிக்கிறான் அந்த விகாரமடைந்தவன்.

''சாதாரணமாயிருக்கிறதுதான் இன்பம்.''

''ஆமாம்'' என்கிறான் அவன் ஆவலாக.

''ஏதோ அதிசயத்தைக் கண்ட மாதிரி எல்லாரும் முழிச்சு முழிச்சுப் பார்க்கிறதும்..''

''ஆமாம், ஆமாம்.''

''அதிலேருந்து தப்பிச்சா....''

''எத்தினி ஆனந்தம்!''

சிறந்த அமிலநாசினியும், மலமிளக்கியும்




நம்பிக்கை

ஒவ்வொரு துறையிலும சில தயாரிப்புகள்தான் சிறந்த குணமும், பல வருடங்களாக நம்பிக்கையானதாகவும் பெயர் பெற்று உயர்ந்த இடம் பெற்றிருக்கின்றன. இந்த நம்பிக்கையான தன்மைதான் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டும் 75 வருடங்களுக்கு மேலாக சிபார்சு செய்யப்பட்ட உலகமறிந்த தாயரிப்பும் ஆகும்.


பார்சா பிட்லே!
திடீர்னு என்னய்யா தவிக்கிறீர்?
என் கழுத்தில் கட்டியிருந்த ருத்ராட்சம் பிட்லேலே விழுந்து விட்டது போல் இருக்குசார்!

அத்தியாயம் முப்பத்தேழு

அதிசயம்



தொண்டை மண்டலத்தைப் பற்றிய பகுதியைத் தொடர்ந்து படித்தான் நாகோதரன்: "இதை எல்லாம் சொல்லி உங்கள் மனத்தைக் கரைப்பதாக நினைக்காதீர்கள், அப்பா! ஆனால் ஒன்றை மட்டும் தங்களிடம் உறுதியாகக் கூற விரும்புகிறேன். தென்னகத்தில் சமண சமயம் வலுக்குன்றி இருக்கிறதென்னவோ உண்மைதான்; ஆயினும் அதற்கு இப்போது வேண்டியது அதன் வளர்ச்சிக்குரிய உதவி அல்ல. இன்றிருக்கும் நிலையிலிருந்து இன்னும் கீழே அது இறங்கி விடாமல் பாதுகாப்பதற்கான உதவிதான் தேவை. பல்லவ மன்னர் பரமேசுவரவர்மரின் நந்திக் கொடி இங்கு பறந்தால் அந்தப் பாதுகாப்பும் உதவியும் அதற்கு நிச்சயமாகக் கிடைக்கும். அப்படிக்கின்றி விக்கிரமாதித்தரின் ஆட்சியே வேரூன்றினால் சமண சமயம் இங்கிருந்து வேரற்றுச் சாய்ந்து விடும்." — உணர்ச்சியாவேசத்துடன் ஓலையைப் படித்த நாகோதரன் சற்றே தயங்கி விட்டுப் பின் தணிந்த தொனியில் வாசித்தான்: "இத்தனை கசப்பான சேதிகளைத் தங்களிடம் தெரிவித்த நான், ஓர் இனிப்பான விஷயத்தையும் இறுதியாக வெளியிடுகிறேன், அப்பா! பல்லவ மன்னர் பரமேசுவரவர்மருக்கு ஆந்திர நாட்டின் படையுதவி கிடைத்தால், உங்கள் அருமைச் செல்வி உத்தமசீலியை வெகு விரைவிலே பல்லவ சாம்ராஜ்யத்தின் பட்டத்து ராணியாகவும் நீங்கள் பார்க்கலாம்....."

நாண் தளர்ந்த காண்டீபம்போல் விம்மிப் புடைத்து எழுந்த ஆந்திர மன்னர் தம் அரசியல் செயலாளரின் பக்கம் திரும்பி ஆவேசக் கொந்தளிப்புக் குரலில் கர்ஜித்தார்: "இன்று முதல் ஆந்திர நாடு, சளுக்கிய விக்கிரமாதித்தனுக்குத் திறை செலுத்தாது! இந்த விநாடி முதல் அது ஒரு தனிச் சுதந்திர நாடு என அறிவிக்கிறேன்! அதன் முப்படைகளும் இன்றே திரண்டு போய், கிருஷ்ணையாற்றங்கரைக் கோட்டகாரத்தில் தங்கியிருக்கும் மாவீர மகா மன்னர் பரமேசுவரவர்மரின் தலைமையை ஏற்றுப் பல்லவ நாட்டின் மண்ணை மாசுபடுத்திக்கொண்டு நிற்கும் விக்கிரமாதித்தனை அழித்து ஒழிக்குமாக! கீழைச் சளுக்கிய சக்கரவர்த்தி விஷ்ணுவர்த்தனரின் ஆணை இது !"

வேங்கி நகரமே அதிர்ந்து குலுங்கும்படியாக முரசொலியும் கொம்பொலியும் சேர்ந்தெழுந்து முழங்கின.

தாய்த் திருநாட்டின் புனிதமான மண்ணில் காலடி வைக்கும் பகையரசரை எதிர்த்துப் போரிடப் புறப்படும் தமிழ் மன்னர்கள் காஞ்சி மாலை அணிவது வழக்கம். அந்தப் பழைமையான வீர வழக்கப்படி பல்லவ மன்னன் பரமேசுவரவர்மனும் போர்க் கவசங்கள் பூட்டிய தனது வேங்கை மார்பிலே காஞ்சி மலர் மாலை அணிந்து, கிருஷ்ணையாற்றங் கரையின் இனிய சூழலில் அமைந்த அழகிய கொட்டகாரத்தின் மேன் மாடத் தளத்தில் தன்னந் தனியே உலாவிக் கொண்டிருந்தான்.

மாலைச் சூரியன் மேற்கு வானத்தை இரத்தக் களரியாக்கத் தொடங்கிய நேரம். மரஞ் செடி கொடிகளெல்லாம் அந்தச் செஞ்சாய ஒளியில் மூழ்குளித்துக் கொண்டிருந்தன. யுத்த அரக்கனின் நீச்சல் தடாகத்திலிருந்து கால் பிரிந்து வந்தாற் போல் கிருஷ்ணையாற்றின் நீர்ப் பரப்பும் அப்



பத்தினிக் கோட்டம்

ஜெகசிற்பியன்



போது செங்குருதி வண்ணமாகவே காட்சி யளித்தது.

வெறிப்புத் தன்மை வாய்ந்த இந்தக் காட்சியைப் பார்த்தவாறு உலாவிக் கொண்டிருந்த பரமேசுவர வர்மனின் முகமும் சிவந்தே காணப்பட்டது. முகம் மட்டுமல்ல; அவனுடைய உடம்பு, உடை, அணி மணிகள் ஆகிய அனைத்துமே செந்நிற மயமாகப் பளீசிட்டுக் கொண்டிருந்தன. இத்தனை காலமாகச் சாந்தம் தவழும் முகத்தினை

னாய், அமைதியே வடிவினனாய், கள்ளங் கவடற்ற பாலகக் களையுடன், தூய வெண்ணிற ஆடை புனைந்து, இன்ப துன்ப உணர்ச்சிகளையே அறியாத ஒரு முனிகுமரன் போல் விளங்கிய அவனா இன்று இத்தகைய வீர குரூர ஆவேச உருவத்திலே தோற்றமளிக்கிறான்?

செந்நீர்ப் பரப்பாகப் பிரவகித்துக் கொண்டிருந்த ஆற்றின் மறு கரைக்கு அப்பால் அலை கடல் முழக்கம் போன்ற பேரொலி! ஆந்திர நாட்டின் முப்படைகளும் அங்கே அணிவகுத்து நின்றிருந்ததால்தான் அத்தகைய ஆரவார ஒலி கேட்டுக் கொண்டிருந்தது!

முறுக்கேறிய நடைபோட்டு உலாவிக் கொண்டிருந்த பரமேசுவரவர்மன் மெல்லத் தன் பார்வையை மேலுயர்த்தினான். தொலைதூரத்தில் கறுப்பும், சிவப்பும், காவி நிறமுமாக நீண்ட நெடும் மதிற் சுவர்கள்போல் அணிவகுத்து நின்ற கரி, பரி, காலாட் படைகளை ஒரு கணம் கூர்ந்து நோக்கிய அவன் முகத்தில் துயரமும் மகிழ்ச்சியும் மாறி மாறிக் கலவையிட்டன.

'ஹூம்! என்ன துர்ப்பாக்கியமான நிலைமை இது! என் சொந்த நாட்டின் விடுதலைப் போருக்காக அந்நிய தேசப் படைகளின் உதவியை நாட வேண்டியதாகிவிட்டதே! எனது நாட்டில் ஆள் பலம் இல்லையா? ஆயுத பலம் இல்லையா? வீரம் இல்லையா? விவேகம் இல்லையா? விடுதலை உணர்ச்சிதான் இல்லையா? எல்லாம் இருந்தும் எனக்கு ஏன் இந்தப் பரிதாப நிலை ஏற்பட்டது? நாட்டின் பாதுகாப்பில் போதிய விழிப்புத் திறனை நான் காட்டவில்லை; வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பினேன். வினைரைச் சகோதரராகப் பாவித்து நட்புக் கொண்டாடினேன். அளவுக்கு மீறிய சமாதான ஆர்வத்தில் நாட்டைப் பலவீனப்படுத்திவிட்டேன்: சூழ்ந்து நின்றவரின் புகழுரையில் தலைக்கு மேலுள்ள ஆபத்தை உணரத் தவறி விட்டேன். சுற்றியுள்ள நாடுகளின் அடிப்படைக் குணங்களை ஆராய்ந்து பாராமல் வாய் வேதாந்தம் பேசிக் கொண்டிருந்து விட்டேன். அதன் விளைவு? இன்ப வாழ்வு வாழ வேண்டிய என் அருமை மக்கள் அந்நியனின் காலடியில் மிதியுண்டு, நசுங்கி, நரக வேதனை அநுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணமான நான், இந்த அந்நிய தேசத்துக்கு இதோ ஓடி வந்து அதன் உதவிக்குக் கையேந்தி நிற்கிறேன். என்னையும் என் நாட்டு மக்களையும் எவ்வளவு கேவலமான நிலைக்குத் தாழ்த்திக் கொண்டு விட்டேன்! என்னை நம்பியிருந்த என் குடிமக்களுக்கு எத்தனை பெரிய துரோகத்தைச் செய்து விட்டேன்!'

முஷ்டியை இறுக்கிக் குவித்துத் தன் நெற்றியில் ஓங்கிக் குத்திக்கொண்டு குமுறிப் பெருமூச்செறிந்த பரமேசுவரவர்மனின் மனத்தில் வேறோர் எண்ணம் எழுந்தது.

'யாசகமாகக் கிடைத்திருக்கும் இந்தப் படைகளைக் கொண்டு உண்மையிலேயே என் குறிக்கோளை நான் அடைய முடியுமா? வல்லமை வாய்ந்த விக்கிரமாதித்தனை இந்தக் கூலிப் படைகள் எதிர்த்து வீழ்த்தி எனக்கு வெற்றியைத் தேடித் தருமா? சளுக்கிய அரசாங்கத்தின் மேற்பார்வையிலே இவை வளர்ந்து உருவானவையாதலால் சளுக்கிய மன்னனிடம் உள்ளார்ந்த விசுவாசம் வைத்துப் போரின் இடையே எனக்கு எதிராகத் திரும்பி என்னையே வீழ்த்த முனைந்து விட்டால் என்ன செய்வது? அந்நியப் படைகளை நம்பி எதிரியின்மேல் போர் தொடுத்து அதில் தோல்வி காண நேர்ந்துவிட்டால் அதைவிடப் பேரவமானம் இன்னொன்று இருக்க முடியாதே! எனக்கு மட்டுமின்றி என் நாட்டுக்கும் அது நெடுங் காலத் தலைகுனிவைத் தேடித் தந்துவிடுமே!'

கையையும் தலையையும் வேகமாக ஆட்டிக்கொண்டு விரைந்து உலாவிய பரமேசுவரவர்மன் சட்டென்று நின்றான்.

'சே, என்ன மோசமான எண்ணங்கள் என் மனத்தில் தலைதூக்குகின்றன! எவ்விதப் பிரதிபிரயோசனத்தையும் எதிர்பார்க்காமல் — தர்ம நியாயத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் — தமது சொந்தச் சகோதரனையும் பகைத்துக்கொண்டு எனக்கு இவ்வளவு பெரிய உதவி செய்ய முன் வந்த ஆந்திர மன்னரைப் பற்றி இப்படியெல்லாம் நான் சந்தேகிக்கலாமா? இது மனித குலத்தின் அடிப்படையான நற்பண்புகளையே அவமதிப்பது போல் ஆகுமே! தமது மன்னரின் கட்டளைக்குப் பணிந்து ஓர் அந்நிய தேசத்து அரசனின் தலைமையை ஏற்றுக்கொள்ள ஆர்வத்துடன் திரண்டு வந்திருக்கும் இவ்வீரமாப் படைகளின்மேல் நான் அவநம்பிக்கை கொள்ளலாமா? சொந்த நாட்டின் சுதந்திரத்தை நிலைநாட்ட அந்நாட்டு மக்கள் குருதி சிந்த முன் வருவது பெரிய விஷயமல்ல; அது அவர்களுடைய பிறவிக் கடமை. ஆனால் வேற்று நாடொன்றின் விடுதலைக்காகத் தம் உயிரையே அர்ப்பணிக்கத் துணிந்து வந்திருக்கும் இந்த வீரர்களின் தியாக உள்ளம் எத்தனை விசாலமானதாக இருக்க வேண்டும்!'

அமைதி இழந்து அலைமோதிய பரமேசுவரவர்மன் இப்போது நிதான

பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்தி சஞ்சீவி

குழந்தைகளின்

சுரம், குலைக்கட்டு ரோகங்களுக்கு.

எமது வைத்யரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விவரம்
தங்கும் இடங்கள் வழக்கம்போல். மற்ற விவரங்களுக்கு எழுதவும்

ஊர்	தேதி	நேரம்
தாராபுரம்	1	காலை 8-30 to 9-30
பழனி	1	காலை 10-30 to 11-30
உடுமலைப்பேட்டை	1	மாலை 3 to 4
பொள்ளாச்சி	1	மாலை 5 to 6
பாலக்காடு	2	காலை 9 to 11
"	2	மாலை 3 to 5
கோயமுத்தூர்	3	காலை 9 to 11
"	3	மாலை 2 to 4
மேட்டுப்பாளையம்	3	மாலை 5 to 6
சத்தியமங்கலம்	4	காலை 8 to 9
கோபி	4	காலை 10 to 11
பவானி	4	மாலை 2 to 3
மேட்டூர் அணை	4	மாலை 4-30 to 5-30
ஈரோடு	5	காலை 9 to 11
திருப்பூர்	5	மாலை 4 to 5-30
திருச்சி	6	காலை 11 to மாலை 6
தஞ்சாவூர்	7	காலை 7 to 9
கும்பகோணம்	7,17,27	காலை 10 to மாலை 5
சீர்காழி	8	காலை 7 to 8-30
மாயூரம்	8	காலை 9 to 11
நன்னிலம்	8	மாலை 2 to 3
நாகப்பட்டினம்	8	மாலை 5 to 6-30
திருவாரூர்	9	காலை 7-30 to 9-30
விஜயபுரம்	9	காலை 10 to 11
திருத்துறைப்பூண்டி	9	மாலை 2 to 3-30
பட்டுக்கோட்டை	9	மாலை 4-30 to 6-30
புதுக்கோட்டை	10	காலை 8 to 1
பொன்னமராவதி	10	காலை 11-30 to 12-30
தேவகோட்டை	10	மாலை 2-30 to 3-30
காரைக்குடி	10	மாலை 4-30 to 6
பரமக்குடி	11	காலை 8 to 10
ராமனாதபுரம்	11	மாலை 3-30 to 4-30
சிவகங்கை	11	காலை 8-30 to 10
மதுரை	11	காலை 11 to 12-30
"	11	மாலை 3 to 6
கோவில்பட்டி	12	காலை 8 to 9
திருநெல்வேலி ஜங்.	12	மாலை 3 to 5
திருநெல்வேலிடவுன்	12	மாலை 5 to 6
அம்பாசமுத்திரம்	13	காலை 8 to 9-30
தென்காசி	13	மாலை 3 to 5
ராஜபாளையம்	14	காலை 9 to 10
ஸ்ரீவில்லிபுத்தூர்	14	காலை 10-30 to 11-30
பெரியகுளம்	14	மாலை 3 to 4-30
திண்டுக்கல்	15	காலை 8 to 9-30
நாமக்கல்	15	மாலை 3 to 4-30
ராசிபுரம்	15	மாலை 5-30 to 6-30
சேலம்	16	காலை 9 to 11
"	16	மாலை 3 to 5
சேலம்: செவ்வாய்ப் பேட்டை	16	மாலை 1-30 to 2-30
தருமபுரி	17	காலை 9 to 10-30
கிருஷ்ணகிரி	17	மாலை 3-30 to 5
திருப்பத்தூர் (N.A.)	18	காலை 8-30 to 10
குடியாத்தம் (N.A.)	18	மாலை 2 to 3-30
சித்தூர் (ஆந்திரா)	18	மாலை 5 to 6-30
வேலூர் (N.A.)	19	காலை 9 to 11
பெரிய காஞ்சிபுரம்	19	மாலை 3 to 5
சென்னை	20	காலை 9 to 11
"	20	மாலை 3 to 5
செங்கற்பட்டு	21	காலை 9 to 10-30
திண்டிவனம்	21	மாலை 2-30 to 4
விழுப்புரம்	21	மாலை 5 to 6
திருவண்ணாமலை	22	காலை 8-30 to 10
திருக்கோவிலூர்	22	காலை 11 to 12
கடலூர் (N.T.)	22	மாலை 4 to 5-30
சிதம்பரம்	23	காலை 9 to 10-30
விருத்தாசலம்	23	மாலை 3-30 to 5
கள்ளக்குறிச்சி	24	காலை 8-30 to 9-30
ஆத்தூர்	24	காலை 11 to 12
துறையூர்	24	மாலை 3-30 to 5
மல்லேஸ்வரம் பெங்களூர் - 3	26	காலை 9 to 11 மாலை 3 to 5

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலை H. O. கரூர்

கிளைகள் : 1. 94, டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்
2. 2332, 5th கிராஸ், மல்லேஸ்வரம், பெங்களூர்-3

குறிப்பு : குழந்தைகளுக்குக் கட்டி வராமல் தடுக்கவும், கக்குவான் இருமலைக் குணப்படுத்துவதற்கும், தொண்டை சதை வளர்ச்சியை (TONSILS) ஆபரேஷன் இல்லாமல் குணப்படுத்துவதற்கும் எங்களிடம் நல்ல மருந்துகள் கிடைக்கும்.

கதியில் உலாவலானான். அவனுடைய பாதுகாப்புக்காகவும் தேவைக்காகவும் ஆந்திர மன்னரால் நியமிக்கப் பெற்ற பணியாட்களும் காவல் வீரர்களும் அந்தக் கொட்டாரத்தில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்த அவன் வதனத்தில் ஓர் இளநகை தவழ்ந்தது.

'என்னுடைய விஷயத்தில் விதி, தினம் தினம் நிகழ்த்திக் காட்டும் விந்தையான நாடகங்களுக்கு ஓர் அளவே இல்லையோ? கடந்த இரண்டு நாட்களாக இந்தக் கொட்டாரத்தில் நான் எப்படி இருந்தேன்? ஒவ்வொரு விநாடியும் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டு சிறைக் கைதியாக அடைபட்டுக் கிடந்தேன். ஆனால் இன்றோ சர்வ சுதந்திர மனிதனாக, சகல மதிப்பு மரியாதைகளுடன், சுகபோக செளகரியங்களோடு இதோ நிற்கிறேன். இத்தகைய நிலை மாற்றத்தைத் தோற்றுவித்த சக்தி எது? ஒரு சிறிய பட்டோலை! என் நெஞ்சிலே நிரந்தர ஒளி வீசி நிற்கும் ஆந்திர இளவரசி உத்தமசீலி தன் அழகுக் கரத்தால் வரைந்தனுப்பிய அந்தப் பட்டோலையே என்னை இந்தக் குதூகல நிலையில் தூக்கி வைத்திருக்கிறது! அவளுடைய எழுத்தின் வன்மைக்கு ஈடாக எதைத்தான் சொல்ல முடியும்? உடன் பிறந்த உறவை வெட்டி, வல்லமை வாய்ந்த சக்கரவர்த்தி யொருவனின் பகையைத் துச்சமாக மதிக்கச் செய்து, ஒரு தனிச் சுதந்திர நாட்டைத் தோற்றுவித்து, புதியதொரு கிரீட ஜாதிப் பரம்பரைக்கு வித்தூன்றி, அடிமைப்பட்டுக் கிடக்கும் இன்னொரு நாட்டின் விடுதலைப் போருக்கும் வழி அமைத்துக் கொடுத்து விட்டதே அந்த ஓலை! சின்னஞ்சிறு பெண்ணொருத்தி தன் சிறு கரத்தால் வரைந்த ஓலையைக் கொண்டு எத்தனை பெரிய காரியங்களைச் சாதித்து விட்டாள்!

பிரமித்து நின்ற அவன் மனத்திலே துன்ப மயமான நினைப்பு ஒன்று திடீரெனத் தோன்றித் துவண்டது.

'ஐயோ! அந்தப் பட்டோலையை எடுத்து வருவதற்காகச் சேதியக் கவிஞரின் இல்லத்துக்கு ஓடிய அவளைச் சளுக்கிய வீரர்கள் வளைத்துக் கொண்டார்களே! அந்த இல்லத்தை விட்டு வெளியேற முடியாத நிலையில் அகப்பட்டுக் கொண்ட அவள் கதி என்ன ஆகியிருக்கும்? சளுக்கிய விக்கிரமாதித்தனின் ஜென்ம எதிரியான என்னுடன் சேர்ந்து கொண்டது மல்லாமல், தளபதி வில்வேலியைக் குத்திக் கொல்லவும் முயன்றாள் என்ற குற்றம் சாட்டி அவளை அணு அணுவாகச் சித்திரவதை செய்து சாகடித்து விடுவார்களே! இதை யெல்லாம் நன்கு அறிந்திருந்தும் அவளை மீட்க முயலாமல், என்னுடைய சுயநலத்தைக் கருதிப் படை உதவி பெறுவதற்காக இங்கு வந்து விட்டேனே! என்னைப் போன்ற ஒரு கோழை, ஈரமில்லாத நெஞ்சத்தினன் எவனேனும் இருப்பானா? எனக்காக அவள் தன் உயிரையே தியாகம் செய்யத் துணிந்த போது, அவளுடைய மீட்சிக்காக நான் ஏதும் செய்யாமல் அவளை அநாதரவாக விட்டு விட்டேனே! அவள் இல்லாத உலகத்தில் நான் ஏன் வாழவேண்டும்? எதற்காக வாழ வேண்டும்?'

வெறி பிடித்தவன்போல் வாளை உருவி ஓங்கிப் பற்றியவாறு அந்த மேன்மாடத் தளத்திலிருந்து திமுதிமுவென இறங்கி வந்தான் பரமேசுவரவர்மன்.

''வீரத் திருக் கோலம் கண்டேன், வெற்றி உமக்கே!''

திடுக்குற்று நின்றான் பல்லவ மன்னன். அங்கே, அப்போதுதான் தம் இரதத்தை விட்டு இறங்கிக் கொட்டாரத்தை நோக்கிப் புன்னகை தவழ வந்து கொண்டிருந்தார் ஆந்திர வேந்தர் விஷ்ணுவர்த்தனர்.

அவரைப் பார்த்ததுமே பரமேசுவரவர்மனின் தற்கொலையாவேசம் தணிந்தது. 'அவசரப்பட்டு என்ன காரியம் செய்யத் துணிந்தேன்? என் உயிரின் உயிரான உத்தமசீலி எனக்கு இட்ட கட்டளையை மறந்து, என்னை நானே அழித்துக் கொள்ள முயன்றேனே! சளுக்கிய அரக்கர்களின் கொட்டத்தை அடக்கிப் பல்லவ நாட்டை மீட்க வேண்டும் என்றல்லவா அவள் என்னிடம் கேட்டுக் கொண்டாள்? அவளின் அந்த விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது என் கடமை அல்லவா?' என்று உள்ளூற முனகிக் கொண்டே, ஓங்கிப் பிடித்திருந்த வாளை உறையிலிட்டான் அவன்.

''யுத்த அரக்கனைச் சந்திக்கப் புறப்பட்டு விட்டீர்களா நண்பரே? நானும் அதற்காகத் தங்களை வழிகூட்டி அனுப்பவே வந்திருக்கிறேன், வாருங்கள்!'' என்று அன்பும் பரிவுமாகச் சொல்லிக் கொண்டே பரமேசுவரவர்மனுடைய தோளில் தம் வலக் கரத்தைப் போட்டவாறு, அணிவகுத்து நின்ற படைகளை நோக்கி நடக்கலானார் ஆந்திர மன்னர்.

குகையிலிருந்து வெளிப்பட்ட இரு சிங்கங்கள் செருக்கு நடை போட்டு வருவதுபோல் வந்த அவ்விரு மன்னர்களையும் பார்த்த முப்படை வீரர்களும், ஆந்திர — பல்லவ நாடுகளை வாழ்த்திப் பெருங் கோஷமிட்டனர்.

அந்த மாபெரும் படையணிகளுக்கு முன்னால் பல்லவ மன்னனின் பட்டத்து யானையான அரிவாரணம் மதமதர்ப்புடன் நின்று கொண்டிருக்க, அதன் அருகில், அழகும் கம்பீரமுமாக விளங்கு

கிய ஒரு வெண்ணிறப் புரவி போர்க் கவசச் சேணங்கள் பூட்டப் பெற்று, மிடுக்குடன் நின்று கொண்டிருந்தது. அக் குதிரையின் சேணக் கசையை இழுத்துப் பிடித்து நின்றான் நாகோதரன்.

மூப்படைகளையும் பார்வையிட்டுக் கொண்டு வந்த பல்லவ மன்னனும் ஆந்திர மன்னரும் அவ்வெண்ணிறப் புரவியை நோக்கி நடந்தனர்.

யுத்த சன்னத்துக்களுடன் வீரமாப் பொலிவோடு நின்ற பரமேசுவரவர்மனையே விழியசைக்காமல் பார்த்துக் கொண்டு சிறு பொழுது மௌனமாயிருந்த விஷ்ணுவர்த்தனர், அடைத்த குரலில் உணர்ச்சி மோதலிடச் சொன்னார்: ''அன்பரே! இறுதியாக உங்களிடம் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பல்லவ நாட்டின் விடுதலைப் போருக்காகப் படையுதவி அளித்திருக்கும் நான், அதன் பிரதியுபகாரமாகத் தங்களிடமிருந்து பொன்னையோ, பொருளையோ, பூமியையோ கோரவில்லை. வலிமை வாய்ந்த விக்கிரமாதித்தனைப் பகைத்துக் கொண்டு விட்ட நான், எதிர்காலத்திலே அவனது கெடுபிடித் தாக்குதலுக்கு உள்ளாக நேரும் பட்சத்தில் நீங்கள் வந்து எனக்குப் பக்கத் துணையும், பாதுகாவலுமாக நின்று உதவி புரிய வேண்டும் என்றும் கேட்கவில்லை. தங்களிடம் நான் கேட்பதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். என் ஜீவனின் ஜீவனாக வைத்துப் போற்றிவரும் எனது அருமைச் செல்வி உத்தமசீலியை என்றென்றும் தங்கள் அன்பின் நிழலிலேயே வைத்திருக்க வேண்டும். இது ஒன்றைத்தான் தங்களிடம் எதிர்பார்க்கிறேன்; உதவியாக அல்ல, வரமாக!''—ஆந்திர மன்னரின் கண்கள் நீருற்றில் நீந்தின.

''மன்னிக்க வேண்டும், அரசே! தாங்கள் கோரும் இந்த வரத்தை நான் அளிக்க முடியாத நிலையில் இருப்பதற்காக என்னை மன்னிக்க வேண்டும்!''

இதைக் கேட்ட விஷ்ணுவர்த்தனர், வேல் பாய்ந்த சிம்மம்போல் தம் உடம்பைச் சிலிர்த்துக் கொண்டார்.

''ஆமாம், அரசே! தங்கள் அருமைக் குமாரி ஆந்திர இளவரசியின் அன்பு நிழலிலே அடைக்கலமாகி விட்ட நான், அவளுக்கு எப்படி நிழல் அளிப்பேன்? எனக்குரிய நிழலை இழந்து அவளுடைய நிழலில் நான் ஐக்கியமாகி நாட்கள் பல நடந்து விட்டன! இந்த என் பிறவியில் அது ஒரு நிரந்தர வேதமாகவும் என்னுள் நிலைத்து விட்டது! எனவே, நிழலற்று நிற்கும் என்னை நோக்கி, 'நிழல் கொடு' என்று தாங்கள் வரம் கோரிப் பயனில்லை!'' என்றான் பரமேசுவரவர்மன்.

கோபக் கனல் பறந்த விஷ்ணுவர்த்தனரின் முகத்தில் இப்போது குதூகலம் நிரம்பி வழிந்தது. ''என் மகள் மகா பாக்கியசாலி!'' என்று மகிழ்ச்சிப் பரவசத்தோடு சிரித்துக் கூறிக்கொண்டே அந்தப் புரவியின் அருகில் போய் நின்ற அவர், அதன் முதுகை அன்புடன் தட்டிக் கொடுத்துவிட்டுத் திரும்பிக் களிப்பேறிய குரலில் சொன்னார்: ''பல்லவச் செல்வரே! இதோ நிற்கும் இந்தக் குதிரையின் பெயர் 'அதிசயம்' என்பதாகும். என் அன்பு மகள் உத்தமசீலியால் போற்றி வளர்க்கப்பெற்ற அறிவார்ந்த குதிரை இது. அவளது போர்க் கலைப் பயிற்சியின்போது இந்தக் குதிரையையே அவள் பயன்படுத்தினாள். ஆகவே, இதனை என் குமாரியின் சீதனமாகத் தங்களுக்கு அளித்து, வாழ்த்துக் கூறுகிறேன்; வீரத்துடன் சென்று, வெற்றிவாகை சூடி வாருங்கள்!''

திமிறித் துள்ளிய அந்தப் புரவி, திசையதிரக் கனைத்து முழக்கமிட்டது.

விஷ்ணுவர்த்தனரை வணங்கி நிமிர்ந்த பரமேசுவரவர்மன் ஒரு கணம் கண் மூடி நின்று தியானத்தில் ஆழ்ந்தான். பிறகு சடாரென்று பாய்ந்து போய் 'அதிசயம்' என்ற அந்த அழகிய குதிரையின்மீது தாவியேறி அமர்ந்து, தன் அருகில் நின்ற நாகோதரனைப் பார்த்து ஏதோ இரகசிய சமிக்ஞை செய்து விட்டுக் குதிரையைத் தட்டி விட்டான்.

மறுகணம், போர்ப் பறைகள் முழங்கின; அலை மோதிக் கொண்டிருந்த மூப்பெரும் படைகளும் பல்லவ நாட்டை நோக்கிப் பெயர்ந்து விரைந்ததால் எழுந்த புழுதிப் படலங்கள் மண்ணையும் விண்ணையும் சாடிக் கலக்கின.

அத்தியாயம் முப்பத்தெட்டு

கல்லில் ஒரு கசிவு

எட்டிக் கொட்டையை உப்பு நீரில் அரைத்துக் கத்திக் குத்துக் காயத்துக்குப் பற்றுப் போட்டுக்கொண்டு படுத்துக் கிடந்த சளுக்கியத் தளபதி வில்வேலி வேதனைச் செருமலுடன் மெல்ல எழுந்து உட்கார்ந்தார். போதிய விளக்குகள் இன்றிப் பொலிவற்றுக் கிடந்த பல்லவபுரம் அரண்மனையின் பயங்கர அமைதிக்கிடையே அவரைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது.

உடம்பில் ஏற்பட்ட வெட்டுப் புண்ணுக்காகவா இப்படி அவர் வேதனை யுற்றுப் பொருமுகிறார்? இல்லை; இம் மாதிரியான கத்திக் குத்துக் காயங்கள் பலவற்றைக் கண்டு பழக்கப்பட்டுவிட்ட உடம்பு அவருடையது. அப்படியானால் அவர் ஏன் இப்போது சுடு மணலில் எறியப்பட்ட விரியன் பாம்பு போல் நெளிந்து வேதனைப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்?

'என் வாழ்நாளில் இதுவரை இப் படிப்பட்ட ஓர் உத்தம மனிதனை நான் சந்தித்ததே இல்லை! அந்த மகா புருஷன் பரமேசுவரவர்மனுக்கு எதிராக எத்தனை சதிகள் செய்தேன், எவ்வளவு அநியாய அக்கிரமங்களைப் புரிந்தேன்! ஐயோ, அவனுடைய நாட்டை அப கரிக்க உதவி, அவனை நாடோடியாக் கியதுமல்லாமல், மறைந்திருந்து கொல் லவும் முயன்றேனே! இத்தனை தீங்குகள் இழைத்திருந்தும் அவன் என்னிடம் எவ் வளவு கருணையுடன் நடந்து கொண் டான்! பழி பாவங்களை அஞ்சாமல் செய்து வந்த என்னை அவன் எத்தனை பாசப் பரிவோடு நடத்தி விட்டான்! தன் மாசற்ற மனிதப் பண்பை வெளிப் படுத்தி எனது இழிந்த தன்மையை எவ் வளவு தெளிவாக எடுத்துக் காட்டி விட் டான்! பரம எதிரியாக நடந்துகொண்ட என்னையும் ஒரு சகோதரனாகப் பாவித்து — எனக்கு உயிர்ப்பிச்சை அளிக்க முன் வந்தானே! அவனது திண்ணிய தோளில் என்னைச் சுமந்து வந்து என் புரவியில் அமர்த்தி அனுப்பினானே! இத்தகைய இரக்க நெஞ்சத்தினனை என்னால் இனி எப்படி விரோதிக்க முடியும்?... ஆகா, அவன்தான் என்ன அழகாக இருக்கிறான்! அவனுடைய களைபொருந்திய முகத்தை நாளெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க லாம் போல் இருக்கிறதே! அப்படிப் பட்ட ஒரு மனித தேவனை அழிக்க முயலும் கூட்டத்தோடு சேர்ந்து நிற் கும் நானும் ஒரு மனிதன்தானா? சே, இந்த சனத் தளபதி உடையில் இனியும் இருப்பது அவமானம்! இவ்விழிந்த பதவியை உதறித் தள்ளிவிட்டு இன்றே என் உள்ளக் கடைத்தேறலுக்கான மார்க்கத்தைக் கண்டாக வேண்டும்!'

கண்ணீர் மல்கி நின்ற வில்வேலி, ஏதோ ஓர் ஆவேசம் வந்தவர்போல் தம் இடையிலே தொங்கிய நீண்ட வாளை உருவித் தூர எறிந்து விட்டு விரைந்து போய் ஒரு பேழையைத் திறந்து மூட்டையொன்றை எடுத்தார்.

சைவ — வைணவத் திருக்கோயில் களில் கொள்ளையடிப்பதற்காகச் சளுக் கிய இளவரசன் விநயாதித்தன் உப யோகித்து வந்த சமண முனிவருக் கான ஆடை யணிப் பொருட்களே

"போறது கடைசியில் பிழைத்து எழுந்திருக்கனாக்கும்!"

"ஆமாம்! உடம்பு ரொம்ப சீரிய சாப் போச்சு, டாக்டர்கள் மருந்து கொடுக்கக் கொடுக்க நான் பிழைப்



பதே சந்தேகமாப் போச்சு! சும்மா சொல்லப்படாது, டாக்டர் சங்கமேக வரனால்தான் பிழைத்தேன்!"


"அப்படியா! எப்படி?"


"அவரைக் கூப்பிடும்போது அவர் ஊரில் இல்லை!"

அந்த மூட்டையில் இருந்தன! அவற்றில் ஒரு காவி ஆடையையும், ஒரு மயிற்பீலியையும், ஒரு மர மண்டை யையும் (பிட்சா பாத்திரம்) பக்தி சிரத்தையுடன் எடுத்துக் கொண்டு சற்றுத் தள்ளி வந்து நின்று, அந்தப் புனிதப் பொருட்களையே சிறிது நேரம் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந் தார் வில்வேலி. பிறகு அவைகளை அணிந்துகொண்டு சமணத் துறவியாக உருமாறிய அவரது கண்கள் மீண்டும் புனலாகிச் சோர்ந்தன.

"எந்த மனிதனும் தன் இத யத்தை எப்போதும் மூடிப் பிடித்துக் கொண்டே இருக்க முடியாது. இத்தனை காலம் இறுகித் துருவேறிக் கிடந்த என் இதயக் கதவு இன்று திறந்து கொண் டது. அதிலே பல்லவ மன்னன் ஏற்றி வைத்த ஒளிச்சுடரை அணையாமல் பாது காப்பதுதான் இனி எனக்குரிய ஒரே வேலை!" என்று குரல் கம்மிக் கரைய, வாய் விட்டுக் குமுறிக் கொண்டே தம் கையில் இருந்த மயிற்பீலியை ஆர்வமுடன் தடவிக் கொடுத்தார் வில் வேலி. அப்போது குதிரை கனைப்பது போன்ற ஒரு கோரச் சிரிப்பொலி!

அமைதியாகத் திரும்பினார் அவர்: அங்கே, அலட்சிய மிடுக்குடன் சிரித் துக் கொண்டே தன் சிவந்த கண்களை உருட்டிப் புரட்டிப் பார்த்தவாறு வந்து நின்றான் சளுக்கிய இளவரசன் விநயா தித்தன். அவனுக்குப் பின்னால், உடம் பெல்லாம் குருதி வழிய நடுங்கும் நிலை யிலே காணப்பட்ட சளுக்கியப் போர் வீரன் ஒருவனும் அவசரத் திகிலோடு விரைந்து வந்தான். (தொடரும்)





பஸ்ஸும் பெண்களும்



அனுசூயா





இது ஆடி மாதமல்லவா? கல்யாணக் கோர்ட் சாத்தியிருக்கிறது. ஆகையால் நமக்கெல்லாம் விடுமுறைதானே?

எந்தக் கல்யாணத்துக்கு அதன் முகூர்த்தம் முடிகிற சமயம் பார்த்துப் போகலாம்? எதற்கு அது ஆரம்பிப்பதற்கு முன்னாடியே போய்த் தலையைக் காண்பித்து விட்டு வந்து விடலாம்? எதற்கு எந்த விதமான புடவையைக் கட்டிக் கொண்டு போகவேண்டாம்? எந்தக் கல்யாணப் பெண் அல்லது பிள்ளைக்கு நம்மிடம் யாரோ தள்ளிவிட்டுப் போன நமக்குப்பிடிக்காத பரிசுப்பொருளைக் கொடுத்து விடலாம்? எந்தக் கல்யாண வீட்டுக்குத் துணிந்து நம் வீட்டில் சமைத்து வைக்காமலே போய்விடலாம்? யார் வீட்டுக்குப் போகிறதற்கு முன் இரண்டு உருண்டை சாதம் பிசைந்து சாப்பிட்டு விட்டுப் போவது நல்லது?

இப்படியெல்லாம் இந்த மாதத்தில் நாம் யோசனை செய்து மூளையைக் குழப்பிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

இந்த விடுமுறைக் காலத்தில் கன்னிப் பெண்கள், தங்கள் தங்கள் வீட்டு வாசலில் நின்றுகொண்டு மற்றப் பெண்களின் கல்யாண மாப்பிள்ளை அழைப்பைப் பார்த்து ஏங்கிக்கொண்டிருக்க நேராது. பொழுது போவதற்குத்தான் இப்பொழுது பிளாஸ்டிக் நூலால் கம்பிக் கூடை பின்னும் 'பாஷன்' ஏற்பட்டிருக்கிறதே!

குமாரிகள் — அதுதான் கல்யாணமாகாதபெண்கள்—எல்லோருமே காலைக் கரியாக்காமல் இப்படி ஏதாவது மணி — மணி பர்ஸும், பிளாஸ்டிக் நூல் கூடையும் போட்டுக் கொண்டிருப்பதில்லை. சிலர் என்னென்னவோ காரியங்கள் செய்கிறார்கள்.

வாலண்டினா தெரஷ்கோவா என்ற இருபத்தாறு வயதுள்ள ருஷ்யக் குமாரியை ராக்கெட்டில் வைத்து விட்டார்கள். அவள் விண்வெளிக் கப்பலில் இந்தப் பூமியை அறுபது, எழுபது முறை சுற்றி வந்தாள்.

நமது தேசத்திலும் சில குமாரிகள் துணிந்து ஒரு காரியம் செய்தார்கள்: ருஷ்ய தெரஷ்கோவாவைப் போல் உயரே விண்வெளியில் பறக்க முடியாவிட்டாலும் இமயமலையின் உச்சிப்பக்கம் போய்ப் பார்க்கலாமே என்று அந்த முயற்சியில் ஈடுபட்டார்கள்.

மொத்தம் முப்பத்தொருபேர் போனார்கள். இவர்களுள் தமிழ் நாட்டிலிருந்து சென்றவர்கள் குமாரி எஸ்.ஆர். கமலா, ஏ. மணிமேகலை, டாக்டர் லைலா பாரதி ஆகிய மூன்று பேர். பங்களூரிலிருந்து குமாரி உஷா சென்றிருந்தாள். இவர்கள் இறுக 'பாண்ட்' உடுத்து, இறுகக் கோட்டு அணிந்து, தலையில் கம்பளிக் குல்லா தரித்துக் கையில் பனிப்பாறையை வெட்டும் கோடரி ஏந்திச் சென்றார்களாம். மலைமகளான பார்வதி தேவியை எந்தப் பௌராணிகரும் இந்த வித உடையோடு கற்பனை செய்து கூறியதில்லை.

அடுத்த வீட்டுப் பெண் அம்பிகா இதைப் பற்றிப் பிரமாதமாக நினைக்கவில்லை. "விண்வெளியில் சுற்றுகிறதும், மலை ஏறுகிறதும் என்ன பெரிய காரியம்? பட்டணத்துப் பஸ்ஸில் பகல் பத்து மணிக்கு இவர்கள் ஏறிவிடட்டும், பார்க்கலாம்!" என்று சவால் விடுகிறாள்.

உண்மை. அது மிகவும் கஷ்டமான காரியந்தான். ஆனால் அம்பிகா தவறிப் போய் 'பஸ்ஸில் ஏறுகிறது' என்று சொல்லி விட்டாள். 'பஸ்ஸில் நுழைகிறது' என்று சொன்னால் ரொம்பப் பொருத்தமாயிருக்கும்.

"ஒரு பஸ்ஸின் நீளம் இருபது அடி, அகலம் பத்தே அடி. ஒரு பிரயாணிக்குச் சராசரி ஒன்றரைச் சதுர அடி தேவையானால் அந்தப் பஸ்ஸில் எத்தனை பேரை அடைக்க முடியும்?" கிட்டத்தட்ட இந்தக் கணக்கில்தான் பிரயாணிகள்



பஸ்ஸில் நிரப்பப்படுகிறார்கள். பஸ்பிரயாணத்தில் அதிகம் தவிப்பவர்கள் ஸ்திரீகள்தான்.

ஸ்திரீகளுக்கென்றெனவோ வண்டியின் பின் பக்கத்தில் சில பெஞ்சுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் பத்துப் பேர் உட்காரலாம். பெஞ்சுகளுக்கு மேலே 'பெண்கள்' என்று சிவப்பு மையால் எழுதியிருக்கிறது. ஆனால் ரயில் பெட்டிகளில் இருப்பது போல் விஸ்தாரமான ஸ்திரீயின் உருவம் வரைந்திருக்கவில்லை.

ஆமாம், ஸ்திரீகளின் ஆசனங்களை எதற்காகப் பின்னால் வைத்திருக்கிறார்கள்? குழந்தை குட்டிகளுடன் வருவார்களே, வந்ததும் சட்டென்று உட்காரட்டும் என்று? இல்லை, கீழே விழுந்தால் வண்டிக்குள்ளேயே அகப்பட்டுக் கொண்டு தவிக்க வேண்டாம், ஏறி வரும் படிகள் வழியாக உருண்டு தெருவில் போய் விழுந்து விடட்டும் என்று? இப்படி விபத்து ஏற்படுவதற்கான வசதி பஸ்ஸில் இருக்கிறது! ஸ்திரீகள் மேலிருந்து தொங்கும் தோல் வாரைப் பிடித்துக் கொண்டு நிற்பதே சற்றுச் சிரமமான காரியம். கடைசியில் உள்ள பெஞ்சுப் பக்கம் அந்த ஏற்பாடு கூடச் செய்யப்படவில்லை. ஸ்திரீகளுக்காக ஆசனங்கள் ஏற்பட்டிருப்பது சம்பந்தமாகச் சில தினங்கள் முன்னால் ஒரு தகராறு நடந்தது.

ஒரே ஒரு பஸ்ஸில் ஒரே ஒரு கண்டக்டர். ஒரு நாள் அவரது ஏக சக்ராதிபத்தியத்துக்குட்பட்ட அந்தப் பஸ்ஸில் அதிகப் பிரயாணிகள் இல்லை. அதில் ஏற இருந்தவர்கள் செய்த புண்ணிய பலன் போலும். அந்த பஸ்ஸில் இரண்டு வாலிபர்கள் ஏறினார்கள். ஏறியதும் முதலிலேயே இருக்கும் பெஞ்சில் உட்கார்ந்தார்கள்.

சாதாரணமாகக் கூட்டமில்லாதபோது கண்டக்டர் ஸாப், - அவருக்கென்று பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருக்கும் ஆசனத்தில் அமர்ந்திருப்பார் — டிரைவர் ஸாபுடன் கதை பேசிக்கொண்டிருக்காதபோது. அவர் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தே உடலைச் சற்றும் அசைக்காது கையை மட்டும் நீட்டிக் காசு கேட்பார். அப்பாவிப் பிரயாணி அவருக்கெதிரே நின்று காசைக் கொடுத்து டிக்கெட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சற்றுத் தூரத்தில் உள்ள ஆசனத்தில் அமர்ந்திருந்தாலோ உடலையும் கழுத்தையும் கொக்கி மாதிரி நீட்டிக் கையில் டிக்கெட்டை வாங்கிக் கொள்ள வேண்டும்.

ஆனால் இந்தக் கண்டக்டர் எழுந்திருந்து அந்த வாலிபர்களிடம் வந்தார்.

''எழுந்திருந்து முன்னாடி போய் உட்காருங்கள்!'' என்றார்.

''ஏன், இங்கே நிறைய இடம் காலியாயிருக்கிறதே'' என்றார்கள் வாலிபர்கள்.

''இது பெண்கள் உட்காரும் இடம். எழுந்திரும் ஐயா!''

''ஆனால் ஒரு பெண்கூட இல்லையே!'' என்றார்கள் வாலிபர்கள். 'பெண்கள்' என்று எழுதப்பட்டிருந்த பெஞ்சுகளில் அன்று ஒரு ஈ, கொசு கூட உட்கார்ந்திருக்கவில்லை.

பிரயாணிகள் எல்லோரும் திரும்பி உட்கார்ந்து கொண்டோ, தலையைத் திருப்பிக் கொண்டோ இந்த வாக்குவாதத்தைக் கவனித்தனர். டிரைவர் ஸாப் அவர்களும், சக்கரத்தில் முழங்கையை ஊன்றிக்கொண்டு திரும்பிப் பார்த்தார். கண்டக்டர் ஸாப் ஊதினாலோ, அல்லது 'ரைட்' என்ற வார்த்தையைக் கூறினாலோதானே அவர் வண்டியை ஓட்டிச் செல்ல முடியும்? ஆனால் டிக்கெட்டிற்கும் சக்கரவர்த்தி அந்த ஒரு வார்த்தையைத் தவிர வேறு வார்த்தைகளைக் கூறிக் கொண்டிருந்தார்.

வாலிபர்கள் தாங்கள் எழுந்திருக்கப் போவதில்லை, சட்டப்படி தாங்கள் அந்த ஆசனங்களில் உட்கார்ந்திருக்க உரிமை உண்டு என்றார்கள். அவர்கள் வாதம் நியாயமானதுதான். 'பெண்கள் பெஞ்சியில் இடமிருந்தால் ஆண்கள் உட்காரலாம். ஆனால், பெண்கள் வந்தால் காலி செய்துவிட வேண்டும். இதுதான் பஸ் பிரயாண விதி. நடைமுறை வழக்கமும் கூட.

கண்டக்டருக்கும் வாலிபர்களுக்குமிடையே சண்டை வலுத்தது. பிறகு பஸ் கிளம்புவதற்கு அரை மணி நேரம் தாமதமாயிற்று.

இத்தகைய கண்டக்டர் நாளைக்கு இன்னொரு விதமாகவும் குதர்க்கம் பேசலாம். ஒரு ஸ்திரீ தனியாகவோ, குழந்தை குட்டிகளுடனோ ஏறி வந்து, பெண்கள் ஆசனத்தில் உட்காருகிறாள். கண்டக்டர், ''நீ பெண் அல்ல. பெண் பிள்ளை. பெண் என்றால், சிறுமிகளை, கல்யாணமாகாதவர்களைத்தான் சொல்வது வழக்கம்'' என்று கூறலாமல்லவா? பிரயாணிகளின் சௌகரியத்துக்காகத் தாங்கள் இருக்கிறோம், அவர்கள் பிரயாணம் செய்வதால்தான் தாங்கள் வயிறு வளர்க்க முடிகிறது என்பதைக் கண்டக்டர்கள் மறந்து போய் விடுகிறார்கள்.

'பெண்கள்' பெஞ்சில் இடம் காலியாயிருந்தால் அதில் ஆண்கள் உட்காரலாம் என்பது அநேகமாக இரண்டு பேருக்கும் தொந்தரவாக முடிகிறது. அந்த ஆண்கள் ஒரு சிறிய நாடகமே நடத்துகிறார்கள்.

பஸ்ஸில் கடைசியில் உள்ள 'பெண்கள்' பெஞ்சியில் பெண்கள் யாருமே இல்லை, அதில் ஆறு ஆண்கள் உட்கார்ந்துவிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். பஸ் அடுத்தாற் போல் நிற்கும் இடம் வரும்போது அத்தனை ஆண்களும் அங்கே பெண்கள் யாராவது ஏறுகிறார்களா என்று கவலையுடன் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இரண்டு பெண்கள் ஏறிவிடுகிறார்கள். அவர்களுக்கு யார் இடம் கொடுப்பது? அந்த ஆறு ஆண் சிங்கங்களும் அந்தப் பக்கமும், இந்தப் பக்கமும், உயரேயும் பார்த்துக்கொண்டிருப்பார்கள். அவர்களுள் அதிக சவு, இரக்கமும், அதிக மனிதத் தன்மையும் உள்ள இரண்டு பேர் அரை மனத்துடன் எழுந்திருப்பார்கள்.

அடுத்தபடியாக பஸ் நிற்கும் இடத்திலும் இந்த நாடகம் நடக்கும். இங்கே மூன்று ஸ்திரீகள் ஏறுகிறார்கள். பெஞ்சியில் உட்கார்ந்திருக்கும் நாலு பேருள் எந்த மூன்று பேர் எழுந்திருப்பது? கல்லுப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருப்பார்கள். திருதிருவென்று விழிப்பார்கள். கண்டக்டர் வந்து ''ஏன் ஐயா! பெண் பிள்ளை சீட்டில் உட்கார்ந்து கொண்டு இடம் விடாதிருக்கிறே!'' என்று கேட்ட பிறகு எழுந்திருப்பார்கள். இவர்கள் கோட், டை, காலர் எல்லாம் தரித்த படித்த மனிதர்களாயிருப்பார்கள்.

இன்னும் ஒருவர் பாக்கி யிருக்கிறாரா? அடுத்த ஸ்டாப் வந்ததும் அங்கே ஒரு பெண் ஏறுவாள். அந்த மனிதர் பெஞ்சின் கடைசியில் கண்ணாடி மேல் இடித்துக் கொண்டு ஓர் அங்குலம் நகர்ந்து உட்காருவார். அவர் அந்தப் பெண்ணுக்கு அங்கே இடம் விடுகிறாராம், இடம்! அவரது மனைவியோ, சகோதரியோ வந்து நிற்கும்போது வேறு ஓர் ஆண் அவர் மாதிரியே நடந்து கொண்டால் அவருக்கு எப்படி யிருக்கும்?

பஸ்ஸில் மற்றப் பெஞ்சுகளில் இடம் காலியாக இருக்கும்போது ஆண்கள் அதில் போய் உட்கார்ந்துவிட்டால், பெண்கள் பெஞ்சிலிருந்து எழுந்திருந்து எழுந்திருந்து உட்காரும் இந்தக் கூத்து நடைபெறாது.

பஸ் வந்து நிற்பதற்கு முன்னமேயே பல ஆண்கள் பாய்ந்து சென்று ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டும், இடித்துக்கொண்டும் ஏறும் அழகைப் படம் பிடித்துத்தான் பார்க்க வேண்டும். ஸ்திரீகள் பஸ்ஸின் பக்கமே போக முடியாது. ஆனால் மாதர்களைப் பார்த்த மாத்திரத்தில் ஒதுங்கிக் கொண்டு வழி விடும் கனவான்கள் இல்லாமலில்லை.

★ ★ ★

சிறுமி சீதா மல்லாக்காகப் படுத்துப் பாடிக் கொண்டிருந்தாள். பிறகு அவள் தாயார் வந்து பார்த்தபோது குப்புறப் படுத்துக் கொண்டு பாடிக் கொண்டிருந்தாள்.



"ஏன் சீதா, விளையாடுகிறாயா?" என்று தாயார் கேட்டாள்.

"இல்லை அம்மா! முதலில் ஒரு கிராமபோன் ரிக்கார்டின் முன் பக்கமிருப்பதைப் பாடினேன். இப்போது அதன் பின்பக்கமிருப்பதைப் பாடிக் கொண்டிருக்கிறேன்!"

குடும்ப அகராதி

★ **அவியல்:** மிகவும் சிக்கன புத்தியுள்ள, சாமான்கள் வீணாவதை விரும்பாத ஒரு கேரளப் பெண்மணியால் கண்டுபிடிக்கப் பட்டது. தினமும் சமையலுக்குக் கறிகாய்கள் நறுக்கும்போது முழுவதையும் நறுக்கிவிடக் கைவராது. ஒவ்வொன்றிலும் கொஞ்சம் கொஞ்சம் மீதமாகும். அந்தத் துண்டங்கள் அவிசலாவதற்கு முன் அவற்றைச் சேர்த்துச் சமைத்துவிடுவதுதான் அவியல். இப்போதெல்லாம் புதிய காய்கறிகளையே சேர்த்து வருகிறார்கள்.



★ **அண்ணன் தம்பி:** ஒரே தாய் வயிற்றில் பிறப்பவர்கள். ஆனால் அப்படிப் பிறக்க வேண்டும் என்று தாங்களாகவே இஷ்டப் பட்டவர்கள் அல்ல. சிறுவர்களுக்கான பாடப் புத்தகங்களில் உள்ள நீதி போதனைக் கதைகளில் வரும் அண்ணன் தம்பிகள் மட்டும் மிகவும் ஒற்றுமையாய் நகமும் சதையும் போல இருப்பார்கள்.



★ **அடுப்பங்கரை நாச்சியார்:** விடியற்காலையில் எழுந்திருந்து காப்பி போட்டு, பாத்திரம் தேய்த்து, சமைத்து, உள்ளைச் சுத்தம் செய்து பிறகு ஒரு தரம் பட்சணம் செய்து, காப்பி போட்டு, பாத்திரம் தேய்த்து, உள்ளைச் சுத்தம் செய்து, மற்றொரு தரம் சமைத்து, உள்ளைச் சுத்தம் செய்து....இரவில் பத்து மணிக்கு மேல் 'அக்கடா!' என்று படுத்துத் தம்மை மறந்து தூங்கும் மாதர்கள்.



கண்டுபிடியுங்கள்

● விருந்தாளி இலையில் சாப்பிட உட்கார்ந்திருக்கும்போதுதான் குழம்போ, ரசமோ, ரொம்ப உப்புக் கரிக்கிறது என்று தெரிய வருகிறது. புளி அதிகமா யிருந்தால் உப்புப் பொடியைப் போட்டுவிடலாம். உப்பு அதிகமா யிருப்பதைச் சட்டென்று குறைக்கச் செய்யக் கூடிய ஏதாவது ஒரு பொடி, அல்லது எஸென்ஸ் தேவை.



● மண்ணெண்ணெய் ஸ்டவ்கள் பெரும்பாலானவற்றில் திரியை ஏற்றி இறக்குவதற்காக வைக்கப்பட்டிருக்கும் திருகு சில வாரங்களுக்கெல்லாம் சத்தியாக்கிரகம் செய்யத் தொடங்கி விடுகிறது! ஒழுங்காக வேலை செய்யக் கூடிய திருகு வேண்டும்.



குறிப்புகள்

★ **தேங்காய் அழுகாதிருக்க:** தேங்காயின் குடுமி அல்லது கண்கள் மேற்புறம் இருக்கும்படி திமிர்த்தி, சுவர் மீதோ மற்ற எதன் மீதோ சாய்த்து வைத்தால் அது சீக்கிரம் அழுகாது. அந்த நிலைமையில் அது தான் இன்னும் மரத்திலிருந்து தொங்கிக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் போலும்!



★ **பாகற்காய் கசக்காதிருக்க:** பாகற்காய்க்கு இயற்கையாயுள்ள கசப்பைச் சிலர் அதைச் சமைக்கும்போது இரு மடங்கு அதிகமாக எடுத்துக் காண்பிக்கும்படி எப்படியோ செய்து விடுகிறார்கள். பாகற்காயை நறுக்கிக் கொண்டிருக்கும்போது அதைச் சுத்தமான தரையில் போட்டுப் பிறகு எடுத்தால் கசப்புக் குறைந்திருக்கும்.




மில்க் ஆப் மக்னீஷியா என்பது என்ன?

இது மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைடின் எமல்ஷன். அமில நாசினியும் மலமிளக்கியுமான இது இரைப்பை சம்பந்தமான (அஜீரணக்) கோளாறுகளின் சிகிச்சையில் ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

மில்க் ஆப் மக்னீஷியாவிற்கு, மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைட் மிக்ஸ்சர் B.P., மெக்னீஷியா மாக்மா யு. எஸ். பி., க்ரீம் ஆப் மக்னீஷியா B. P. போன்ற பெயர்களும் உண்டு. எப்பெயரால் அழைக்கப்பட்டாலும் இதன் அடிப்படையான பொருள் ஒன்றே. மேலும் ஒரு அங்கீகரமான ஔஷதகரண விதியின் கண்டிதமான நியதிக்கும், பிரமாணத்திற்கும் தக்கபடி இது உற்பத்தி செய்யப்படுகிறது. இது எந்த வர்த்தகப் பெயரில் விற்பனை செய்யப்பட்டாலும் சரி அப்பெயர் தயாரிப்பாளரை சுட்டிக் காட்ட அநுகூலமாகுமே தவிர இதன் தரத்தை உயர்த்தவோ, தாழ்த்தவோ செய்யாது.

இருந்த போதிலும், விற்பனைப் பெயர், வாடிக்கையாளரை பொறுத்த மட்டில் மிகவும் முக்கியம். ஏனென்றால் நன்கு தெரிந்த ஒரு பெயர் அவருக்கு தயாரிப்பாளரின் நம்பகத்தன்மையைப் பற்றி உறுதியளிக்கிறது. இக்காரணத்தினால் தான் கணக்கற்ற வாடிக்கையாளர்கள் அன்றாடம் 'மக்த்' (MandH) மில்க் ஆப் மக்னீஷியாவை வாங்குகிறார்கள். இது யுனைடெட் ஸ்டேட்ஸ் ஔஷதகரண விதிகளின்படி தயாரிக்கப்பட்டு குணத்திற்கும் தரத்திற்கும் நன்கு பரிசீலனை செய்யப்படுகிறது. ஆகையால் இதன் தரமும், தூய்மையும் கேள்விக்கு இடமற்றதாக விளங்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, மற்ற எல்லா 'மக்த்' (MandH) தயாரிப்புகளைப் போலவே, மருந்துகள் தயாரிப்பதில் 50 வருடங்களுக்கு மேலாக உள்ள அநுபவத்தின் சிறப்பையும் பெற்றுள்ளது.


1
2
3
4
இன்னும் ஒரு வாரத்துக்கு
ஒன்றும் சாப்பிடப் படாது!
5
யாரு?
நீங்களா?

நெடுங் கதை



1. வித்து

தேவராஜன் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருந்தார். காரணம் கனிசமாகவே இருந்தது. மறுநாட் காலையில் அவருடைய ஒரே அருமைப் புத்திரி சுமித்திராவுக்குக் கலியாணம். இன்னும் சில மணி நேரங்களில் ஜாம் ஜாமென்று ஜானவாசம் இரட்டை நாயனத்துடன் ஊரின் முக்கிய வீதிகளில் பவனி வரப் போகிறது. தாயின் முகமே தெரியாத பெண் சுமித்திரா. அவளுக்குத் தாயும் தந்தையுமாகக் கவலையில்லாமல் அவளை வளர்த்துப் பெரியவளாக்கி விட்டார் தேவராஜன். அவள் மனத்துக்குப் பிடித்த மணாளனையும் தேடிக் கண்டு பிடித்துவிட்டார். இந்தக் காரியங்களுக்கு அவருடைய ஆர்வத்துக்கு நல்ல துணையாக அவருடைய செல்வ நிலையும் உதவியது. சுமித்திரா பிறந்த வேளை தானே அவரைச் சுபிட்சத்தின் எல்லைக்கே கொண்டு போய்த் தள்ளியது. இனி அவளுக்காகச் செலவழித்தது போக மிச்சம் அவருக்குப் போதாதா என்ன?

மாடி ஜன்னல் வழியாக வீட்டின் முன் போடப்பட்டிருக்கும் கல்யாணப் பந்தலைப் பார்த்தார். பந்தல் பிரமாதமாகவே அமைந்திருந்தது. ஆலப்புழையிலிருந்து வந்திருந்த பந்தல்காரர் தம் அநுபவத்தையும் திறமையையும் கலந்து அந்த அழகுப் பந்தலை அலங்கரித்திருந்தார்.

பார்வை வேறு பக்கம் திரும்பியது. தெரிந்தவர் ஒருவர் உற்சாகத்துடன் ஊர்வலத்துக்காக அளித்த புது பிளைமத் நேர் காருக்கு மலர் அலங்காரம் செய்து கொண்டிருந்தார்கள். மல்லிகை மலரும் வேளை. மணம் காற்றிலே மிதந்து வந்து நாசியைத் தாக்கியது. மீண்டும் பார்வை திசை மாறியது. சம்பந்திக் கூட்டம் வந்து இறங்கியிருந்த எதிர்வீட்டு மாடியில் பார்வை பதிந்தது.


ஒரு நடுத்தரவயது அம்மாள் சுமித்திராவை ஒத்த யுவதிக்குத் தலையில் பூச்சரத்தைக் கிள்ளிச் செருகிக் கொண்டிருந்தாள். அந்தயுவதிக்கு அந்தஅம்மாள் தாயாராக இருக்கலாம்.

தேவராஜனுக்குத் தம் இதயம் நின்று விட்டது போல ஒரு பிரமை. அவசரம் அவசரமாக மார்பின் இடது புறத்தை அழுத்தி விட்டுக் கொண்டார். அதே சமயம், எதிர்வீட்டு மாடியில் பூச்சூட்டிய அம்மாள் தன் மனத்தில் தோற்றுவித்த எண்ணத்தையும் அழிக்க அவர் மனம் துடித்தது.

"அப்பா! சம்பந்தி வீட்டுக்குக் காப்பி டிபன் போய் விட்டதா என்று விசாரித்தீர்களா அப்பா! டிபனுக்குத் தயார் பண்ணியிருக்கும் ஹல்வா ஏ. ஒன் அப்பா! சம்பந்திகள் முழுங்கிக் காலி பண்ணுவதற்குள் நீங்களும் ஒரு கண்டைக்காய் வாயில் போட்டு ருசி பார்க்க மறந்து விடாதீர்கள்!" சுமத்திராவின் குரல் பக்கத்து அறையிலிருந்து வந்தது. அது அவளுடைய அறை. ஏதும் அலங்காரம் செய்து கொள்ளவோ உடை மாற்றிக் கொள்ளவோ அவள் வந்திருக்கலாம். ஜன்னல் இடுக்கு வழியாகத் தந்தையைப் பார்த்து விட்டுப் பேசியிருக்கிறாள்.


"சுமித்திரா!" என்றார் தேவராஜன் சிலவிநாடிகள் கழித்து. பதில் வரவில்லை. அவள் அப்படியே இறங்கிப் போயிருக்கலாம். அவர் உட்கார்ந்திருந்த மாடி ஹாலிலிருந்து வராந்தாவுக்கு வழி இருந்ததுபோல் சுமித்திராவின் அறையிலிருந்தும் வராந்தாவுக்குத் தனி வழி இருந்தது. அவள் அறையை ஒட்டித் தானே வராந்தாவில் கீழே போகும் படிக்கட்டுகளும் இருந்தன.

"ஹும்!" என்ற பெருமூச்சு எழுந்தது. மனத்தைக் கவரும் ரோஜா மணம் அறை முழுதும் கமழுவது போல் பிரமை. சுமித்திரா ஒரு வேளை அவள் தலையில்



விஷ வித்து

கோமதி ஸ்வாமிநாதன்



சூட்டிக்கொண்டிருக்கலாம். காலையில்தான் கோயில் பூக்கடை ஒதுவார் பையன் ஒரு கூடைப் பூவைக் கொடுத்துவிட்டுப் போனான்.

தேவராஜன் எழுந்து வராந்தா வழியாகச் சுமித்திராவின் அறைக்குள் போனார். அவள் அங்கு இருந்தால் தம் கையால் அவள் தலைப் பூவைச் சரி செய்து செருகிவிட வேண்டும் என்ற ஆவல் வெறியாக எழுந்தது அவர் உள்ளத்திலே. ஆம்! சுமித்திராவுக்குத் தன் தாயார் நினைவு எழவொட்டாமல் செய்யத் தானே அந்த ஸ்தானத்துக்கேற்ற பணியைச் செய்தால் என்ன என்றுதான் தோன்றியது! அந்த வாய்ப்புக்கூட இன்னும் அதிகபட்சம் நாலைந்து நாட்கள்தானே?

சுமித்திரா அங்கு இல்லை. அவள் தலையிலிருந்து உதிர்ந்திருந்த நாலைந்து இதழ்கள் மாத்திரம்தான் கீழே கிடந்தன. எதிர்பாராமல் தெருவில் ஒரு நயாபைசாவைக் கண்டெடுத்த சிறுவன் மேலும் சில நாணயங்கள் கிடைக்காதா என்று ஆவலுடன் குனிந்து தேடுவதுபோல் அத்தனை இதழ்களையும் பொறுக்கிச் சுவரில் மாட்டியிருந்த சுமித்திரா

வின் புகைப்படச் சட்டத்துக்கும் சுவருக்கும் இடையே திணித்தார். மனம் நிறைவு பெற்றது போல் உணர்ச்சி. மீண்டும் ஹாலுக்கு வந்தார். அப்போதுதான் அந்தப் பட்டணத்துச் சமையற்காரப் பையன் கையில் கொண்டு வந்திருந்த டிபன் தட்டையும், காப்பி டபராவையும் டீப்பாயில் வைத்துக் கொண்டிருந்தான்.

தேவராஜனுக்கு ஏனோ அந்தச் சமையற்கார இளைஞனைக் காணப் பிடிக்க வில்லை. அதற்குப் போதுமான காரணங்களைச் சேர்க்கவும் அவரால் இயலவில்லை. அந்த இளைஞனின் தோற்றத்தில் எந்தவிதமான குறைபாடும் இல்லை. ஓரளவு படித்தவனாகவே இருந்தான். குரலில் இதமும் இனிமையும் மரியாதையுடன் கலந்து ஒலித்தன. விடிய விடிய அவனுக்கு வயது இருபத்துநான்கு, இருபத்தி ஐந்துதான் இருக்கலாம். அவனை முதன் முதலாகப் பார்ப்பவர்கள் நிச்சயமாக அவனையும் சமையல் தொழிலையும் இணைத்து நினைக்க மாட்டார்கள். தேவராஜனே அப்படி நினைக்க வில்லையே! விஷயம் தெரிந்தபோது அவர் திகைப்பிலல்லவா ஆழ்ந்தார்!

குறிப்பிட்ட பட்டணத்துப் பிரபல சமையற்காரரைக் கலியாணத்துக்கு அமர்த்த வேண்டும் என்று தேவராஜனுடைய நண்பர்கள் சொன்னார்கள். தேவராஜனும் அதற்காக ஒரு நடை பட்டணம் போனார். ஆனால் அவருக்கு அந்த முயற்சியில் வெற்றி கிட்ட வில்லை. பிரஸ்தாப பிரபல சமையற் கலைஞர் குறிப்பிட்ட தேதியில் வேறு ஓர் இடத்துக்குக் கலியாணத்துக்கு ஒப்புக் கொண்டு விட்டிருந்தார். ஆனால் அவர் சொன்னார்: "ஐயா! என் துறையில் என்னையும் மிஞ்சி விடும் அளவுக்கு ஓர் இளைஞன் தலைதூக்கியிருக்கிறான். வயதுக்கும் அவன் கைத் திறமைக்கும் கொஞ்சங்கூடச் சம்பந்தமில்லை. ஏதோ பூர்வ ஜன்ம வாசனை என்றுதான் சொல்வேன். தொழிலில் மகா நிபுணன். நம்பிக்கையாக நீங்கள் அவனை ஏற்பாடு செய்யலாம். அவனுக்கும் நாலு சிஷ்யப் பையன்கள் இருக்கிறார்கள்!... டேய், சுந்தரம்! அண்ணாவை ரகுகிட்டே அழைத்துக் கொண்டு போடா! நான் சொன்னேன்னு அவன் கிட்டே சொல். ஐயா! பையன் சிறிசு என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம்! அவன் நிச்சயமாக உங்ககிட்டே நல்ல சர்டிபிகேட்தான் வாங்குவான்" என்றார்.

இந்தப் பின்னணியில்தான் தேவராஜன் ரகுவைச் சந்தித்தார். அறிமுகமான பிறகும் அவனை ஒரு சமையற் கலைஞன் என்று அவரால் நம்ப முடியவில்லை.

"சார்! குறிப்பிட்ட தேதியிலே எனக்கு இதுவரை வேறு இடங்களிலிருந்து ஏதும் அழைப்பு வரவில்லை. ஆகையால் உங்களுக்கு இஷ்டமானால் நான் வரத் தயார். பெரியவருக்குக் கொடுக்கிற ரேட்தான். வெளியூராக இருப்பதாலே ரயில் சார்ஜ் சேர்த்துக்கொடுக்கணும். என்கூட நான்கு சிப்பந்திகள் வருவார்கள்" என்று பளிச்சென்று பேசினான். ஆனால் அவன் பேசிய தோரணையில் பண்பும் விநயமும் கலந்திருந்தன.

"உனக்கு இந்தத் துறையில் எத்தனை வருட அநுபவம்?" என்றுதான் தேவராஜனுக்குக் கேட்கத் தோன்றியது. கேட்டும் விட்டார்.

"நான்கு வருட அநுபவம். என் குருநாதர் ஒரு மேதை" என்றான் அவன்.

தேவராஜனுக்கு வேறு யாரையும் தேடிப் போகலாமா என்றுதான் தோன்றியது. ஆனால் அநுபவஸ்தர் ஒருவர் தம் கௌரவத்தையும் பாராது அவன் திறமையைப் புகழ்ந்தது நினைவுக்கு வந்தது. ஏதோ வேண்டா வெறுப்பாகவே, அவனை நிச்சயம் செய்து அச்சாரமும் கொடுத்து விட்டார். ஆனாலும் அவர் மனம் அப்புறமும் குடைந்து கொண்டு தான் இருந்தது. 'எனக்கு அவனைக் கண்டால் பிடிக்க வில்லை' என்று தமக்குத் தாமே அடிக்கடி சொல்லிக் கொண்டார். ஏன் பிடிக்க வில்லை என்று அவருக்கே தெரியவில்லை.

ரகு டிபன் தட்டையும் காப்பி டபராவையும் டீப்பாயின்மீது வைத்து விட்டுக் காரியம் முடிந்தது என்று திரும்பிப் போய் விடவில்லை. சுமித்திரா என்னவோ மாடியிலிருக்கும் தன் தந்தைக்கு டிபன் அனுப்பி வைக்கும்படிதான் சொன்னாள். இரவுச் சமையலுக்கான திட்டங்களைத் தன் உதவியாளர்களிடம் விவரித்துக் கொண்டிருந்த ரகு, தானே, தட்டை எடுத்துக் கொண்டு கிளம்பினான். தாற்காலிக யஜமான் என்ற மரியாதை உணர்ச்சி சிறுவனை அப்படிச் செய்யத் தூண்டியதோ என்னவோ?

ரகு தன் காரியம் முடிந்து விட்டதென்று உடனே திரும்ப வில்லை. அந்த ஹாலில் மாட்டப்பட்டிருந்த புகைப்படங்கள் மீது கவனத்தைச் செலுத்தினான். அங்கு ஐந்தாறு புகைப் படங்களுடன் கலரில் 'என்லார்ஜ்' செய்யப்பட்ட முதியவர் ஒருவரின் உருவப் படமும் இருந்தது. ஹாலின் மத்தியில் சாய்த்து மாட்டப்பட்டிருந்த அந்தப் பெரிய படத்தினருகில் போய்ப் பார்த்தான். பிறகு தேவராஜனைப் பார்த்தான். மீண்டும் அவன் கவனம் படத்தின் மேல் பாய்ந்தது.

தேவராஜன் ஹல்வாத் துண்டை விண்டு வாயில் போட்டுக் கொண்டார். அதை அவர் ரசித்து மென்றதாகத் தெரிய வில்லை. தின்ன வேண்டுமே என்று வேண்டா வெறுப்புடன் தின்னும் உணர்ச்சி அவர் முகத்தில் பரவியது.

"இது உங்கள் தகப்பனாரின் 'போர்ட்ரெயிட்டா' சார்?" என்றான் ரகு.

தேவராஜன் ஒரு கணம் அவனை உற்று நோக்கினார். சாதாரண ஒரு சமையற்காரன் அவருடன் பேச்சுக் கொடுப்பதே அவருக்குப் பிடிக்க வில்லை. "ஆம்" என்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் ஆட்டினார்.

ரகு அதைப் புரிந்து கொள்ளவில்லை. அவன் கவனம் அந்த ஓவியத்திலேயே பதிந்திருந்தது. சற்றுப் பின்னால் போய் நின்று அந்தப் படத்தைக் கூர்ந்து நோக்கினான். அப்புறம் வலது பக்கம் போய் நின்று பார்த்தான்.

"படம் நன்றாகவே அமைந்திருக்கிறது. ஆனால் அந்த ஓவியர் 'காம்பொசிஷனுக்கு' முக்கியத்துவம் கொடுக்க வில்லை. அந்தப் பெரியவரின் கையில் ஒரு புத்தகம் இருக்கிறது என்று காண்பித்திருப்பதைவிட ஒரு வெற்றிலைப் பெட்டியையோ, பாக்குவெட்டியையோ கொடுத்திருந்தால் படத்தின் அமைப்பு இன்னும் பிரமாதமாகவே இருந்திருக்கும்" என்று ரகு தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். அந்த எண்ணக் கோவை போதுமான சத்தம் பெற்றுத் தேவராஜனின் செவிகளை எட்டி விட்டது.

தேவராஜன் முகம் ஏனோ கோபத்தால் சிவந்தது. கையில் இருந்த அல்வாத் தட்டை 'டங்' என்ற சத்தத்துடன் டீப்பாயில் வைத்துத் தம் கோபத்தை வெளிப் படுத்திக் கொண்டார்.

"இந்தாப்பா! அப்புறமாக யாரையாவது அனுப்பி இந்தப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு போகச் சொல். நீ போய் உன் வேலையைக் கவனி! இந்த ஊர்க்காரர்களின் நாக்கும் பொல்லாதது. நல்ல பெயர் வாங்கியாக வேண்டும்!"

தேவராஜன் பற்களைக் கடித்துக் கொண்டே தான் பேசினார். அவருடைய கோபம் தேவையான அளவுக்கு வெளிப்பட்டது.

"சாருக்கு நான் ஓவியத்தைப் பற்றிப் பேசுவது பிடிக்க வில்லை போலிருக்கிறது. பூசணிக்காய் மோர்க் குழம்பு மாத்திரம் வைக்க நான் பழக வில்லை. இடையே கொஞ்சம் மற்றக் கலைகளின் நிழலில் ஒதுங்கிய காரணத்தால் சில சமயம் அந்த உணர்ச்சியும் மேலிடுகிறது. நீங்கள் சமையல்தரத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அது என் கலை. அதன் 'காம்பொஸிஷன்களை'ச் சரியாகவே அமைப்பேன்."

ரகு போய் விட்டான். அவன் முகத்தி லடித்தது போல் பதில் சொன்னான் என்ற உணர்ச்சிதான் அவர் உள்ளத்தில் ஏற்பட்டது.

தேவராஜன் எழுந்து நின்றார். அவருடைய தந்தையின் படம் அவரைப் பார்த்துச் சிரிப்பது போன்ற பிரமை. தலையைக் குனிந்து கொண்டார் அவர்.

ஆம், அந்த ரகு சொன்னதில் தவறு என்ன இருக்கிறது? அவர் தந்தைக்கும் புத்தகத்துக்கும் என்ன உறவு இருக்கிறது? அவர் புத்தகத்தைத் தொட்டுப் பார்த்திருப்பாரா என்பதே சந்தேகமான விஷயம்தானே?

2. மூலை

தேவராஜனின் தந்தை சாம்பசிவம் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஒதுங்கினவரில்லை. புத்தகத்தைத் தொட வேண்டிய அவசியமும் ஏற்பட வில்லை. ஏதாவது தொழில் செய்து தான் வயிற்றைக் கழுவ வேண்டும் என்ற நிலை ஏற்பட்ட போது அவர் மிகவும் சிரமப்பட்டார். அவருடைய முன்னோர்கள் மருந்துக்குக்கூட ஏதும் சொத்து விட்டுப் போகவில்லை.

சாம்பசிவத்துக்கு அவ்வளவு சாமர்த்தியமும் போதாது. வாயாடி வீரர் இல்லை. ஆகவே வேறு வழியில்லாமல் கோவில் மடப்பள்ளியில் கைங்கரியம் பண்ண நுழைந்து விட்டார். பிரசாதங்களில் ஓர் உப்பு அதிகம் என்றோ புளி தூக்கல் என்றோ பகவான் வந்து குற்றம் சாட்டப் போவதில்லை என்ற தைரியம் அவருக்கு உண்டு.

பொதுவாக எல்லாத் தந்தைகளைப்போலும் தன் மகன், தன் தொழிலைப் பின்பற்ற வேண்டும் என்று சாம்பசிவம் கனவிலும் நினைத்தவரில்லை. வலுக் கட்டாயமாகத் தன் பிள்ளை தேவராஜனை ஐந்தாவது வயதிலேயே கிராமத்துத் திண்ணைப் பள்ளிக்கூடத்து வாத்தியார் 'அண்ணுத்தை'யிடம் கொண்டு போய்த் தள்ளினார். தொடர்ந்து பிள்ளையை 'ஸ்பெஷலாக'க் கவனித்துக் கொள்வதற்காக 'அண்ணுத்தை'க்கு நிறையக் கோவில் பிரசாதங்களையும் தள்ளினார்.



"சோடாக்கடை முதலாளி சோணாசலம் அவர்களை இக்கூட்டத்துக்குத் தலைமை தாங்குமாறு மகிழ்ச்சியுடன் கேட்டுக் கொள்கிறேன்!"

திண்ணைப் பள்ளிக்கூட உபாத்தியாயர் அண்ணுசாமி கிராமத்தில் பல தலைமுறைகளைக் கண்ட பழுத்த ஆசாமி. வயதின் காரணமாக மரியாதையாக 'அண்ணுத்தை' என்ற பெயரால் அழைக்கப்படுபவர்.

"இந்தா ஐயா சாம்பசிவம்! இந்த ஊர்க் குழந்தைகளுக்காகவாவது நான் இன்னும் கொஞ்ச நாள் உயிரோடு இருக்க ஆசைப் படுகிறேன்! அதனாலே எனக்குக் கோயில் பிரசாதம் கொடுக்கிறதைக் கொஞ்சம் நிறுத்திக்கலாம். இந்தப் பிரசாதத்தைத் தினம் பார்த்துக்கிட்டு அந்தச் சாமி எப்படி இன்னும் அந்தக் கோவிலை விட்டு ஓடிப் போகாமல் இருக்கிறது என்பதே ஆச்சரியப்பட வேண்டிய விஷயம்!... இருபது வருஷத்துக்கு முன்னாலே இதே மடப்பள்ளியிலே வெங்கடாசலம்னு ஒரு பையன் இருந்தான். அவன் கைபட்டால் கல்லுக்குக்கூட ஒரு ருசி வந்துடும்....." என்று ஏதேதோ தொடர்ந்து சொல்லிக்கொண்டு போனார் அண்ணுத்தை.

சாம்பசிவம் அசட்டுச் சிரிப்புடன் அந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டு நின்றார்.

ஆனால் ஐந்து வயதுச் சிறுவனான தேவராஜன் உள்ளத்தில் அந்த வார்த்தைகள் ஏனோ ஒரு முள்ளாய்த் தைத்தன. சாம்பசிவம் ஏதாவது துடிப்பாக 'அண்ணுத்தை'க்குப் பதில் சொல்லி யிருந்தால் அந்த முள்ளை வலியில்லாமல் நீக்கிவிட்ட உணர்ச்சி ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அந்த அசட்டுச் சாம்பசிவம் பெருமாள் மாடு மாதிரி சும்மா தலையை ஆட்டிக் கொண்டிருந்தார். அவருக்குத் தெரியும், தம் குறைபாடுகள் தீர்க்கப்பட முடியாதவை என்று. ஆகையால்தான் 'அண்ணுத்தை'க்கு அவர் ஏதும் சவால் விட முன்வரவில்லை.

அந்தக் கணத்திலேயே அவனுடைய பிஞ்சு உள்ளத்தில் தந்தை மேலும் தந்தை செய்

யும் சமையல் தொழில் மேலும் இனம் புரியாத ஒருவித வெறுப்பு உணர்ச்சி படர ஆரம்பித்தது. பிறகு அந்த உணர்ச்சி வாழ் நாள் முழுதும் தொடர்ந்தும் வளர்ந்தது.

''....இதெல்லாம் எதற்குச் சொல்லுகி றேன் என்று கேள் ஐயா!.... பையனே நான் பிரசாதம் இல்லாமலே கவனிக்கறேன். அதற்காக நான் அவனுக்கும் பாடத்தைக் குறைக்கச் சொல்லிக் கொடுப்பேனென்று பயப்படாதே! ஆனால் ஒரு விஷயம். இன் னும் மூணு நாலு வருஷம் போனாலும் பயலைப் பக்கத்து ஊர் ஹைஸ்கூலுக்கு அனுப்பி வைக்க மறந்துடாதே! உனக்கு உதவியா மடப்பள்ளியிலே மிளகாய் அரைத்துக் கொடுப் பான் என்று மாத்திரம் இழுத்துப் போடாதே'' என்று சிரித்துக் கொண்டே 'அன்னதாதா' பேசி முடித்தபோது தேவராஜன் உள்ளத் தில் அந்த வெறுப்பு அஸ்திரமாகவே அமைந்தது.

அப்புறம் அவன் பட்டினி கிடந்தாலும் பாடங்களைப் படிக்க மறக்கவில்லை. மழையோ வெய்யிலோ பக்கத்து ஊர்ப் பள்ளிக்கூடத் துக்கு நடந்து போய் 'மெட்ரிகுலேஷன் பரீட் சையில் வெற்றி காணவும் தவறவில்லை. ஆனால் பழைய வெறுப்பு உணர்ச்சியையும் அவன் கைவிடவில்லை.

எப்படியோ வாழ்க்கைச் சக்கரம் ஓடியது. தேவராஜன் முதலில் எங்கோ தாலுகா ஆபீஸில் வேலை பார்க்க நுழைந்தான். கல் யாணம் கூடச் சற்று சாவகாசமாகவே நடந் தது. சொல்லி வைத்தாற்போல் முன்னும் பின்னுமாகப் பிள்ளைக்குப் பாரமாக இருக் கக்கூடாதென்று சாம்பசிவமும் அவர் மனைவி யும் காலமானார்கள். தாலுகா ஆபீஸில் மேலதிகாரிகளுடன் சண்டை போட்டுக் கொண்டு அந்த உத்தியோகத்தை உதறி விட்டு நகர வாழ்க்கையில் தன் அதிர்ஷ் டத்தைப் பார்க்க ஓடினான் தேவராஜன். நல்ல காலம் நிஜமாகவே பிறந்தது. ஒரு வர்த்தக ஸ்தாபனத்தில் உதவியாளனாகச் சேர்ந்து பத்தே வருடத்தில் அதன் பங்கு தாரராக மாறி மேலும் பத்து வருடங் களில் அமோகமான பணத்தை ஈட்டிக் கொண்டு மனத்துக்குப் பிடித்தமான சித் தூரில் வீடு கட்டிக்கொண்டு உட்கார்ந் தாகிவிட்டது.

ஒரே பெண். அவளுக்கும் சிறப்பாக மறு நாள் கல்யாணம் நடந்து முடிந்துவிட்டால் கோவில், குளம், நண்பர்கள், பத்திரிகைகள் என்று நேரத்தைப் பங்கிடு செய்துகொண்டு நிம்மதியாக இருக்கலாம்.

அந்த இன்ப நினைப்பைத்தான் ரகுவின் வார்த்தைகள் கலைத்தன. அவன் மற்றப் படங்களைக் காட்டித் தன் அபிப்பிராயங் களை உதிர்த்திருந்தால் தேவராஜன் அந்தளவு தூரம் மனத்தை அலட்டிக் கொண்டிருக்க மாட்டார். ஆனால் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் என்ற வகையில் சமையற் காரப் பையனாகிய ரகு. ஒரு பழைய சமை யல் கலை ஆசாமியாகிய தன் தந்தை படத் தின் அமைப்பை விமரிசனம் பண்ணத் தொடங்கியது அவர் மனத்தின் அடித் தளத்தில் ஒளிந்திருந்த வெறுப்புணர்ச்சியை விசுவரூபமே எடுக்க வைத்துவிட்டது.

எப்போதோ கோவில் தர்மகர்த்தா ஒருவர் தம் சஷ்டியப்த பூர்த்தி கொண்டா டிய உற்சாகத்தில் கோவில் சிப்பந்திகளுடன் போட்டோ எடுத்துக் கொள்ள ஆசைப்பட்டு அதன் மேல் வரிசையில் வியர்க்க விறு விறுக்க ஓடிவந்து சாம்பசிவம் நின்று எடுக் கப்பட்ட ஒரு புகைப்படத்தைத் தேடிக் கண்டுபிடித்து அதில் கிடைத்த முகத்தை மாத்திரம் உண்மையின் அடிப்படையாக வைத்து ஓவியர் ஒருவரைக் கொண்டு வரை யப்பட்ட சித்திரம் அது. தேவராஜனின் ஜோதானவை மனத்தில் கொண்டு. வழக்கம் போல் ஓவியர் தாம் சிருஷ்டித்த கையில் ஒரு புத்தகத்தையும் சிருஷ்டித்துவிட்டிருக்கிறார்.

மடப்பள்ளிச் சாம்பசிவத்தின் உறுதுணை வெற்றிலைப் பெட்டிதான் என்பது ஓவியருக் குத் தெரியாதே! அதை எப்படி இந்தப் பையன் முக பாவத்தி லிருந்து கண்டுபிடித் தான்? கண்டு பிடித்ததோடல்லாமல் வாய் விட்டுச் சொல்லியும் வைத்தானே!


பழைமையை மறக்கத்தான் தேவராஜன் முயன்று கொண்டிருந்தார். அதைக் கிளறி விட்டான் ரகு.

''அப்பா!'' என்ற குரல் அவர் பின்னால் சிங்காரமிட்டது. சுமித்திராதான் சர்வா பரண பூஷிதையாக அவர் பின் நின்று கொண்டிருந்தாள்.

''என்னப்பா! தாத்தாவின் படத்தோடு ஏதோ பேசுவது மாதிரி நின்றுகொண்டிருக் கிறீர்கள்? டிபன் சாப்பிட்டு விட்டீர்களல் லவா?....'' என்றாள் சுமித்திரா.

''ஓ! சாப்பிட்டேன். நீ சொன்னதுபோல் ஹல்வா பிரமாதமாகத்தான் இருந்தது. ஒருவேளை நீயே அதைத் தயாரிக்க 'டைரக் ஷன்' கொடுத்திருப்பாயோ என்ற சந்தேகம். அப்படித்தானு?'' என்றார் செல்லமாக. படத் திலிருந்து திடுக்கிட்டு முகத்தை அவளிடம் திருப்பு முன்னமே அதில் பரவியிருந்த உணர்ச்சிகளைச் சிறந்த நடிகன் போல் மாற் றிக்கொண்டிருந்தார் தேவராஜன்.

''போங்கப்பா! அந்த 'ஹெட் குக்' ரொம் பக் கெட்டிக்கார ஆசாமி போலிருக்கிறது. என்ன லாகவமாக வேலை செய்கிறார் தெரி யுமா? நான்கூடச் சற்று நின்று கவனித்தேன்'' என்று உற்சாகத்துடன் சொல்லிக்கொண்டு வந்த சுமித்திரா குரலைத் தணித்து. ''நிஜ



வைப் படித்தும் இருக்கிறார் போலிருக்கிறது. அந்தக் கோஷ்டியினரிடையே நடந்த சில அரசியல் சம்பந்தமான சர்ச்சைகளைக்கூடக் கேட்டேன்'' என்றாள்.

''இந்தாம்மா! அது இருக்கட்டும். ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறாயே? தாசில்தார் வீட்டிலிருந்து பெரிய ரத்தினக் கம்பளம் வந்து விட்டதா?'' என்று பேச்சின் திசையை மாற்றினார் தேவராஜன்.

''தாசில்தார் மாமாவே வந்துவிட்டார். அவருக்கு டிபன் கொடுத்துக் கீழே உட்காரச் சொல்லியிருக்கிறேன். பாண்டு வாத்தியக் கோஷ்டி கூட வந்து விட்டது.'' என்று அவள் முடிக்கு முன்பே தேவராஜன் 'தப்பினோம் பிழைத்தோம்' என்று மாடிப் படியை நோக்கி நடந்தார்.

3. கொடி

தந்தை கீழே இறங்கிப் போன பிறகு சுமித்திரா சரிந்திருந்த பூச்சரத்தைச் சரி செய்துகொள்ளத் தன் அறையிலுள்ள நிலைக்கண்ணாடி முன்னால் போய் நின்றாள். தன் உருவத்தைத் தானே பார்த்துக் கொண்டு நின்று ரசித்தபோது அவள் உள்ளத்திலே அவளை அறியாமலேயே ஒருவித கிளுகிளுப்புத் தோன்றியது.

'பெண்களுக்குச் சிந்தனை வேகமாக ஓடுகிற வேளை அவர்கள் கண்ணாடி முன் நிற்கும் வேளைதான்' என்று எப்போதோ ஒரு பிரசங்கி சொல்லக் கேட்டிருக்கிறாள். அந்த நினைவு இப்போது அவளுக்கு வந்தபோது வெட்க உணர்ச்சியும் கூடவே வந்தது. கண்களை மூடிக்கொண்டாள்.

இப்போது வெளியிலே இருந்த நிலைக் கண்ணாடி நினைவிலே புகுந்து நின்றது. அந்தக் கண்ணாடியில் இப்போது இரண்டு உருவங்கள் தோன்றின. ஒன்று சுமித்திரா, மற்றொன்று அவளுக்கு மறு நாள் மாலையிடவிருக்கும் மாப்பிள்ளைப் பையன் வேணுகோபாலன்.

சுமித்திரா — வேணுகோபாலன் திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட நிகழ்ச்சிதான் என்று சொன்னாலும் அதில் ஓரிழை காதல் சன்னமாக ஓடிக்கொண்டிருந்தது என்னவோ உண்மைதான். இந்தக் கல்யாணப் பேச்செல்லாம் ஆரம்பமாவதற்கு முன் அவர்கள் ஒரு தடவை சந்தித்தனர்.



கடந்த ஆண்டு தேவராஜன் சுமித்திராவுடன் கோடைக்கானல் மலைக்குப் போய் விட்டுத் திரும்பும்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது. மதுரையிலிருந்து அவர் திரும்புவதற்கு முதல் வகுப்பில் இடம் ரிசர்வ் செய்திருந்தார். வண்டியில் ஏறும்போது தான் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு ஆசனங்களுமே மேல் பெர்த்தாக இருந்தது தெரிய வந்தது. கீழ் இரண்டு பெர்த்திலும் ஒரு வட நாட்டு மூதாட்டியும் ஒரு தமிழ் நாட்டு வாலிபனும் உட்கார்ந்திருந்தார்கள். இருவருக்கும் எந்த வித சம்பந்தமுமில்லை என்று பார்த்தவுடனேயே தெரிந்துவிட்டது.

தேவராஜனுக்கு அந்த வாலிபனிடம் போய் ஒரு பெண்மணிக்காக பெர்த்தை விட்டுக் கொடுக்க முடியுமா என்று கேட்க விருப்பமில்லை. சுமித்திராவுக்கோ மேல் 'பெர்த்'தில் படுத்துத் தூங்கிப் பழக்கமில்லை. தர்மசங்கடமான நிலை.

தேவராஜனின் மனத்தை ஊடுருவிப் பார்த்தவன் போல் அந்த வாலிபனே நிலைமையைச் சமாளிக்க முன் வந்தான். ''சார்! உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால், அவங்க இங்கே கீழே படுத்துக்கொள்ளட்டும். அதோ அந்த அம்மாவும் துணைக்கு இருக்காங்க. நமக்கு மேல் பெர்த் சௌகரியமாக இருக்கும்'' என்றான். அவன் குரலில் மரியாதையும் கனிவும் கலந்திருந்தன.

''ரொம்ப ரொம்ப நன்றி. உங்களிட்டேயே கேட்கலாம் என்று நானே நினைத்தேன்'' என்று சமாளித்துக்கொண்டு வந்தனம் செலுத்தினார் தேவராஜன்.

மேல் 'பெர்த்'துக்கு இடம் மாற்றும் போதுகூட அந்த வாலிபனின் கண்ணியம் அவர் கவனத்துக்குள்ளாகியது. சுமித்திரா அமர்ந்த ஆசனத்துக்கு எதிராக உள்ள மேல் பெர்த்தில் தேவராஜனை அமர்த்திவிட்டு, 'சார் நீங்கள் அங்கு படுத்துக்கொண்டால் தான் அவங்க கூப்பிடும்போது கவனிக்க வசதியாக இருக்கும்'' என்றும் சொன்னான். அந்த வார்த்தைகள் அவருடைய மதிப்பில் அவனை உயர்த்தின.

அவன் எது வரை போகிறான் என்றோ, அவர்கள் எதுவரை போகிறார்கள் என்றோ பரஸ்பரம் விசாரித்துக் கொள்ளக்கூட இல்லை. அதுவே சுமித்திராவின் உள்ளத்தில் அவனைப் பற்றிய நல்ல அபிப்பிராயத்தைத் தோற்றுவித்தது. காலையில் தேவராஜன் கண் விழித்த போது எதிர் மேல் பெர்த் காலியாக இருந்தது. இடை வழி ஜங்ஷனில் அவன் எங்கோ இறங்கி விட்டிருக்கிறான்.

அப்புறம் பல சமயங்களில் 'அந்தப் பையன் மாதிரி ஒரு மரியாதையான கண்ணியமான ஒரு பையன் என் மாப்பிள்ளையாக வந்தால் நான் எத்தனை மகிழ்ச்சியடைவேன் தெரியுமா?' என்ற வார்த்தைகளைத் தேவராஜன் பேச்சில் சுமித்திரா காது கேட்கவே சொல்லியிருக்கிறார். அவர் 'மாதிரி' என்ற பதத்தை உபயோகித்தாலும், சுமித்திராவின் உள்ளத்தில் வேணுகோபாலனின் உருவமே பதிய ஆரம்பித்தது.



''ஆஹா! அருமையான காட்சி. ''பிரளயம்'' என்று ஒரு ஓவியம் வரையக் காத்திருந்தேன். காத்திருந்த பலன் இன்று கைகூடி விட்டது!''

சில மாதங்கள் கழித்துத் தேவராஜன் சென்னைக்குப் போயிருந்தபோது கமித்திராவின் காதுத் தோடுகளைப் புதுப்பிக்க ஒரு பிரபல வைரக்கடைக்குப் போயிருந்தார். அங்குதான் அந்த எதிர்பாராத சந்திப்பு நிகழ்ந்தது. அன்று மதுரையில் ரயில் பெட்டியில் இருந்த வாலிபன் தன் சிநேகிதர் ஒருவரின் வைர நகைகளை விற்க, சற்றுக் நட்புடலாகவே அங்கு வந்திருந்தான். பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளையின் களை அவனிடம் சொட்டியது.

வேணு கோபாலன் என்ற பெயருடைய அந்த இளைஞன் இன்னும் பிரமச்சாரியாகவே இருக்கிறான் என்று தெரிந்தபோது அவர் மனம் உள்ளூறக் குதூகலித்தது. மேலும் பக்குவமான விசாரணையில் இறங்கினார். பையன் ஏதோ பொழுதுபோக்குக்காக ஒரு கம்பெனியில் உத்தியோகம் பார்க்கிறான். ஆனால் சொந்தத்திலும் ஏதோ பெரிய பிஸினஸ் பண்ணுகிறான். வசதியான வாழ்க்கை நடத்துகிறான். பெற்றோர்களோ, கூடப் பிறந்தவர்களோ கிடையாது. எங்கோ தூரத்துக் கிராமத்தில் மாமா என்று ஒருவர் இருக்கிறார் என்ற செய்திகளைச் சேகரித்தபோது அவர் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தார். வேணுகோபாலன் கல்யாணத்தைப் பற்றி மனம் உள்ளூறக் குதூகலித்தது. மேலும் அவன் அது பற்றிப் பிடி கொடுக்காமல் பேசியதைக்கூட அவர் பொருட்படுத்தவில்லை. அந்தக் கிராமத்து மாமாவைப் பிடித்து அவர் மூலம் பையனை வழிக்குக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கை பிறந்தது.

பெண்ணைச் சம்பிரதாயப்படி வந்து பார்க்க வேண்டுமென்ற அவசியம் ஏற்படவில்லை. அன்று ரயிலில் இடம் பெற்ற பெண்தான்! அவள் மனத்தில் அவன் இடம் பெற்றிருக்கிறான் என்பது மட்டும் அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

கிராமத்து மாமா ரொம்பப் பிகு பண்ணிக்கொண்டார். அவருக்குத் தெரியும் தம் அழைப்பிற்கு அந்த வேணுகோபாலன் வரமாட்டான் என்று. ஆனாலும் பணச் சுரங்கம் போல் தோன்றும் தேவராஜன் சம்பந்தம் அவனுக்குக் கிடைக்குமானால் இடையில் எத்தனையோ வகைகளில் கல்யாணத்தை ஓட்டிக் கமிஷன் அடிக்கலாம் என்ற சபலமும் ஏற்பட்டது. கடைசியாகத் தமக்கு ஓர் இரண்டாயிரம் ரூபாயும், மாப்பிள்ளைக்குத் தேவையானவற்றையும் கொடுக்கத் தயாராக இருந்தால்தான் இதில் அக்கறை காட்ட முடியும் என்று மறைமுகமாகத் தெரிவித்தார்.

அசட்டுத் தேவராஜன் அங்கேயே இரண்டாயிரத்துக்கான செக்கை எழுதிக் கொடுத்துவிட்டு மாமாக்காரரைக் கையோடு பட்டினத்துக்கு வண்டி ஏற்றி அனுப்பிவிட்டுத்தான் ஊர் திரும்பினார்.

தம் சாதனையைப் பற்றி மகிழ்ச்சி பொங்க ஊர் திரும்பியவுடன் அவர் கமித்திராவுடன் சொன்னபோது அவள் அந்தச் செய்தியைச் சமமான மனப்பான்மையுடன் வரவேற்றாள். ''எனக்கென்னப்பா கல்யாணத்துக்கு அவசரம்?'' என்று ஒருவித போலிப் பிகு பண்ணிக்கொள்ளவில்லை. ''ரொம்ப நன்றியப்பா! அவரே எனக்குப் பிடித்த மணாளர்'' என்று மெல்லிசை டியூன் இழுத்து நடனம் ஆடவுமில்லை. அவளுக்கு இந்த ஏற்பாடு சம்மதம் என்று அவர் தெரிந்து கொண்டார்.

சீக்கிரமே மாமாக்காரரும் மருமகன் சம்மதத்துடன் வந்து சேர்ந்தார். தான் இடைக் கொள்ளை அடித்த இரண்டாயிரம் ரூபாய்க்கான உதவியைச் செய்துவிட்டதாக அவருக்கு ஆத்ம திருப்தி. கல்யாண பட்ஜெட்டைப் பதினையாயிரம் ரூபாயில் கொண்டு வந்து நிறுத்தினார். தேவராஜன் எந்தவித வெட்டுப் பிரேரணையுமில்லாமல் அதை ஏற்றுக்கொண்டார்.

இன்று கல்யாணத்துக்கு வந்து முகாம் போட்டிருப்பவர் மாமாவும் அவர் படைகளும்தான். சம்பந்தி ஸ்தானத்தில் அமர்ந்து அதிகாரம் செய்து கொண்டிருந்தார். கல்யாணப் பிள்ளையாண்டான் இருந்த இடம் கூடத் தெரியவில்லை.

ரிட்டயர்டு தாசில்தார் ராமசாமிக்கு மாத்திரம்தான் கொஞ்சம் மனத் தாங்கல். அவர் மைத்துனன் ஒரு பையன் உள்ளூர் உயர்நிலைப் பள்ளியில் உபாத்தியாயராக இருந்தான். அவனைத் தேவராஜனின் மாப்பிள்ளையாக்கிவிட அவருக்கு ஆசையுண்டு. ஆனால் அவர் தம் ஆசையை வெளியிட ஒரு வாய்ப்பைத் தேடிக் கொண்டிருக்கும்போதே தேவராஜன் இந்தப் பட்டணத்துப் பையனைப் பிடித்துவிட்டார். பட்டிணத்துப் பையனின் குலம் கோத்திரங்களையெல்லாம் சரியாக விசாரிக்கவில்லை என்பது தாசில்தார் ராமசாமியின் வாதம். ஆனால் தேவராஜனோ, ''இதோ பாரும் ராமசாமி! விவாஹங்கள் தெய்வத்தால் நிச்சயிக்கப்படுகின்றன என்று சொல்லுவார்கள். எப்படியோ இந்த ஏற்பாடு முடிந்து விட்டது. பையனை நல்ல குணமுள்ளவனாகவே இருக்கச் செய்வது மனைவியின் கடமை. எங்க கமிக்கு அந்தக் கடமை உணர்ச்சி உண்டு'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டார்.

இந்தச் சம்பாஷணையை மறைந்திருந்து கேட்ட கமித்திராவின் உடம்பு புல்லரித்தது. அவள் அப்பா இவ்வளவு நல்லவரா?

பேதைப் பெண்! அந்தப் பதினெட்டு மணி நேரத்துக்குள் என்னவெல்லாமோ நடக்கவிருக்கின்றன என்று அவள் கண்டாளா என்ன?

ஊரின் கிழக்குக் கோடியிலிருந்த பெருமாள் கோவிலிலிருந்து ஜானவாசம் ஊர்வலம் கிளம்பிவிட்டது. வைத்த கண் வாங்காமல் தெருக்களின் இரு சாரி வீட்டார்களும் அந்தப் பிரும்மாண்டமான காரையும், அதன் அலங்காரத்தையும், கம்பீரமாக அதில் வீற்றிருந்த வேணுகோபாலனையும் பார்த்து ரசித்தனர்.

ஜானவாசத்தைத் தொடர்ந்து நடக்கும் சம்பிரதாயமான சடங்குகளும் முடிந்து, எல்லோரும் சாப்பாட்டுக்கும் உட்கார்ந்துவிட்டார்கள்.

ஏகுவின் கைவண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்பட ஆரம்பித்தன. தன் மாணவர்களில் எவனையும் வாய் நிறையப் பாராட்ட மறுக்கும் ஹெட் மாஸ்டர் ஏகாம்பரம் சமையல் அயிட்டங்களுக்கான சர்டிபிகேட்டுகளைத் தாராளமாகவே அள்ளி வீச ஆரம்பித்தார்.

''யார் சுவாமி இந்த நள மகாராஜா! இது பாயசமா? அமிர்தமல்லவா? இப்படிப் பாயசத்தை நான் என் முப்பது வருஷ சர்வீஸிலே சாப்பிட்டதில்லை....''

''அதோ வருகிறானே, பன்னீர் ரசத்துடன் அந்தப் பையன்தான் ஏகாம்பரம் சார் குறிப்பிட்ட நள மகாராஜன்'' என்றார் தாசில்தார் ராமசாமி. தொடர்ந்து ''மூர்த்தி சிறிதாக இருந்தாலும் கீர்த்தி பெரிதாக இருக்கும் போலிருக்கிறது. அது சாயங்கால டிபனுக்குத் தயாரான அல்வாவிலிருந்தே தெரிந்து போயிற்றே'' என்றும் சொன்னார்.

இந்தச் சம்பாஷணை தேவராஜனுக்கு உவகையூட்டக் கூடியதாக அமையவில்லை. தம் பெண்ணைப் பற்றியும் தமக்கு வரவிருக்கும் மாப்பிள்ளையைப் பற்றியும் தம் வீட்டுக் கல்யாணத்தைப் பற்றியும் அவர்கள் பேச வேண்டும் என்று எதிர்பார்த்தார்; ஆசையும் பட்டார். ஆனால் அவர்கள் எல்லோருமே ஏதோ திட்டம் போட்டுக் கொண்டதுபோல் அவர் போடும் சாப்பாட்டை விழுங்கிக் கொண்டு யாரோ முன் பின் தெரியாத சமையற்காரப் பையனைப் பெரிய கதாநாயகனாக்கி அவன் புகழ் பாடுவது அவருக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. அந்தக் கணத்தில், பல வருடங்களுக்கு முன் திண்ணைப் பள்ளிக்கூட 'அண்ணாத்தை' வாத்தியார் தம் தந்தையை நிறுத்தி வைத்து அவருடைய தொழில் இறைமைக் குறைவைக் கட்டிக் காட்டி நையாண்டி பண்ணினது நினைவுக்கு வந்தது. அந்த நினைப்பில் அவர் முகம் சுப்பென்று சிவந்தது. பற்களை நறநறவென்று கடித்தார்.

''இந்தாப்பா ஏகு! சம்பந்தி வீட்டிற்கு எல்லாம் சரியாகப் போகிறதா என்று கவனித்துக்கொள். அதுதான் முக்கியம். நாலு பேச்சுக்கு இடம் கொடுக்கக்கூடாது. இந்தப் பந்தி அவ்வளவு முக்கியமில்லை. உன் சிஷ்யர்கள் பார்த்துக் கொண்டால் போதும்'' என்று தணிந்த குரலில் சொல்லியதன் மூலம் தேவராஜன் தாம் அந்தப் பையனுக்கு எந்த வித முக்கியத்துவமும் கொடுக்கத் தயாரில்லை என்பதைக் காண்பித்துக்கொண்டார். இரண்டாவதாக அவனைப் புகழ்ந்தவர்களை மட்டம் தட்டுவதிலும் ஈடுபட்டார்.

ஆனால் அந்த ரசத்தின் ருசியில் ஈடுபட்டிருந்த மற்றவர்கள் தேவராஜன் பேச்சைக் கவனித்ததாகவே தெரியவில்லை.

சாப்பாட்டுப் பந்தி எல்லாம் முடிந்து வெகு நேரம் எல்லோரும் வாயிற் பந்தலில் பேசிக் கொண்டிருந்தார்கள். நேரம் ஆகிக் கொண்டே இருந்தது. இடையே தேவராஜன் இரண்டு தடவைகள் சம்பந்தி வீட்டுப்பக்கம் போய்விட்டு வந்தார். மாப்பிள்ளைப் பிள்ளையாண்டான் அலுப்பினால் அப்போதே மாடிக்குப் போய்ப் படுத்துத் தூங்கிவிட்டதாக மாமா தெரிவித்தார்.

எல்லோரையும் அனுப்பிவிட்டுத் தேவராஜன் பந்தலிலிருந்து வீட்டுக்குள் நுழைந்த போது இரவு மணி ஒன்று. எங்கும் நிசப்தம். கல்யாணத்துக்கு வந்திருந்தவர்களெல்லாம் பந்தலிலும் திண்ணையிலும் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். பெண்கள் எல்லோரும் மாடியில் படுப்பதாக ஏற்பாடு.

வாசலில் நிலைக் கதவைத் தாளிட்டுவிட்டுக் கூடத்துக்கு வந்த தேவராஜன் கொட்டாவி விட்டுக் கொண்டே மின் விசிறியைச் சுற்றவிட ஸ்விட்சைப் போட்டார். அதன் அடியிலேயே ஒரு பெஞ்சை இழுத்துப் போட்டுக்கொண்டு சிறிது நேரம் கண்ணயரலாம் என்ற யோசனை. அதிகபட்சம் தூங்கினால் இன்னும் மூன்று மணி நேரம்.

கூடத்து வாழைத் தண்டு விளக்கை அணைக்க முற்படுவதற்கு முன் சுற்றிவரக் கண்ணோட்டம் விட்டார். கூடத்தின் ஒரு பகுதியில் ஒதுங்கியிருந்த அறையொன்றில் கதவிடுக்கின் வழியாக ஒளிக் கதிர் வெளியே விழுவது போல் ஒரு பிரமை.

அந்தக் கூடத்துக்குப் பக்கவாட்டில் வாசல் பக்கத்திலிருந்து பின்னால்வரை செல்லக்கூடிய ஒரு சந்து செல்கிறது. சமையற் கட்டு, கூடம், இவைகளைத் தாண்டாமல்



வேலைக்காரர்கள் கொல்லைக்கட்டிலிருந்து வாசலுக்குப் போக அந்தச் சந்து உதவியது. அந்தச் சந்திலிருந்து கூடத்துக்கு வரவும் ஒரு வழியுண்டு. கனத்த கம்பிக் கதவும் அந்த வழிக்கு உண்டு.

தேவராஜன் அந்தக் கம்பிக் கதவைக் கவனித்தார்; தாளிடப்படவில்லை. அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. அதற்கு நிறையக் காரணமும் இருந்தது. அந்தக் கூடத்து அறையில்தான் தேவராஜனின் இரும்புப் பெட்டி இருந்தது.

அதைத் திறக்க உரிமை யுள்ளவர்கள் தேவராஜனும் சுமித்திராவும் தான். சாவியோ, கொத்துடன் இணைந்து தேவராஜனின் இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்தது. சுமித்திராவோ நிம்மதியாக மாடியில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

அந்த அறைக்கு மாலையில் அவர் போய் விட்டுத் திரும்பி அறையைப் பூட்டிக்கொண்டு வந்தபோது விளக்கை அணைத்துவிட்டு வந்தது நன்றாக நினைவிருந்தது.



இப்போது அந்த அறை திறக்கப்பட்டிருப்பது அதன் இடுக்கு வழியாக வெளியே வரும் விளக்கொளியிலிருந்தே ஊகிக்க முடிந்தது. யாரும் திருடன் இந்தச் சந்தடியைப் பயன்படுத்திக் கொண்டு சந்து வழியாக உள்ளே நுழைந்து விட்டானா?

என்ன செய்கிறோம் என்று உணராமலே அந்த அறையை நோக்கி நடந்து அதன் கதவின் மேல் கையை வைத்துவிட்டார். கதவு சுலபமாகத் திறந்து கொண்டது. உள்ளே அவர் கண்ட காட்சி அவர் ரத்தத்தையே உறைய வைத்தது.

முக்கால்வாசி திறக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டியையும் அதன் வாயில் செருகப்பட்டிருந்த இரும்பு வளையத்தையும் முறைத்துப் பார்த்தவாறு பட்டிணத்துச் சமையற்காரப் பையன் நின்று கொண்டிருந்தான்.

கதவு அசைந்த ஒலியிலேயே ரகு திரும்பித் தேவராஜனைப் பார்த்துவிட்டான். குவிந்த உதடுகளின் மேல் ஆள் காட்டி விரலைவைத்துக் கத்தாமலிருக்கும்படி சமிக்ஞை செய்யும் அளவுக்கு அவனிடம் துணிவு இருந்தது.

'திருடன்! திருடன்!' என்று ஆட்டுக்குட்டி கத்துவது போல் வெளியான தேவராஜனின் நடுங்கிய குரல் நாலடி தூரத்துக்கு அப்பால்கூடக் கேட்டிருக்காது.

''உஸ்...ஸ்! அலறுவதற்கோ ஊரைக் கூட்டுவதற்கோ இது நேரம் இல்லை சார்! முதலில் இரும்புப் பெட்டியைத் திறந்து நீங்கள் வைத்திருந்ததெல்லாம் சரியாக இருக்கிறதா என்று பாருங்கள்'' என்றான் ரகு தணிந்த ரகசியமான குரலில். அந்தக் குரலில் எந்த விதப் பயமும் நடுக்கமும் இல்லை. கண்டிப்புத்தான் இருந்தது. அவன் ஓடவோ, தேவராஜன்மீது பாயவோ முயற்சி செய்யவில்லை. அதுவே தேவராஜனின் பயத்தை அதிகப்படுத்தியது.

''மாரிமுத்து! வேலுச்சாமி...'' என்று கூக்குரலிட முயன்றார் தேவராஜன்.

அப்பொழுதுதான் ரகு பாய்ந்து அவர் வாயைத் தன் கையால் பொத்தினான். ''சார்! நாளைக் காலையில் உங்கள் பெண்ணின் கல்யாணம் தடைப்பட்டு நிற்க வேண்டுமானால் நீங்கள் இஷ்டம் போல் கூக்குரலிட்டு ஊரைக் கூட்டலாம். அதற்குச் சம்மதமா? இல்லை, உங்கள் பெண் கல்யாணம் நன்கு நடந்தேற வேண்டும் என்ற விருப்பம் இருந்தால் வாயைத் திறக்கக் கூடாது. உங்கள் பணமோ, நகையோ, கொள்ளை போகவில்லை இப்போது'' என்றான் ரகு நிதானமாக.

''இதெல்லாம் என்ன மிரட்டல்?....நீ போலீஸ் லாக்கப்பிற்குள் போனாலும் என் பெண் கல்யாணம் நின்று போய் விடாது. உன்னைப் பார்த்த போதே நீ பெரிய திருடனாக இருப்பாய் என்று என் உள் உணர்வு சொல்லியது'' என்று சொல்லிக் கொண்டே தேவராஜன் ஒரு பாய்ச்சலில் ரகுவின் இரண்டு கைகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

''சார்! முதலில் என்னைச் சோதனை போட்டுக் கொள்ளுங்கள். பிறகு உங்கள் இரும்புப் பெட்டியைச் சரிபாருங்கள். அப்புறம் நாம் சாவகாசமாகக்கூடத்தில் போய்ப் பேசிக் கொள்ளலாம்'' என்றான் ரகு. அவன் குரலில் எந்த விதமான மாறுதலும் இல்லை.

''எல்லாவற்றையும் அகற்றி உன் கூட்டாளியிடம் கொடுத்தனுப்பியிருப்பாய். என்னை அவ்வளவு ஏமாந்தவன் என்று நினைக்காதே. நான் கூடத்துக்கு வரு முன் ஓடிப் போய்விடலாம் என்று நினைக்காதே'' என்று சீறினார் தேவராஜன்.

''அப்படியா? நான் இங்கேயே இருக்கிறேன். நீங்கள் உங்கள் சொத்துக்களைச் சரி பார்த்து வரும்வரை இப்படி உட்கார்ந்திருக்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டே கீழே உட்கார்ந்தான் ரகு.

அவனுடைய பேச்சும் நடத்தையும் தேவராஜனுக்கு அதிக ஆத்திரத்தை உண்டாக்கியது. ஆனாலும் அவர் இரும்புப் பெட்டிக்குள் கண்ணோட்டம் விடத் தவறவில்லை. மேலாகப் போடப்பட்டிருந்த சுமித்திராவின் வைர நெக்லேஸ் அப்படியேதான் கிடந்தது. நோட்டுக் கட்டுக்கள் ஆறும் அசையாமல் உட்கார்ந்திருந்தன. மற்ற நகைகள் எல்லாம் சுமித்திராவின் உடலிலேயே இருந்தன.

பூட்டு வாயில் இருந்த கம்பியை இழுத்தார். கையோடு வந்துவிட்டது. இரும்புப் பெட்டியை மூடி மடியிலிருந்த சாவியைக் கொண்டு பூட்டினார்.

''இதெல்லாம் என்ன நாடகம்? இந்த நிகழ்ச்சிக்கு நீ சரியான ஜவாப் கொடுத்துத் தானாகவேண்டும். உன்னை நான் போலீஸில் பிடித்துக் கொடுக்கத்தான் போகிறேன்'' என்று உறுமினார் தேவராஜன்.

''தாராளமாகச் செய்யலாம்! எனக்கு ஆட்சேபனை இல்லை. இப்பவே கூப்பிடுங்கள்.

விட்டதெனுக்குப் பயாகலாம். ஆனால் எப்படியோ உங்கள் பெண்ணின் வாழ்க்கை என் கையில் சிக்கி யிருக்கிறது. அதைப் பற்றி மேலும் விளக்கங்கள் கேட்காமலிருப்பது உங்களுக்கும் நல்லது; உங்கள் பெண்ணுக்கும் நல்லது.'' ரகு கதவைப் பார்த்துப் பேசினான்.

தேவராஜன் உள்ளத்தில் எத்தனையோ விபரீதக் கற்பனைகள் தோன்ற ஆரம்பித்தன. ஆத்திரத்தின் எல்லைக்கே போய்விட்டார்.

''அட சீ! அற்பப் பயலே! எனக்குப் பூச்சாண்டி காட்டுகிறாயா? போடா வெளியில்!''

''இதோ பாருங்க! 'ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தை நடத்தி வை' என்று சொல்லுவார்கள். என்னால் ஓர் அரை உண்மை சொல்லி இந்தக் கல்யாணத்தை நிறுத்த முடியும். ஆனால் அதைச் செய்ய நான் விரும்பவில்லை. ஆனால் நீங்கள் மேலும் கூக்குரலிடுவது என்னை அந்தக் காரியத்தைச் செய்யத் தூண்டுவது போலாகும். ஒரு விஷயம். இந்தப் பெட்டித் திறப்புக்கும் எனக்கும் சம்பந்தமில்லை.'' ரகு அறையை விட்டுக் கூடத்துக்கு வந்தான்.

ரகுவின் பேச்சில் ஏதோ உள் அர்த்தம் தொனிப்பதுபோல் தேவராஜனுக்குத் தோன்றியது. 'கல்யாணத்தையே தடை செய்யக் கூடிய சக்தி இவனிடமிருக்கிறதாமே?' என்று நினைத்துப் பொருமினார்.

'ஒருவேளை... ஒருவேளை... சுமித்திரா... இவனிடம்... சேச்சே! என்ன அற்பத்தனமான எண்ணம்' என்று நெற்றியைப் பிடித்துக்கொண்டார். 'ஆனாலும் இந்தக் காலத்தில் யாரை நம்ப முடிகிறது? யார் மனம் யாரை நாடும் என்று இந்தக் காலத்தில் ஒன்றும் கணிக்க முடியவில்லையே!'

ஆத்திரத்தில் மரியாதையெல்லாம் காற்றில் பறந்தது. ''டேய்! தூக்குச் சட்டி! நள்ளிரவில் என் இரும்புப் பெட்டியைத் திறந்து அதன் பக்கத்தில் நிற்பதற்கு அவசியமான விளக்கம் கொடுக்காமல் நீ தப்ப முடியாது. நான் தப்பவும் விட மாட்டேன். நீ எதற்காக இங்கு வந்தாய்?'' என்று அதட்டினார் ரகுவைத் தொடர்ந்து கூடத்துக்கு வந்த தேவராஜன்.

''ஹூம்!'' என்ற பெரு மூச்சுத்தான் ரகுவிடமிருந்து வெளிப்பட்டது. ''சார்! அந்த அறையில் பேசியதைவிடக் கொஞ்சம் சத்தத்தைக் குறைத்துப் பேசுங்கள் கூடத்தில். முதலாவது எனக்குத் திருடிப் பிழைக்க வேண்டும் என்ற அவசியமில்லை. என் கையில் நாலு பேர் ரசித்துப் புகழக் கூடிய தொழில் இருக்கிறது. இரண்டாவது எந்தத் திருடனும் இப்படி விளக்கைப் போட்டுக்கொண்டு இரும்புப் பெட்டி முன் பிரமை பிடித்தவன் போல் திருடி ஓடாமல், நின்றுகொண்டிருக்க மாட்டான். உங்கள் கேள்விகளுக்கு விளக்கம் கொடுக்கக்கூடிய அளவுக்கு என்னிடம் விஷயங்கள் இருக்கின்றன. ஆனால் உங்கள் மன நிம்மதிக்காக, உங்கள் பெண்ணின் வருங்கால வாழ்க்கைக்காக, தயவு செய்து அந்த விளக்கங்களை என்னிடம் எதிர்பார்க்க வேண்டாம். கல்யாணம் நின்று ஊர் சிரிக்கும் அவமானம் உங்களுக்குத் தேவையென்று தோன்றினால், இப்போதே நீங்கள் இந்த வீட்டில் தூங்கிக் கொண்டிருப்பவர்களை எழுப்பி விஷயத்தைச் சொல்லி என்னையும் காட்டிக் கொடுக்கலாம். என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்றான் ரகு.

தேவராஜன் 'மடேர் மடேர்' என்று தலையில் அடித்துக் கொண்டார். அவன் பேசிய வார்த்தைகளில் எல்லாம் இரண்டு அர்த்தம் பொதிந்திருப்பது போல் தோன்றியது. 'பெண்ணின் எதிர்கால வாழ்க்கை' 'சாதாரண மனிதன்' 'ஊர் சிரிக்கும் அவமானம்' முதலிய எழுத்துக்கள் கொட்டை எழுத்துக்களில் விசுவரூபமெடுத்து அவர் மனத்தில் வியாபித்து நின்றன.

5 விடை

முகூர்த்தம் ஒன்பது மணிக்கு மேல்தான். தெருவே கலகலவென்றிருந்தது. பெண்மணிகளெல்லாம் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு அலங்காரத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இடையே வைர நெக்லேஸை எடுக்கச் சுமித்திரா தந்தையிடம் இரும்புப் பெட்டிச் சாவி கேட்க வந்தபோது கூட அவர் யந்திரம் போல் சாவியை எடுத்துக் கொடுத்தார். அவள் முகத்தைப் பார்க்கக் கூட ஏனோ அவருக்குத் தைரியமில்லை.

பின்கட்டுப் பக்கம் போவதையே அவர் தவிர்த்தார். ரகுவின் பார்வை அவர் மீது விழுவதையே அவர் விரும்பவில்லை.

நாசில்தார் ராமசாமிதான் அந்தச் சமாசாரத்தையும் கொண்டு வந்தார். ''அந்த 'ஹைட் ருக்' ஏதோ அவசரமாகத் தன் ஊருக்குப் போக வேண்டியிருக்கிறதாம். அவன் தாயாருக்கு உடம்பு சரியில்லை என்று தகவல் வந்ததாம். என்னிடம் சொல்லிக்கொண்டு ஏழரை மணி பஸ்ஸில் போகிறான். அவன் கூட வந்தவர்கள் பொறுப்பாகக் காரியங்களைக் கவனித்துக் கொள்வார்கள் என்றும் சொன்னான். அவர்களுக்குப் பேசிய பணத்தை அந்தக் கடுத்த ஆசாமியான மணி கிட்டே கொடுத்துவிடலாமாம்! ஹூம்! இன்றைக்குப் பாயசம் நேற்று இரவு மாதிரி இருக்குமா என்பது சந்தேகம்தான்!'' என்று சொல்லி விட்டுப் போனார் ராமசாமி.

அவருக்குப் பாயசத்தைப் பற்றிய கவலை ஒன்றுதான். ஆனால் தேவராஜனுக்கு எத்தனையோ கவலைகள்! ஆனால் அந்தப் பயல் ரகு தொலைந்து விட்டான் என்ற செய்தி அவருக்கு அளவில்லா நிம்மதியைக் கொடுத்தது. மீண்டும் ஒரு முறை கூடத்து அறையிலிருந்த இரும்புப் பெட்டியைத் திறந்து பார்த்தார். எல்லாம் வைத்தது போலவே இருந்தன. நெக்லேஸ் மாத்திரம் சுமித்திரா எடுத்துப் போயிருந்தாள்.

விநாடிகள் நிமிஷங்களாக மாறிக்கொண்டிருந்தன. காலை டிபன், பந்தி பந்தியாக நடந்து முடியும் தறுவாயிலிருந்தது. காசியாத்திரைக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் பந்தலில் உள்ள வைதிகர்கள் மூழ்கிக் கொண்டிருந்தார்கள்.

அப்போதுதான் ஓவர்ஸியர் சுந்தரராஜன் பரபரப்புடன் தேவராஜனை நோக்கி வந்தார். வேலைக்காரர்களுக்கு ஏதோ உத்தரவு கொடுத்துக்கொண்டிருந்த தேவராஜனுக்குச் சைகை காண்பித்துத் தனித்துக் கூப்பிட்டார். சுந்தரராஜனுக்குப் பின்னால் சற்றுத் தள்ளி

ராமசாமியும் வந்து கொண்டிருந்தார். அவர் முகத்திலும் பரபரப்பு இருந்தது.

''அண்ணு! இப்படி வரேளா?'' என்று அழைத்த சுந்தரராஜன் ரொம்பத் தணிந்த குரலில் பேச ஆரம்பித்தார்.

''அண்ணு! சம்பந்தி வீட்டில் ஏதோ கசமுசவென்றிருக்கிறது. எல்லோரும் திரும்பிப் போக மூட்டைகள் கட்ட ஆரம்பித்துவிட்டார்கள். ஒன்பதே முக்கால் பாசஞ்சருக்குப் போக வண்டிகளுக்குக் கூட சொல்லிவிட்டிருக்கிறார்கள். மாப்பிள்ளை மாடியில் 'தாம் தூம்' என்று குதித்துக் கொண்டிருக்கிறாராம். நீங்கள் உடனே வந்து....'' என்று சுந்தரராஜன் தலை சுற்றிக் கீழே உட்கார்ந்தார்.

அவருக்கு முந்திய இரவு நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன. இந்தக் கல்யாணத்தை நிறுத்த ஏதோ சதி நடக்கிறதா? அதற்குக் காரணம் அந்த ரகுவா?...

ஆனால் மாப்பிள்ளைப் பிள்ளையாண்டான் சாதாரண வெடிகுண்டாகத் தூக்கிப் போடவில்லை. பெரிய அணுகுண்டாகவே போட்டான் தேவராஜன் மேல்.

''மகா மனுஷ்யன் மாதிரி பேச வந்துட்டீயே ஐயா! வெட்கமாக இல்லே! விரலுக்குத் தகுந்தாற் போல் வீக்கம் வரணும். உம்ம விரல் ரொம்ப வீங்கி வெடித்துப் போயிற்று. நடத்தை கெட்ட பெண்ணுக்கெல்லாம் ஏமாந்து போய்த் தாலி கட்ட வேறு ஆசாமியைப் பாரும்! இல்லே, அந்தச் சமையற்காரப் பயலையே இழுத்து வந்து தாலி கட்டச் சொல்லும். ஆனால் அவன் தாலி கட்டுவது அவனுடைய அந்தஸ்துக்குக் குறையாது. அப்படித்தானே? இந்தக் கண்ணுறவினை நேற்று என் அதிர்ஷ்ட வசமாகப் பார்க்க நேர்ந்தது. என் நல்ல காலம்! உம்மிடம் நஷ்ட ஈடு கேட்காமல் நான் இத்துடன் ஒதுங்குவதே உமது நல்ல காலம் என்று நினைத்துக் கொள்ளும்! வழியை விடும்'' என்று வாசலில் வந்து நின்ற வண்டியை நோக்கி நடந்தான் வேணுகோபாலன்.

நினைவு தவறி விழுந்த தேவராஜனுக்கு மீண்டும் நினைவு வர வெகு நேரம் பிடித்தது. அதற்குள் முகூர்த்த நேரமும் தவறி விட்டிருந்தது. சம்பந்தி வீட்டார்களும் கிடைத்தது லாபம் என்று சுருட்டிக் கொண்டு வண்டி ஏறிவிட்டிருந்தார்கள். தாசில்தார் ராமசாமி பக்குவமாக எல்லோரிடமும் ஏதேதோ விளக்கம் கொடுத்து அனுப்பி வைத்துக் கொண்டிருந்தார்.

6. இலை

தேவராஜனுக்கு நினைவு வந்தபோது அவர் அறையில் அவர் அருகில் சுமித்திரா மாத்திரம் இருந்தாள். அழுது அழுது அவள் கண்கள் வீங்கி யிருந்தன.

''அடி பாவி! என் முகத்தில் விழிக்க உனக்கு வெட்கமாக இல்லே! என் மானம், கௌரவம் எல்லாவற்றையும் தொலைக்க வேண்டுமென்று எனக்கு மகளாகப் பிறந்தாய்? உன் புத்தி இப்படிக் கோணல் வழியில் போவதற்காகவா நான் உன்னைப் படிக்க வைத்தேன்? சீராட்டினேன்? நேற்று நீ அல்வா 'ஏ ஒன்' என்று சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் இப்போது புரிகிறது. நீ அல்வாவைச் சொல்லவில்லையடி! அதைத் தயார் பண்ணினவனைச் சொல்லி யிருக்கிறாய்!....தொலே எங்காவது!...அவனையே தேடிப் போ!... ஓடு!....''

தேவராஜன் தடுமாறி எழுந்திருந்தார்.

''அப்பா!'' என்றாள் சுமித்திரா. அவள் குரல் சலனமில்லாமல் கண்டிப்புடன் ஒலித்தது.

''அப்படிக் கூப்பிட இனி உனக்கு உரிமையில்லே'' என்றார் தேவராஜன் முகத்தில் அடித்தாற் போல். அவர் நினைவில் மீண்டும் முந்திய இரவு நிகழ்ச்சிகள் நிழலாடத் தொடங்கின. ரகுவின் வார்த்தைகளில் இப்போது அவர் விதம் விதமான பொருள் ளைக் காணத் தொடங்கினார்.

''ரொம்ப சரி! அந்த உரிமை எனக்கு மறுபடியும் கிடைக்கும் என்று தெரியும். அதில் எனக்கு நம்பிக்கை உண்டு. யார் யாரோ சேர்ந்து ஒரு சதியே நடத்தி யிருக்கிறார்கள். எதற்காக என்று தெரிந்து கொள்ளாமல் நான் விடப் போவதில்லே. நேற்று இரவு நான் அந்த ரகுவைப் பார்க்கவில்லே. எப்படி எங்கள் இருவரையும் அந்த வேணுகோபாலன் பார்த்தார் என்பதையும் நீங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லே. இந்தக் கல்யாணத்தை நிறுத்தி நம்மை வேதனைப் படுத்துவதில்—யாருக்கு ஆனந்தம் என்று நீங்கள் யோசித்துப் பார்க்கவுமில்லே. இந்த நிலையில் நீங்கள் ஒரு பெண்ணின் மனநிலையைப் புரிந்து கொள்ளாமல் சீறுகிறீர்கள். முதலில் அந்த ரகுவைத் தேடிப் பிடித்து அழைத்து வாருங்கள். நான் நிரபராதியா இல்லையா என்று தெரியும்!'' சுமித்திரா கண்களில்-நீர் பொங்க அறையை விட்டு வெளியேறிவிட்டாள்.

அவள் வார்த்தைகள் உண்மையில் தோய்ந்து வந்த மாதிரிதான் தோன்றியது



'''சுதந்திரத்தின் பெருமை' என்பதைப்பற்றி நீங்கள், இரண்டு நிமிஷம் பேச வேண்டும்.''

''கொஞ்சம் இருங்கள்! என் மனைவியிடம் 'பர்மிஷன்' வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன்!''

மனக் குரங்கு மீண்டும் முதல் நாள் இரவுக்குத் தாவியது. அந்தப் பையன் ராஜு, மறு நாள் கல்யாணம் நடப்பதில்தான் அக்கறை காட்டினானே தவிர, அதைத் தடை செய்ய உற்சாகம் காட்டவில்லையே? இரும்புப் பெட்டியைத் தான் திறக்கவில்லை என்று சொன்னான். அது உண்மை போல் தான் இருந்தது. ஆனால் அவன் எதையோ மறைக்க முயன்றான். சேச்சே! எல்லாம் ஒரே மர்மம்! தேவராஜனின் உள்ளம் குழம்பியது.

எழுந்து குறுக்கும் நெடுக்கும் நடந்தார். காலை வலித்ததை விட மனம்தான் அதிகம் வலித்தது. தம் வேதனையில் யார் இன்பம் காணப் போகிறார்கள் என்றும் அவரால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

7. மொட்டு

இந்தச் சம்பவம் தேவராஜனின் மனக் குகையில் மூடிக் கிடந்த ஓர் இருண்ட பகுதியைத் திறந்து வைத்தது.

"மாப்பிள்ளே! பெரிய மனசு பண்ணுங்க மாப்பிள்ளே! வாக்களித்த சங்கிலியை இன்னும் ஆறே மாதத்தில் போட்டுவிடுகிறேன். இப்போது முகூர்த்தம் நடக்கட்டும் மாப்பிள்ளே" என்று கெஞ்சுகிறது ஒரு வயோதிகக் குரல்.

"மாப்பிள்ளே! யாருக்கு யார் மாப்பிள்ளே? இதற்குள்ளேயே இந்த உறவு கொண்டாட வருபவர் தாலியையும் கட்டிவிட்டால் தலைமேல் ஏறுவீர்! ஏமாற்று வித்தைக்காரராகிய உமது உறவே வேண்டாம்" என்கிறது ஓர் இளைஞன் குரல்.

"இந்தாடா! அந்த மனுஷ்யன் வாழ்ந்து கெட்டவர்! ஆனால் வாக்குத் தவறாதவர். இந்த அற்பச் சங்கிலி விஷயம் இந்தக் கல்யாணத்தின் குறுக்கே வராமல் பார்த்துக் கொள்ளும் அளவுக்கு நீ கல்வி கற்கவில்லையா?" என்று குறுக்கிடுகிறது ஒரு நடுத்தர வயதுக் குரல்.

"இப்படி ஏமாற இன்னும் ஊரில் எத்தனையோ மாப்பிள்ளைகள் கிடைப்பார்கள். அதற்கு நான் தயாரில்லை" என்ற இளைஞன் குரலில் இப்போது ஏகத்தாளமும் கேலியும் ஒலிக்கின்றன.

திருமணக் கோலத்திலிருந்த இளைஞன் எழுந்து வாசலுக்கு வருகிறான். ஜன்னல் கம்பிகளில் முகத்தைப் பதித்துக் கொண்டு முத்து முத்தாகக் கண்ணீரை உகுக்கும் மணப்பெண்ணின் உருவமும் அவன் மனத்தில் இரக்க சித்தத்தைத் தோற்றுவிக்கவில்லை. முதலில் கெஞ்சிய முதியவரின் குரலும் கரகரத்துத் தேய்கிறது.

அந்தக் கணத்தில் ஊர்ப் பெரியதனக்காரர் ஒருவர் வீட்டு மூதாட்டி வேகமாக முன்வந்து இளைஞன் முன் நிற்கிறாள். "இந்தாடா பிள்ளே!...எனக்குப் பெண் இல்லே. பெற்றதெல்லாம் பிள்ளைகள். பெண்ணுக்கு நகை போட்டுப் பார்த்து மகிழும் பாக்கியம் எனக்கு இல்லே. அந்த வாய்ப்பை இப்போது பகவான் எனக்குக் கொடுக்கிறார் என்று நினைக்கிறேன். என் கழுத்துச் சங்கிலியைக் கல்யாணப் பெண்ணுக்குப் போடுகிறேன். நீ வந்து தாலியைக் கட்டுடா!" என்கிறாள். கல்யாண வீட்டில் இருந்தவர்கள் எல்லோருமே வியப்பினால் திகைத்து நிற்கிறார்கள். முதலில் கெஞ்சிப் பேசிய முதியவர் மேல் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு அந்த மூதாட்டி முன் விழுந்து வணங்குகிறார். ஜன்னலருகில் இருந்த முகத்தில் அவசரம் அவசரமாகக் கண்ணீர்த் துளிகள் துடைக்கப்படுகின்றன. முறைப்பாகப் பேசிய மணக்கோல இளைஞன் திரும்பிப் பந்தலுக்கு வருகிறான்.

தேவராஜன் திடுக்கிட்டு உட்கார்ந்தார். அந்தக் காட்சியில் தோன்றிய இளைஞன் யாரென்று அவருக்கு நன்கு தெரியும். அது ஏறத்தாழ முப்பது வருஷங்களுக்கு முந்திய தேவராஜனேதான். ஜன்னல் கம்பிகளில் முகத்தைப் பதித்துக் கண்ணீர் பெருக்கிய மணப்பெண் சுமித்திராவின் தாயாரேதான்.

"அந்தச் சில நிமிஷங்களில் அந்தக் குடும்பத்தினரைப் படுத்தி வைத்த பாட்டுக்கு இன்று நான் பழி வாங்கப்பட்டேனா? அன்று ஆசை என்ற விஷத்தை வித்திட்ட என்னை இன்று அபாண்டமென்ற பெரிய மரமே சாய்ந்து அமுக்கி விட்டதே! அன்று அந்த மூதாட்டி வந்து நிலைமையைச் சமாளித்து உதவியது போல் எனக்கு இன்று உதவ யாருமே தயாரில்லையா, பகவானே!"

தேவராஜன் இரண்டாவது தடவையாக மூர்ச்சையானார்.

8. மலர்

நான்கைந்து மாதங்களுக்கு மேலாகவே தேவராஜனும் சுமித்திராவும், புண்ணிய ஸ்தலங்கள், சுகவாசஸ்தலங்கள் என்று மாறி மாறிச் சுற்றுப் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்தார்கள். கல்யாணம் தடைபட்டுப் போனதற்குப் பிறகு அவருக்கு நாலு பேர் சுட்டிக் காட்டிப் பேசும்வண்ணம் ஊரில் இருக்கப் பிடிக்கவில்லை.

இரண்டு தடவைகள் பட்டிணத்துக்குப் போய் ரகுவைக் கண்டுபிடிக்க முயற்சி செய்தார். தேவராஜன் வீட்டுக் கல்யாணத்தை ஒட்டி நகரத்தை விட்டுப் போனவன் அப்புறம் திரும்பி வரவேயில்லையாம். எங்கிருக்கிறான் என்று அவனுடைய சக தொழிலாளிகளுக்குத் தெரியாதாம்.

சுமித்திராவுக்கு எப்படியாவது ரகுவைச் சந்தித்துவிடலாம் என்ற நம்பிக்கை இருந்தது. தேவராஜனோ தம் மனத்தில் புதைந்திருந்த இரும்புப் பெட்டி விவகாரத்தின் மர்மத்தை அவனைக் கண்டு விளக்கிவிடத் துடித்துக்கொண்டிருந்தார்.

திருச்செந்தூரிலிருந்து வந்த பஸ்ஸிலிருந்து தேவராஜனும் சுமித்திராவும் திருநெல்வேலி பஸ் நிலையத்தில் இறங்கியபோது அவர்களுக்குக் காப்பி சாப்பிடக் கூட அவகாசம் கொடுக்கத் தயாராக இல்லாமல் குற்றாலம் போகும் பஸ் கிளம்பிக்கொண்டிருந்தது. இருவரும் அதில் ஏறி அமர்ந்து விட்டார்கள்.

ஆலங்குளத்தில் பஸ் நின்றபோது அதற்குச் சில கஜ தூரத்துக்கு முன்னால் ஒரு சிறுவன் இளநீர் விற்றுக் கொண்டிருந்ததைத் தேவராஜன் கவனித்தார். தானும் ஒன்று அருந்தி விட்டுச் சுமித்திராவுக்கும் ஒன்று வாங்கி வரலாமென்று பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கி நடந்தார்.

ஜாக்கிரதையாகச் சீவிய இளநீரும் கையுமாகப் பஸ்ஸுக்குத் திரும்பும்போதுதான் அவர் திடுக்கிட்டு நிற்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதே மாதிரி அவர் கண் பார்வையில் விழுந்த அந்தக் கார் டிரைவரும் திடுக்கிட்டான்.

காரோட்டியின் இடத்தில் அதற்கான உடையில் அமர்ந்திருந்தது ரகுவேதான்!

''ரகு.... நீ....'' என்று தயங்கியவாறு காரையொட்டி நின்றார் தேவராஜன்.

''வணக்கம் சார். நானேதான். இது ஒரு தற்காலிக உத்தியோகம். நீங்க திருநெல்வேலியிலே பஸ் ஏறும்போதே பார்த்து விட்டேன். குற்றாலத்தில் வண்டியைக் கொண்டு சேர்த்ததும் சாவகாசமாகப் பேசலாம்'' என்றான் ரகு.

தேவராஜனுக்கும் சுமித்திராவுக்கும், ஆலங்குளத்திலிருந்து குற்றாலம் போக அந்த பஸ் எடுத்துக்கொண்ட ஒரு மணி நேர அவகாசம் ஒரு யுகமாகத் தோன்றியது.

ஹோட்டல் அறைக்கு அவர்கள் போய்ச் சேர்ந்த சில நிமிஷங்களுக்குள்ளாகவே ரகு உடை மாற்றிக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தான்.

தேவராஜனுக்குப் பேச்சை எப்படி ஆரம்பிப்பதென்றே தெரியவில்லை. நல்ல வேளையாக ரகுவே மௌனத்தைக் கலைத்துப் பேச்சைத் தொடங்கினான்.

''கல்யாணம் நின்றுபோய்விட்டது என்று கேள்விப்பட்டேன். அதற்குக் காரணமாக என் பெயரும் அடிபட்டது என்றும் காதில் விழுந்தது. ஆனால் இந்தக் கல்யாணம் இனிது நடந்தேறவும் அதற்காக ஒரு திருடனையே காண்பித்துக் கொடுக்காமல் தப்பி ஓட விடவும் பாடுபட்ட ஒரே ஆத்மா நான்தான் என்று சொன்னால் அது தற்பெருமையாக ஒலிக்கும். ஆனால் அதுதான் உண்மை'' என்றான் ரகு நிதானமாக.

''என்ன திருடனா?'' என்று ஏக காலத்தில் தந்தையும் மகளும் கேட்டார்கள்.

''ஆமாம்! உங்கள் மாப்பிள்ளையாக வரவிருந்த வேணுகோபாலனேதான். அவனை எனக்குச் சில வருடங்களாகவே தெரியும். மேலுக்கு ஏதோ உத்தியோகம் பார்ப்பது போல் நடித்தாலும் மறைவில் அவன் ஒரு பெரிய, ஆனால் உயர்ந்தரக திருட்டுக் கோஷ்டியினருடன் தொடர்பு கொண்டவன். அதனால்தான் அவனுக்கு அவ்வளவு சவுடாலான வாழ்க்கை நடத்த முடிந்தது. இதற்கு முன் இரண்டு சந்தர்ப்பங்களில் இரண்டு வெவ்வேறு கல்யாண வீடுகளில் அவன் கைவரிசையைக் காண்பிக்க முயன்றபோது அகஸ்மாத்தாக என் கண்களில் பட்டுவிட்டான். இரண்டு தடவையும் எச்சரித்து, காண்பித்துக் கொடுக்காமல் விட்டேன். ஆனால் மூன்றாவது தடவை அகப்பட்டால் நான் தாட்சண்யம் காட்ட மாட்டேன் என்றும் சொல்லியிருந்தேன். அந்தத் துரதிர்ஷ்டமான சந்தர்ப்பம் உங்கள் வீட்டில் நேர்ந்து விட்டது? நீங்கள் வாசல் பந்தலில் அமர்ந்தபோது அவன் எப்படியோ சந்து வழியாகக் கூடத்துக்கு வந்திருக்க வேண்டும். எங்கு தொழில் நிமித்தம் போனாலும் நான் படுக்கு முன்பு ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்துவிட்டுத்தான் படுப்பது வழக்கம். அன்றும் பின்கட்டிலிருந்து கூடத்துக்கு வந்தபோது அந்த அறையில் ஏதோ அரவம் கேட்டது. எலியாக இருக்கலாம் என்றுகூட நினைத்தேன். ஆனால் அந்த ஒலி வித்தியாசமாக இருந்தது. கதவின்மீது தட்ட முயன்றபோது அது திறந்துகொண்டது. உள்ளே வேணுகோபாலன் டார்ச் விளக்கின் ஒளி கொண்டு இரும்புப் பெட்டியைத் திறக்கும் நிலையில் இருந்தான்.

''எனக்கு ஒரே ஆத்திரம்! மற்றவர்கள் கல்யாண வீட்டில் திருடப் பழகிப்பழகி அந்தப் பாவி தன் கல்யாண வீட்டிலேயே திருடத் துணிந்துவிட்டானே என்று நினைத்தபோது அவன் குரல்வளையையே பிடித்து அமுக்கி விடவேண்டும் போலிருந்தது. வந்தது வரட்டும் என்று விளக்கு ஸ்விட்சைப் போட்டேன். அவனைத் தப்பவிடும் நோக்கம் எனக்குச் சிறிதும் இல்லை.

> வேத வேதாந்தங்களின் சாரம் ஒரே வார்த்தையில் அடங்கியிருக்கிறது. அந்த வார்த்தை: பலம்...
>
> முதலில் நமது இளைஞர்கள் பலசாலிகளாக வேண்டும். அப்புறம் சமய உணர்வு தானாக வரும்.
>
> — ஸ்வாமி விவேகானந்தர்

"அவன் அப்படியே என் காலில் விழுந்து விட்டான். 'ராஜு! இந்த ஒரு தடவையும் என்னைக் காண்பித்துக் கொடுக்காதே. நான் அகப்பட்டு ஜெயிலுக்குப் போவதற்காக வருந்தவில்லை. அப்படி ஒரு தடவை போய் விட்டு வந்தால்தான் நான் திருந்துவேன். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு பெண்ணின் மன வேதனைக்காக இரக்கம் கொண்டு என்னைக் காப்பாற்று. தனக்கு வரவிருந்த கணவன் ஒரு கயவன், திருடன் என்று தெரியும்போது அவள் மனம் எவ்வளவு தூரம் புண்ணாகும்?' என்று அழுதுவிட்டான். என் கடின உள்ளம்கூட அசைந்து விட்டது.

'சரி! தொலை. ஆனால் அடுத்த தடவை இப்படி நிச்சயம் நீ தப்ப மாட்டாய்' என்று நான் சொன்னதும் அவன் வந்த சுவடு தெரியாமல் சந்து வழியாகப் போய்விட்டான். அவன் ஒன்றையும் எடுத்துக் கொண்டு போகவில்லை என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள நின்றபோதுதான் நீங்கள் என்னைப் பார்த்தீர்கள். என்னையே திருடன் என்று நினைத்து விட்டீர்கள்.

"நான் அப்போது சுலபமாக நடந்ததைச் சொல்லியிருக்க முடியும். ஆனால் மறு நாள் திருமணம் நின்று போகும். அதற்காகத்தான், உங்கள் அவநம்பிக்கையையும் கோபத்தையும் பொருட்படுத்தாமல் சும்மா இருந்தேன். காலையில் நான் உங்கள் கண்ணில் தட்டுப்பட்டால், யார் முன்னிலையிலாவது மீண்டும் அந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கேட்டு என்னை இக்கட்டான நிலைக்குக் கொண்டு வந்துவிடுவீர்களோ என்றுதான் நான் ஊரை விட்டுக் கிளம்பினேன்.

"ஆனால் அந்த விஷயத்தில்தான் நான் தவறு செய்துவிட்டேன். வேணுகோபாலன், நான் அவனைப் பற்றி உங்களிடம் சொல்லியிருப்பேனோ என்ற அச்சத்தில் எட்டைத் திருப்பிப் படிக்கத் தயாரானான். அபாண்டப் பழியை என் மேல் சுமத்தி விட்டுக் கல்யாண ஆசைக்குக் கையைக் கழுவி விட்டு ஓடிப்போய் விட்டான். அவன் முந்திக்கொண்ட பிறகு என் வார்த்தைகளுக்கு உடனடியாக மதிப்பு இருக்காதல்லவா? நான் ஊரை விட்டுப் புறப்பட்டது அவனுக்கு நல்லதாகப் போயிற்று.

"என்னுடைய குறைந்த அனுபவத்தில் நிறையக் கல்யாண வேலைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். ஆனால் நடக்காமல் நின்றுபோன கல்யாணம் இது ஒன்றுதான். அது என் மனத்தை உறுத்தியது. இந்தத் தொழில் இனி வேண்டாம் என்றுதான் காரோட்டியாக மாறினேன். இதில் முன்பே எனக்கு அனுபவம் உண்டு."

ராஜு தன்னுடைய நீண்ட விளக்கத்தை நிறுத்தினான். தந்தையும் மகளும் மௌனமாக அமர்ந்திருந்தார்கள்.

"அவர் எங்கிருக்கிறார் என்று கேளுங்கள் அப்பா!" என்றாள் சுமித்திரா.

"அந்தத் திருட்டுப் பயல் இனி எங்கு போனால் நமக்கென்ன அம்மா?... உன்னையே நான் சந்தேகித்ததற்கு முதலில் உன்னிடமே நான் மன்னிப்புக் கேட்க வேண்டிய நிலையில் இருக்கிறேன். என் வாழ்க்கையில் முன்பு ஒரு தடவை குறுக்கிட்டு மனம் நொந்த பெண்ணுக்கு ஒரு சீமாட்டி அபயம் அளித்தது தெரியும். இன்று அதே நிலையிலிருந்த உன் மனத்துக்கு அபயம் அளிக்க முன் வந்திருப்பவன் இந்த இளைஞன். கல்யாண தினத்துக்கு முந்திய இரவில் இந்த ராஜு பேசிய வார்த்தைகளின் உண்மையான பொருளை நான் இன்றுதான் உணர்கிறேன். அவனுக்குச் சம்மதமானால் அவனை என் மாப்பிள்ளையாக அடையவும் தயங்க மாட்டேன். அவன் நேர்மைதான் எனக்குப் பெரிதே ஒழிய அவன் தொழில் அல்ல!" என்றார் தேவராஜன்.

"அப்பா!....." என்று மேல் ஸ்தாயியில் கிரீச்சிட்டாள் சுமித்திரா. தேவராஜன் திடுக்கிட்டார். அவள் என்ன கேட்கப் போகிறாள் என்பதைப் புரிந்து கொண்ட விதத்தில் ராஜுவே பதில் சொன்னான்.

"வேணுகோபாலன் பெரிய திருட்டுக்களிலிருந்தெல்லாம் தப்பித்துக்கொண்டான். ஆனால் சிறு விஷயத்தில் மாட்டிக்கொண்டு மூன்று மாத தண்டனை அனுபவிக்க உள்ளே போயிருக்கிறான். வெளி வரும்போது புதிய வேணுகோபாலனாகவே வருவான்" என்றான் ராஜு சலனமில்லாமல்.

"அவர் எப்போது வெளி வருவார் என்று கேளுங்கள் அப்பா. அன்று ஒரு நாள் தாங்கள் மாமாவிடம் 'பையனை நல்லவனாக இருக்கச் செய்வது மனைவியின் கடமை. எங்கள் சுமிக்கு அந்தக் கடமை உணர்ச்சி உண்டு' என்று அழுத்திச் சொன்னீர்களே! அந்தக் கடமை உணர்ச்சியைக் காண்பிக்க எனக்கு இன்னும் வாய்ப்பு இருக்கிறது. இந்த ராஜு சொன்னால் அவர் கேட்டே தீருவார். நான் மனத்தால் அவரை ஏற்கனவே வரித்து விட்டேன்!"


சுமித்திராவின் கண்களிலிருந்து உணர்ச்சி கண்ணீராகப் பெருக்கெடுத்தோடியது.

"உன் இஷ்டம்தான் அம்மா என் லட்சியம்! ஆனால் ராஜுவுக்கு அந்த வேணுகோபாலனைப் பற்றிய தகவல்கள் தெரியுமோ என்னவோ?" என்றார் தேவராஜன்.


"தெரியும்! அவன் என் கூடப் பிறந்த அண்ணன்தான். சிறு வயதிலேயே திசை மாறிப் பிரிந்து போன அனாதைகள்" என்ற ராஜுவின் பதில் வெகு நேரம் அந்த அறையில் வியப்பையும் திகைப்பையும் தோற்றுவித்தன.

'ஒரு செடியில் பூத்த இரு மலர்கள்தான்! ஒன்றில் விஷ நெடி. மற்றொன்றில் விருப்பமூட்டும் சுக வாசனை' என்ற சிந்தனையில் லயித்துத் தேவராஜன் ராஜுவை வெகு நேரம் பார்த்துக் கொண்டே இருந்தார்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



துள்ளி
விளையாடும்
பொழுதோ



ஓய்வு பெறும்
பொழுதோ...
அவர்கள்
எப்பொழுதும்
வளர்ந்து
கொண்டே
இருக்கிறார்
கள்!



கல்ஸாஞ-டி

வைட்டமின் நிவிரச் சேர்க்கையுடைய கால்சியம்

கர்ப்பிணிகள், குழந்தையை அரவணைக்கும் அன்னைகள் மற்றும் வளரும் குழந்தைகள் இவர்களுக்கு ஏற்றது

குழந்தைப்பருவம் வேகமாக வளரும் பருவம். மற்றெல்லா காலத்தையும்விட—இப்பொழுது வலிமை பொருந்திய பற்களையும், எலும்புகளையும் வளர்க்கவும்,......வாழ்க்கைக்கு வேண்டிய வலிமையையும் சக்தியையும் பெறவும், குழந்தைகளுக்கு கல்ஸாஞ-டி தேவைப்படுகிறது. எனவேதான் வளர்ச்சிபெறும் இந்த வருஷங்களில், உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் கல்ஸாஞ-டி-யைக் கொடுக்கவேண்டும். நற்சுவைமிக்க கல்ஸாஞ-டி. ஆம்லமயமான கால்சியமாகும்.வியாதிக் கிருமிகளினால் பாதிக்கப்படாதிருப்பதற்கும்........கால்சியம் சத்து நன்கு உடலில் சேர்வதற்கும்,........மிகுந்த வலிமை பெறுவதற்கும்... இதில் வைட்டமின்கள் சேர்க்கப்பட்டுள்ளன. உங்கள் குழந்தைகளுக்கு கல்ஸாஞ-டி-யைக் கொடுத்துப்பாருங்கள் அவர்கள் புதுச் சக்தியுடனும் புதுமலர்ச்சியுடனும் தோற்றமளிப்பார்கள்

SR.XO.SO. TAN.

REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Ceylon



லைப்பாய்

இருக்குமிடம்— அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!

ஓஹோ என்று உச்சிகுளிர ஒரு
லைப்பாய் ஸ்நானம்! அழுக்கி
லுள்ள கிருமிகளைக் கழுவிக்
களையும் லைப்பாய் சோப்பினால்
தம்மவர்க்கு நல்வாழ்வு உண்டு—
எல்லாம் இன்பமயம்!

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு